# பழந்தமிழும் கிளை மொழிகளும்

முனைவர் கலைவாணி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# பழந்தமிழும் கிளைமொழிகளும்

முனைவர் ந. கலைவாணி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி சென்னை – 600 113

தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகளார் அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியோர் : சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்)
வரிசை எண் : 8

## BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Title of the Book | : | Pal̲an̲tamil̲um kiḷaimol̲ikaḷum |
| Author | : | Dr. N. Kalaivani<br>Associate Professor, Dept. of Tamil<br>Queen Mary's College<br>Chennai - 600 004 |
| General Editor | : | Prof. Dr. K.A. Gunasekaran<br>Director<br>International Institute of Tamil Studies<br>Tharamani, Chennai-600 113 |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus,<br>Chennai-600 113<br>Ph: 22542992 |
| Publication No. | : | 716 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2011 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 10 Point |
| No. of Pages | : | viii + 144 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 70/- (Rupees Seventy Only) |
| Printed by | : | Abi Offset<br>Offset Print House<br>Old No. 26, New No. 57, Thayar Sahib Street,<br>Mount Road, Chennai - 600 002. |
| Subject | : | Linguistics |


அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று.

*பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்*
*இயக்குநர்*
*உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்*
*சென்னை-600 113*

# அணிந்துரை

தனித்தமிழ்த் தந்தை எனப் போற்றப்பெறும் சிறப்புடையவர் மறைமலையடிகள். தமிழ் இனியது மட்டுமன்று; அது, நீர்மையும் உடைத்தாம் என இப்பாரினுக்கு உணர்த்திய தமிழ்ப் பகலவன் அவர்.அப் பெருமகனாரின் பெயரில் அமைந்த அறக்கட்டளை வழி நடத்தப் பெற்ற சொற்பொழிவின் (22.7.2011) எழுத்து வடிவம் இந்நூல்.

எம் நிறுவன அழைப்பினை ஏற்று வந்து, கற்றறிந்தார் யாவரும் காமுறும் வண்ணம் நுட்பமும் திட்பமுமான கருத்துக்களை அணியணியாக நிறுத்தி தம் நா வளத்தால் தமிழ்மொழியின் இலக்கண வளத்தை நலமுற எடுத்தியம்பி, இவ்வறக்கட்டளைச் சொற்பொழிவினைச் சீரிய முறையில் நடத்தித் தந்தவர் முனைவர் ந.கலைவாணி அவர்கள்.அவர்களுக்கு நன்றி கூறும் கடப்பாடுடையேன்.

வடவேங்கடம் தென்குமரி ஆயிடை வழங்கும் தமிழ்மொழியில் பயின்று வரும் சொற்களை இயற்சொல் ,திரிச்சொல், திசைச்சொல், வடசொல் என்னும் நான்கு வகைக்குள் அடக்குவர் நூலறி புலவோர்.இந்நான்கனுள் திசைச்சொல் என்றது தமிழ் வழங்கும் நிலத்தைச் சூழ்ந்துள்ள பிற தேயங்களிலிருந்து வந்து தமிழில் வழங்கும் சொற்களாகும்.தமிழகத்தின் வடபுறத்தே அமைந்துள்ள ஆந்திரநாட்டின் தெலுங்கு மொழி, தமிழில் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தை விரிவாக விளக்குவதாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலாசிரியரின் கள ஆய்வும் ,கடும் உழைப்பும், மொழியியல் அறிவும் இவ்வரிய நூலினை உருவாக்கித் தந்துள்ளது.

மிகப்பழங் காலந்தொட்டே பல்வேறு நாட்டினர் வாழ்வினைத் தேடி வந்து குடியேறிய நிலமாகத் தமிழகம் விளங்கியமையை உணர்த்தும் இலக்கியப் பதிவுகள் பல.வந்தாரையெல்லாம் வாழவைக்கும் இச்செந்தமிழ் நாடு பரந்து விரிந்திருந்த தம் நிலப் பரப்பை இயற்கைச் சீற்றத்தால் இழந்திருக்கிறது. இளங்கோவடிகள் சுட்டும் பஃறுளியாறும் பன்மலை அடுக்குமான குமரிக்கோடும் இன்று இல்லை.கடல் வெள்ளத்தால் கன்னித்தமிழ் நாட்டின் நிலப்பரப்புக் காணாமல் போனது போன்றே,இந்திய விடுதலைக்குப் பின் மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்பட்ட போதும் தமிழகத்திற்குச் சொந்தமான நிலங்கள் பல பிற மாநில எல்லைக்கு உரிமைபடுத்தப் பெற்றுத் தமிழகத்திற்கு இல்லாமல் போயின. தென்பால் குமரியையும் வடபால் திருத்தணிகையையும் மீளப்பெறவே போராட்டங்கள் பல நிகழ்த்த வேண்டியதாயிற்று. எல்லைப்புறத் தமிழர்களின் மொழி, பண்பாடு ஆகிய கூறுகளில்

அண்டை மாநிலத்தால் ஏற்படும் மாற்றங்களும் சிதைவுகளும் நுணுங்கி ஆயப்பெற வேண்டியதும் அச்சிதைவுகளைச் சீராகச் செய்ய வேண்டுவன குறித்து எண்ணுவதும் இன்றைய தேவையாகும். தமிழகத்தின் வடக்கெல்லையில் தெலுங்கு மொழியால் தமிழ்மொழி அடைந்துள்ள மாற்றங்களை விளக்கும் இந்நூல் அம்மாற்றங் களுக்கான காரணங்களையும் அறிவியல் வழியில் நின்று சுட்டிச் செல்கிறது. பிறமொழித் தாக்கத்தால் நிலைமொழியில் இருந்து எவ்வாறு கிளைமொழிகள் உருவாகின்றன என்பதனையும் மொழியியல் கோட்பாடுகளின் வழி நிறுவுகிறது. தமிழின் வடக்கு வட்டாரக் கிளைமொழிச் சொற்களைத் திரட்டி அச்சொற்களின் வேர் பழந்தமிழில் உள்ளமையை எடுத்துக்காட்டிச் செல்லும் இவ்வாசிரியரின் திறன் பாராட்டப்பட வேண்டியது. இன்று தமிழில் வேகமாகவும் ஆழமாகவும் நடந்துவரும் ஆய்வுகளில் மொழியியல் ஆய்வும் ஒன்று. அத்துறைசார் நூல் ஒன்றினை மிகச் சிறந்த முறையில் படைத்தளித்துள்ள இந்நூலாசிரியரை வாழ்த்துவதில் உள்ளம் உவக்கிறது.வாழ்க இவர் பல்லாண்டு.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் **இந்து சமய அறநிலையம் மற்றும் தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை அமைச்சர் மாண்புமிகு எஸ்.பி. சண்முகநாதன்** அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளது.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் தமிழக அரசின் **தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறைச் செயலாளர் திரு. து.நா. இராமநாதன் இ.ஆ.ப.** அவர்களுக்கும் நன்றி.

இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த அபி ஆப்செட் அச்சகத்தாருக்கு எம் பாராட்டுகள்.

*இயக்குநர்*

## ஆசிரியர் பற்றி. . .



பெயர் : முனைவர் ந.கலைவாணி

30.08.1966 அன்று சென்னையில் பிறந்தவர்.

எம்.ஏ.(தமிழ்), எம்.ஏ.(மொழியியல்), பி.எட்., எம்.ஃபில், பிஎச்.டி, ஆகிய பட்டங்களையும் மலையாள மொழியில் நிறை சான்றிதழையும் (Diploma) பெற்றவர். தற்போது சென்னை இராணி மேரி கல்லூரித் தமிழ்த்துறையில் இணைப் பேராசிரியையாகப் பணியாற்றி வருகிறார்.

எழுதியுள்ள நூல்கள் : 11

எழுதியுள்ள கட்டுரைகள் : 36

மரபிலக்கணம்,மாற்றிலக்கணம் ஆகிய இரு துறைகளிலும் புலமை உடையவர். பழந்தமிழ் இலக்கியங்களில் ஈடுபாடும் ஆழ்ந்த அறிவும் உடைய இவர், அரிய நூல்களைத் தேடியெடுத்துப் பதிப்பிக்கும் அருந்தொண்டினையும் செய்து வருகிறார்.

தற்பொழுது **தொல்காப்பியத்திற்குச் 'சொல்லடைவு தொடரடைவு அகராதி'** உருவாக்கப் பணியில் உழைத்து வருகிறார்.

# நன்றியுரை

பழமைக்குப் பழமையாய்ப் புதுமைக்குப் புதுமையாய்த் திகழ்ந்து வருந் தமிழின் மாண்பு தன்னிகரற்றது. உலக மொழிகளுள் செம்மொழியாய்க் கருதப்படும் தமிழ்மொழி உயர்தனிச் செம்மொழியாய் விளங்கும் பெற்றியது. எம்மொழிகளிலும் உயர்ந்த மொழியாய் எம்மொழியினது துணையுமின்றித் தானே தனித்தியங்க வல்லதாய்ச் செம்மாந்த தொன்மையான இலக்கிய இலக்கண வளம் வாய்ந்த மொழி. இத்தகு சிறப்புப்பெற்ற தமிழ்மொழியினின்றும் தொலைந்த சொற்கள் பல. மொழி காலந்தோறும் மாறும் தன்மையதென்பதால் இம்மொழிக்கண் வழங்கலாகும் சொற்கள் பலவும் சொற்களுக்கான பொருட்கள் பலவும் மாறியும் மறைந்தும் பல்வித விகாரங்களுக்கு உட்படுவது எம்மொழிக்கும் உண்டான தன்மையவாகும். அன்னைத் தமிழுக்கும் இந்நிலை உண்டானதில் வியப்பொன்றுமில்லை.

> **கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலை யாளமும்**
> **உன் னுதிரத்துப் பிறந்து ஒன்றுபல ஆயிடினும்**
> **ஆரியம்போல் உலகவழக்கொழிந்து அழியாஉன்**
> **சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே**

எனும் பேராசிரியர் மனோண்மணியம் சுந்தரம்பிள்ளை அவர்களில் கூற்றுத் தமிழ்மொழியினது மேன்மையினைப் பறைசாற்றி நிற்கிறது. திராவிட மொழிகளுள் மூத்தமொழியாய்க் கருதப்படும் தமிழின்கண் இன்று சொற்கள் பல வழக்கிறந்துவிட்டன. எனினும் அவை முற்றிலும் மறைந்தும் விடவில்லை. தமிழின் கிளைமொழிகளாய்த் திகழும் வழக்குகள் பல இத்தகு சொற்களின் புகலிடமாய்க் காட்சியளிக்கின்றன. பழந்தமிழ்ச் சொற்கள் பல வாழும் பெட்டகமாய் இக்கிளைமொழிகள் திகழ்ந்து வருகின்றன. தமிழின் கிளைமொழிகளாய்த் திகழும் வட்டார வழக்குகளும் சமூக (சாதி வழக்கு, தொழில் வழக்கு, பால் வழக்கு, பொருளாதார வழக்கு) வழக்குகளும் தொல்தமிழ்ச் சொற்களுள் தொலைந்த சொற்களின் களஞ்சியமாய் விளங்குகின்றன. சுக்கல் (விண்மீன்), உகிர் (விரல் நகம்), அண்டை (பக்கம்), அகம் (வீடு) போன்ற நூற்றுக்கணக்கான சொற்கள் முற்றிலும் மறைந்துவிடவில்லை. உருவு திரிந்தோ பொருள் மாற்றம் அடைந்தோ வழங்குகின்றனவேயன்றி முற்றிலும் அழிந்துவிடாவண்ணம் அவற்றைக் காக்கும் அரண்களாகத் தமிழ்க் கிளைமொழிகள் வாழ்ந்து வருகின்றன.

தமிழ்க் கிளைமொழிகளுள் வடக்கு வட்டாரக் கிளைமொழியின்கண் காணப்படும் பழந்தமிழ்ச் சொற்கள் ஏராளம். இச்சொல் தானா? என ஐயமுறும்வண்ணம் சிதைந்து காணப்படும் சொற்களும் இக்கிளைமொழியில் உண்டு. ஒலிமாற்றமும் சொல் மாற்றமும் சொற்பொருள் மாற்றமும் என இக்

கிளைமொழி தமிழகத்தின் வடக்குக் கிளைமொழியாக வழங்கி வருகிறது. இக்கிளைமொழிக்குரிய சிறப்புத் தன்மையே அண்டைமொழியினின்று தன்னைக் காத்துக் கொண்டுள்ள தன்மை. அண்டைமாநில மொழியான தெலுங்கு மொழியின் தாக்கம் வடக்கும் கிளைமொழியில் மிகுதியாகவே காணப்பட்ட காலமும் ஒன்றுண்டு. பெருமை நோக்கம் கருதியும் இந்நிலை உருவாகி யிருந்தது. தற்காலத்தில் இந்நிலை சற்று மாறியுள்ளது. கல்வி வளர்ச்சியினை இந்நிலைக்குரிய காரணியாகக் கொள்ளலாம். ஒலிக்குறுக்கீடும் சொல் குறுக்கீடும் சொற்கலப்பும் பல்வேறு இலக்கணக் கூறுகளின் கலப்புமென வெவ்வேறு விதங்களில் தெலுங்கு மொழியின் தாக்கத்திற்கு ஆளான கிளைமொழி தமிழ்மொழியின் வடக்குக் கிளைமொழி.

இந்நிலையிலும் பல்வேறு குறுக்கீடுகளினூடே தன்னைக் காத்துக் கொண்டு வளமாய் வளர்ந்துள்ளது. தமிழ்மொழி தமிழின் பழமையான வளமான சொற்கள் வழக்கிறந்து விடாமல் வளமாய் வாழவைத்த மொழியென இக்கிளைமொழியினைக் கூறலாம். கல்லாதவர் பலர் இருப்பதாலும் உட்புறச் சிற்றூர்கள் பல காணப்படுவதாலும் பழந்தமிழ் வாழ்ந்து கொண்டுதான் உள்ளது. அறிவியல் வளர்ந்துள்ள சூழலிலும் பேருந்து, மின்சார வசதியற்ற ஊர்கள் பலவும் காணப்படும் தமிழகத்தின் வடக்குப்பகுதியில் வளமையான பழந்தமிழ்ச் சொற்கள் இன்றும் பயின்றுவரும் சூழலைக் காணவியலுகிறது. இக்கண்ணோட்டத்தின் அடிப்படையில் வடக்குக் கிளைமொழியினை மொழியியல், தமிழிலக்கணம், அகராதியியல், வரலாற்றியல், புவியியல், சமூகவியல், அரசியல் எனப் பல்துறையினைச்சார்ந்து பல கோணங்களில் ஒருங்கிணைந்து ஆய்ந்துள்ளது இந்நூல். முற்றிலும் களப்பணியின் அடியாய்த் தோன்றிய இந்நூல் இக்கால ஆய்வாளர்களுக்கு ஒரு முன்னோடி நூலாக விளங்கும்.

மறைமலையடிகள் அறக்கட்டளைப் பொழிவாற்ற அழைத்துதவிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கும் இவ்வாய்ப்பினை நல்கிச் சிறப்பித்த நிறுவன இயக்குநர் பேரா. முனைவர் கரு.அழ. குணசேகரன் அவர்களுக்கும் நன்றி கூறுவது என் கடனாகும்.

**மணியெழில் தமிழே மன்பதைத் தாயே**

எனத் தமிழ்த்தாயின் நல்லடிகளை வணங்கி இந்நூலைத் தமிழுலகம் ஏற்றுச் சிறப்பிக்கும் என நம்புகிறேன்.

நன்றி.

**ந. கலைவாணி**

# உள்ளே

முன்னுரை 1

மொழி ஆய்வுகளின் வரலாறு 5

தமிழக ஆந்திர எல்லையின் புவியியல் அமைப்பும் வரலாற்றுப் பின்புலமும் 17

தமிழக ஆந்திர எல்லையின் சமுதாயப் பின்புலம் 31

தமிழக ஆந்திர எல்லையில் வட்டாரக் கிளைமொழி ஆய்வு 49

தமிழ்மொழியில் தெலுங்குமொழியின் தாக்கம் 88

வடக்குக் கிளைமொழியும் கிளைமொழி அகராதியும் 115

முடிவுரை 126

துணைநூற்பட்டியல் 131

பின்னிணைப்பு (தமிழ்ச்சொற்கள் அகராதி) 134

# முன்னுரை

## மொழியின் தோற்றமும் வளர்ச்சியும்

மனிதனை உயர்வுபெறச் செய்வதும், பிற உயிர்களிடமிருந்து வேறு படுத்திக் காட்டுவதும் மொழியே ஆகும். தம் மனவுணர்வினைப் பிறர்க்கு உணர்த்த விழைந்த மனித விழைவின் விழுப் பயனாய் மொழி தோன்றிற்று. காலத்திற்கு ஏற்பவும் தேவைக்கு ஏற்பவும் மொழி படிப்படியாக வளரும் தன்மையுடையது. ஒருவர் எண்ணத்தில் தோன்றிய கருத்தைப் பிறர் அறிவதற்கும், பிறருடைய கருத்தைத் தாம் அறிவதற்கும் மொழி சிறந்ததொரு கருவியாக விளங்குகிறது. மக்கள்,மொழியின் துணையின்றி வாழ்ந்த காலமும் உண்டு.ஆயினும், இன்றைய காலக்கட்டத்தில் மொழியின்றி வாழ்வது, பிறர் துணையின்றி வாழ்வதற்கு ஒப்பாகும். ஓரிடத்தில் தோன்றிய மொழியே காலப்போக்கில் பல மொழிகளாக உருவாகிப் பல இடங்களுக்குப் பரவி இருக்கலாம். மொழி என்பது மக்கள் முயற்சி செய்து கற்கவேண்டிய ஒன்று. பலநிலைகளைக் கடந்து மனித வளர்ச்சிக்கேற்ப மொழித்திறனும் வளர்ந்து கொண்டே வருகிறது.

மக்களை நாகரிக வாழ்விற்கு உயர்த்துவது மொழி. மொழி என்ற இக்கருவி இல்லை எனில், மக்கள் – மாக்களாகத்தான் வாழ்ந்திருப்பர். மக்கள் தம் உணர்ச்சிகளை மொழியால்தான் வெளிப்படுத்த முடியும். மொழி அல்லாத முகக்குறிப்புகள், சைகைகள் போன்றவை கருத்துப் பரிமாற்றத்திற்கு ஓரளவு உதவினாலும் மொழிதான் முற்றிலும் முழுமையான எண்ணங்களை வளர்க்கவும் சிந்தனையைப் பெருக்கவும் உற்றதுணையாய் விளங்குகிறது.

### பேச்சு மொழியும் எழுத்து மொழியும்

ஒரு சமுதாயத்தை உருவாக்குவதில் மொழி இன்றியமையாப் பங்கு வகிக்கிறது.சுருங்கச் சொல்வதென்றால் ஒரு சமுதாயம் அல்லது இனத்தை இனங்காண உகந்த காரணியாகத் திகழ்வது மொழியே எனலாம். இத்தகைய சிறப்புகளைக் கொண்ட மொழி பேச்சுமொழி, எழுத்துமொழி என்ற இரு வகைகளாகப் பகுக்கப்பட்டாலும் பேச்சுமொழியிலிருந்துதான் எழுத்துமொழி உருவாகியது என்பதை நாம் அறிவோம். ஒரு சமுதாயத்தின் உண்மையான மொழிநிலையை அறிய அவர்களுடைய பேச்சுமொழிதான் அடிப்படையாக விளங்குகிறது. இப் பேச்சுமொழியினை அடிப்படையாகக் கொண்டுதான் மொழியாய்வுகள் இன்று நடைபெற்று வருகின்றன.

### மொழியியல்

மொழி ஆராய்ச்சியின் அடிப்படையாக அமைவது அம்மொழியினது பேச்சுமொழியில் காணப்படும் ஒலிக் கூறுகளாகும். இவ்வொலிக் கூறுகளைப் பற்றி

ஆராய்வது ***ஒலியியல்*** எனப்படும். இவ்வொலிகளால் உருவாக்கப்பட்ட உருபன்களைப் பற்றி ஆய்வது ***உருபனியல்*** ஆகும். சொற்கள் பல தொடர்ந்து நின்று வாக்கியத்தில் அமையும் முறையினைப் பற்றிக் கூறுவது நின்று நின்று வாக்கியத்தில் அமையும் முறையினைப் பற்றிக் கூறுவது ***தொடரியல்*** ஆகும். மொழிக்கும் அதன் பொருளுக்கும் உள்ள தொடர்பை உணர்த்துவது ***பொருண்மையியல்*** ஆகும். இவை அனைத்தும் அறிவியலின் அடிப்படையில் மொழியினை ஆராயும் முறைகளாகும்.

**இலக்கணமும் மொழியியலும்**

பொதுவாக இலக்கணம் என்பது, இலக்கிய வழக்கின் அமைப்பை விதிகளின் அடிப்படையில் வரையறுத்துக் கூறுவதாகும். அறிவியலின் அடிப்படையில் பேச்சுமொழிக் கூறுகளை ஆராய்ந்து விதிகளை வரையறுத்து இலக்கணம் அமைப்பது ***மொழியியல்*** ஆகும்.

மேலே குறிப்பிடப்பட்ட பேச்சுமொழி என்பது ஒரு குறிப்பிட்ட மொழி பேசுவோரின் பேச்சுமொழியாகவோ அல்லது பல்வேறு வட்டாரங்களைச் சார்ந்த வட்டாரக் கிளைமொழியாகவோ அல்லது அம்மொழி பேசும் பல்வேறு சமூகத்தைச் சார்ந்தோர் பேசும் சமூகக் கிளைமொழியாகவோ இருக்கலாம். பேச்சுவழக்கு என்று கூறும்போது பல இடங்களில் கூட்டம் கூட்டமாக வாழும் வட்டார மக்களின் பல்வேறுபட்ட மொழிகளையும் குறிப்பிடலாம்; அல்லது, ஒரே மொழியில் அமைந்த பல்வேறு கிளைமொழிகளையும் கூறலாம்.

**தமிழின் சிறப்புகள்**

> ***ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழ விளங்கி***
> ***ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும் – ஆங்கவற்றுள்***
> ***மின்னேர் தனியாழி வெங்கதிரோன் ஒன்று ஏனையது***
> ***தன்னேர் இலாத தமிழ்***[1]

என்று சிறப்பிக்கப்படும் தமிழ்மொழியானது உயர்ந்த – வளமான இலக்கண இலக்கியப் பரப்பினைக் கொண்டது. உலகின் தொன்மை மொழிகள் என்று கருதப்படும் மொழிகள் சிலவே. அவற்றுள் தமிழும் ஒன்று. இத் தமிழ்மொழியின் பழமையை அறிவதற்குத் தொன்மைக் காலத்துக் கல்வெட்டுகள், செப்பேடுகள், மெய்க்கீர்த்திகள், இலக்கியங்கள் போன்றவை ஆதாரங்களாக விளங்குகின்றன. அவ்வாதாரங்கள் வழி உணரப்பெறும் தமிழின் தொன்மை, வரலாற்றுக் காலத்திற்கும் முந்தியதாக அமைகிறது.

தமிழ் உள்ளிட்ட தென்னிந்திய மொழி களையும் வேறுசில மொழிகளையும் இணைத்துத் ***திராவிடமொழிக் குடும்பம்*** என்பர் மொழியியல் அறிஞர். தமிழ், திராவிடமொழிக் குடும்பத்தில் ஒருமொழியாக இருப்பினும் மூலத் திராவிட மொழியோடு ஏனைய திராவிட மொழிகளை விட மிக நெருங்கிய தொடர்பு உடையது. இத்தகைய பழமையான மொழியாக இருந்தாலும் பழமைக்கும் பழமையாய்ப்,

---

1. **தண்டியலங்காரம். ப. 116.**

புதுமைக்கும் புதுமையாய் இன்றுவரை நிலைத்து நின்று உயர்ந்த இடத்தைப் பெற்றுத் திகழ்கிறது தமிழ்மொழி. தொன்மையும் தன்னேரில்லாத் தனிப்பெருஞ் சிறப்பும் வாய்ந்த தமிழ்மொழி இலக்கிய வழக்கினின்றும் வேறுபட்ட பல்வேறு பேச்சு வழக்குகளைக் கொண்டிருப்பதால் மொழி ஆய்வு செய்வதற்குச் சிறந்ததொரு களமாக விளங்குகிறது.

## தமிழின் இரு வழக்குகள்

தமிழ்மொழியின் வழக்கு வேறுபாட்டைப் பொறுத்தவரையில் எழுத்து வழக்கு, பேச்சுவழக்கு என இருவேறு வழக்குகள் உள்ளன. வேறு சில மொழிகளில் இவ்விரு வேறுபாடுகள் காணப்படுவதில்லை. அவ்வாறே வேறுபாடுகள் காணப்பட்டாலும் அவை மிகச் சில மாற்றங்கள் கொண்டதாகவே இருக்கும்.

தமிழ்மொழியைப் பொறுத்தவரையில் எழுத்துவழக்கு இலக்கியத்திற் காகவும் மேடைகளிலும் வகுப்பறைகளிலும் பயன்படுத்தும் உயர்வழக்காகவே உள்ளது.[1]

பேச்சு வழக்கிலும், பொதுப்பேச்சு வழக்கு மற்றும் கொச்சைப் பேச்சு வழக்கு என்ற இருவேறு வழக்குகள் வழங்கப்படுவதையும் அறியலாம். தொலைக்காட்சி, வானொலி போன்ற தகவல் தொடர்புச் சாதனங்களில் அறியப்படும் இப் பொதுப்பேச்சுத் தமிழைத், தமிழ்ச் சமுதாயத்தைச் சார்ந்தோர் அனைவராலும் புரிந்து கொள்ள முடியும். மக்கள் பேசுகின்ற பல்வேறு சூழல்களில் இயல்பாகப் பேசுகின்ற கொச்சை வழக்கினைக் காணலாம். குறிப்பிட்ட ஒரு வட்டாரத்தினரோ அல்லது குறிப்பிட்ட ஒரு சமுதாயத்தினரோ மட்டுமே புரிந்துகொள்ள இயலுகின்ற கொச்சைவழக்கு பேச்சுநடையும் தமிழில் உண்டு. எனவே தமிழில் உள்ள பொதுப்பேச்சு வழக்கினை உயர்வழக்கென்றும், பிற கொச்சைமொழி வழக்கினை அதனைக் காட்டிலும் சற்றுத் தாழ்ந்த வழக்காகவும் கொள்ளலாம்.

### கிளைமொழி

இந்தியநாடு போன்ற பரந்த நாட்டில், காடு இடையிட்டும் மலை யிடையிட்டும் மக்கள் வாழ்ந்த காரணத்தால் ஒரு பகுதியில் வாழ்பவர்க்கும் இன்னொரு பகுதியில் வாழ்பவர்க்கும் இடையே தொடர்பின்றி அவரவர் தத்தம் கூட்டத்திற்குள்ளே அவரவர் கருத்தைத் தெரிவிக்கும் சூழல் ஏற்படும்போது பல்வேறுபட்ட மொழிகள் உருவாகின்றன.

ஒரேமொழி பேசுவோரிடையேயும் கூட வாழ்நிலங்களைப் பிரிக்கும் ஆறு, மலை போன்ற புவியியல் இயற்கை அமைப்பினால் சீரான தொடர்பற்ற நிலையில்

---

1. **"The Superposed variety in diglossia will be called the H (High) Variety or simply H and the regional dialects will be called L (Low) varieties.... simply"**

வாழும்போது அவ்வப்பகுதி மக்களுடைய பேச்சுவழக்கும் வேறுபாடு உடையதாக விளங்குகிறது.இவ்வாறு ஒரேமொழி பேசுவோரிடையே தோன்றும் கிளைமொழி, வட்டார வழக்குக் கிளைமொழியாகக் கருதப்படுகிறது. சமுதாயக் கிளைமொழியில் சாதிக் கிளைமொழிகள், தொழில் கிளைமொழிகள் என்ற பிரிவுகளையும் காணமுடிகிறது.

## இரு மொழியம்

இருமொழியாளுமைக்குப் பல காரணங்கள் உள்ளன. இன்றைய பள்ளிக் கல்வியில் கட்டாயப் பாடமாக்கப்பட்ட தாய்மொழியல்லாத இன்னொரு மொழியையும் கற்க வேண்டிய சூழல் உள்ளது. எனவே கற்றவர்கள் தம் தாய்மொழி அறிவு மட்டுமின்றி ஆங்கிலமனைய பிறிதொரு மொழியினையும் அறிந்தவரா கின்றனர். கல்லாதவர்களும் கூடத், தமக்குத் தெரிந்த பிற மொழிச் சொற்களைத் தம் மொழியினிடையே கலந்து கருத்துப் பரிமாற்றம் செய்கின்றனர். வாணிபத் தொடர்பு காரணமாகவும் பிழைப்பதற்காக வேறு பகுதிகளுக்குச் செல்வோரும் தம் தாய்மொழியுடன் தாம்சென்ற தேயத்தின் மொழியையோ, தொடர்பு கொள்ளும் தேயத்தின் மொழியையோ கற்க வேண்டிய நிலைக்கு ஆளாகின்றனர். இத்தகைய நிலையிலுள்ள மக்கள் தம் தாய்மொழியில் உரையாடும் போதும் தாமறிந்த பிறமொழிச் சொற்களையும் கலந்து உரையாடுகின்றனர். இதற்கு எந்த ஒரு மொழியும் விதிவிலக்கல்ல என்று கூறலாம். இவ்வாறே இருமொழியாளுமை உருவாகிறது.

## எல்லைப்புற இருமொழியம்

மேற்கூறிய காரணங்களே யன்றி ஒரு வட்டாரத்தின் எல்லைப் பகுதியில் வாழ்கின்ற மக்கள் இயல்பாகவே இருமொழியாளர்களாய் வாழ்கின்றனர். பெரும்பாலான எல்லைப்புற மக்கள் பிறமொழியால் தம் தாய்மொழிக்கு எந்தவிதப் பாதிப்பு இன்றியும், பிறமொழி பேசும் மக்களோடு மொழி வேறுபாடின்றியும் வாழ்ந்து வருகின்றனர். ஆயினும் சில எல்லையோரப் பகுதிகளில் வாழும் மக்கள் பல்வேறு அரசியல்,பொருளாதாரக் காரணங்களால் பிறமொழிச் செல்வாக்கினை ஏற்றும் தம் மொழிச் செல்வாக்கினை ஒழித்தும் வாழ வேண்டிய சூழலில் இருந்து வருகின்றனர்.

பழமையும் சிறப்பும் வாய்ந்த தமிழ்மொழி வழங்கும் தமிழகத்தின் வடக்கு எல்லையில் தமிழ்க்கிளைமொழி ஆய்வும், தமிழகத்தின் வட எல்லையாக ஆந்திரம் விளங்குவதால் தமிழ்–தெலுங்கு ஆகிய இருமொழிய ஆய்வும் மேற்கொள்ள வேண்டிய இன்றியமையாமை ஏற்படுகின்றது. எனவே இவ் ஆய்வுத் தேவையைக் கருதி, தமிழக ஆந்திர எல்லையில் கிளைமொழி ஆய்வு மற்றும் எல்லைப் புற இருமொழிய ஆய்வு என்னும் வகையில் இவ்வாய்வுரை அமைகிறது.

# மொழி ஆய்வுகளின் வரலாறு

தொன்மையும் சிறப்பும் வாய்ந்த தமிழ்மொழி மூலத் திராவிட மொழியிலிருந்து தோன்றிய முதன்மொழி. இத்தமிழ் மொழியானது பற்பல வளர்ச்சிகளைக் கடந்து தற்போது வழங்கி வரும் பேச்சுவழக்கினை அடைந்துள்ளது. திராவிடமொழிக் குடும்பத்துள் மூத்த மொழியாகக் கருதப்படும் தமிழ்மொழி காலந்தோறும் பெற்றுள்ள வளர்ச்சியினையும், பிற திராவிட மொழிகளிலிருந்து தனித்தோங்கி நிற்கும் அதன் சிறப்பினையும் பல மொழியியல் அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

நாம் முன்னரே குறிப்பிட்டவாறு வடவேங்கடம் தென்குமரி ஆயிடை விரிந்து பரந்துள்ள நிலப் பரப்பினிடையே வழங்கும் தமிழ்மொழியின் பேச்சு வழக்கில் பல கிளைமொழிகள் தோன்றி வாழ்ந்து வருகின்றன. தமிழ்மொழியினது கிளைமொழிகளைப் பற்றிய ஆய்வும் ஆங்காங்கே நடைபெற்று வந்துள்ளது. அறிஞர்கள் பலர் தமிழ்மொழி உட்பட பிற திராவிடமொழிகளின் வளர்ச்சியினைக் காட்டும் ஆய்வுகள் பலவற்றைச் செய்து வந்துள்ளனர். தொல்காப்பியர் காலத்திலேயே செந்தமிழ் என்று குறிப்பிடப் பெறுவதும் பேச்சுவழக்கிலிருந்து வேறுபடுத்தப்பட்டதுமான எழுத்துவழக்கில் அமைந்த தமிழ்மொழியினது தொன்மைச் சிறப்புகள் பலவும் மொழியியல் அறிஞர் பலராலும் எடுத்துரைக்கப் பட்டுள்ளன. தொன்மை மொழியாக இருப்பினும் இன்றும் நிலைபெற்ற வளமையுடன் வாழும் தமிழ் மொழியின் பேச்சு வழக்கும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் பல மொழியியல் அறிஞர்களின் ஆராய்ச்சிக்கு உட்பட்டுள்ளது.

## இந்தியாவில் மொழியியல் ஆய்வு

கி.பி. 19-ம் நூற்றாண்டின் இறுதியிலும் சென்ற நூற்றாண்டின் தொடக்கத்திலும் மொழியாய்வுகள் பல மேலைநாடுகளில் நடைபெற்று வந்துள்ளன. அங்கு வழங்கும் கிளைமொழிகளை வட்டாரங்களின் அடிப்படையில் ஆராய்ந்து வந்தனர். அம்மேல்நாட்டு மொழியியல் அறிஞர்கள் கி.பி. 16-ஆம் நூற்றாண்டிலிருந்தே திராவிட மொழிகள் பற்றியும் ஓரளவு அறிந்து வந்துள்ளனர். எனவே, இந்தியாவிலும் அவ்வகையில் மொழியாய்வுகள் சில மேற்கொள்ளப்பட்டன.

இந்தியாவிற்கு வந்த 'போர்ச்சுகீஸ்' அறிஞரான '**காஸ்டண்டா**' தாம் எழுதிய நூலில் திராவிடமொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மலையாளம், கன்னடம் பற்றி சில ஆய்வுக் கருத்துக்களைக் குறிப்பிட்டுச் சென்றுள்ளார்.[1] இதைப் பற்றிக் கூறிய '**கிரியர்சன்**', '**கஸ்ட்**' என்பாரின் முயற்சியால் இந்தியாவில் பல மொழியாய்வுகளை மேற்கொண்டுள்ளார். தென் திராவிட மொழிகளான தமிழ், மலையாளம், கன்னடம்

1. அகத்தியலிங்கம், ச., திராவிட மொழிகள் – 2, ப. 65.

மற்றும் நடுத்திராவிட மொழியான தெலுங்கு முதலிய மொழிகள் எல்லாம் வட மொழியிலிருந்து தோன்றியவை என்ற தவறான கருத்தைக் கொண்டிருந்த மொழி அறிஞர்களும் இருந்து வந்தனர்[1]. மேலைநாட்டு அறிஞர் மட்டுமன்றி, நம் நாட்டு அறிஞர்களும் இத்தகையதொரு கருத்தியலை முன்வைத்து தம் ஆய்வு முடிபுகளைக் கூறினர்.

## மேலைநாட்டு அறிஞர்களின் திராவிட மொழிப் பாகுபாடு

இத்தகையதொரு நிலையில் திராவிட மொழிகளுள் திருந்திய மொழிகளாகக் கருதப்படும் தமிழ், மலையாளம் போன்ற மொழிகளுக்குள் ஒற்றுமை பல காணப்படுவதை **பிரான்சிஸ் எல்லீஸ்** என்ற அறிஞர் சுட்டிக் காட்டியுள்ளார். இவற்றை ஒன்றுபடுத்தி தென்திராவிட மொழிகளாகக் குறிப்பிட்டுள்ளார். திராவிடமொழி என்ற குடும்பம் என்ற கோட்பாடு உருவாக அடிப்படைக் காரணமாக இருந்த **இராபர்ட்ஸ்** என்பவர் 'மால்தோ' மொழியினைப் பற்றிக் குறிப்பிடும்போது தென்னிந்திய மொழிகளான தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு, குடகு போன்ற மொழிகளுடன் 'மால்தோ' மொழிக்கூறுகள் ஒன்றுபட்டு இருப்பதை விளக்கியுள்ளார்.[2]

மேற்கூறிய ஆய்வுபோன்றே **பிராகுவி** மொழியும், தென்னிந்திய மொழிகளுடன் தொடர்பு கொண்டிருந்ததை **'லேசன்'** என்பவர் ஆராய்ந்துள்ளார்.[3] தென்திராவிடத் திருந்தா மொழியான 'தோத' மொழி தமிழ்மொழியுடன் கொண்டிருந்த தொடர்பு பற்றி கி.பி.19--ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆய்வுகள் பல வெளிவந்துள்ளன. திராவிட மொழிகளுள் தோதமொழியும் ஒன்று என்ற கருத்தை மொழியியல் அறிஞரான **பெர்னட் ஸ்மித்** என்பவர் விளக்கியுள்ளார்.[4] நடுத்திராவிட மொழியான கோண்டிமொழிக்கு **வாய்சே** என்பவர் இலக்கண நூல் ஒன்றை வெளியிட்டார். அம்மொழியானது தென்திராவிட மொழிகளுள் திருந்திய மொழியான தெலுங்குடன் கொண்டிருக்கும் தொடர்பு இந்நூலுள் விளக்கப்பட்டுள்ளது. தென்திராவிட மொழிகளுள் திருந்தா மொழியான **படகமொழி** பற்றியும் அறிஞர்கள் சிலர் ஆய்ந்து வந்துள்ளனர்.அவ்வாய்வுகளில் கன்னட மொழியுடன் இம்மொழிக்குள்ள நெருங்கிய தொடர்பு விளக்கப்பட்டுள்ளது.[5]

நடுத்திராவிட மொழியான **கூயி** மொழி **கோண்டி** மொழியுடன் நெருங்கிய தொடர்புடையதாக இருந்தபோதிலும், இது ஒரு தனிமொழியே என்ற எண்ணம் அம்மொழிக்கு இலக்கணம் எழுதிய **ஜான் பெர்சிவால் பிரய்** என்பவர் வெளியிட்ட

---

1. **Cambell. A.D., A Grammer of the Teloogoo language (1816), p.2.**
2. **அகத்தியலிங்கம், ச., திராவிட மொழிகள் – 2, ப. 67.**
3. **மேலது, ப. 67.**
4. **மேலது, ப. 68.**
5. **Emeneau. M.B., The South Dravidian Language, JAOS, 87, 4: 365 - 413.**

கூயி மொழி இலக்கணத்திற்குப் பிறகு உறுதிப்படுத்தப்பட்டது.[1] கி.பி. 1830–க்குப் பிறகு கிறிஸ்தவப் பாதிரிமார்கள் சிலர் வெளியிட்ட துளு மொழி பற்றிய கருத்துக்கள், மொழியியல் ஆய்வில் சிறந்த இடத்தை வகிப்பன. **எல்லிஸ்** அவர்கள் துளு மொழியை மலையாளக் கிளைமொழியாகக் கருதினார். **மேத்யூ** என்பவர் வெளியிட்ட கருத்தின்படி துளு, கன்னடத்துடன் கொண்ட தொடர்பு புலனாகியது.

தென்னிந்திய மொழிகள் அனைத்தும் தனி இனம், இவை வடமொழி யோடு தொடர்புடையனவல்ல; இவை தம்முள்ளே நெருங்கியத் தொடர்புடையன; வட இந்திய மொழிகளில் தென்னிந்தியமொழிச் சொற்கள் பல வழங்கி வருகின்றன; என்ற கருத்துக்களை எல்லாம் **ஸ்டீவன்சன்** கி.பி. 1842–ல் வெளியிட்டார்.[2] ஆரிய மொழியிலிருந்து தென்திராவிட மொழியின் திருந்தா மொழிகளான நீலகிரி மொழிகள் தொடர்பு அற்றன என்பதும் தமிழ்மொழியுடன் தொடர்பு உடையதால் இவையனைத்துமே **தமிழியன்** என்ற பொதுப்பெயரால் வழங்கப்பட்டன என்பதும் **ஹாட்சன்** என்பவர் கருத்திலிருந்து புலனாகிறது.[3] தென்னிந்திய மொழிகளுள் பெரும்பான்மையானவை சித்திய மொழிக் குடும்பத்துடன் தொடர்புடையவை என்ற கருத்தை கி.பி. 1854–ல் **மாக்ஸ்முல்லர்** என்பவர் வெளியிட்டுள்ளார். **ராம்ஸ் ராஸ்க்** என்பவர் திராவிட மொழிகள், ஆரியமொழிக் குடும்பத்திலிருந்து வேறுபட்டன என்பதையும் வடமொழியில் பல திராவிடமொழிச் சொற்கள் இடம் பெற்றுள்ளன என்பதையும் வெளியிட்டு இலக்கண வேற்றுமைகளையும் வேறுபடுத்திக் காட்டியுள்ளார். குடகு மொழி பற்றிய செய்திகளை, **கோல் கிரேட்டர்** போன்றோர் வெளியிட்ட இலக்கண நூல்களின் மூலம் அறிந்து கொள்ளலாம்.[4]

திராவிட மொழிகளுள் திருந்திய மொழிகள், திருந்தா மொழிகள் என்ற பாகுபாடே கி.பி. 19–ம் நூற்றாண்டின் இறுதியில்தான் தெளிவானது. தொடக்கத்தில் தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு, குடகு, துளு போன்ற மொழிகள் திருந்திய மொழிகளாகவும், கோத்தா, தோடா, கோண்டி, கூயி, குரூக், மால்தோ போன்ற மொழிகள் திருந்தா மொழிகளாகவும் கொள்ளப்பட்டன.[5]

## கால்டுவெல்

இன்றைய நிலையில் திராவிட மொழிகள் ஏறக்குறைய 23 என்றாலும் கி.பி. 19–ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஒன்பது மொழிகளையே குறிப்பிடுகின்றார்

---

1. அகத்தியலிங்கம், ச., திராவிட மொழிகள் – 2, ப. 69.
2. **Stevenson, J., An Essay on the Languages of the aboriginal Hindus - The Journal of the Bomba Branch of the Royal Asiatic Society, 1, 3, 1842**
3. அகத்தியலிங்கம், ச., திராவிட மொழிகள் – 2, ப.70.
4. **Cole R.A., An Elementary Grammar of the Coorg Language.**
5. **Caldwell, R.A., Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages, (Second Edition).**

**கால்டுவெல்.** அவர் சில திராவிடமொழிகளைக் கிளைமொழி களாகக் கருதினார். எனவே அவற்றைத் தனிமொழிகளாக உறுதியாக அவரால் கூற இயலவில்லை. தம் நூலின் முதல் பதிப்பில் ஒன்பது மொழிகளையே திராவிட மொழிகள் என்றும் அவை ஆரிய மொழியிலிருந்து முற்றிலும் வேறுபட்டவை என்றும் குறிப்பிட்டுள்ளார். திராவிட மொழிகளுள் தமிழின் தொன்மையை வெளிப்படுத்தியவர் கால்டுவெல்.இவர் திராவிட மொழிகளுக்குள் அமைந்துள்ள இலக்கண ஒப்புமையைப் பல ஆதாரங்களுடன் தம் நூலின் இரண்டாம் பதிப்பில் வெளியிட்டுள்ளார்.[1]

குடகு மொழியைக் கன்னட மொழியின் கிளைமொழியாகத் தம் முதல் பதிப்பில் கூறிய கால்டுவெல், அம் மொழியைத் தனியொரு மொழியாகத் தம் இரண்டாம் பதிப்பில் விளக்கியுள்ளார். தமிழ் – மலையாளம் ஆகியவற்றிற்குள்ள நெருங்கிய தொடர்பையும் அவர் குறிப்பிட்டுள்ளார். வட இந்தியாவில் பேசப்படும் மொழிகளாயினும், மால்தோ, குருக், பிராகுவி போன்ற மொழிகள் திராவிட மொழிகளாகவே உள்ளன என்னும் ஆய்வு முடிபுகள் பலவற்றைத் தம் நூலிலே வெளியிட்டுள்ளார். திராவிட மொழிகள் வடமொழிக் குடும்பத்திலிருந்து பெரும்பாலும் வேறுபட்டிருப்பதால் திராவிட மொழிக் குடும்பம் என்று திராவிட மொழிகளை ஒரு தனி இனமாகக் கால்டுவெல் அவர்களால் அடையாளம் காணமுடிந்தது. தென்திராவிட மொழிகளுக்குள் உள்ள ஒற்றுமையும் அவற்றுள் மூலத் திராவிட மொழியுடன் நெருங்கியத் தொடர்புடைய தமிழ்மொழியின் சிறப்பினையும் கால்டுவெல் உணர்த்தியிருப்பது அவர் தமிழ் மொழிக்குச் செய்த மாபெரும் நன்மையெனக் கருதலாம்.

## பரோ, எமினோ

இவர்கள் இருவரும் இணைந்து வெளியிட்ட *திராவிட சொற்பிறப்பியல் அகராதி* திராவிடச் சொற்களைப் பற்றி அறிய பயன்படும் கருவூலமாக விளங்குகிறது. வடமொழிக் கூறுகளை ஆராய முற்பட்ட அவர்கள் திராவிட மொழிகளின் சிறப்பினையும் உணர்ந்து அவற்றையும் ஆராய முற்பட்டனர். பரோ அவர்கள், திராவிட ஒலியன்களின் சிறப்பினை ஏழு கட்டுரைகளாக ***Dravidian Studies*** என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளார்.[2] பரோ, தமிழ் வல்லொலிகள் ஒலிப்புடைய ஒலி, ஒலிப்பிலா ஒலி என்ற இருவேறு வகைகளாக உள்ளமையை முதன்முதலாகக் கண்டறிந்து விளக்கினார். உயிரொலிகளை ஆராய்ந்த அவ்வறிஞர், மேலுயிர், கீழுயிர்களுக்குள்ள வேற்றுமையையும் வெளிப்படுத் தினார்.திராவிட மொழிகளில் ககரம் அடையும் பல்வேறு மாற்றொலி மாற்றங் களைத் தெளிவாக்கியவரும் அவரே. பரோ, வடமொழியையும் நன்கு அறிந்திருந் ததால் வடமொழி திராவிட மொழிகளை ஒப்பிட்டு அவற்றிடையே உள்ள ஒற்றுமை, வேற்றுமைகளை எடுத்து விளக்கியுள்ளார். **பர்சி, மண்டா, பெங்கோ, கதபா,**

---

1 Caldwell, R.A., Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages, (Second Edition). p.4-10.

**கொண்டா** போன்ற பல்வேறு திருந்தா திராவிட மொழிகளை ஆய்வு செய்து தனித்தனி மொழிகளாக வெளிக்கொணர்ந்த பெருமை பரோ அவர்களையே சாரும்.

மொழியை, மானிடவியல் அடிப்படையில் ஆயும் போக்கினைத் தொடங்கி வைத்தவர் **எமினோ.** பரோவைப் போன்றே வடமொழி, திராவிட மொழி ஆய்வில் புலமை மிக்கவர் இவர். **தோடா – ஒரு திராவிட மொழி** என்ற தலைப்பில் கட்டுரை எழுதி 'தோடா' மொழியினைத் தனிமொழியாக வெளிக்கொணர்ந்த பெருமை எமினோவையே சாரும். கோத்தா, படகா ஆகிய மொழிகளுக்குள்ளே இருந்த ஒப்புமையைத் தம் கட்டுரைகளின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார். திராவிடமொழி ஒப்பியல் ஆய்வில் தனியொரு இடத்தை வகித்தவராக விளங்கினார். ***திராவிட ஒப்பு ஒலியனியல்*** என்ற தம் நூலில், தொல் திராவிட மொழியில் இடம்பெற்ற ஒலியன்களை விளக்கியுள்ளார். மொழியியல் வரலாற்றில் பரோவும், எமினோவும் குறிப்பிடத்தக்க வகையில் இடம்பெற்றவர்கள் ஆவர்.

## கே.வி. சுப்பையா, எல்.வி. இராமசாமி ஐயர்

திராவிட மொழிகளின் ஆய்வை மேற்கொண்ட இவர்கள் ஒப்பிலக்கணப் போக்குடன் பல கட்டுரைகளை வெளியிட்டுள்ளனர். கால்டுவெல்லைக் காட்டிலும் சுப்பையா அவர்கள் திராவிட மொழிகளை அறிவியல் பூர்வமாக ஆய்ந்து திராவிட ஒப்பியல் மொழியியலுக்கு அடித்தளம் அமைத்தார் எனலாம்.

தமிழ், மலையாளம், ஆங்கிலம் என்ற மூன்று மொழிகளிலும் புலமை வாய்ந்த இராமசாமி ஐயர், மொழியியல் அறிஞர்களால் பாராட்டப்பெறும் பெருமைக்குரியவர். அவர் தமிழ் மொழியைக் கிரேக்க மொழியுடன் ஒப்பிட்டுக் கிரேக்க மொழியில் பல தமிழ்ச் சொற்கள் காணப்படுவதைத் தகுந்த தரவுகளின் மூலம் நிறுவியுள்ளார்.இவர் தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளுக்கிடையேயுள்ள ஒப்புமைகளைத் தம் கட்டுரையின் வாயிலாக வெளியிட்டவர்; பழந்தமிழ் வினைச் சொற்களை ஆய்ந்தவர்; தமிழ் மொழியிலிருந்து மலையாள மொழியானது கி.பி. 10–ஆம் நூற்றாண்டில் தனிமொழியாக வளர்ந்தவிதத்தை விளக்கியவர்; கலித்தொகை, திருக்குறள் போன்ற பழந்தமிழ் நூல்களின் மொழி அமைப்பை வெளியிட்டவர் என்னும் சிறப்புகளை உடையவர்.[1] திராவிட ஒப்பியல் வரலாற்றில் சுப்பையா, இராமசாமி ஆகியோர் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இணையற்ற அறிஞர்களாக விளங்கினர்.

## கமில் சுவலபில்

திராவிட மொழிகளுள் தமிழ்மொழியின் சிறப்பால் ஈர்க்கப்பட்ட இவர், தமிழ்மொழியினது இலக்கணம், இலக்கியம், மொழியியல் பற்றிய கட்டுரைகள் பலவற்றை வெளியிட்டுள்ளார். தென்திராவிட மொழிகளுக்குள்ள தொடர்பு பற்றி

---

1. **Caldwell, R.A., Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages, (Second Edition). p.4-10.**
2. **Burrow, T. Dravidian Studies-I, BSOAS-93:711-22.**

ஆய்வுகள் பல நிகழ்த்தியுள்ளார். இருள மொழியின் இலக்கண அமைப்பினைப் புலப்படுத்தியுள்ளார். திராவிட மொழி ஒப்பு ஒலியனியல் பற்றி விவரித்துள்ளார். தம் கட்டுரைகளின் மூலம் திராவிட மொழியியல் துறைக்குப் பெரும்பங்கு ஆற்றியுள்ளார்.

இரஷ்யநாட்டு அறிஞரான **ஆந்திரனோவ்** திராவிட மொழிகள் பற்றிப் பல நூல்களையும், ஐம்பதிற்கும் மேற்பட்ட கட்டுரைகளையும் எழுதியுள்ளார். திராவிட மொழிகளை ஒப்பியல் பார்வையில் மட்டுமின்றித் தனித்தனி மொழி ஆய்வுகளாகவும் ஆய்ந்துள்ளார். சிறப்பாகத் தமிழ் பேச்சுமொழிக்கு இலக்கணமும் இயற்றியுள்ளார். மேற்குறிப்பிட்ட மொழியியல் அறிஞர்கள் இருவரும் தாம் வெளியிட்டுள்ள நூல்கள், கட்டுரைகள் வாயிலாகத் திராவிட மொழிகளின் சிறப்பியல்புகளை உலகிற்கு வெளிக்கொணர்ந்த பெருமையை உடையவர்கள்.

## ஜி.எ.கிரியர்சன், பி.எச்.கிருஷ்ணமூர்த்தி

**கஸ்ட்** என்பவர் முயற்சியின் பேரில், இந்தியாவில் **ஜி.எ.கிரியர்சன்** 1927–ஆம் ஆண்டு **இந்திய மொழிகளின் ஆய்வு** என்ற நூலை வெளியிட்டார். இதில் தமிழ்நாட்டுக் கிளைமொழிகள் ஒன்றும் ஆராயப் படவில்லை.[1] 1957–இல் தெலுங்கு மொழியில் உள்ள பயிர்த்தொழில் கலைச்சொற்களைத் திரட்ட, சாகித்திய அகாடமி சார்பில் கிருஷ்ணமூர்த்தி என்பார் முயற்சி மேற்கொண்டார். 1958–இல் ஆய்வு தொடங்கப்பட்டு 1962–இல் பயிர்த்தொழில் கலைச்சொல் அகராதி வெளியானது. இது மொழியியலாளருக்கு மிகுந்த பயன் உடைய நூலாக விளங்குகிறது. கள ஆய்வில் 9,000 பயிர்த் தொழிற் சொற்கள் தொகுக்கப்பட்டன.[2]

## தெ.பொ.மீ., மு.வ.

இன்றைய தமிழ் மொழியியல் உலகிற்கு அடித்தளம் அமைத்த பெருமை **தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்** அவர்களையே சாரும்.இவர், சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மொழியியல் உயராய்வு மையம் ஒன்றை நிறுவி மொழியாய்வின் பல்வேறு வளர்ச்சிக்கு அடி கோலியவர். ***தமிழ்மொழி வரலாறு*** என்ற நூலை வெளியிட்டுள்ளார்.

மொழிநூல், மொழி வரலாறு என்ற மொழியியல் தொடர்பான நூல்களை எளிய தமிழில் எழுதி தமிழ் இலக்கணத்தின் சிறப்பினை வெளிக் கொணர்ந்தவர் மு.வ. என அழைக்கப்பெறும் **மு.வரதராசனார்** ஆவார். இலக்கண இலக்கியத்தில் புலமை வாய்ந்த இவர் நூற்றுக்கும் மேற்பட்ட இலக்கணக் கட்டுரைகளை எழுதியுள்ளார். பட்டாச்சாரியாரும், திராவிட மொழியாய்வில் பரோவுடன் பல ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். இவர் ஆற்றிய மொழி ஆய்வின் மூலமாகத் திராவிட மொழிகளின்

---

1. ***சீனிவாச வர்மா, கோ., கிளைமொழியியல்***, **ப. 76.**
2. **Krishnamurthy, Bh., A Telugu Dictionary of Occupational Vocabularies.**

எண்ணிக்கை இருபத்தி மூன்று என்ற நிலையில் திராவிட மொழிக் குடும்பம் உயர்ந்துள்ளது.

## மொழியாய்வில் பல்கலைக்கழகங்களின் பங்கு

தமிழகத்தின் அண்ணாமலைப் பல்கலைக்கழகமும் ஆந்திரத்தின் உஸ்மானியாப் பல்கலைக்கழகமும் மொழியியல் ஆய்வில் தன்னிகரற்று விளங்குகின்றன.

*பி.எச். கிருஷ்ணமூர்த்தி* அவர்களின் மொழியாய்வினை அறியாதவர் எவரும் இருப்பது அரிது. வேளாண்மைத் தொடர்பாக அவர் வெளியிட்ட கலைச்சொல் அகராதியைத் தொடர்ந்து பலநூல்கள் வெளிவந்தன. தமிழகத்திலும் *வி.ஐ.சுப்ரமணியம், முத்துச்சண்முகம்* ஆகியோர் மொழியாய்வில் சிறந்து விளங்கினர்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் உயராய்வு மையத்தைச் சார்ந்த *பி. சுப்பிரமணி சாஸ்திரி, ச. அகத்தியலிங்கனார், குசலப்ப கவுடா, பி.எஸ். சுப்ரமணியம், செ.வை. சண்முகம், ந. குமாரசாமி ராஜா, க. பாலசுப்ரமணியம், பொன். கோதண்டராமன், க. முருகையன், இ. அண்ணாமலை, அ. காமாட்சிநாதன், கோ. சீனிவாசவர்மா, எட்வர்டு. தி. வில்லியம்ஸ், இரா. பாலகிருஷ்ணன்* போன்ற மொழியியல் ஆய்வாளர்களின் பணி மொழியியல் உலகில் பெரும்பங்கு வகித்து வருகின்றது.

நமது நாட்டுப் பல்கலைக்கழகங்களே அன்றி மேலைநாட்டு பல்கலைக் கழகங்களும் திராவிட மொழிகள் பற்றி ஆய்ந்து வருகின்றன. இவ் ஆய்வுகளின் பயனாக மொழியியலைச் சார்ந்த பிற துறைகள் வளர்வதோடு மொழியியல் அறிஞர்கள் பலரும் உருவாகி வருகின்ற நல்ல சூழல் ஏற்பட்டுள்ளது.

## மொழியாய்வில் கிளைமொழி பெறும் இடம்

தமிழ்நாட்டில் பல கிளைமொழி ஆய்வுகள் நடைபெற்றுள்ளன. வட்டாரக் கிளைமொழி ஆய்வு, சாதிக் கிளைமொழி ஆய்வு, சமூகக் கிளைமொழி ஆய்வு என்று கிளைமொழி ஆய்வு பல்வகை ஆய்வாக உள்ளன. மொழியியல் அடிப்படையில் தற்போது இவ்வகையான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மொழியியல் வளர்ச்சியடைந்து சமூகமொழியியல், உளமொழியியல், புள்ளியியல் மொழியியல், நரம்பு மொழியியல் என முன்னேற்றமடைந்துள்ளது. தொடக்கத்தில் கிளைமொழி ஆய்வு, வட்டார வழக்கு ஆய்வையே குறிப்பதாக விளங்கியது. பின்பு மொழியியலில் ஏற்பட்ட வளர்ச்சியில் வட்டாரக் கிளைமொழி ஆய்வு கிளைமொழியின் ஒரு பகுதியானது.

## மரபிலக்கணங்களில் கிளைமொழி ஆய்வு

தொல்காப்பியர் தம் இலக்கண நூலில் தமிழகத்தின் நிலப்பிரிவுகள் குறித்துக் கூறும்போது,

*செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்*
*தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி* [1]

என்று வகைப்படுத்துகிறார். ஒவ்வொரு நிலப்பிரிவும் ஒவ்வொரு கிளைமொழியின் அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளது. சொல்லுக்கு உரை கூறிய சேனாவரையர், "பன்னிரு நிலமாவன: பொங்கர் நாடு, ஒளிநாடு, தென்பாண்டி நாடு, குட்ட நாடு, குடநாடு, பன்றிநாடு, கற்காநாடு, சீதநாடு, பூழிநாடு, மலைநாடு, அருவாநாடு, அருவாவடதலை எனச் செந்தமிழ் நாட்டுத் தென்கீழ் பான் முதலாக வடகீழ் பாலிறுதியாக எண்ணிக் கொள்க" என்று நிலப்பிரிவுகளை விளக்கியுள்ளார்[2]. தொ.பொ.மீ. அவர்கள் கிளைமொழி வழங்கும் இவ்வட்டாரப் பகுதிகளைத் தற்போதுள்ள வட்டாரங்களுடன் ஒப்பிட்டுக் காட்டியுள்ளார்.[3]

நன்னூலாரும் திசைச்சொல் பற்றிக் கூறும்போது,

*செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினும்*
*ஒன்பதிற்று இரண்டினில் தமிழ்மொழி நிலத்தினுந்*
*தங்குறிப் பினவே திசைச் சொல் என்ப* [4]

என்று கூறுவதின் மூலம் தமிழகத்தைச் சூழ்ந்திருந்த பன்னிரு நிலப்பிரிவுகளைக் குறிப்பிடுகின்றார். அப்பன்னிரு நிலங்கள் எவையெவை என்பதனை நன்னூல் காண்டிகையுரையில் காணப்பெறும்,

*தென்பாண்டி குட்டம் குடங்கற்கா வேண்பூழி*
*பன்றி அருவா அதன்வடக்கு – நன்றாய*
*சீத மலாடு புலனாடு செந்தமிழ்சேர்*
*ஏதமில் பன்னிரு நாட் டெண்* [4]

என்னும் வெண்பாவான் அறியமுடிகிறது. இவ்வட்டாரப் பிரிவுகளைப் பற்றி வீரசோழியமும் குறிப்பிட்டுள்ளது. இழிந்த கூறுகளாகக் கருதப்படும் சில சொற்கள் மூன்று வட்டாரங்களில் பரவி இருந்தமையை, வீரசோழிய உரையாசிரியர் பெருந்தேவனார் சுட்டிக் காட்டியுள்ளார்[6].

1. கொங்குநாடு (கோயம்புத்தூர், சேலம் மாவட்டம்)
2. சோழநாடு (திருச்சி, தஞ்சை மாவட்டம்)
3. பல்லவநாடு (வேலூர், காஞ்சிபுரம் மாவட்டம்)

என்ற வட்டாரங்களே அவர் குறிப்பிடும் பகுதிகளாகும்.

---

1. தொல்.சொல். 400
2. தொல்.சொல்.சேனாவரையர் உரை, கழகப் பதிப்பு.1967
3. தெ.பொ.மீ., தமிழ்மொழி வரலாறு (தமிழாக்கம் ச. ஜெயபிரகாசம்), ப. 270.
4. நன்னூல். சொல். 273
5. நன்னூல். சொல். மயிலைநாதர் உரை.
6. வீரசோழியம் – 82, பெருந்தேவனார் உரை.

## கல்வெட்டுகளும் கிளைமொழிகளும்

பேச்சுமொழியில் வழங்கிய மொழிக்கூறுகள் பல கல்வெட்டுக்களில் காணக்கிடக்கின்றன. செங்கல்பட்டு மாவட்டக் கல்வெட்டு, வடார்க்காடு மாவட்டக் கல்வெட்டு ஆகியன கொச்சை வழக்குகளை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளன. கோயம்புத்தூர் மாவட்டக் கல்வெட்டிலும் திருநெல்வேலி மாவட்டக் கல்வெட்டிலும் கூட பேச்சு வழக்குகள் காணக்கிடக்கின்றன. புதுக்கோட்டை, மதுரை, தஞ்சை, திருச்சி மாவட்டக் கல்வெட்டுக்களிலும் கி.பி. 16–ம் நூற்றாண்டிலிருந்தே பேச்சுவழக்குக் கூறுகள் இடம் பெற்றுள்ளன. வட்டாரக் கிளைமொழி வழக்குகள் மட்டுமன்றிச் சமூகக் கிளைமொழி வழக்குகளையும் கல்வெட்டுக்கள் பெற்றுள்ளன[1]. பல்வேறு காலகட்டங்களின் எழுத்து வழக்கை இலக்கியங்கள் பிரதிபலிப்பது போல பேச்சு வழக்கினைக் கல்வெட்டுக்களின் மூலம் அறிய முடிகிறது.

## தற்காலக் கிளைமொழிகளின் ஆய்வுநிலை

பொதுத்தமிழில் காணப்பட்ட ஒலி வேறுபாடுகளின் அடிப்படையிலே தமிழ்க் கிளைமொழிகள் குறித்து **வின்செட்** என்பவர் கி.பி. 19–ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆய்ந்துள்ளார். தமிழின் கிளைமொழிகள் குறித்து **கஸ்ட்** என்பவர் குறிப்பிட்டுள்ளார். 1946–இல் **ஜூல்ஸ் பிளாக்** சாதிக் கிளைமொழிப் பற்றி ஆய்ந்துள்ளார். **இராம சுப்பையாவின்** 'தமிழ்க் கிளை மொழிகளின் சொல்லாய்வு' என்ற நூல் குறிப்பிடத்தக்கது. இலக்கியத்தமிழுடன் பேச்சுத் தமிழை ஒப்புமைப்படுத்தி **ரா.பி. சேதுப்பிள்ளை** அவர்கள் நூலொன்றை எழுதியுள்ளார். **வி.ஐ. சுப்ரமண்யம், முத்துச்சண்முகம், ச. அகத்தியலிங்கம்** போன்றோர் நாஞ்சில் நாட்டுத் தமிழில் தம் ஆய்வை மேற்கொண்டுள்ளனர். **கருணாகரனும், சிவசண்முகமும்** இணைந்து தமிழின் சமூகக் கிளைமொழி களை ***Social Dialecs of Tamil*** என்ற சிறந்ததொரு நூலை எழுதி வெளி யிட்டனர். கருணாகரன், சு. சக்திவேல் போன்றோர் தமிழ்க்கிளை மொழிகள் குறித்த கட்டுரைகள் பலவற்றை வெளியிட்டுள்ளனர்.

தமிழ்நாட்டில், தொடக்கத்தில் தமிழ்மொழியிலுள்ள கிளை மொழிகளைக் குறித்துக் கட்டுரைகள் சில வெளிவந்தன. 1949–இல் **சேதுபிள்ளை**[2] "பாண்டிய நாட்டுத் தமிழ்க் கிளைமொழி" என்ற தலைப்பில் ஆய்வு செய்துள்ளார். தமிழகத்தில் மொழியியல் துறைக்கு வித்திட்ட பேராசிரியர் **தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் (1958)**அவர்கள் தமிழ் மொழியில் உள்ள பல்வேறு கிளைமொழிகள், வட்டாரக் கிளைமொழிகள் ஆகியவற்றைப் பற்றிய பல கட்டுரைகளையும் நூல்களையும் வெளியிட்டுள்ளார்[3].

---

1. Shanmugham, S.V., Dialects in Inscriptional Tamil, Orbis XX, 1, 90-88, 1971.
2. **கோ. சீனிவாச வர்மா, கிளைமொழியியல், ப. 126.**
3. **மேலது, ப. 128.**

**ஆந்திரனோவ்** (1962) தமிழும் அதன் பேச்சு மொழிகளும் என்ற நூலில் தமிழில் வழக்கிலிருந்த கிளைமொழிகளை எடுத்துக் காட்டினார்[1]. இலங்கைத் தமிழ் பற்றி கணபதி பிள்ளையும் (1958)[2] **முத்துச் சண்முகனாரும்** (1962)[3] கட்டுரைகளை வெளியிட்டுள்ளனர். 1972–இல் **சக்திவேல்**[4] வட்டாரக் கிளை மொழிகள் பற்றி ஆராய்ந்துள்ளார்.

தமிழில் கிளைமொழி ஆய்வுகள் கள ஆய்வின் அடிப்படையில் நடப்பதற்கு வித்திட்டவர் **கமில் சுவலபில்**[5]. தமிழிலுள்ள வட்டாரக் கிளைமொழிகளைக் கண்டறிய கள ஆய்வு மேற்கொண்டார். இவர்தம் ஆய்வே தமிழ்மொழியில் வட்டாரக் கிளைமொழிகள் பல இருப்பதை நன்கு வெளிப்படுத்தியது. தமிழில் வட்டாரத்திற்கு வட்டாரம் பேச்சுமொழி மாறுபடுவதைக் குறிப்பிட்டார். இவர்தம் தமிழ்க் கிளைமொழிகள் பற்றிய கட்டுரைகள் மூலம் சென்னை, மதுரை, திண்டுக்கல், ஈரோடு, திருச்சி, திருநெல்வேலி, தூத்துக்குடி, இராமநாதபுரம், இலங்கை ஆகிய இடங்களில் இவர் கள ஆய்வு நடத்தியிருப்பது தெரியவருகிறது. கமில் சுவலபில், தமிழிலுள்ள வட்டாரக் கிளைமொழிகளை வடக்குக் கிளைமொழி, தெற்குக் கிளைமொழி, மேற்குக் கிளைமொழி, கிழக்குக் கிளைமொழி என்று நான்காகப் பாகுபடுத்திக் கூறியுள்ளார். மற்றும் இலங்கைத் தமிழ்மொழியையும் தமிழின் தனிக் கிளைமொழியாகக் கொண்டுள்ளார். செக் நாட்டு அறிஞரான இவரின் ஆய்வு,தமிழில் நடந்த பல்வேறு வட்டாரக் கிளைமொழி ஆய்வுகளுக்கு அடிப்படையாக விளங்கியது என்று கூறலாம்.

கிளைமொழி ஆய்வைப் பொறுத்தமட்டில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் மொழியியல் துறையினரின் பங்கு சிறப்பானது. சமூகம் மற்றும் சாதி ஆகியவற்றின் அடிப்படையிலும், வட்டார அடிப்படையிலும் கிளைமொழி ஆய்வினை இத்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர். இத் துறையினரின் வட்டாரக் கிளைமொழி ஆய்வினைப் பற்றி நோக்குவோம்.

1969–ல் **காமாட்சிநாதனின்** 'திருநெல்வேலிக் கிளைமொழி'[6] என்ற வட்டாரக் கிளைமொழி நூல் வெளிவந்தது. இதனையடுத்து **கருணாகரனின்**[7] (1971) 'கொல்லிமலைக் கிளைமொழி' என்ற நூல் வெளிவந்தது. இவர் இக்கிளைமொழியுடன் நாஞ்சில்நாடு, திருநெல்வேலி, தென்னார்க்காடு, தஞ்சாவூர், சேலம், கோயம்புத்தூர் ஆகிய வட்டாரங்களில் வழங்கும் கிளை மொழிகளை ஒப்பிட்டு ஆய்ந்துள்ளார். **ஞானசுந்தரம்** (1973), 'தொண்டை மண்டலக் கிளைமொழி – ஓர் முன்னோடி ஆய்வு''[1] என்ற தம் முனைவர் பட்ட ஆய்வில் செங்கற்பட்டு, வடார்க்காடு, தென்னார்க்காடு ஆகிய மூன்று மாவட்டத்திலும் வழங்கும் வட்டாரக் கிளைமொழிகளை ஆராய்ந்துள்ளார். 1977–இல் **இயேசுதாஸ்**[2]

---

1. **கோ. சீனிவாச வர்மா, கிளைமொழியியல், ப. 126.**
2. **மேலது, ப. 126.**
3. **மேலது, ப. 126.**
4. **மேலது, ப. 127.**
5. **ச. ஆரோக்கியநாதன், மொழியியல் : கிளைமொழிகள்.**
6. A. Kamatchinathan, Trinelveli Dialect of Tamil.
7. K. Karunakaran, Kollimalai Dialect of Tamil.

என்பவர் கன்னியாகுமரி (விளவங்கோடு தாலுக்கா) மாவட்டப் பேச்சுமொழியை ஆராய்ந்துள்ளார். இவ்வட்டார வழக்கில் மலையாள மொழியின் தாக்கம் இருப்பதை அவர் கண்டறிந்தார்.

டாக்டர் **கோ. சீனிவாச வர்மா**[3] (1977) 'கிளைமொழியியல்' என்ற தமது நூலில் தமிழில் ஐந்து வட்டார வழக்குகள் இருப்பதைத் தெரிவித்தார். தென் கிளைமொழி, மத்தியக் கிளைமொழி, மேற்குக் கிளைமொழி, வடக்குக் கிளைமொழி, இலங்கைக் கிளைமொழி என்று தமிழின் கிளைமொழி வகைகளை அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும், மத்தியக் கிளைமொழியில் உட்கிளைமொழியாக புதுக்கோட்டைக் கிளைமொழியைக் குறிப்பிட்டுள்ளார். ஞானசுந்தரம் (1973) தொண்டை மண்டலக் கிளைமொழியை ஆராய்ந்ததுபோல, **சுசீலா கிருபாவதி** என்பவரால் 1985இல் பாண்டிய நாட்டு முன்னோடிக் கிளைமொழி ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.[4] இதைத்தொடர்ந்து - **ஜேம்ஸ்** என்பவர் சோழநாட்டுக் கிளை மொழியை மொழியியல் அடிப்படையில் ஆய்ந்துள்ளார்[5].

## எல்லைப்புற இருமொழிய ஆய்வு

இவ்வாறு தமிழ்நாட்டில் வட்டாரக் கிளைமொழி ஆய்வுகள் நடைபெற்று வந்தாலும், எல்லைப்புறக் கிளைமொழி ஆய்வை மிகுதியாக யாரும் மேற்கொள்ள வில்லை. வட்டாரக் கிளைமொழி ஆய்வு வட்டாரத்திற்கு வட்டாரம் மேற்கொள்ளப் பட்டு வந்தாலும் மாநிலத்தின் எல்லையோரங்களிலும் இந்த ஆய்வு மேற்கொள்ளப் பட வேண்டும்.

தமிழ்நாட்டின் கிழக்கே கடல் எல்லையாக அமைவதால் அப்பகுதியில் பிறமொழித் தாக்கம் இராது. இந்தியநாடு பலமொழி பேசும் மக்களைக் கொண்டது; விடுதலைக்குப் பின் மொழிவாரியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்டன. தென்னிந்தியாவில் நான்கு மாநிலங்களிலும் வெவ்வேறு மொழி பேசப்படுகிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை கிழக்கே கடல் எல்லையாக அமைந்திருந்தாலும் மற்ற மூன்று பக்கங்களிலும் வெவ்வேறு மொழி பேசும் மாநிலங்கள் எல்லைகளாக அமைந்துள்ளன. தமிழ்நாடு, மேற்கே கேரளத்தையும் கர்நாடகத்தையும், வடக்கே கர்நாடகத்தையும் ஆந்திரத்தையும் எல்லையாகக் கொண்டுள்ளது.

வடஇந்தியாவில் குருஷேத்திரா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற எல்லைப்புற இருமொழிய ஆய்வுகளை **எஸ். ஆரோக்கியநாதன்**[8] குறிப்பிட்டுள்ளார். "குருஷேத்திரா பல்கலைக்கழகத்தில் பல்வேறு கிளைமொழி

---

3. V. Gnanasundaram, A Pilot Dialect Survey of Tondaimandalam, Ph.D. Thesis, Annamalai University.
4. C. Yesudhasan, Tamil Dialects of Kanyakumari District (with special reference to Vilavankotu dialect), Annamalai University.
5. கோ. சீனிவாச வர்மா, கிளைமொழியியல், பக். 133–184.
6. A.P.A. Susila Kribavathy, A Pilot dialect - Pandya dialect of Tamil, Ph.D. Thesis, Annamalai University.
7. A. James, A Linguistic survey of Chola-Dialect, Ph.D. Thesis, Annamalai University.
8. ச. ஆரோக்கியநாதன், மொழியியல்: கிளைமொழிகள், ப. 109.

ஆய்வுகளும் நடந்துள்ளன. மாநில (மொழி) எல்லைப்பகுதியில் உள்ள கிளை மொழிகள் பல ஆராயப்பட்டுள்ளன. பஞ்சாப் பகுதியில் பேசப்படும் பஞ்சாபி கிளைமொழி, அரியானா எல்லைப் பகுதியில் வழங்கப்படும் இந்திக் கிளைமொழி, இமாசலப் பிரதேசத்தின் எல்லைப் பகுதியில் பேசப்படும் பஹாடி (இந்தி)க் கிளை மொழி ஆகியன இப்பல்கலைக்கழக மொழியியல் துறையில் ஆராயப்பட்டுள்ளன.

தென்னிந்தியாவிலும் இதுவரை நடந்துள்ள எல்லைப்புற இருமொழிய ஆய்வுகளை எஸ். ஆராக்கியநாதன் தன் நூலில் குறிப்பிட்டுள்ளார்.[1] **கும்பர்ஸ்** என்பவர் குப்புவார் கிராமத்திலுள்ள எல்லைப்புற இருமொழியத்தை ஆய்ந்துள்ளார். இது மகாராட்டிர மாநிலத்தைச் சேர்ந்த சாங்கிலி மாவட்டத் திலிருந்து மூன்று மைல் தூரத்திலும், மைசூர் மாநிலத்தின் எல்லை யிலிருந்து ஏழு மைல் தூரத்திலும் அமைந்துள்ளது. மொழிகளுக்கிடையே ஒருவகைப் ***பொதுக்குவியம்*** ஏற்படுவதைத் தமது குப்புவார் கிராம ஆய்வின் மூலம் கும்பர்ஸ் நிறுவினார்.

**சுசிலா தாமஸ்**[2] என்பவர் காசர்கோடு கிராமத்தில் ஆய்வு நடத்தியுள்ளார். இக்கிராமம் தற்போது கேரள – கர்நாடக எல்லையில் அமைந்துள்ளது. கேரளத்தைச் சேர்ந்தது. இந்த ஆய்வின் மூலம் பெரும்பான்மை மொழியுடன் ஒரு மொழிக்குவியம் பெறுகின்ற ***ஒரு வழி இணக்கத்தையும்*** மொழி இழப்பை நோக்கிச் செல்லும் ***மொழி மாற்றத்தையும்*** நாம் அறிய முடிகிறது.

ஜெயக்குமார்[3] தெங்கணிக்கோட்டை என்னுமிடத்தில் எல்லைப்புற இருமொழிய ஆய்வை மேற்கொண்டார். இப்பகுதி தமிழகக் கர்நாடக எல்லையில் அமைந்துள்ளது. தமிழ், கன்னடம், தெலுங்கு, உருது என்று நான்கு மொழி பேசும் மக்களை உடையது. ஆயினும், தமிழ் – கன்னட கலப்புதான் ஏனைய மொழிக் கலப்பைவிட மிகுந்துள்ளது. இவை தவிர, ***ஆர் சாலமன்*** என்பவர் தென் கேரளப் பகுதியில் இருமொழியம் பற்றி ஆய்ந்துள்ளார்[4]. ஆய்வானது, எல்லைப் பகுதியில் மேற்கொள்ளப்படும் மொழியியல் ஆய்வால் இருவிதமான பயன்கள் உண்டாகின்றன. ஒன்று வட்டார மொழியினை உள்ளடக்கிய ஆய்வாக அமைகிறது. இரண்டு, எல்லைப்பகுதி என்பதால் இருமொழியத்தை அடிப்படை யாகக் கொண்ட ஆய்வாகவும் அது விளங்குகிறது.

## தமிழக வடஎல்லையின் இருமொழிய ஆய்வு

தமிழ்நாட்டின் வட எல்லையில் இருமொழிய ஆய்வு இன்னும் மேற்கொள்ளப்படவில்லை. திருவள்ளூர் மாவட்டமும், வேலூர், கிருஷ்ணகிரி மாவட்டங்களும் தமிழ்நாட்டின் வட பகுதி எல்லைகளாக அமைந்துள்ளன. இம்மாவட்டங்களின் வடக்கு எல்லையாக ஆந்திர மாநிலத்தின் சித்தூர் மாவட்டமும், நெல்லூர் மாவட்டமும் காணப்படுகின்றன. வட்டாரக் கிளைமொழி ஆய்வு தமிழகத்தின் வடஎல்லையில் மேற்கொள்ளப்படவில்லையாதால் அவ்வெல்லையில் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

---

1. ச. ஆரோக்கியநாதன், இருமொழிய ஆய்வுகள், ப. 141.
2. மேலது, ப. 145.
3. S. Jayakumar, Multilingualism in the border of Dharmapuri District, Ph.D. Thesis, Annamalai University.
4. R.Solomen, Bilingual situation in Southern Kerala, Ph.D. Thesis.

# தமிழக ஆந்திர எல்லையின் புவியியல் அமைப்பும் வரலாற்றுப் பின்புலமும்

கிளைமொழியியல் ஆய்வு வட்டார வழக்கு ஆய்வு என்பதாலும், எல்லைப்புற இருமொழி ஆய்வை உள்ளடக்கி இருப்பதாலும் தமிழ்நாட்டின் புவியியல் அமைப்பு, தமிழக வடஎல்லையின் வரலாற்றுப் பின்னணி ஆகியன வற்றை விளக்குவது இன்றியமையாததாகிறது.

## தமிழகத்தின் புவியியல் அமைப்பு

"தமிழகத்தின் புவியியல் அமைப்பினை நோக்கும்போது வடக்கில் ஆந்திரம், வடமேற்கில் கருநாடகம், மேற்கில் கேரளம், கிழக்கில் வங்கக் கடலும் தெற்கில் இந்தியப் பெருங்கடலும் எல்லையாக அமைந்துள்ளன. தமிழகம் இந்தியத் துணைக்கண்டத்தின் தென்கிழக்கு மூலையில் உள்ளது. உலகப் படத்தில் இதை நோக்கும்போது தெற்கே 8.5 நெடுங்கோட்டிலிருந்து வடக்கே 13.6 நெடுங்கோடு வரையிலும் மேற்கே 26.15 குறுங்கோட்டிலிருந்து கிழக்கே 80.20 கிழக்குக் குறுங்கோடு வரையிலும் பரவி இருப்பதைக் காணலாம்."[1] தமிழகத்தின் இன்றைய எல்லை அமைப்பு மேற்கூறியபடி இருப்பினும் பண்டைக் காலத்தில் தமிழகத்தின் எல்லை அமைப்பு வேறுமாதிரியாக இருந்ததை அறியமுடிகிறது.

## தொல்காப்பியர் குறிப்பிடும் தமிழக எல்லை

தொல்காப்பியத்தில் தமிழகத்தின் வடஎல்லை கூறப்பட்டுள்ளது. தொல்காப்பியப் பாயிரம் எழுதிய பனம்பாரனார்,

> **வடவேங்கடம் தென்குமரி**
> **ஆயிடைத்**
> **தமிழ்கூறு நல்லுலகத்து**[2]

என்று தமிழகத்தின் வடஎல்லையை வரையறுக்கின்றார். 'தமிழகத்தின் கிழக்கிலும் மேற்கிலும் கடல் சூழ்ந்துள்ளது. எனவே, இவ்விரு திசைகளிலும நாட்டின் எல்லையைப் பனம்பாரனார் எடுத்துக் கூறவில்லை. ஆனால் வடஎல்லையையும் தென் எல்லையையும் மட்டும் அவர் கூறுவதில் பொருள் உண்டு. கடல் கொள்வதன் முன்பு பிறநாடும் உண்மையின், தெற்கும் எல்லை கூறப்பட்டது. கிழக்கும் மேற்கும் பிறநாடு இன்மையின் கூறப்படாவாயின" என்று தொல்காப்பிய

---

1. கே. தங்கவேலு, தாய்நில வரலாறு, பாகம் – 1, ப.1
2. தொல்காப்பியம், எழுத்ததிகாரம், சிறப்புப் பாயிரம்.

உரையாசிரியர்களுள் ஒருவரான இளம்பூரணர் விளக்கம் தருகின்றார். தொல்காப்பியத்தின் பிறமொழி வழங்கும் நிலப்பகுதியிலிருந்து தமிழ் வழங்கும் நிலத்தினைப் பிரித்து உணர்த்துதற் பொருட்டே வடவேங்கடம் தென்குமரி என்று பனம்பரனார் பாயிரம் வகுத்தார் என்பது இளம்பூரணரின் கொள்கை. ஒரு நாட்டுக்கு அகப்பாட்டு எல்லை நாட்டின் வரம்புக்கு உட்பட்டது ஆகும். புறப்பாட்டு எல்லை அவ்வரம்புக்கு அப்பாற்பட்டதாகும். "பனம்பாரனார் கூறும் எல்லைகளான வேங்கடமும் தென்குமரியாறும் அகப்பாட்டெல்லைகள் என்பது இளம்புரணரின் கருத்து."[1] ஆகவே, வேங்கடத்துக்கு வடக்கும் குமரிக்குத் தெற்கும் சில நிலப்பகுதிகள் அமைந்திருந்தன எனக் கருதவும் இடமேற்படுகிறது. குமரியாற்றுக்குப் புறம்பாய் விரிந்து கிடந்த தென்னிலப்பகுதிகளுக்குக் குறும்பனைநாடு என்ற பெயருண்டு என்றும், செந்தமிழ் அல்லாத திரிந்த தமிழ் அங்கு வழங்கிவந்ததால் குறும்பனைநாட்டைப் பனம்பாரனார் தமிழ்நாட்டு எல்லைக்குப் புறம்பாக ஒதுக்கினார் என்றும் கருதுவர்.

தமிழகத்தின் வடஎல்லையாக வடவேங்கடம் தற்போதுள்ள திரு வேங்கடத்தைக் (திருப்பதி) குறிப்பதன்று என்ற கருத்துண்டு. தமிழகத்தின் கிழக்கும், மேற்கும் கடலே எல்லையாக அமைந்திருந்தது. இருகடல்கட்கும் இடையிலிருந்த பரந்துபட்ட தமிழகத்தின் வடஎல்லை, வடகிழக்கு மூலை யிலிருக்கும் திருப்பதி மலையாக இருந்திருக்க இயலாது என்ற எஸ். கிருஷ்ண சாமி அய்யங்காரின் கூற்றை ந. சுப்புரெட்டியார் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.[2]

சங்க இலக்கியங்களில் வடவேங்கடம் பற்றி வரும் கருத்துக்களை நுணுகி ஆராய்ந்தால் இதுபற்றித் தெரியவரும். அவ்விலக்கியங்கள் அப்பகுதியைப் பாலை நிலமாகக் குறிக்கின்றன. இப்போதும் அத்தகைய வறட்சியான பகுதிகள் ஆந்திர மாநிலத்தின் மையத்தில் அமைந்துள்ளன.

இந்தூர், அனந்தபுரம் ஆகிய மாவட்டங்களில் சில இடங்களில் வெப்பப் பகுதியானவை. வடக்கில் கிருஷ்ணா, துங்கபத்திரை ஆகிய நதிகளும் தெற்கில் குன்றுகளும், மலைகளும் நிறைந் துள்ளன. அதனால் கற்பாறைகளில் வெப்பம் அதிகமாகத் தோன்றும். அதிலும், கோடைக்காலத்தில் இப்பகுதியில் வெப்பம் $120^{0}$ லிருந்து $125^{0}$ வரையிலும் மிகுந்திருக்கும். அதனால் இப்பகுதியில் மக்கள் அதிகமாகக் குடியிருப்பதில்லை. தற்போது இருப்புப்பாதைப் போடப்பட்டுள்ளதால் இவ்விடங்கள் சற்று முன்னேறி வந்தாலும் முழுவதுமாக மக்கள் வசிக்கும் பகுதியாக மாறவில்லை. இப்பகுதி மேடுபள்ளங்கள் பல நிறைந்ததாகையால் மழைக்காலத்தில் இப்பள்ளத்தில் நீர் நிறைந்திருக்கும். இவற்றைப் பாசனத்திற்கு ஒழுங்காகப் பயன்படுத்த இயலாது. அரசாங்கம் இப்போது இப்பகுதியில் சிறு அணைகளைக் கட்டி நீரைத் தேக்கி வைப்பதால் வேளாண்மையில் இப்பகுதி சிறிது முன்னேற்றம் பெற்று வருகின்றது.

---

1. கே. தங்கவேலு, 2002, தாய்நில வரலாறு, ப.2
2. ந. சுப்புரெட்டியார், "திருவேங்கடமும் தமிழிலக்கியமும்", ப.11

மேற்கூறியவற்றின் மூலம் சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் பாலைநிலம் இப்பகுதியாக இருக்கலாம். இப்போது உள்ள திருவேங்கடமோ குளிர்ச்சியான சோலைகள் நிறைந்த இடம்.எனவே சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் பாலைநிலப்பகுதி இன்றைய திருவேங்கடமாக இருப்பதற்கு வாய்ப்பில்லை.

## சங்க இலக்கியங்களில் வடவேங்கடம்

சங்க இலக்கியங்களில் வடவேங்கடத்தை அடுத்த பகுதி ***மொழிபெயர்த் தேஎயம்*** என்று குறிப்பிடப்பட்டுள்ளது.[1]

தலைவன் தலைவியைப் பிரிந்து பொருளீட்டுவதற்கு வேற்று நாட்டிற்குச் செல்வான். அவன் செல்லும் வழியில் அமைந்த பாலைநிலத்தின் கொடுமை வருணிக்கப்பட்டிருக்கும். அப்பாலை நிலத்தைக் கடந்து மொழிபெயர்த் தேஎயத்திற்குச் செல்வான். மொழிபெயர்த் தேஎயம் என்னுஞ் சொல் வேற்றுமொழி பேசும் நாடு என்னும் பொருளைத் தரும். தமிழகத்தின் வடக்கே வடுகு வரம்பாக இருந்ததைச் சிறுகாக்கைப் பாடினியார் குறிப்பிட்டுள்ளார்.

*வடதிசை மருங்கின் வடுகு வரம்பாக*

என்று குறிப்பிடுவதிலிருந்து, வடுகர்களே தமிழகத்தின் வடதிசைக்கண் வாழ்ந்தனர் என்பது தெளிவாகிறது. இவ்வடுகர்களை அகநானூறு,

*நீள்மொழி பேசும் கல்லாக் கதநாய் வடுகர்*[2]

என்று குறிப்பிடுகிறது. தமிழர்தான் தெலுங்கரை வடுகர் எனக் குறிப்பிட்டு வந்தனர். ஆந்திரர் என்பது ஆரிய வழக்கு. தெலுங்கர் என்பது அவர்களாலேயே வைத்துக் கொள்ளப்பட்ட வழக்கு.[3]

*வடதிசை மருங்கின் வடுகு வரம்பாக*

என்ற காக்கைப் பாடினியாரின் தொடரும்,

*வடவடுகர் வாளோட்டிய*[4]

என்ற புறநானூற்றுத் தொடரும்,

*ஓங்கு வெள்ளருவி வேங்கடத்தும்பர்*
*வானிணைப்புகவின் வடுகர் தேஎயத்து*[5]

என்ற அகநானூற்று அடிகளும் ,

*புடையலங் கழற்காற் புல்லி குன்றத்து*
*நடையருங் கானம் விலங்கி நோன்சிலைத்*

---

1. குறுந்தொகை.11:5, ஐங்குறுநூறு. 321:6, அகநானூறு. 67: 7
2. குறுந்தொகை, 11, அடி–7.
3. ஐங்குறுநூறு, 321, அடி.4
4. புறநானூறு.:375
5. அகநானூறு.:213

*தொடையமை பகழித் துவன்று நிலைவடுகர்*
*பிழியார் மகிழார் கலிசிறந்தார்க்கும்*
*மொழிபெயர்த் தேஎய மிறந்தனராயினும்*[1]

என்ற அகப்பாடலும் தமிழ்நாட்டு எல்லையாகிய வேங்கடத்தை அடுத்து வேற்றுமொழித் தேயம் இருந்ததையும் அங்குள்ள மக்கள் 'வடுகர்' எனத் தமிழரால் வழங்கப்பட்டமையையும் நன்கு புலப்படுத்துகின்றன. தமிழகத்திற்கு வடக்கே வாழ்ந்தமையால் வடுகர் எனப்பட்டனர்.

சங்க காலத்துக்கு முன்பு கன்னியாகுமரிக்குத் தெற்கிலும் பரவியிருந்த தமிழகம் சங்க காலத்தில் 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலக'மாகச் சுருங்கிவிட்டது. "தென்குமரி வடபெருங்கல் குணகுட கடலா வெல்லை" என்று சங்கநூல்கள் தமிழகத்தின் எல்லையை வகுத்துக் காட்டி யுள்ளன.[2]

பழந்தமிழகம் கிழக்கு, மேற்கு என இரு பக்கங்களாலும் கடலால் சூழப்பட்டிருந்தது. வடக்கில் மலை எல்லையாக அமைந்திருந்தது. தெற்கில், குமரிக்கண்டம் கடல்கோளால் அழிந்தபின் அப்பகுதியிலிலும் கடலே எல்லையாக அமைந்தது. மிகப் பழங்காலத்தில், இன்றைய விசாகப்பட்டினத்தருகில் இருப்பது போல், கடல் கிழக்குப் பக்கத்தில் மலைகட்கு அருகில் இருந்தது. இன்று கிழக்குப் பக்கத்தில் கடலுக்கும் மலைகட்கும் இடையிலுள்ள குறுகலான கடற்கரைப் பகுதி தொல்காப்பியர் காலத்திற்கு 2,500 அல்லது 3,000 ஆண்டுகளுக்குப் பின் உண்டாகி இருத்தல் வேண்டும். அல்லது இன்று உள்ள கடற்கரைக்குக் கிழக்கிலிருந்த மலைகளைக் கடல் விழுங்கியிருத்தல் வேண்டும். கிழக்குக் கடற்கரையிலிலும் மேற்குக் கடற்கரையிலும் உள்ள கடற்பாறைகளைக் கடல் அடித்துச் சென்றது என்பது சிறுகாக்கைப் பாடினியாரின் பாடற் பகுதியால் உறுதியாகிறது.

*வடதிசை மருங்கின் வடுகுவரம் பாக*
*தென்திசை யுள்ளிட் டெஞ்சிய மூன்றும்*
*வரைமருள் புணரியொடு பொறாது கிடந்த*[3]

என்ற இப்பாடற்பகுதி கடற்சீற்றத்தால் மலைகளுக்கு ஏற்பட்ட விளைவை விளக்கி நிற்கிறது.

## தமிழக வடக்கெல்லை

இப்போதைய தமிழகத்தின் வடபகுதியில் அமைந்துள்ள மலைகளைப் பற்றிய எஸ்.கிருஷ்ணசாமி அய்யங்காரின் கூற்றை நா. சுப்புரெட்டியார் தனது நூலில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகின்றார்:[4]

---

1. அகநானூறு:295
2. மு. தமிழ்க்குடிமகன் "பாவாணாரும் தனித்தமிழும்" – ப.91
3. அகநானூறு, 67, அடி.13
4. சுப்புரெட்டியார், மு.நூல், ப.30.

கிழக்கு மலைத்தொடர்கள் தமிழகத்தின் வடஎல்லையில் கடற்கரை ஓரமாகச் சென்று கிருஷ்ணாநதியைத் தாண்டியதும் பல இணைத் தொடர்களாகப் பிரிந்து செல்கின்றன. அவற்றுள் கிருஷ்ணா நதிக்குத் தென்பாலுள்ள தொடர்களில் தென்திசையை நோக்கிச் சென்னைக்கு 13 வடகுறுக்கை ***(North Latitude)*** நீண்டு செல்லும் மூன்று இணைத்தொடர்கள் எடுப்பாகப் புலனாகின்றன. அவற்றுள் கடற்கரைக்கு அண்மையிலுள்ள தொடர் கிட்டத்தட்ட நேராகச் செல்லும் ஒரே தொடராக அமைந்துள்ளது. இரண்டாவது தொடர் ஒழுங்கற்ற முறையில் அமைந்த குன்றங்களின் தொகுதியாகும். அவையும் கிருஷ்ணா நதியையொட்டித் தொடங்கி கர்நூலுக்குக் கீழ்ப்பகுதியில் சென்று கடப்பை மாவட்டத்தில் அரைவட்ட வடிவமான பகுதியில் சிதறிக் கிடக்கும் பகுதிகளாகக் காணப்படுகின்றன. அவற்றுள் ஒருபகுதி 'சேஷாசல மலைகள்' என வழங்கப்பெறுகின்றன. ஆயினும், மேற்குறிப்பிட்ட மூன்று தொடர்களில் முக்கியமான தொடர் தென்திசையில் மேலும் கடற்கரையை நோக்கிச் சென்று சென்னைக்கு வடக்கில் சில மைல்கள் தொலைவிலுள்ள பொன்னேரி வரையிலும் பரவியுள்ளது. மேலும் ஒழுங்கற்ற நிலையிலும் தாழ்வான உயரத்திலும் உள்ள இன்னொரு தொடர் கர்நாடகப் பீட பூமியின் அடிப்பகுதியினின்று தொடங்கி, வடதிசையாகச் சென்று அனந்தபுரம், கர்நூல் மாவட்டங்களில் சிதறிய நிலையில் அமைந்து கிடக்கின்றது. இவற்றுள் நடுப்பகுதியில் அமைந்துள்ள மலைக் கூட்டங்கள் கர்நூல் மாவட்டத்தில் நல்ல மலைகள் (நலகொண்ட) என வழங்கப் படுகின்றன. அவை அங்கிருந்து தென்திசையை நோக்கிச் சென்று ஓர் ஒற்றைத் தொடர் வடிவத்தில் திருப்பதி, காளத்தி இவற்றுள் அருகிலுள்ள மலைக்கூட்டங் களைச் சந்திப்பதுபோல் அமைந்துள்ளன. ஆகவே, இந்த மலைகள் சென்னைக்கு அரை டிகிரி வடக்கில் ஓர் எல்லைப்புறம் போல் அமைந்துள்ளன. இவை கர்நாடகப் பீடபூமியிலிருந்து பொன்னேரி அருகிலுள்ள கடற்கரை வரையிலும் கீழ்த்திசையை நோக்கி நீண்டு பரவி தமிழகத்தின் எடுப்பான வடபுற எல்லைபோல் அமைந்து கிடக்கின்றன.

இக்கூற்றுப் பழந்தமிழகத்தின் பரந்த வடஎல்லையை நமக்குக் காட்டு கின்றது. இதன் மூலம் தற்போதுள்ள ஆந்திரத்தின் தென்பகுதியும், தற்போதுள்ள கர்நாடகம், கேரளம் ஆகியனவும், தமிழகத்தில் அடங்கியிருந்தன என்பது தெரியவருகிறது.

## வரலாற்றுப் பின்புலம்

தொல்காப்பியர் காலத்திலிருந்து இந்தியா விடுதலை பெறும் வரை தமிழகம் தமிழின வேந்தர்களாலும் வேற்றின அரசுகளாலும் ஆளப்பெற்று வந்துள்ளது. பல்வேறு இனப்பேரரசுகள் தமிழகத்தை ஆண்டுள்ளன.அதன் விவரம் வருமாறு:–

(i) வரலாற்றுக் காலத்துக்கு முந்தைய காலம்.

(ii) மூவேந்தர் காலம் — கி.மு. 2–ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 250 வரை.

| | | |
|---|---|---|
| (iii) பல்லவர் காலம் | – | கி.பி. 3–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல் கி.பி. 9–ஆம் நூற்றாண்டு வரை. |
| (iv) களப்பிரர் காலம் | – | கி.பி. 3–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல் கி.பி. 6ஆம் நூற்றாண்டு வரையிலுள்ள காலம். |
| (v) இடைக்காலப்பாண்டியர் காலம் | – | கி.பி. 6ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 9–ஆம் நூற்றாண்டு வரை. |
| (vi) பிற்காலச் சோழல் காலம் | – | கி.பி. 9–ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 1279 வரையுள்ள காலம். |
| (vii) பிற்காலப்பாண்டியர்காலம் | – | கி.பி. 1279 முதல் கி.பி. 1311 வரை. |
| (viii) விசயநகரப்பேரரசுக்காலம் | – | கி.பி. 1358 முதல் கி.பி. 1836 வரை |
| (ix) ஆங்கிலேயர் காலம் | – | கி.பி. 1772 முதல் கி.பி. 1947 வரை |
| (x) தன்னாட்சிக் காலம் | – | கி.பி. 1947 முதல் |

## விஜயநகரப் பேரரசும் தமிழ்த் தெலுங்கு உறவும்

மேற்காட்டியவாறு பண்டுதொட்டே தமிழகம் பல்வேறு ஆட்சியாளர்களின் கீழ் இருந்தபோதிலும் மொழி,பண்பாடு முதலானவற்றில் குறிப்பிடத் தகுந்த அளவிற்கு மாற்றங்களைக் கண்டது நாயக்கர் ஆட்சிக் காலத்தில்தான் எனலாம். கிருஷ்ணதேவராயர் காலத்தில் வாழ்ந்த புலவராகிய *தூர்ஜடி* தாமியற்றிய காளஹஸ்தி மகாமியத்துள் திராவிட என்றும் *அரவபாஷை* என்றும் தமிழ் மொழியைக் குறிப்பிடுகின்றார். இக்காலத்திலும் தமிழைக் குறிக்க அரவம் என்ற சொல் ஆந்திர இராயில சீமைப் பகுதிகளில் பயன்படுத்தப்படுகிறது. தெலுங்கானா மக்களே தமிழைத் **தமிழம்** என்று குறிப்பிடுகின்றனர்.

தமிழரும் தெலுங்கரும், தமிழக – ஆந்திர எல்லையில் ஒருவரோடு ஒருவர் உறவு கொண்டு வாழ்ந்தனர். பல்லவர் காலத்திலோ அல்லது அதற்கு முன்னரோ சோழப்பரம்பரையினருள் ஒரு இனத்தவர் தெலுங்கு நாட்டுத் தென்பகுதியையும் ஆண்டனர். அப்பகுதி *ரே நாடு* என வழங்கப்பட்டது. கடப்பா மாவட்டத்தைச் சேர்ந்த இச்சோழர்கள் *சோடர்* என அழைக்கப்பட்டனர். பிற்காலத்தில் இவர்களே வரலாற்றில் தெலுங்குச் சோழர்கள் எனக் குறிப்பிடப் பெறுகின்றனர். பிற்காலச் சோழர் கீழைச் சாளுக்கியருடன் மணஉறவு கொண்டமை தமிழ்மொழியுடன் தெலுங்குமொழி உறவு கொள்ளுவதற்குரிய சூழலை ஏற்படுத்தியது. அக்காலத்தில்தான் தென்னாடுடைய சைவம் தெலுங்கு நாட்டிலும் பரவியது.

தமிழ் இலக்கியங்கள் சில தெலுங்கில் தழுவி எழுதப்பட்டன. சிறுதொண்ட நாயனாரின் வரலாற்றைப் பெரும்புலவரான *ஸ்ரீநாதர்* தாம் எழுதிய *அறவிலாசம்* என்ற தொகுதியில் போற்றிப் பாடியுள்ளார். கிருஷ்ணதேவராயர் காலத்தில் வைணவம் பரவி வந்ததால் ஆண்டாளின் வரலாற்றை ஸ்ரீகாகுளத்தைச் சேர்ந்த

***ஆந்திர மகாவிஷ்ணு*** என்று போற்றப்படும் ***தெலுங்கு வல்லவராயர்*** பாடியுள்ளார்.

தமிழ்ப் புலவர் நக்கீரர் வரலாற்றினையும் கண்ணப்பர் வரலாற்றினையும் எட்டுத்திக்கஜங்களுள் ஒருவரான 'தூர்ஜடிகவி' தம்முடைய காளஹஸ்தி மகாத்மியத்துள் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு விஜயநகரப் பேரரசின் காலத்தில் தெலுங்கும் தமிழும் இலக்கியநிலையிலும் கலந்தன.

விஜயநகரப் பேரரசின் நாயக்கர் ஆட்சிக் காலத்தில்தான் தமிழகத்தில் தெலுங்குமொழியின் செல்வாக்கு ஏற்பட்டுள்ளது. கி.பி. 10, 11–ஆம் நூற்றாண்டு களிலேயே சோழர் கீழைச் சாளுக்கியர்களுடன் மணஉறவு கொண்டனர். கி.பி. 15–ஆம் நூற்றாண்டில் பாண்டியர் வேண்டுகோளையொட்டி கிருஷ்ணதேவராயர் படைகள் தமிழ்நாட்டில் புகுந்தன. சோழ பாண்டிய நாடுகள் நாயக்கர் ஆட்சிக்குட் பட்டன. அக்காலகட்டத்தில்தான் தமிழகத்தில் நாயக்கர், ரெட்டியார் இனத்தவர்கள் பெருகினர். நாயக்க மன்னர்கள் மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்ததால் தமிழ்நாட்டின் உட்பகுதிகளில் அவர்தம் செல்வாக்கு மேலோங்கி இருந்தது. திருவேங்கடம், திருக்காளத்தி, திருத்தணிகை முதலான நிலப்பகுதிகள் இருமொழி நிலங்களாக மாறின.

குறிப்பாக இன்றைய திருவள்ளூர் மாவட்டம்,விஜயநகரப்பேரரசின் காலந்தொடங்கி தொடர்ந்து தெலுங்கர்களின் ஆதிக்கத்தில் இருந்து வந்துள்ளது. சோழப் பேரரசு இப்பகுதியை ஆண்டபோது பெருமளவில் அந்தணர்களும், விசயநகரப் பேரரசு இப்பகுதியை ஆட்சி செய்தபோது தெலுங்கர்களும் இந்நிலப்பகுதியில் குடியேற்றப்பட்டனர். இம்மாவட்டத்தைத் தமிழர்கள் ஆண்டதைவிடத் தெலுங்கர்கள் அதிகமாக ஆண்டுள்ளனர். தெலுங்குமொழி பேசும் மக்கள் இவ்வாறு இப்பகுதிகளில் குடியமர்த்தப்பட்டதால், அவர்தம் மொழிச் செல்வாக்கும் பண்பாட்டுச் சாயலும் தமிழ் மொழியின் மீதும், தமிழர்கள் மீதும் ஆதிக்கம் செலுத்தி வந்துள்ளன.

ஆந்திராவின் மையப்பகுதி வரை பரந்திருந்த தமிழகம் இடையில் திருவேங்கடம் வரை குறுகிற்று. பின்னர் அப்பகுதியும் தமிழகத்திற்குச் சொந்தமாய் நிலைக்கவில்லை. திருவேங்கடம் மட்டுமின்றித் திருத்தணிகையும் சிறிதுகாலம் ஆந்திரர்களின் ஆதிக்கத்தின்கீழ் இருந்து வந்தது. அப்பகுதி தமிழகத்தோடு சேர்ந்த வரலாற்றைக் கீழே நோக்குவோம்:

## விடுதலை உணர்வும் மொழிவாரி மாநிலங்களும்

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியாவிற்கு வந்து, இந்திய அரசியலில் தீவிரமாகப் பணியாற்றத் தொடங்கிய அந்தக் காலக்கட்டத்திலேயே மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. அந்தந்த மாநில மக்களுக்கு அவரவர்தம் தாய்மொழியில் விடுதலை உணர்வு ஊட்டப்பட்டாலொழிய, ஆங்கில ஆதிக்கத்தினின்றும் இந்தியாவை மீட்க முடியாது என்பதைக் காந்தியடிகள் நன்கு உணர்ந்தார். கி.பி. 1920–ல் அவர் அகில இந்திய

காங்கிரஸ் கமிட்டியின் தலைவரானபோது, காங்கிரசை மொழிவாரியாகப் பிரித்தார். அதன்படி அமைந்ததுதான் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி, ஒவ்வொரு மாநிலத்திலும் அந்தந்த மொழியில் பிரசாரம் செய்யக் கூடிய தலைவர் பலரை அவர் உருவாக்கினார். இச்சூழலில் காங்கிரசு இயக்கம் மக்கள் இயக்கமாக மாறி விடுதலைக்கு அடிகோலியது.

## மொழிவாரி மாநிலங்களின் தோற்றம்

கி.பி. 1947–ல் நம் நாடு விடுதலைபெற்ற பிறகு மாநிலங்கள் மொழிவாரியாகப் பிரித்து அமைக்கப்பட்டால் அது நாட்டின் ஒற்றுமைக்கு உலை வைக்கும் என நேரு உள்ளிட்ட பெருந்தலைவர்கள் எண்ணினர்.ஆனால் மொழிவாரி மாநிலங்கள் அமைய வேண்டும் என்ற கோரிக்கை நாடெங்கும் தீவிரமாக எழுந்தது. இந்நிலையில் நீதிபதி *தார்* தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அக்குழு மொழிவாரி மாநிலங்கள் அமைக்கக்கூடாது என அறிக்கை கொடுத்தது. அதனை எதிர்த்து நாடெங்கும் கிளர்ச்சிகள் வெடித்தன.

## எல்லைப் போராட்டம்

இந்திய மாகாணங்களை மொழிவழி மாநிலங்களாக மாற்றி அமைக்க வேண்டுமென்ற கிளர்ச்சி நாடெங்கும் உண்டாகியது. சிறப்பாகத் தென்னிந்தியாவில் இக்கிளர்ச்சி மிகவும் தீவிரமானது. தென்னிந்தியாவில் மொழிவழி மாகாணம் அமையாத காரணத்தால் இம்மண்ணின் மொழிகளான தமிழ், தெலுங்கு,மலையாளம்,கன்னடம் ஆகிய மொழிகள் ஆங்கிலமொழிக்கு அடிமைப் பட்டுக் கிடந்தன. ஆங்கிலேயர் நகர்ந்த பிறகும் மொழிவழி மாநிலங்கள் பிரிக்கப் படவில்லை யென்றால் அது இம்மண்ணின் மொழிகளுக்கு இழைத்த தீங்கே யாகும். இந்தியாவின் பழைய வரலாற்றினை நோக்கும்போது மொழிவழி இனங்கள் தனித்தனியே பிரிந்து தத்தம் தாயகத்தில் தனியரசு செய்து வந்ததை அறிய முடிகிறது. ஆங்கிலேயர் காலத்தில் பிரிக்கப்பட்ட மாகாணங்கள் மொழி வழியாக அமைக்கப்படவில்லை. இந்திய வரலாற்றிற்கும் இந்திய மக்களின் வாழ்க்கைநிலைக்கும் மாறாகவே ஆள்வோரின் நலன் கருதியும் வசதி கருதியும் மாகாணங்கள் உருவாக்கப்பட்டன.

மொழிவாரியாக மாகாணங்கள் பிரிக்கப்பட்டால், தமிழ்நாட்டின் எல்லைகள் எவையெவை என்ற சிந்தனை தமிழரிடையே எழுந்தது இயற்கையே யாகும். மொழிவழியிலும் வரலாற்று அடிப்படையிலும் எல்லைகளைத் திருத்தியமைத்தால் குமரி முதல் வேங்கடம் வரையுள்ள புதிய தமிழகம் உரிமை நிலமாக உருவாகியிருக்கலாம்.

## தார் கமிஷன்

மொழிவாரி மாகாண பிரிவினையைக் கையாள **தார் கமிஷன்** உருவாக்கப் பட்டது. இக்கமிஷன் விடுத்த 23 வினாக்களில், மொழி அடிப்படையில் ஆந்திர,

கன்னடா, கேரளா, மகாராஷ்டிர மாகாணங்கள் அமைக்கப்பட வேண்டுமா என்பதே முதல் வினாவாக இருந்தது. இதில் தமிழகம் சேர்க்கப்படவில்லை என்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. இக்கமிஷனைச் சந்திக்க தமிழ் மக்கள் தயாரானார்கள். குமரிமுனையைத் தெற்கு எல்லையாகவும், திருப்பதியை வடக்கு எல்லையாகவும், சென்னையைத் தலைநகராகவும் கொண்ட தமிழ் மாகாணத்தை அமைக்க வேண்டுமென்று வலியுறுத்தினார்கள்.

தமிழரசுக்கழகச் செயற்குழு 'தார்' கமிஷனுக்கு கடிதமொன்றை அனுப்பியது. தெலுங்கரைப் போல தமிழர் ஆத்திரத்துடன் வெறிகொண்டு தனித்தமிழ் நாட்டினைக் கோரவில்லையெனினும் தமிழ்நாடு தனிநாடாகப் பிரியவேண்டியது அவசியம் என்பதை உணர்த்தியது அக்கடிதம். சென்னைச் சட்டசபையில் இதற்கான தீர்மானம் இரண்டுமுறை நிறைவேற்றப்பட்டும் மத்திய அரசாங்கம் இப்பிரிவினையைத் தாமதப்படுத்தியது. மொழிவாரி மாகாணங்களின் பிரிவினைக் கொள்ளையை ஒப்புக் கொண்டால் இந்திய நாடு சிதறுண்டுவிடும் என்று 'தார்' கமிஷன் தனது சொந்தக் கருத்தை மீண்டும் மீண்டும் வெளியிட்டது. மேலும் சென்னை நகரைப் பற்றிய தனது கருத்தையும் வெளியிட்டது. சென்னை நகர் போன்ற பட்டணங்களில் வாழ்வோர் அனைவரும் பெரும்பாலும் ஒரே மொழி பேசுபவர் அல்லர். எனவே ஒரே மொழிக்குரிய மாகாணம் எதிலும் சென்னையைச் சேர்த்துவிட முடியாது எனவும், இந்திய நன்மையை எண்ணி இது தனியாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று எனவும் கூறியதன் மூலம் சென்னை நகரம் தமிழகத்துக்கே உரிய நகரம் அல்ல என்பதைத் 'தார்' கமிஷன் சொல்லாமல் சொல்லிவிட்டது.

## ஜே.வி.பி. மூவர் குழு

மொழிவழி மாநிலங்கள் அமைப்பதை எதிர்த்து வந்த 'தார்' கமிஷன், ஆந்திர மாகாணப் பிரிவினைக்கு மட்டும் மறைமுகமாக இசைவு தெரிவித்தது. 'தார்' கமிஷனுக்கு எதிராக எழுந்த கண்டனங்களின் காரணமாக ஜே.வி.பி. என்ற மூவர் குழு நியமிக்கப்பட்டது. சென்னை நகரத்தை ஆந்திரர் ஆந்திரத்தில் சேர்க்குமாறு கோரி வந்ததால், பிரச்சனைக்குரிய இடம் எதையும் ஆந்திரத்துடன் சேர்ப்பதற்கிடமில்லை என்று இம்மூவர் குழு பரிந்துரை செய்தது.அவ்வாறே திருப்பதி – திருத்தணி உள்ளிட்ட சித்தூர் மாவட்டம் முழுவதையும் ஆந்திர மாநிலத்தில் இக்குழு சேர்த்துவிட்டது. இதன் மூலம் தமிழரசுக்கழகம் நடத்தி வந்த வடக்கெல்லைக் கிளர்ச்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டிய சூழல் உருவாகியது.

சென்னை நகரைக் காக்கவும், சித்தூர் மாவட்டத்திலிருந்து திருப்பதி, திருத்தணி உள்ளிட்ட பகுதிகளை மீட்கவும் ***தமிழக எல்லைப் பாதுகாப்பு மாநாடு*** கூட்டப்பட்டது. சித்தூர் மாவட்டத்தைச் சிக்கல் எதுவுமில்லாத மாவட்டம் என ஜே.வி.பி. குழு அறிவித்த முடிவு வடக்கெல்லைத் தமிழருக்கு இழைத்த அநீதியே யாகும்.

## மாநில சீரமைப்புக் குழு

மொழிவாரி மாநிலங்கள் அமைப்பது குறித்து ஆராய *பசல் அலி* என்பவர் தலைமையில் மாநில சீரமைப்புக்குழு ஒன்று 1954-ல் ஏற்படுத்தப்பட்டது. மாநிலங்களை மொழிவாரியாகப் பிரிக்கலாம் என அக்குழு பரிந்துரை செய்தது. என்றாலும் நேரு, வல்லபாய் பட்டேல் போன்றோர் மத்தியப்பிரதேசம், உத்திரப் பிரதேசம், மேற்குவங்கம், தட்சணப் பிரதேசம், கிழக்குப்பிரதேசம் என்றெல்லாம் சொல்லி இந்தியாவை ஐந்து மண்டலங்களாகப் பிரிக்க வேண்டுமென்றனர். அதனைக் கண்டித்து அகில இந்திய அளவில் பெருங்கிளர்ச்சிகள் தலைதூக்கின. தமிழகத்தில் ம.பொ.சி., சர்.பி.டி. ராஜன், பேரறிஞர் அண்ணா, ஜீவா போன்ற தலைவர்கள் தட்சணப்பிரதேசம் அமைவதை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்தினர். அதற்குப் பெரியாரும் முழு ஆதரவு தந்தார். அப்போது தமிழகத்தில் முதலமைச்சராக இருந்த காமராஜர் தமது எதிர்ப்பை நேரடியாக நேருவிடம் தெரிவித்தார். இந்நிலையில் நாட்டின் நலம் கருதி 'பசல்அலி' குழுவினர் பரிந்துரையின் அடிப்படையில் இயற்றப்பட்ட சட்டம் 01.11.1956 அன்று அமுலுக்கு வந்தது. அதனையொட்டி தெலுங்கர்களும், கன்னடர்களும், கேரளர்களும் மொழி அடிப்படையில் தங்கள் மாநிலங்களுக்கு முறையே ஆந்திர மாநிலம், கர்நாடக மாநிலம், கேரளமாநிலம் எனப் பெயரிட்டுத் தங்கள் தாய்மொழிப்பற்றை வெளிப்படுத்தினர்.[1]

ஆங்கிலேயர் ஆட்சிக்கு வருவதற்குமுன் சித்தூர், கோவை மாவட்டத்தின் ஒரு பகுதியாகக் கருதப்பட்டு வந்தது. அப்பகுதியில் 90 விழுக்காடு தமிழர்கள் வாழ்ந்திருந்தனர். 1941 ஆம் ஆண்டு முதல் ஆங்கிலேய அரசின் நிர்வாக வசதிக்காக இப்பகுதிகள் தமிழகத்திலிருந்து பிரிக்கப்பட்டன. இவற்றில் திருத்தணி தாலுக்கா, மற்றும் சந்திரகிரி, திருத்தணி, புங்கனூர், பல்லவனேரி, காளத்தி, புத்தூர், சித்தூர், குப்பம் ஆகிய தாலுக்காக்களும் கி.பி. 1940ஆம் ஆண்டு வரை வடார்க்காடு மாவட்டத்துடன் (தற்போது வேலூர் மாவட்டம்) இணைந்திருந்தன. 1941ஆம் ஆண்டு முதல் ஆங்கிலேய அரசின் நிர்வாக வசதிக்காகத் திருத்தணி முதலான மேற்சுட்டிய தாலுக்காக்கள் தமிழகத்திலிருந்து பிரிக்கப்பட்டு ஆந்திரத்துடன் இணைக்கப்பட்டன. இவற்றில் திருத்தணித் தாலுக்கா தவிர ஏனைய பகுதிகள் இன்றைய ஆந்திர மாநிலத்திற்குச் சொந்தமாகிவிட்டன.

1947-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 16-ஆம் நாள் திருத்தணியை மீட்கும் பணிக்கு அடித்தளம் போடப்பட்டது. அதாவது, தமிழ் மீதும் தமிழர் மீதும் பற்றுக்கொண்ட *மங்கலங்கிழார்* அவர்கள், ம.பொ. சிவஞானம் அவர்களை அழைத்துத் திருவாலங்காட்டில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு செய்தார். திருவேங்கடம் வரை தமிழ்நாட்டோடு சேர வேண்டுமென்பதே இக்கூட்டத்தின் தீர்மானமாக இருந்தது.

ஆனால், 1949-ஆம் ஆண்டு ஆந்திரர்கள் ஆந்திரப் பிரிவினையைக் கோரியதால் ஆந்திரம் பிரிவினைக் கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டது. இக்கமிட்டி

சென்னையையும் ஆந்திரத்தோடு சேர்க்க வேண்டும் என்று கூறியது. அதே ஆண்டில், சென்னையில், *தமிழ் மாநாடு* ஒன்று கூட்டப்பட்டது. இம்மாநாட்டில் ***ஆர்.கே. சண்முகம் செட்டியார், திரு.வி. கலியாணசுந்தரனார்*** முதலியோர் கலந்து கொண்டனர். சென்னை மாநகரை ஆந்திரர்களுக்குக் கொடுக்கக்கூடாது என்று இம்மாநாட்டில் தீர்மானம் செய்யப்பட்டது.[1]

1952-இல் *பொட்டி ஸ்ரீராமலு* என்ற தெலுங்கர் தனி ஆந்திரத்தைக் கேட்டுச் சாகும் வரை உண்ணாவிரதமிருந்து இறந்துவிட்டார். இதனால் ஏற்பட்ட புரட்சியின் விளைவாக அப்போது இந்தியப் பிரதமராக விளங்கிய நேரு அவர்கள் சென்னை மாகாணத்திலுள்ள (இப்போதுள்ள கர்நாடகம், கேரளம், தமிழகம், ஆந்திரா ஆகிய அனைத்தும் சென்னை மாகாணம் – Madras Presidency என்று இருந்தது) தெலுங்கு மொழி பேசும் மாவட்டங்களை (சென்னை நீங்கலாக) ஆந்திர மாநிலமாக அறிவித்தார். இதற்காக நியமிக்கப்பட்ட *வாஞ்சுகுழு* (Wanchoo Comittee) அவ்வாந்திர மாநிலத்திற்குச் சென்னை தற்காலிகத் தலைநகரமாக வேண்டுமென்று கூறியது. ஆனால், அப்போது தமிழகத்தின் முதலமைச்சராக விளங்கிய சி. இராசகோபாலச்சாரியார் அவர்களின் முயற்சியால் அது தவிர்க்கப்பட்டது.இவ்வாறு புதிய ஆந்திரமாநிலம் உருவாக்கப்பட்டது. டி. பிரகாசம் அம்மாநிலத்தின் முதலமைச்சரானார்.

## தமிழக – ஆந்திர எல்லை உருவாக்கம்

திருவேங்கடம் ஆந்திரத்தோடு சேர்க்கப்பட்டதைத் தமிழர் தடுக்க விரும்பியும், அன்றுள்ள அரசியல் செல்வாக்கால் அது இயலாமல் போனது. ஆனால், திருத்தணி அம்மாநிலத்தோடு சேர்ந்ததை உண்மையான தமிழ்ப் பற்றுடையவர் எவரும் விரும்பவில்லை. கி.பி. 1953-ஆம் ஆண்டு சூன் திங்கள் திருத்தணி மீட்புப் போராட்டம் மீண்டும் சூடுபிடிக்கத் தொடங்கியது.

19-6-1953 அன்று என்.ஏ. ரஷீத், கோவிந்தசாமி, திருவள்ளூர் பச்சையப்பன், கவிஞர் அரு. அருமைநாதன் மற்றும் நூற்றுக் கணக்கான போராட்ட வீரர்கள் 'பம்பாய் எக்ஸ்பிரஸ்' இரயிலைத் திருத்தணியில் நிறுத்தி மறியல் செய்தனர். அதே நாளில் மாலை, தெலுங்கில் மட்டும் ஒலிபரப்புச் செய்த வானொலி நிலையத்திற்கு முன் போராட்டமும் நடைபெற்றது.

20.6.1953 அன்றும் இரயில் மறியல் போராட்டம் தொடர்ந்தது. கோல்டன் சுப்பிரமணியம், என்.ஏ. ரஷீத், கோவிந்தசாமி ஆகியோர் அரசு விதித்திருந்த தடையை மீறி மீண்டும் இரயில் நிறுத்தப்போராட்டம் செய்தனர். இதனால் பலர் கைது செய்யப்பட்டுத் திருப்பதி சிறையில் அடைக்கப்பட்டனர்.

தடைகள் பல வந்தபோதும் திருத்தணியை மீட்டுவிட வேண்டும் என்னும் ஆர்வம் தமிழர்களிடையே ஏற்பட்டதால் 21.06.1953 அன்றும் அதற்கு மறுநாளும் இரயில் மறியல் போராட்டம் தொடர்ச்சியாக நடத்தப்பட்டது. மங்கலங்கிழார்,

---

1. ம.பொ. சிவஞானம்,எழுநிலைமாடம், தமிழ்நாடு பெயர்மாற்ற வரலாறு.

வாணம்பாடி, முருகன், குப்புசாமி ஆகியோர் 22.06.1953 அன்று நடந்த போராட்டத்தில் கலந்துகொண்டனர். போராட்டம் தொடர்ந்து கொண்டே இருந்தது.

04.07.1953 அன்று மா.பொ. சிவஞானம், வெங்கடேச முதலியார் ஆகியோர் விதிக்கப்பட்டிருந்த தடையை மீறி, அறப்போராட்டத்தில் கலந்து கொண்டதால் கைது செய்யப்பட்டனர். இருப்பினும் தமிழ்மக்கள் ஓயவில்லை. போராட்டம் தொடர்ந்ததால் பலர் கைதுதாவதும் தொடர்ந்தது. அப்போது தமிழக முதலமைச்சராக இருந்த இராஜகோபாலாச்சாரி அவர்களின் தலையீட்டால் பாரதப்பிரதமர் நேரு ***எல்லைக் கமிஷன்*** அமைப்பதாக வாக்களித்தார். அதன்மூலம், தீவிரமாக நடந்து கொண்டிருந்த போராட்டம் நிறுத்தப்பட்டது. கைது செய்யப்பட்டிருந்த பலர் விடுதலை செய்யப்பட்டனர்.[1] ஆந்திர மாநிலம் பிரித்துக் கொடுக்கப்பட்ட போதும், திருப்தி அடையாத ஆந்திர மக்கள் 'விசால ஆந்திரா' விற்குப் போராடினர். 'மதராசு மன்தே' என்று கூச்சல்களை எழுப்பிக் கொண்டு சென்னையில் போராட்டத்தைத் தீவிரப்படுத்தினர். இப்போராட்டத்தினை முன்னிட்டு***ராஜ்ய புனரமைப்புக் கமிஷன்*** **(State Reorganisation Commission)**என்ற ***மாநில மறுமலர்ச்சிக்குழு*** எனுமொரு குழு ***பசல் அலி*** தலைமையில் அமைக்கப்பட்டது.[2]

## பசல் அலி குழு

சென்னை நகரத்தின் மீது ஆந்திரர் உரிமை கொண்டாடுவதை நிராகரித்து, அது தமிழகத்திலேயே நீடிக்க வேண்டுமென்று பசல் அலியின் தலைமையிலான குழு அறிக்கையைத் தந்து தமிழகத்திற்கு நீதி வழங்கியது. அக்குழுவினர் பரிந்துரையின்படி1956–இல் மொழிவாரியான மாநிலங்கள் பிரிக்கப்பட்டன. 1956 நவம்பர் முதல் நாளன்று தமிழ் வழங்கும் பிரதேசம் **தனியரசு மாநிலமாக** அமைந்தது.இருப்பினும் எல்லைப் பிரச்சினை ஓயவில்லை. தனியரசாகப் பிரிந்த தமிழகத்திற்குக் காமராசர் முதலமைச்சரானார். இருமாநில முதலமைச்சர்களும் கூடி இப்பிரச்சினையைத் தீர்த்துக்கொள்வோம் என்று கூறினரென்றாலும், பிரச்சனைக்குத் தீர்வு காண இயலவில்லை. ஆனால், படாஸ்கர் பரிந்துரையை ஏற்றுக் கொள்வதாக இருமாநில முதலமைச்சர்களும் ஒப்புக் கொண்டனர்.

## படாஸ்கர் பரிந்துரை

படாஸ்கரின் பரிந்துரை இந்தியாவில் அனைத்துச் செய்தித் தாள்களிலும் வெளியானது. 16 பக்கங்கள் அடங்கிய அந்தப் பரிந்துரையின் சாரத்தை ம.பொ. சிவஞானம் அவர்கள் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

"திருத்தணித் தாலுக்கா முழுவதும் (ஒரே ஒரு கிராமம் நீங்கலாக), சித்தூர் தாலுக்காவில் 30 கிராமங்கள் புத்தூர் தாலுக்காவில் ஒரு கிராமமும் ஆக 322 கிராமங்கள் ஆந்திராவிலிருந்து பிரித்து எடுக்கப்பட்டுத் தமிழ்நாட்டுடன் சேர்க்கப்படும்.

---

1. V.M. Krishnamurthi "History of Tamil Nadu" - Vol. II.
2. **த. சுந்தரராசன், மு.நூ. ப.45**

இந்தக் கிராமங்களின் மொத்த மக்கள் தொகை அதாவது,தமிழகத்திற்கு வருபவர்களின் தொகை 2,39,502.

தமிழ்நாட்டில் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள திருவாலங்காடு தாலுக்காவிலிருந்து சில கிராமங்கள் (ஆரணியாறு அணைக்கட்டுப் பகுதி) உட்பட ஆந்திராவில் சேர்க்கப்படும்.

ஆந்திர சட்டப்பேரவையின் உறுப்பினர்களில் (எம்.எல்.ஏ.,) மூவர் தமிழ்நாட்டு சட்டப்பேரவைக்கு வருவார்கள். தமிழ்நாட்டு எம்.எல்.ஏக்களில் யாரும் ஆந்திரத்திற்குச் செல்லமாட்டார்கள்.

டில்லி ராஜ்ய சபையில் ஆந்திராவுக்கு ஒரு இடம் குறையும். தமிழ்நாட்டிற்கு ஒரு இடம் கூடுதலாகும். வள்ளிமலை, திருவாலங்காடு, திருத்தணி ஆகிய புண்ணியத் தலங்கள் தமிழ்நாட்டுடன் இணைக்கப்படும்.

ஒசூர் தாலுக்காவில் தெலுங்கு பேசுவோர் 38.4 சதவிகிதமும், கன்னடம் பேசுவோர் 31.5 சதவிகிதமும், தமிழ் பேசுவோர் 22.4 சதவிகிதமும் இருப்பதால் அதாவது, எந்த ஒரு மொழியினரும் 50 சதவிதம் இல்லாததாலும், ஆந்திரத்தோடு அதற்கு நிலத்தொடர்பு இல்லாததாலும் அந்தத்தாலுக்கா எப்போதும் போல இனியும் தமிழ்நாட்டிலே நீடித்தும், நிலைத்தும் இருந்து வரும்.

ஆரணியாறு, அணைக்கட்டுப் பிரதேசம் ஆந்திராவுக்குச் செல்லும் என்றாலும் அணைக்கட்டில் தேக்கப்படும் நீரிலிருந்து தமிழ்நாட்டின் விளைநிலங் களுக்குத் தரப்படும் நீர்வசதி இனியும் தொடர்ந்து கிடைப்பதற்கான வகையில் தமிழக ஆந்திர அரசுகள் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும்".[1]

படாஸ்கரின் இப்பரிந்துரை கி.பி.1959–ஆம் ஆண்டு இறுதிக்குள் இருமாநிலங்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டப் பிறகும் கி.பி. 1960–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் நாள்தான் நடைமுறைக்கு வந்தது.

## தமிழகப் பெயர் மாற்றம்

உரிமைகளைப் போராடிப் பெற்றப் பிறகும் தமிழரின் துன்பங்கள் தீர்ந்தபாடில்லை. பிரிக்கப்பட்ட ஆந்திரம், கேரளம், கர்நாடகம் ஆகிய மாநிலங்கள் எவ்விதப் போராட்டமுமின்றித் தம் பெயரை எளிதில் பெற்றுவிட்டன. ஆனால் தமிழ்நாடு என்று நம் தமிழகம் பெயர்மாற்றம் பெறுவதற்குக் கூட பல போராட்டங்களைச் சந்திக்க வேண்டிய நிலைமை அன்று இருந்தது. அம்மூன்று மாநிலங்களும் தனித்தனியாகப் பிரிந்தபின்னர்த் தமிழ் வழங்கும் பகுதி மட்டும் சென்னை ராஜியம் ***(Madras State)*** என்றே அழைக்கப்பட்டு வந்தது.

தமிழ் வழங்கும் நாடு தமிழ்நாடு என்றே அழைக்கப்படவேண்டும் என்னும் கோரிக்கையைத் தமிழகச் சட்டப்பேரவையில் முன்வைத்த சான்றோர்

1. ம.பொ. சிவஞானம் ,எனது போராட்டம், ப.827 – 28

திரு.கே. விநாயகம். கி.பி. 1956–ல் இருந்தே இப்போராட்டம் தொடங்கியது. அறப்போராக படிப்படியாக வளர்ந்து உணர்ச்சிமயமான எல்லை கடந்த பொதுமக்கள் போராக உருவெடுத்தது. மகளிர் உட்பட பலர் இவ் அறப்போரில் கலந்து கொண்டனர். ***புலவர் கீரன், ஔவை தி.க.சண்முகம், கு.ம. பாலசுப்பிரமணியன், கவி. காமு. ஷரிப்*** போன்ற அன்பர்களும், ***பொன்னம்மாள், வீரலெட்சுமி*** போன்ற மகளிரும் இவ் அறப்போரில் கலந்து கொண்டனர். அன்றைய நிதியமைச்சர் சி. சுப்பிரமணியன் அளித்த உறுதிமொழியின் பேரில் அறப்போர் நின்றது.

இதன்விளைவாக மாநிலத்திற்கு வெளியே உள்ளவர்களுக்கு மெட்ராஸ் என்றும் தமிழ்நாடு அரசு நிர்வாகத்தில் தமிழ்நாடு என்றும் பெயர் மாற்றம் பெற்றது. இருப்பினும் தமிழ்நாடு பெயர்மாற்றக் கோரிக்கை தொடர்ந்து வலியுறுத்தப்பட்டது. அறிஞர் அண்ணா, பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர், ராய. சொக்கலிங்கனார், சா.கணேசர், ராஜாஜி ஆகியோர் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர்.

தமிழ்நாடு பெயர்மாற்றக் கோரிக்கை உள்ளடக்கிய 20 கோரிக்கை களுக்காக 60 நாட்கள் உண்ணா நோன்பிருந்த விருதுநகர் சங்கரலிங்க நாடார் மறைந்தது இக்கோரிக்கைக்கு ஒரு புத்துணர்வைக் கொடுத்தது. அடுத்து நடந்த பல நிகழ்ச்சிகளின் தொடர்பாக ***தமிழ்நாடு*** என்ற பெயர் மாற்றத் தீர்மானம் 18–1–1967 அன்று நிறைவேறியது.[1]

இவ்வாறு பலகாலம் தொடர்ந்து நடத்தியபோராட்டங்களின் விளைவாகத்தான் தற்போது இருக்கும் தமிழக – ஆந்திர எல்லை உருவாயிற்று. அவ்வாறே,தன்னலம் கருதாப் பெரியோர் பலரின் ஓயா உழைப்பும் தியாகமும் மொழிவாரி மாநிலங்கள் அமையவும், தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் பெறவும் அடித்தளமாக அமைந்தது. பல காலம் பல தொல்லைகளுக்கு ஆளாகி, அறப்போர்கள் பல நிகழ்த்தி, அதன்மூலம் பெற்ற எல்லை வரையறையால் இன்று தமிழக – ஆந்திர எல்லையோர மக்கள், அவர்கள் தமிழராயினும் தெலுங்க ராயினும் அன்றிக் கன்னடத்தவராயினும் வேற்றுமொழியாரிடத்தில் எந்தவிதச் சிக்கல்களோ மனப்போராட்டமோ இன்றித் தம் தாய்மொழி எது என்றுகூட கூறமுடியாத நிலையில் மொழிபேதமின்றிப் பின்னிப்பிணைந்து வாழ்கின்றனர்.

---

1. த. சுந்தரராசன், தமிழ்நாடு பெயர் மாற்ற வரலாறு, ப.44.

# தமிழக ஆந்திர எல்லையின் சமுதாயப் பின்புலம்

மொழி என்பது ஒவ்வொரு தனி மனிதனாலும் அவன் சார்ந்துள்ள சமுதாயத்தாலும் பற்பல துறைகளிலும் பல்வேறு சமுதாயச் சூழல்களிலும் பல வகையான சமுதாயப் பணிகளைச் செய்வதில் பயன்படுத்தப்படும் திறன்மிக்க கருவியாக விளங்குவதோடு, அது அச்சமுதாயத்தின் அமைப்போடும் நவநாகரிக வளர்ச்சியோடும் ஒருங்கிணைந்து செல்லக் கூடியதாகவும் விளங்குகிறது.

அத்தகைய மொழி மனித சமுதாயத்தின் வாழ்வோடும் வளர்ச்சியோடும் இரண்டறக் கலந்தது. மொழி இல்லையேல் மனித சமுதாயமோ இல்லை, மனித நாகரிகமோ இல்லை எனலாம். மொழி ஒரு சமுதாயத்தின் அன்றாட இயக்கத்திற்கான அடிப்படைச் செய்தி பரிமாற்ற இயந்திரம். இது போன்றே, சமுதாயத்தொடர்புகள் பழக்கவழக்கங்கள் போன்றனவும் மொழியின் வாயிலாகவே நன்கு வெளிப்படுத்தப்படுகின்றன.எனவேதான் மொழியானது சமுதாயத்தின் இயல்பான நிலையைச், சூழலைப், பின்னணியைப் படம்பிடித்துக் காட்டும் கண்ணாடி ஆகும் என்று கூறுவர்.

எல்லா மொழிகளுமே தான் வழங்கும் சமுதாயத்தைப் பின்னணியாகக் கொண்டுதான் இயங்குகின்றன. 'எழுத்து வழக்குப் பெற்றுள்ள மொழிக ளாயினும், எழுத்து வழக்கற்ற மொழிகளாயினும் அவை தாம் வழங்கும் நிலப் பரப்பில் வாழும் குறிப்பிட்ட சமுதாயத்திலுள்ள மக்களின் கருத்துப் பரிமாற்றத் திற்கும் பண்பாட்டு வளர்ச்சிக்கும் நாகரிகத் தேடலுக்கும் மிகவும் துணைபுரிந்து வருகின்றன.'[1]

இவ்வாறு சமுதாயத்துடன் பின்னிப்பிணைந்திருக்கும் மொழிச்சூழலை அறிய வேண்டுமெனில் அம்மொழி வழங்கும் சமுதாயச் சூழலை முதலில் அறிய வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

## பல்துறை ஒருங்கிணைவு ஆய்வு (Inter - Disciplinary Research)

மொழியியல் ஆராய்ச்சி வளர்ந்துவிட்டநிலையில் கிளைமொழி ஆராய்ச்சியும் தனிவட்டத்திற்குள் நிற்கவில்லை. ஆய்வென்பது பல்துறை ஒருங்கிணைவு ஆய்வாக மாறியுள்ளது. இக்கிளைமொழி ஆராய்ச்சியும் வரலாறு, பண்பாடு முதலான பிறதுறைகளுடன் பின்னிப்பிணைந்து கிடக்கிறது. பிறதுறைகளின் மூலம் கிளைமொழி ஆய்வுக்கும், கிளைமொழி ஆய்வின் மூலம் பிறதுறைகளுக்கும் பயன் விளைகிறது. அதுவும் குறிப்பாக வரலாறும் சமூகவியலும் ஒரு கிளைமொழியின் ஆய்வுக்கு மிக்க பயனுடையதாக விளங்குகின்றன. இருமொழியம் ***(Biligualism)*** பற்றி ஆய்வு செய்யும் போது வரலாறு, சமூகவியல்,

---

1. **கி. கருணாகரன், மொழிவளர்ச்சி, ப. 1–3.**

பொருளாதாரம் போன்ற துறைகளின் உதவியின்றி அவ்வட்டாரத்தில் வழங்கும் மொழியின் உண்மையான நிலையினையும் காரணக் கூறுகளையும் அறிய இயலாது.எனவே கிளைமொழி மற்றும் இருமொழிய ஆய்வுகள் பல்துறை ஒருங்கிணைவு ஆய்வுகளாக அமைகின்றன.

## மொழியும் சமுதாயமும்

தமிழக ஆந்திர எல்லையின் வரலாற்றுப் பின்னணியைப் போன்று சமுதாயப் பின்னணியும் அங்கு வழங்கும் இருமொழியியத்திற்கு எங்ஙனம் காரணமாய் விளங்குகிறது என்பது குறித்து எண்ணுவது அவசியமாகும்.

தெலுங்கர்கள் சிலர் பதவியில் இருந்ததால் அவ்வெல்லையில் வாழ்ந்த தமிழர்களுக்கும் தமிழுக்கும் கேடு விளைந்தது. 1950ஆம் ஆண்டு செங்கல்வராய நாயுடு, என்பவர் சித்தூர் தாலுக்காவின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதற்கு முன் சித்தூர் தாலுக்காவில் உள்ள பள்ளிகள் அனைத்திலும், தமிழ் கற்பிக்கப்பட்டது. இங்கு வாழ்வோரில் 90 விழுக்காட்டினர் தமிழர் என்பதால் தமிழுக்கு முதலிடம் கொடுக்கப்பட்டிருந்தது. செங்கல்வராய நாயுடு பதவிக்கு வந்ததும் அப்பகுதியில் எல்லாப் பள்ளிகளிலும் ஆறாம் வகுப்பு முதல் தமிழ் கற்பிக்கக் கூடாது, தெலுங்கு தான் கற்பித்தல் வேண்டும் என்று உத்தரவிட்டார்.

இதனால் தமிழர்கள் வாழும் சித்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த திருத்தணி, பள்ளிப்பட்டு, அம்மையார்குப்பம், வங்கனூர், அந்திமாஞ்சேரிப் பேட்டை, பொதட்டூர்ப் பேட்டை, இராமகிருஷ்ணா பேட்டை, ஏகாம்பரக் குப்பம், நகரி, புத்தூர், புதுப்பேட்டை ஆகிய இடங்களில் அமைந்திருந்த பள்ளிகள் அனைத்தும் தெலுங்குப்பள்ளிகளாக மாற்றப்பட்டன. இப்பகுதிகளில் தமிழ்வழிக்கல்வி இல்லாத காரணத்தால் தமிழர்கள் தெலுங்குமொழி வழிக் கல்வி கற்கும் கட்டாய நிலைக்கு தள்ளப்பட்டனர். தெலுங்கில் கல்வி கற்பது மட்டுமின்றி அக்காலக் கட்டத்தில் தமிழர்கள் பலர் தெலுங்கர்களாகவே மாறிவிட்டனர் எனலாம்.[1]

## தாய்மொழி தெலுங்கா? தமிழா?

இன்று மேற்சுட்டிய பகுதிகளில் அவர்தம் தாய்மொழி தமிழா? தெலுங்கா? என்று கூற இயலவில்லை. ஒரே சாதியினைச் சார்ந்தவர்களில் ஒருவரை வினவினால் தம் தாய்மொழி தமிழ் என்றும், பிறிதொருவரை வினவினால் தம் தாய்மொழி தெலுங்கென்றும் கூறுகின்றனர். இவ்வாறு தெலுங்கர்களாக மாறியவர்களில் கற்றவர்கள் மட்டும் தங்கள் தாய்மொழி தமிழ் என்பதை இன்று உணர்ந்திருக்கின்றனர். கல்லாதவர்கள் இன்றும் தம் தாய்மொழியைத் தெலுங்கு என்றே கூறி வருகின்றனர்.[2]

---

1. ஜி. முருகேச முதலியார் (தகவலாளி), கள ஆய்வில் பெறப்பட்டது, சொரக்காய்ப்பேட்டை, பள்ளிப்பட்டு.
2. ஏ. நாராயணரெட்டி (தகவலாளி), கள ஆய்வில் பெறப்பட்டது, பாண்டிரவேடு, பள்ளிப்பட்டு.

## பேச்சுத் தமிழில் தெலுங்கு மொழியின் செல்வாக்கு

செங்கல்வராய நாயுடுவால் தமிழுக்கும் தமிழருக்கும் ஏற்பட்ட கேட்டின் பாதிப்பு இன்றும் உள்ளது. அங்கு வாழும் தமிழர்கள் தம் தாய்மொழி தமிழ் என்பதை உணர்ந்து இப்பொழுது தமிழுக்கே முதலிடம் கொடுத்து வருகின்றனர். இன்றைய சூழ்நிலையில் அவர்கள் தெலுங்கை விடுத்துத் தமிழே பேசினாலும், இடையில் சிறிது காலம் இவர்கள் தெலுங்கர்களாகவே வாழ்ந்ததால் இவர்தம் பேச்சுத்தமிழில் தெலுங்கின் செல்வாக்கு மிகுதியாகக் காணப்படுகிறது. ஆனால் இன்றைய தலைமுறையினரிடம் இத்தகைய அயல்மொழித் தாக்கம் குறைந்து காணப்படுவதும் குறிப்பிடப்பெற வேண்டியதாகும்.[1]

## தெலுங்குவழிக் கல்வியால் ஏற்பட்ட இழப்புகள்

தமிழக வட எல்லையில் இருக்கும் தமிழகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் வாழும் தமிழர்கள்,முன்பு (மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட தொடக்கக் காலத்தில்) சிறிது காலம் ஆந்திரத்தில் இருந்ததன் விளைவாகத் தற்போது எங்ஙனம் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதும் இங்குக் கவனமாகக் குறிப்பிட வேண்டுவதாகும்.

இவ்வெல்லைப் பகுதிகள் ஆந்திர மாநிலத்தில் இருந்த போது தெலுங்கு மொழிவழிக் கல்வி கற்க நேர்ந்தது. இதனால் தமிழ்வழிக் கல்வி கற்க வாய்ப்பில்லாமல் போனது. அனைத்துப் பள்ளிகளிலும் தெலுங்குமொழிவழிக் கல்வியே இருந்தது. இங்குள்ள தமிழர், பள்ளியில் தெலுங்குமொழி கற்க நேர்ந்தாலும் வீட்டுச்சூழலிலும், பள்ளியிலும் தமிழே பேச்சுமொழியாகக் கொண்டிருந்தனர். நகரங்களில் ஒருசில இடங்களில் தமிழ்வழிக் கல்வி கற்க வாய்ப்பிருந்தது. தமிழகத்தின் வடவெல்லை பெரும்பாலும் கிராமங்களைக் கொண்டிருப்பதால் அங்குள்ள பள்ளிகள் அனைத்தும் தெலுங்குவழிக் கல்வி கற்கும் நிலையங்களாக மாறி இருந்தன. இந்நிலை கி.பி. 1960 ஏப்ரல் முதல் நாள் வரை நீடித்திருந்தது. அந்நாளில் தான் தற்போதுள்ள தமிழக வடஎல்லைப் பகுதிகள் பல தமிழ்நாட்டோடு இணைந்தன. அக்காலக்கட்டத்தில் தெலுங்கு வழிக்கல்வியால் கற்றோர்க்கு இடையூறு ஏற்பட்டது.

## மொழிச்சிக்கலும் தீர்வும்

தமிழக வடஎல்லைப்பகுதி தமிழகத்திற்குச் சொந்தமான காலத்தில் அப்பகுதிகளில் இருந்த தமிழர்கள் சிலர் அரசாங்கப் பணிகளில் இருந்தனர். இவ்வெல்லைப்பகுதியில் பெரும்பாலானோர் தெலுங்குவழிக் கல்வி கற்றவர்கள். அரசால்கப்பணியில் இருந்த சிலருக்கு வேலை நிரந்தரமாக்கப்படவில்லை. சமூக நலப்பணியாளர்கள் சிலரும் இந்நிலைமையில்தான் இருந்து வந்தனர். இவர்கள் எல்லோரும் கூடி 4-8-1970 அன்று, 'தங்களை அரசுப் பணியில் நிரந்தரமாக்க

1. ஜி. முருகேச முதலியார் (தகவலாளி), கள ஆய்வில் பெறப்பட்டது, சொரக்காய்ப்பேட்டை, பள்ளிப்பட்டு.

வேண்டும்' என்று கோரிக்கை விடுத்தனர். ஆனால் அந்தப்பதவி அவர்களுக்கு நிரந்தரமாக்கப்பட வேண்டுமெனில், தமிழ்மொழித்தேர்வில் தேர்ச்சி அடைந் திருக்க வேண்டும். *(you must appear language test)* என்று 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடரசு குறிப்பாணை வெளியிட்டது.

இவர்கள் தமிழர்களாக இருந்தும் சூழ்நிலையால் தெலுங்கு வழிக்கல்வி பயின்றனர். பள்ளியில் இவர்கள் தெலுங்கு பயின்றதால் தமிழ்மொழி அறிவு இவர்களுக்கு உண்டா என்பதைச் சோதித்துப் பார்க்கும் தேர்வு இது. பள்ளியில் தமிழ்வழிக் கல்வி கற்கவில்லை எனினும், செய்தித்தாள்கள், எளிய புத்தகங்கள் போன்றவற்றின் மூலம் தமிழ் படிக்கக்கற்றுக் கொண்டனர். ஆயினும் 1978ஆம் ஆண்டு தமிழக அரசு மொழித்தேர்வு விதியை விதித்தது. இவர்களெல்லாம் தமிழ் அறிந்த காரணத்தால் உடனே அத்தேர்வு எழுதி வெற்றி அடைந்து விட்டனர்.

பின்னரும் அவர்களுக்கு மொழித் தொல்லை விடவில்லை, தேர்வில் தேறியதும் எந்நாளில் தேர்வில் தேர்ச்சிப் பெற்றனரோ அந்நாளில் இருந்துதான் பணி நிரந்தரம் செய்யப்படுவதாகக் கருதப்படும் என்று கூறப்பட்டது. இதனால் அவர்கள் இத்தனை ஆண்டுகள் உழைத்த உழைப்பும் வீணாகப் போய்விட்டது. இராமநாயுடு, கே.எஸ். ஆறுமுகம், கோவிந்த உடையார், பாளையத்துரெட்டி போன்றோர் இத்தகைய நிலையால் பாதிக்கப்பட்டவர்களுள் சிலர்.

தமிழ்நாட்டின் வடவெல்லையில் மட்டுமின்றிக் கன்னியாகுமரி மாவட்ட எல்லையிலும் பலர் அவர்களைப்போல பாதிக்கப்பட்டனர். இவர்கள் தங்களுக்குள் ஒன்றுபட்டு இருக்கவில்லை, ஒரே ஒருவர் மட்டும் அரசாங்கத்தின் மீது வழக்குப் பதிவு செய்தார். ***(Writ Petition No. 9900)***. ஆனால் இதற்குள் அரசாங்கமே இறங்கி வந்துவிட்டது. அதாவது தெலுங்குமொழியால் பாதிக்கப்பட்டவர்கள் அரசுப்பணியில் சேர்ந்தபோது "தமிழ்" எழுதப்படிக்கத் தெரிந்தவராக இருந்தால், தாம் கற்ற கல்வி நிலையத்திலிருந்து சான்றிதழ் வாங்கிக் கொடுத்தால் அவர்கள் பணியில் என்று சேர்ந்தனரோ அன்றிலிருந்து நிரந்தரமாக்கப்படுவர் என்று ஓர் அரசாணை பிறப்பித்தது *(G.O. No: 12 FD)*. அரசாங்கத்தின் மீது பதிவு செய்து வழக்கும் வென்றது. 3–2–90ஆம் ஆண்டு நீதி மன்றம் அரசாங்கம் தரவேண்டிய அனைத்து நிலுவையையும் *(arrears)* கொடுத்துவிட வேண்டுமென்று ஆணையிட்டது.

## தமிழ்மொழியைத் தக்கவைத்தல்

எல்லையில் வாழ்ந்த மக்கள் சிலர் அரசாங்கப்பணியில் இருக்கும் போது அவர்களுக்கு இருமொழியத்தால் ஏற்பட்ட கேட்டினை மேற்சுட்டிய நிகழ்வால் உணர முடிகிறது. இப்போது இப்பகுதியில் வாழும் மக்கள் தம் வாரிசுகளைத் தமிழில் கல்வி கற்க வைக்கின்றனர். இன்றைய நிலையில் அங்குள்ள பள்ளிகளில் ஒரு வகுப்பில் ஐந்துபிரிவுகள் என்றால் ஒரு பிரிவுமட்டும் தெலுங்கு வகுப்பாக உள்ளது. இதிலும் இப்போது மாணவர் எண்ணிக்கை மிகவும் குறைந்துவிட்டது. தமிழ்நாட்டில் இருந்து கொண்டு எதற்காகத் தெலுங்கு மொழி கற்கவேண்டும் என உணர்ந்து வருகின்றனர். இங்கு வாழும் தெலுங்கரும் தம்பிள்ளைகள் தமிழ்மொழிவழிக் கல்வி கற்பதையே விரும்புகின்றனர்.

ஒரு தலைமுறையினருக்குத்தான் சூழ்நிலையால் கட்டாயமாகத் தெலுங்குவழிக் கல்வி கற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. தற்போதைய தலைமுறை யினருக்கு அந்த இக்கட்டான சூழல் விலகியதால் அவர்கள் தமிழ்க் கல்வியையே விரும்பிப் பயில்கின்றனர்.

பரதராமி அருகிலுள்ள சில கிராமங்களுள் சிலவும் (கொத்தூர் போன்றன) திருத்தணித் தாலுக்காவைச் சேர்ந்த கிராமங்களுள் சிலவும் (ஐங்காலுப்பள்ளி போன்றன) பெரும்பாலும் தெலுங்கர்கள் வாழும் பகுதிகளாகும்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த வேப்பனப்பள்ளி போன்ற எல்லையிலுள்ள ஊர்களில் கன்னடம் பேசும் மக்கள் மிகுதியாக வாழ்கின்றனர். இருப்பினும் அவர்களால் தமிழில் நன்கு உரையாட முடிகின்றது. ஐங்காலுப்பள்ளி மக்கள் இன்றும் தமிழ்மொழியில் சரியாகப் பேசுவதில்லை. இருமொழியர் அல்லாத மருத்துவ ஊழியர்கள் பலர் இவ்வூர்களுக்குச் செல்லும் போது அப்பகுதிகளில் பணிபுரிவது கடினமாகிறது. தமிழ் மட்டுமே அறிந்த மருத்துவ ஊழியர்கள் கூறுவது அவ்வூர் தெலுங்கு மக்களுக்குப் புரிவதில்லை. தெலுங்கு மக்கள் கூறுவதும் இப்பணியாளர்களுக்குச் சரியாக விளங்குவதில்லை. இந்த ஒரு மொழித் தொடர்பு இடைவெளியினால் அப்பணியாளர்கள் விரைவிலேயே மாறுதல் பெற்றுச் செல்ல வேண்டிய சூழ்நிலைக்கு உள்ளாகின்றனர். ஆனால் தற்போது இங்குப் பணிபுரியும் மருத்துவ ஊழியர்கள், நலப்பணியாளர்கள் பெரும்பாலும் தமிழ் மற்றும் தெலுங்கு ஆகிய இருமொழிகளையும் அறிந்த இருமொழியாளர்களாகவே உள்ளனர். இதனால் மொழிப்பிரச்சனைக்கு ஓரளவு தீர்வு காணப்படுகிறது.[1]

## மொழிக்குறுக்கீடு

தமிழக வடவெல்லைப் பகுதிகளில் வாழும் தமிழர்தம் தாய்மொழியில் தெலுங்கின் குறுக்கீடும், தெலுங்கு மொழியில் தமிழின் குறுக்கீடும் ஏற்பட்டுள்ளது. அவ்வாறு மொழிக்குறுக்கீடு ஏற்படுவதை அம்மக்கள் தவறாகவும் எண்ணுவதில்லை. ஒரு முறை திருத்தணித் தாலுக்காவைச் சேர்ந்த பொதட்டூர்ப்பேட்டையில் குடும்ப நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. அந்நிகழ்ச்சியில் தமிழர்கள் சிலர் உரையாடினர். அவர்களுள் ஒரு சிலர் தமிழில் முதுகலைப்பட்டம் பெற்றவர்கள். இவர்களின் தமிழ் உச்சரிப்பைக் கண்டு திருமணத்திற்கு வந்திருந்த அதிகாரி ஒருவர் அவர்களிடம் “தாய்மொழி தெலுங்கா?” என்று வினவினார். அவர்களின் தாய்மொழி தமிழே ஆகும்.என்றாலும் அவர்களின் பேச்சுவழக்கில் தெலுங்கின் சாயல் மிகுந்திருந்ததால் அவர் அவ்வாறு கேட்டார். தமிழில் உயர்கல்வி கற்றவர்களிடமே தெலுங்கின் தாக்கம் இருக்கும் போது கல்லாத மக்களிடையே இருப்பதில் வியப்பொன்றும் இல்லை.

---

1. பாளையத்து ரெட்டி (தகவலாளி), கள ஆய்வில் பெறப்பட்டது, பாண்டிரவேடு, பள்ளிப்பட்டு.

## வட்டார வழக்கின் தோற்றம்

1960ஆம் ஆண்டிற்கு முன்னர் இவ்வெல்லைப் பகுதி மக்கள் (ஒருசில பகுதிகள் தவிர) வெளிச் சூழ்நிலையால் யாரிடம் உரையாடினாலும் தெலுங்கிலேயே பேசி வந்தனர். தெலுங்கில் பேசுவதைப் பெருமை என்று கருதினார். அப்பகுதியில் இப்போது 40 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் தமிழ்மொழியை எழுதப் படிக்கத் தாங்களாகவே கற்றுக் கொண்டனர். இப்போது தமிழில்தான் பேசுகின்றனர். இவர்கள் பேசும் தமிழ் குறித்து இவர்கள் கருத்து:–

“நாங்கள் பேசும் தமிழில் தெலுங்குமொழி கலந்துதான் இருக்கும். இந்த மொழிக்கலப்புத் தவறென்று உணர்ந்தாலும் எங்களால் இத்தவற்றைத் திருத்திக் கொள்ள முடியவில்லை. எங்களது அடுத்த தலைமுறையினர் அதாவது இப்போதுள்ள எமது பிள்ளைகள் தமிழில் நன்றாக உரையாடுகின்றனர். தெலுங்கு மொழிக் கலப்புமில்லை. ஆனால் அவர்களைப் போன்று தெலுங்கு மொழிக் கலப்பில்லாமல் எங்களால் பேச இயலவில்லை”.[1]

இப்பொழுது இப்பகுதியில் தெலுங்கரும் தமிழிலேயே பேசத் தொடங்கி யுள்ளனர். ஆனால் அவர்கள் பேசும் தமிழானது கொச்சை வழக்காகவே உள்ளது. கீது, பூட்டோ(ம்) போன்ற சொற்களைப் பயன்படுத்துகின்றனர். இவர்தம் பேச்சு வழக்கில் தமிழக வடவெல்லையின் வட்டார வழக்கு மிகுந்து வருகிறது. இத்தகைய சமுதாயப் பின்னணியை ஆராய்ந்தால் நாளடைவில் இப்பகுதியில் இருமொழிக் கலப்புக் குறைந்து தமிழ் வட்டாரவழக்குத் தலை எடுக்கும் என்ற நம்பிக்கை பிறக்கிறது.

திருத்தணித் தாலுக்காவில் ‘சொரக்காய்ப் பேட்டை’ என்ற கிராமம் இருக்கிறது. இக்கிராமத்தில் வாழும் பெரும்பாலோர் தமிழரே என்றாலும் அங்குத் தெலுங்கு மொழியின் தாக்கம் அதிகமாகவே காணப்படுகிறது.

## இயற்கையான எல்லையும் ஏற்படுத்தப்பட்ட எல்லையும்

தமிழக வடவெல்லைப் பகுதியில் திருவள்ளூர் மாவட்டம், வேலூர் மாவட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் என்ற மூன்று மாவட்டங்கள் இருப்பினும் மொழிவாரி மாநிலங்கள் உருவாக்கப்பட்ட பிறகும் பல போராட்டங்களுக்கும் இன்னல்களுக்கும் ஆளானது திருவள்ளூர் மாவட்ட எல்லைதான். வேலூர் மாவட்ட வடஎல்லையும், கிருஷ்ணகிரி மாவட்ட வடஎல்லையும் பெரும்பாலும் இயற்கையாகவே மலைகளை எல்லைகளாகக் கொண்டுள்ளன. மொழிவாரி மாநிலங்கள் பிரிந்த பிறகு அவ்வெல்லைகளில் மக்கள் பெரும்பாலும் எந்தப் பாதிப்பையும் உணரவில்லை. அங்கு வாழ்ந்த மக்களின் கல்லாமையும், பொருள் இல்லாமையும் அதனால் ஏற்பட்ட அறியாமையும், அவர்களை எல்லைப் போராட்டத்தைப் பற்றிச் சிந்திக்கும் அளவிற்கு மாற்றவில்லை. தெலுங்குவழிக் கல்வி, தமிழ்வழிக்கல்வி என்று பல்வேறு

1. வி.என். ஆறுமுகம் (தகவலாளி), கள ஆய்வில் பெறப்பட்டது, பாண்டிரவேடு, பள்ளிப்பட்டு.

காலக்கட்டங்களில் பயிற்றுமொழி மாறிமாறி வந்தாலும் அவர்களுக்குக் கல்வியில் ஆர்வம் இல்லாமையினால் அவர்களிடையே இம்மொழிக்கொள்கை எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. இப்பகுதியினர், வேளாண்மை ஒன்றையே ஆதாரமாகக் கொண்ட வாழ்க்கை நிலையினராதலால் எவ்வித உயர்வும் இன்றிப் பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களாகவே இன்றும் வாழ்ந்து வருகின்றனர்.

வேப்பனப்பள்ளி, மல்லானூர், பரதராமி, சேர்க்காடு, பொன்னேரி, ஆகிய இடங்களிலும் அவற்றைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் இன்றைய தலைமுறை யினர்தாம் கல்வியின் இன்றியமையாமையை உணரத் தொடங்கியுள்ளனர். அம்மக்களுக்குக் கல்வி கற்பித்தலில் அரசாங்கம் வெளியிட்டுள்ள சில சலுகைகளுக்கான அறிவிப்பும், தொலைக்காட்சி போன்ற தொலைத்தொடர்புக் கருவிகளின் வருகையும்தான் இப்பகுதி மக்களைச் சிறிதளவேனும் விழிப்புணர்வு உடையவர்களாக மாற்றி வருகின்றன.இவர்கள் மாநில எல்லையில் வாழ்வோரே ஆயினும் எல்லைப்போராட்டம் பற்றிய விவரங்களைக் கூட அறியாதவர்களாக இருந்து வந்திருக்கின்றனர்.

இப்பகுதி மக்கள், இயற்கையே (மலை) எல்லையாக அமைந்துவிட்டதால் நாட்டின் பிற பகுதிகளுடன் கொள்ளும் தொடர்பு குறைவால் அவர்களுக்காகவே நடந்த எல்லைப் போராட்ட வரலாற்று உண்மைகளைக் கூட அறியாதவர் களாகவே இருந்து வருகின்றனர். குப்பம் தாலுக்கா மல்லானூரில் தெலுங்கு மொழி பேசும் மக்களின் பிள்ளைகளுக்கு அங்குள்ள அரசுப் பள்ளியில் உயர் கல்விக்கு வாய்ப்பில்லை. தமிழ்நாட்டு எல்லையில் உள்ள திருப்பத்தூர்த் தாலுக்கா எல்லையில் உள்ளது பாச்சூர். மக்கள் அங்கு உள்ள மேல்நிலைப்பள்ளியில் உள்ள தெலுங்குவழிக்கல்வி வகுப்பிற்குத் தமது பிள்ளைகளை அனுப்பி வைக்கின்றனர். தமிழக எல்லையில் உள்ள தமிழகத்திற்கு உட்பட்ட பாச்சூர் (திருப்பத்தூர் தாலுக்கா) பரதராமி, குடியாத்தம் தாலுக்கா, சேர்க்காடு (காட்பாடி தாலுக்கா) பொன்னை, பள்ளிப்பட்டு போன்ற இடங்களில் எல்லாம் மேனிலைக் கல்வி வரை தெலுங்குவழிக் கல்விக்கு ஒவ்வொரு வகுப்புக்கும் ஒரு பிரிவைத் தமிழக அரசு ஒதுக்கியுள்ளது.

ஆனால் ஆந்திர எல்லையில் (சித்தூர் தவிர) உள்ள பள்ளிகளில் எங்கும் தமிழ் வழிக்கல்வி பயிலவசதி வாய்ப்பினை ஆந்திரமாநில அரசு ஏற்படுத்த வில்லை. கிருஷ்ணகிரி, வேலூர் மாவட்டங்களில் பெரும்பாலும் இயற்கையே வட எல்லையாக அமைந்துள்ளதால் (சில பகுதிகள் மட்டும்) தெலுங்கர்களாகவோ, தமிழர்களாகவோ இருந்தாலும் மக்கள் எவ்விதப் பாதிப்பும் இன்றிப் பேரிழப்பிற்கும் உள்ளாகாமல் அன்று முதல் இன்று வரை இயற்கையோடு கலந்த வாழ்வை விரும்பி ஏற்றுக் கொண்டுள்ளனர்.இப்பகுதி மக்களிடையே ஓரளவிற்குக் கல்வி பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளதால் இன்றைய தலைமுறையினரிடையே சிறிது சிறிதாக வாழ்வின் தரம் உயர்ந்து கொண்டே வருகிறது.

இத்தகைய இயற்கையெல்லை எதுவும் இன்றி மக்கள் தொகை கணக்கை வைத்துப் பிரிக்கப்பட்ட திருவள்ளூர் மற்றும் வேலூர் மாவட்ட (பல பகுதிகள்)

எல்லைதான் பெரும் போராட்டங்களைச் சந்திக்க வேண்டிய அவசியத்திற்கு உள்ளாயிற்று. சில சிக்கல்கள் காரணமாக ஒரு சில கிராமங்கள் (வேலூர் மாவட்ட காட்பாடி தாலுக்காவைச் சார்ந்த சில கிராமங்கள்) நிர்வாகம் மற்றும் கிராமங்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு, வாழும் மக்கள் தமிழர் தெலுங்கர் என யாராக இருந்தாலும்; அந்த மக்களுக்கு உடன்பாடு இல்லையென்றாலும் எல்லைப் பிரிவினைக்கு ஆளாகியுள்ளனர். மேற்கூறிய இக்காரணங்களால், தமிழர்கள் வாழும் சில கிராமங்கள் ஆந்திர மாநிலத்தோடு சேரும் கட்டாயத்திற்கு உள்ளாயின.

இதனால் இயற்கையாக அல்லது நிர்வாகத்தினால் ஏற்படுத்தப்பட்ட எல்லைப் பிரிவினையால் இப்பகுதியில் வாழும் தமிழர் பலர் ஏமாற்றத்திற்கு உள்ளாயினர் என்று கூறுதல் பொருத்தமுடையதாக உள்ளது.

## தமிழர்களின் தெலுங்குமொழிப் பற்று

ம.பொ. சிவஞானம், விநாயகம் போன்றோர் வடஎல்லைப் பாதுகாப்புக்குழு ஒன்றை நிறுவிப் போராட்டம் செய்தனர். அங்ஙனம் போராட்டம் செய்யும்போது முதலில் திருவேங்கடம் வரை தமிழகத்தில் சேர்க்குமாறு கோரிக்கை விடுத்தனர். அது நடக்காத செயல் என்பதால் திருத்தணி வரையாவது கேட்டனர். திருப்பதியைப் பெறுவதில் இவர்கள் விடாப்பிடியாக இருந்திருக்கலாம். ஆனால் மக்களிடம் ஓட்டெடுப்பு செய்தால் அங்குத் தெலுங்கரே அதிகமாயிருப்பது தெரிய வந்திருக்கும். அதனை உணர்ந்து, திருப்பதியைப் பெறும் எண்ணத்தைக் கைவிட்டனர்.[1]

திருத்தணித் தாலுக்காவிலும், அக்காலக்கட்டத்தில் மக்கள்தாம் தமிழராக இருந்தனரே தவிர, அங்கு நடைமுறைமொழி தெலுங்காகவே இருந்து வந்தது.

(அப்போது, திருத்தணியில் ஒரு கடையின் பெயரும் தமிழில் இல்லை). அங்கு வாழ்ந்த தமிழ் மக்களே தமிழுக்கு முக்கியத்துவம் தரவில்லை. தெலுங்கு மொழியின் மீது உயிரையே வைத்திருந்த தமிழர்களும் இருந்தனர்.[2] (தகவலாளியின் தாய்மொழி தமிழாக இருந்தாலும், திருத்தணித் தாலுக்காவைத் தமிழ்நாட்டோடு சேர்ப்பதை அச்சூழலில் இவர் விரும்பவில்லை) இக்காரணத்தால் தான் தமிழக – ஆந்திர முதற்பிரிவினை ஏற்பட்டபொழுது, திருத்தணித் தாலுக்கா ஆந்திரத்தோடு சேர்க்கப்பட்டது. வடவெல்லைப் போராட்டத்தின் விளைவாக திருத்தணித் தாலுக்கா மீண்டும் தமிழ்நாட்டோடு இணைந்தது.

### ஆந்திர எல்லைத் தமிழர்களுக்கிருக்கும் தமிழ்ப்பற்று

புத்தூர் தாலுக்காவிலுள்ள ஏகாம்பரக்குப்பம், சத்திரவாடா போன்ற ஊர்களில் பெரும்பான்மையோர் தமிழர்களாக இருந்தும் அவ்வூர்களைத் தமிழ்நாட்டோடு சேர்க்கவில்லை. ஆனால் அங்குள்ள தமிழ் மக்களோ, தமிழகத்தோடு நெருங்கிய

---

1. ஜி. முருகேச முதலியார் (தகவலாளி), கள ஆய்வில் பெறப்பட்டது, சொரக்காய்ப்பேட்டை, பள்ளிப்பட்டு.

தொடர்பு கொண்டு வாழ்கின்றனர். தமிழ்நாட்டு அரசியலே இவர்களது அரசியல். தமிழ்நாட்டு அரசியல்தான் பேசுவார்கள். தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளில் எது இவர்கள் கட்சியோ, அந்தக் கட்சி ஆந்திராவின் எந்த அரசியல் கட்சிக்கு ஆதரவு தருகிறதோ, அந்தக் கட்சிக்குத்தான் வாக்களிப்பார்கள். தமிழ்நாட்டில் இருக்கும் கட்சிகளுக்கு அங்கும் தனித்தனி மன்றங்களுண்டு. தங்களைத் தமிழ்நாட்டு மக்களாகவே எண்ணி வாழ்கின்றனர்கள். தமிழ்நாட்டு அரசியலுக்காக உட்பூசல் நிகழும். தமிழ்நாட்டில் ஏற்படும் கட்சிகளின் வெற்றி தோல்விதான் இவர்தம் வெற்றி தோல்வி. சென்ற வருடம் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ்தான் வெற்றிபெற்றது. அவ்வூர்களில் தி.மு.க.விற்கே ஆதரவு மிகுதி என்பதால் அக்கட்சி ஆதரவு அளித்த காங்கிரஸ் கட்சிக்கே ஆதரவளித்து வெற்றி பெறச் செய்தனர். இவ்வாறாகத் தங்களைத் தமிழ்நாட்டோடு மிகுந்த அளவிற்கு ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர். இன்றைக்கும் இவ்வூர்களில் மக்கள் தெலுங்கு மொழியைப் படிக்கவும் எழுதவும் நன்கு கற்று வைத்திருந்தும், தமிழ்நாட்டிலிருந்து வரும் தமிழ்ச் செய்தித்தாள்களையே படிக்கின்றனர். ஆந்திரத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளைப் பற்றியும் இவர்கள் கவலைப்படுவதில்லை. இவ்வூர்களில் வாழும் தமிழரும் இவ்வூர்கள் தமிழ்நாட்டோடு சேர்க்கப்படவேண்டுமெனப் போராடினார்கள்.அது இயலாது போனதால் அம்முயற்சியைக் கைவிட்டு விட்டனர்.

**எல்லைப்பகுதியில் தற்போது உள்ள கல்விநிலை**

தமிழ்நாட்டு வடவெல்லைப் பகுதியில் தமிழர்கள் தமிழில் பேசும் போது தெலுங்குச் சொற்களை மிகுதியாகப் பயன்படுத்துகின்றனர். 40 வயதினருக்கு மேற்பட்டவர்களின் பேச்சில்தான் தெலுங்குமொழிக் கலப்பு மிகுதியாகக் காணப்படுகிறது. இந்தத் தலைமுறையினரின் பேச்சுமொழியில் தெலுங்கின் தாக்கம் குறைந்திருக்கிறது. இவ்வாறு நாளாக நாளகத் தெலுங்கின் தாக்கம் குறைந்து கொண்டே வரும் என்று கூற இயலாது.மக்கள், இருமொழியிலும் ஏறக்குறைய சமமான அறிவையே பெற்றிருப்பர். வாணிகம், தொழில், அலுவல், சமூக உறவு (திருமணம் போன்ற உறவுகள்) போன்ற தொடர்புகள் அண்டை மாநிலத்தாரிடம் இருந்து கொண்டே இருக்கும். இத்தொடர்பால் இவர்தம் இருமொழிக் கலப்பு குறைந்துவிடும். இன்று ஆரம்பாக்கம் (பொன்னேரித் தாலுக்கா), நாகலாபுரம் (சத்தியவேடு தாலுக்கா), பரதராமி (குடியாத்தம் தாலுக்கா), மல்லானூர் (குப்பம் தாலுக்கா) ஆகிய இடங்களில் இருக்கும் மொழிமாறட்டம் ***(Code switching)*** தமிழக வடஎல்லை முழுவதும் மட்டுமின்றி இன்றைய கல்வியின் மேம்பாட்டால் தமிழ்நாடு எல்லை முழுவதும் ஏற்படக்கூடிய வாய்ப்பு மிகுதியாக உள்ளது.

ஆந்திர எல்லையிலிருந்து 1/2 கிலோ மீட்டர் உள்ளடங்கி இருக்கும் கிராமம் சின்னமுடிப்பள்ளி (பள்ளிப்பட்டுத் தாலுக்கா). இக்கிராமத்தினர் தமது பிள்ளைகளைத் தமிழ்வழிக் கல்வியைக் கற்பிக்கச் செய்கின்றனர். இவ்வூரில் உள்ள தொடக்கப்பள்ளியிலும் தெலுங்கு கிடையாது, கிராமத்தில் தெலுங்கரும் உள்ளனர். குறைந்த அளவிலேயே மாணவர்கள் தெலுங்குவழிக்கல்வி கற்பதால்

இக்கிராமத்திலிருந்து 1 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள ராமாவரம் என்ற ஊருக்குச் சென்று பயில்கின்றனர். இன்றைய சூழலில் பள்ளியில் தம்பிள்ளை களைச் சேர்ப்பவர் தமிழர் தெலுங்கர் இருமொழியாளரும், தமிழ்வழிக் கல்வி கற்பதையே விரும்புகின்றனர்.[1]

## தமிழ்மொழியே எழுத்துவழி

கிருஷ்ணகிரி வட்டார வேப்பனப்பள்ளி சிகரமாகனப்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த தோட்டக்கணவாய் கிராமம் தமிழக ஆந்திர எல்லையில் அமைந்த கிராமம். இங்குக் கன்னட மொழிபேசும் கௌடர்களும் (வக்கிலி கௌடி என்று அழைக்கப்படுகின்றனர்) குறும்பர்களும் மிகுதியாக வாழ்கின்றனர். இக்கிராமமும் எல்லை வனப்பகுதியில் அமைந்துள்ளது. கன்னட மக்களை அடுத்துத் தெலுங்குமொழி பேசுவோர் மக்கள் தொகையில் மிகுந்துள்ளனர். பெரும்பாலும் வேப்பனப்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தின் சிகரமாகனப் பள்ளி ஊராட்சியில் தமிழர் குறைந்தே காணப்படுகின்றனர். வேப்பனப்பள்ளியில் அமைந்துள்ள அரசினர் மேல்நிலைப் பள்ளியில் தமிழ்வழிக் கல்வி தவிர, தெலுங்குவழிக் கல்வியும் உருது மொழிவழிக் கல்வியும் காணப்படுகின்றன. கன்னடர்களும், தெலுங்கர்களும் தமிழ்வழிக் கல்வியிலேயே மிகுதியாகக் கற்கின்றனர். அப்பகுதி கொங்கனப்பள்ளி, சிங்கிரிப்பள்ளி, பெத்தபருத்தி குண்டா, கதிர்நத்தம் போன்ற எல்லைப்புறக் கிராமங்களிலும் இதே நிலைதான் காணப்படுகிறது.

கடிதப் போக்குவரத்துப் போன்ற எழுத்துவழி எதுவாக இருப்பினும் தமிழ்மொழியைத்தான் பயன்படுத்துகின்றனர். கன்னடர், தெலுங்கர் பலர் தமிழ் ஆசிரியர்களாகவே பணிபுரிகின்றனர். தமிழ், தெலுங்கு, கன்னடம் என்று மும்மொழியிலும் உரையாடக் கூடிய ஆற்றல் வாய்ந்த இப்பகுதி மக்கள்தம் மொழியில் மொழிக்கலப்புப் பெரும்பாலும் காணப்படுவதில்லை. மொழிமாறாட்டம் உள்ளது. தமிழில் நன்கு பேசக்கூடிய ஆற்றல் உள்ளவராயினும் இப்பகுதி மக்கள்தம் பேச்சுமொழியில் கன்னடச் சாயல் மிகுந்து காணப்படுகிறது. இயற்கையின் எல்லை அமைப்பால், எல்லைப் போராட்டத்தில் பாதிக்கப்படாத பகுதியாய் விளங்குகின்றது.

## கூற்றும் விதிவிலக்கும்

"எல்லைப்புறத்தில் வாழும் மக்கள்தம் பேச்சு மொழியில் ஒரு மொழியின் ஆதிக்கம் இன்னொரு மொழியில் ஏற்படுவதில்லை" என்கிறார் ஆரோக்கிய நாதன்.[2] இக்கூற்றுக்குப் பள்ளிப்பட்டுப் பகுதி விதிவிலக்காய் உள்ளது. இப்பகுதியில் தமிழரின் பேச்சுத் தமிழிலேயே தெலுங்கு மொழியின் ஆதிக்கம் காணப்படுகிறது.

---

1. மகேஷ் (தகவலாளி), களஆய்வில்பெறப்பட்டது, வேப்பனப்பள்ளி, கிருஷ்ணகிரி.
2. எஸ். ஆரோக்கியநாதன், இருமொழிய ஆய்வுகள், ப. 138–139

'மொழிக்கலப்பு வேற்றுமொழி வழங்கும் மாநில எல்லையில் மிகுதியாக நிகழ்கின்றது' என்பதும் இவர்தம் கூற்று.[1] ஆனால் தமிழக ஆந்திர எல்லையில் அமைந்து இருக்கும் நாகலாபுரம், ஆரம்பாக்கம் ஆகிய பகுதிகளில் தமிழ், தெலுங்கு ஆகிய இரு மொழிக்குள் கலப்பில்லை; ஆனால் மொழி மாறாட்டம் உண்டு.

## மொழி மாறாட்டப் பகுதிகள்

நாகலாபுரத்திலுள்ள (ஆந்திர மாநிலம்) அலகிரிப்பேட்டை என்னும் கிராமம் 80 சதவீதம் தமிழர்களைக் கொண்டு விளங்குவது. அங்கு ஏற்படும் மொழிமாறாட்டத்தைப் பற்றி, தகவலாளி ஒருவரின் கூற்றைக் காணபோம்:

"நாங்கள் வாழும் பகுதியில் வெல்லம நாயுடு, கம்மாரு ஆகிய தெலுங்கரும் இருப்பதால் தெலுங்கு மொழி கற்றுக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. இங்கு வாழும் தெலுங்கர், தமிழ் மொழியைப் பேசுவதைவிடப் தமிழர் தெலுங்கு மொழியை நன்கு பேசுகின்றனர். தெலுங்கர்களுடன் பழக்கவழக்கம், பேச்சு வார்த்தை, போக்குவரவு முதலிய தொடர்புகள் இருப்பதால் எளிதில் அம் மொழியைக் கற்றுக் கொள்கிறோம். அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களையும் ஒருவரிடத்தில் ஒருவர் பெறுவதால் எங்களுக்குள் மொழித் தொடர்பு ஏற்படுகிறது.உழவுத்தொழில் தொடர்பும் இப்பகுதியில் ஏற்படுகிறது. அங்கு உள்ள தெலுங்கர்கள் தமிழ் அறிந்திருந்தாலும், நாங்கள் இயல்பாகவே அவர்களைக் கண்டவுடன் தெலுங்கில் உரையாடத் தொடங்குகிவிடுகிறோம். 'மெரப்பு காயலு ஈயண்டி ஒக்க கிலோ' (ஒரு கிலோ மிளகாய் கொடுங்கள்) என்று உடனே தெலுங்கு மொழிக்கு மாறி விடுகிறோம்"[2].

இவர்களுக்குள் பெருத்த வேறுபாடு ஒன்றும் இருப்பதில்லை. ஒரு தமிழன், இன்னொரு தமிழனிடம் எவ்வாறு பழகுகிறானோ அவ்வாறே தெலுங்கரிடமும் பழகுகிறான். இவர் தெலுங்கராயிற்றே என்ற எண்ணம் வருவதில்லை.

தமிழரிடம் பேசும்பொழுது தமிழிலேயே பேசுகின்றனர். தெலுங்கரிடம் பேசும்போது தெலுங்கிலேயே பேசுகின்றனர். இருமொழிக் கலப்பு ஏற்படுவதில்லை. மொழிக்கலப்பு இல்லையெனினும், மொழி மாறாட்டம் உண்டு.

இரு மொழியையும் அறிந்து கொள்வது நல்லது என்றே கருதுகின்றனர். பிறமொழியைத் தெரிந்து கொண்டால் அவர்களிடம் உரையாடுவதற்கும், பிற நாட்டுக்குச் செல்லும் பொழுது அங்குப் பழகுவதற்கும் எளிதாக இருக்கும் என்றே எண்ணுகின்றனர். ஒரே மொழியை அறிந்தவர்களை இவர்கள் கீழ்க்கண்டவாறு கூறுகின்றனர்:

"ஒரே கிணற்றில் வாழும் தவளை எப்படி இருக்கிறதோ, ஒருமொழி பேசுவோரும் அத்தகையினரே.கிணற்றுத் தவளை இதைவிட வேறு உலகம் இல்லை

---

1. எஸ். ஆராக்கியநாதன், இருமொழிய ஆய்வுகள், ப. 138–139
2. ஏ. பத்மநாபன் (தகவலாளி), கள ஆய்வில் பெறப்பட்டது, அலகிரிப் பேட்டை, நாக்லாபுரம்.

என்று நினைத்துக் கொள்ளுமாம். ஆறு, குளம், ஏரி இவற்றில் இருக்கும் தவளை சிறிது உலக அனுபவமும் பெற்றிருக்கும். அதாவது, இவ்விடங்களில் இவ்வாறு இருக்கும் என்ற உலக அனுபவம் பெற்று இருக்குமாம். அதைப்போல பல மொழிகளை அறிந்தவர்கள் அந்தந்த நாட்டுக்குச் செல்லும் பொழுதும் அந்தந்த மொழியைப் பேசுவதன் மூலம் பலருடன் கலந்து உறவாடி உலக அனுபவமும் பெறுகின்றனர். ஆகையினால், பல மொழிகள் அறிவதால் தீமை ஒன்றுமில்லை."[1] இப்பகுதி மக்கள் இருமொழியத்தைப் பற்றி இவ்வாறு கருத்து கொண்டுள்ளனர்.

## ஆண்–பெண் இரு மொழிய வேறுபாடு

ஆந்திர மாநிலம் குப்பம் தாலுக்காவைச் சேர்ந்த எல்லைப்புறக் கிராமமான சிங்காரபுரத்தில் தமிழர்கள் வாழ்கின்றனர். இவர்களில் பலர் தெலுங்குமொழி பேசத் தெரியாதவர்களாகவும் உள்ளனர். அதிலும் குறிப்பாகப் பெண்கள் தெலுங்கு மொழியைப் புரிந்து கொள்ளும் நிலையில் மட்டுமே உள்ளனர். ஆண்களாவது ஓரளவிற்குத் தெலுங்கு மொழியில் உரையாடுகின்றனர்.

இத்தகைய நிலைக்கு இரண்டு காரணங்களைக் கூற இயலும். ஒன்று எல்லைப்புறக் கிராமங்கள் சிலவற்றில் தமிழர்கள் மட்டுமே வாழ்கின்றனர். தெலுங்கர் ஒரிருவர் தவிர முழுவதும் தமிழரே வாழ்வதால், தமிழ்மொழியில் மட்டுமே பேச வேண்டிய சூழலில் உள்ளனர். ஊருக்குள் வியாபாரம் பொருட்டு வரும் தெலுங்கரிடம் அவர்கள் புரிந்து கொள்ளும் அளவிற்கு மட்டுமே தமிழில் சில தெலுங்குச் சொற்களைக் கலந்து உரையாடுகின்றனர். இரண்டாவது காரணம், இவர்கள் பெரும்பாலும் சமுதாய உறவுகளைத் தமிழ்நாட்டுடன் வைத்திருப்பதால் தமிழ்நாட்டிற்குத்தான் அதிகமாக வந்து போகின்றனர். இவர்தம் தொழிலும் உழவு என்பதால் தம் கிராமத்தை ஒட்டியே தமக்கிருக்கும் நிலத்தில் பயிர்த்தொழில் செய்வதால் ஆந்திர மாநில தெலுங்கர் வாழும் பிற கிராமங் களுடன் பெரும்பாலும் உறவு வைத்துக் கொள்வதில்லை. ஆண்கள் வணிக நோக்கத்திற்காகவும் பிற பொழுதுபோக்கு, நட்பு போன்ற காரணங்களினாலும் தெலுங்கரிடமும் பழக வேண்டிய சூழலில் எளிமையாகவும் விரைவாகவும் தெலுங்கு மொழியைக் கற்றுக் கொள்கின்றனர். மேலும் இந்தக் கிராமத்தைத் தமிழ்நாட்டிலிருந்து பிரிப்பது இடையிலிருக்கும் ஒரு மலைதான். மலைக்கு அந்தப் பக்கத்தில் தமிழ்நாட்டு மக்கள் வாழ்கின்றனர். இவர்தம் நெருங்கிய உறவினர்களே அங்கு வாழ்கின்றனர். தமிழ்நாட்டைச் சேர்ந்த தமிழ் மக்களுக்கு ஆந்திர மாநில சிங்காரபுரத்தில் பயிரிடும் நிலங்கள் உள்ளன.

இந்த எல்லைப்புறத்திலேயே ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும் மல்லானூரில் தமிழர் தெலுங்கர் கலந்து வாழ்கின்றனர். அங்குத் தமிழர், தெலுங்குமொழி பேசினாலோ, தெலுங்கர் தமிழ்மொழி பேசினாலோ, இருசாராரிடத்தும் மொழிக்கலப்பு ஏற்படுகின்றது. ஆனால், தமிழ்மொழியில்

---

1. ஏ. பத்மநாபன் (தகவலாளி), கள ஆய்வில் பெறப்பட்டது, அலகிரிப்பேட்டை, நாகலாபுரம்.

உரையாடினாலும் தெலுங்கு மொழியின் ஒலிச்சாயல்தான் புலப்படுகிறது. ஊன்றிக் கவனித்தால்தான் தமிழ்மொழியில் உரையாடுவது புலனாகிறது. இல்லையேல் இம்மக்கள் தெலுங்கு மொழியில்தான் பேசுகின்றனரோ என்ற ஐயம் எழும்.

கிஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த வேப்பனப்பள்ளி தமிழக–ஆந்திர எல்லையிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவிலேயே உள்ளது. இவ்வூர் மும்மொழி பேசும் வட்டாரமாக விளங்குகிறது. இம்மக்கள் தமிழ், தெலுங்கு, கன்னடம் என்ற மூன்று மொழிகளிலும் பேசும் ஆற்றல் உடையவராக விளங்குகின்றனர். இப்பகுதி மக்கள் பேசும் மொழி எதுவாக இருப்பினும் கன்னடமொழிச் சாயல்தான் மிகுந்துள்ளது. தமிழர், தெலுங்கர், கன்னடர் என்று மூன்று மொழியினரில் கன்னடரே மக்கள் தொகையில் மிகுந்துள்ளனர்.

## இருமொழியத்தின் தேவை

பள்ளிப்பட்டுப் பகுதியில் தமிழரில் சிலர் பட்டுப்புழு வளர்க்கின்றனர். இவர்கள் இப்பட்டுப் புழுக்களைக் காஞ்சிபுரம் பட்டு நெசவு கூட்டுறவு சங்கத்திற்கோ அல்லது ஆந்திர மாநிலத்திலுள்ள மதனப் பள்ளிக்கோ சென்று விற்று வருகின்றனர். மதனப் பள்ளிக்குச் செல்லும் பொழுது இவர்களுக்குத் தெலுங்குமொழி தெரியவில்லையெனில் வாணிகம் ஒழுங்காக நடைபெறாது. இத்தகைய நிலையில் எல்லைப்புற மக்கள் இருமொழியை அறிந்திருப்பது மிகவும் இன்றியமையாததாகிறது.

இன்றும் பள்ளிப்பட்டுப் பகுதியிலுள்ள தமிழர்கள் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த அயாகி மல்லாவரம், மோந்தரப்பாளையம், புத்தூர், பாப்பா நாயுடுபேட்டை, நாராயணவரம், சத்ரவாடா, ஏகாம்பரக்குப்பம், புதுப்பேட்டை ஆகிய ஊர்களுடன் திருமணத் தொடர்பு கொண்டுள்ளனர். வாணிகத் தொடர்பு ஏகாம்பரக் குப்பம், நகரி, புதுப்பேட்டை, பூத்தூர் ஆகிய ஊர்களுடன் இருக்கிறது. நெசவுத்தொழிலே இத்தகைய வாணிகத் தொடர்புக்குக் காரணமாகிறது.

## இருமொழியத்தில் சிதைந்த வழக்குகள்

குடியாத்தம் தாலுக்காவைச் சேர்ந்த பரதராமி ஏறக்குறைய நாற்பது வருடங்களுக்கு முன்புவரை ஆந்திரத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. இன்று தமிழரும், தெலுங்கரும் ஏறக்குறைய சரிவிகிதமாக வாழும் பகுதி இது. கடந்த நாற்பது ஆண்டுகளாகத் தமிழ்நாட்டுடன் சேர்ந்து இருக்கும் சூழலிலும் இவ்வூரிலும், இதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் தெலுங்கு மொழியின் தாக்கம் மிகுதியாகக் காணப்படுகிறது. தமிழ், தெலுங்கு மொழியுடன் சேர்ந்து சொற்கள் மிகவும் சிதைந்த நிலையிலுள்ளன.

நாம் பேசும் நிலைமொழித் தமிழைச் சரிவர அவர்கள் புரிந்துகொள்வ தில்லை. நாமும் அவர்தம் மொழிநிலைக்கு இறங்கிக் கொச்சையாகப் பேசும் போதுதான் ஓரளவிற்குப் புரிந்து கொள்கின்றனர். தொலைக்காட்சி போன்ற தொலைத்தொடர்பு சாதனங்களினால்தான் நிலைமொழித் தமிழை ஓரளவு

புரிந்துகொள்ளத் தொடங்கியுள்ளனர். பரதராமியிலிருந்து பத்துகிலோ மீட்டர் தொலைவிற்குள் இருக்கும் பல எல்லையோர கிராமங்களில் மொழிநிலை இவ்வாறாகத்தான் உள்ளது. உழவுத்தொழில் ஒன்றையே நம்பி அதே சூழலில் வாழும் அவர்தம் தமிழ்மொழிப் பேச்சுவழக்கில் தெலுங்குமொழிக் கலப்பும், சாயலும்தான் மிகுந்து காணப்படுகின்றது.

## மக்கள் பெற்றுவரும் விழிப்புணர்வு

தற்காலச் சூழலில்தான் மக்கள் கல்வியின் தேவையைப் புரிந்து கொள்ளத் தொடங்கியுள்ளனர். தாம் இல்லையென்றாலும் தம்பிள்ளைகளாவது நன்கு கற்று முன்னேற வேண்டும் என்ற துடிப்பினால் தம் கிராமங்களை விட்டு பரதராமி, குடியாத்தம் போன்ற இடங்களுக்குப் பிள்ளைகளை அனுப்பிக் கல்வி கற்கச் செய்கின்றனர். வளர்ந்து வரும் இந்தத் தலைமுறையினரால்தான் ஓரளவு தமிழ்மொழி மொழிச்சிதைவு நிலையிலிருந்து சிறிதுசிறிதாக முன்னேற்ற நிலையைப் பெறும் வாய்ப்புள்ளது.

அவ்வட்டாரத்தில் தமிழ்மொழி இத்தகைய நிலையிலிருந்து ஓரளவிற்குச் செம்மையுறும் தகுதியைப் பெற குறைந்தது மூன்று தலைமுறை காலமாவது வேண்டும். அத்தகைய மொழிச்சிதைவையும் தெலுங்கு மொழிச் சாயலையும் பெற்றுத் தெலுங்கு மொழியின் தாக்கத்திற்குத் தமிழ்மொழி உள்ளாகியுள்ளது .

## சில விதிவிலக்குகள்

இருமொழி எல்லையில் ஒருமொழி மற்றொரு மொழியின் பாதிப்புக்கு உள்ளாகாத பகுதிகளும் உள்ளன. பரதராமி வட்டாரத்தில் சில பகுதிகளின் வடபகுதியில் அமைந்துள்ள மலைகள் தமிழகத்தின் வட எல்லையாகவும் அமைந்துள்ளன. இவ்வெல்லையில் தமிழர் வாழும் கிராமங்களும் தெலுங்கர் வாழும் கிராமங்களும் உள்ளன. இவ்வூர்களின் இடையே சிறிய மலைகள் இருப்பினும் இவைகூட மொழியின் கலப்பைத் தடுக்கும் தடுப்புகளாக உள்ளன. ஒரு நாளைக்கு ஒன்றிரண்டு பேருந்துகள் மட்டுமே செல்லும் இப்பகுதியில் தெலுங்கர் வாழும் ஒரு சில பகுதிகளில் தெலுங்கு மொழி மட்டுமே அறிந்த மக்களும் வாழ்கின்றனர்.

## அண்டைமொழித்தாக்கம் இல்லாத வட்டாரங்கள்

காட்பாடி தாலுக்காவில் உள்ள எல்லைப்புறக் கிராமங்களிலிருந்து பலர் மருத்துவமனைக்குச் செல்ல இலத்தேரி, காட்பாடி போன்ற இடங்களுக்கு வருகை புரிகின்றனர். அங்குள்ள மருத்துவர்களும் இருமொழியாளர்களாக இருக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகின்றனர். தெலுங்கர்கள் பலர் வாழும் பகுதிகள் காட்பாடி தாலுக்காவில் உள்ளதால் அவர்கள் மருத்துவரிடம் தெலுங்கு மொழியில்தான் உரையாடுகின்றனர்.

நகரத்திலிருந்து நெடுந்தொலைவில் தள்ளியிருக்கும் எல்லைப்புறக் கிராமங்களில் வசிக்கும் மக்கள் பெரும்பாலும் அண்டை மொழித் தாக்குதலுக்கு

உள்ளாவதில்லை, அவர்கள் தாய்மொழியின் நிலைமொழியும் அவர்களைச் சென்று அடைவதில்லை. அவர்களுக்கென்று ஒரு வட்டாரமொழி உருவாகி விடுகின்றது. அது ஒருவகையான தமிழ்மொழியோ என்று கூறுமளவிற்கு அவ்வட்டாரமொழி வழக்கு, நிலைமொழி வழக்கிலிருந்து விலகி, தனியொரு கிளைமொழி வழக்காகி விடுகிறது.

## தாக்கம் மிகுதியான பகுதிகள்

வேலூர் மாவட்ட – சித்தூர் மாவட்ட எல்லைப்புறப் பகுதிகளில் சில இடங்களில் பேச்சுத்தமிழ், தமிழின் வடக்குக் கிளைமொழியுள்ளும் உட்கிளை மொழியாகக் கொள்ளவேண்டிய நிலையில் உள்ளது.இப்பகுதியில் தெலுங்கு மொழியுடன் கலந்து தெலுங்கும் தமிழும் அல்லாத ஒரு புதுமொழி தோன்றியுள்ளதோ என்று கருதுமளவிற்குப் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது தமிழ்.

திருப்பத்தூர் தாலுக்காவைச் சேர்ந்த எல்லைப்புறக் கிராமங்கள் சிலவும் இத்தகைய நிலைக்கு உள்ளாகியுள்ளன. மல்லானூரைச் சுற்றியுள்ள பல கிராமங்களில் தமிழ்மொழி பேசும் வன்னிய இனமக்கள் வாழ்கின்றனர். அவர்தம் தமிழ்மொழி வேறு ஒரு மொழிதான் என்று கூறுமளவிற்குத் தெலுங்கு மொழிச்சாயலைப் பெற்றுத் தமிழ் நிலைமொழியினின்றும் மிகவும் வேறுபட்டு காணப்படுகிறது.

தமிழக – ஆந்திரப் பிரிவினையின் போது எல்லைப்புறக் கிராமங்கள் பல ஆந்திரத்திலிருந்து தமிழகத்தில் வந்து சேர்ந்தன. சில கிராமங்கள் சென்னை மாகாணத்திலிருந்து ஆந்திரத்திற்குச் சென்று விட்டன. இவ்வாறு பிரிக்கப்பட்ட கிராமங்கள் பல பொருளாதார வசதியற்ற ஏழ்மையான கிராமங்கள் ஆகும்.அங்கு வாழும் மக்கள் கல்வி கற்கும் விழிப்புணர்வோ அல்லது அரசியல், பொருளாதார விழிப்புணர்வோ இன்றி வாழ்வதால் தங்களுடைய தாய்மொழியான தமிழ்மொழி எத்தகைய பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது என்பதையெல்லாம் உணராதவர்கள். தமிழக ஆந்திர எல்லைப் பிரிவினையின் போது தமிழகத்தைச் சேர்ந்த சில கிராமங்கள் அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாத தொலைதூரக் கிராமங்களாயிருந்தன. அனைத்தையும் அரசாங்கத்திடமிருந்து போராடி வாங்க வேண்டிய சூழலில் அக்கிராமங்கள் மிகவும் பாதிப்புக்குள்ளாயிருந்தன.

## இயற்கையே எல்லை

தற்போது காட்பாடி தாலுக்காவில் உள்ள மேல்பாடி பிர்க்கா நிர்வாக வசதிக்காகத் தமிழகத்துடன் சேர்க்கப்பட்டது. இப்பகுதியில் இருக்கும் மலையே தமிழக–ஆந்திர எல்லையாக உள்ளது. அதனால் தெலுங்கர்கள் வாழும் ஒன்றிரண்டு கிராமங்கள் தமிழகத்துடன் சேர்ந்து விட்டன.

இதுபோன்று நாகலாபுரம் தாலுக்காவில் உள்ள அலகிரிப்பேட்டை முற்றிலும் தமிழர்கள் வாழும் கிராமம். இடையே ஆறு ஒன்று குறுக்கே வருவதால் ஆறே எல்லையாகி நின்று இரு மாநிலங்களையும் பிரிக்கிறது. குறிப்பிட்ட இந்தக்கிராமம்

மட்டும் ஆந்திரத்துடன் சேர வேண்டிய நிர்பந்தம் உண்டாகி விட்டது. பிரிவினையின்போது இதைப்போன்று இடர்பாடுகளுக்கு உள்ளான கிராமங்கள் பல உள்ளன.

## இயற்கையால் பிரிந்துள்ள கிராமங்களின் மொழிநிலை

கிருஷ்ணகிரி மாவட்ட பர்கூர் வட்டாரத்தைச் சேர்ந்த தமிழக –ஆந்திர எல்லையில் அமைந்துள்ளது கனுமூர் என்ற கிராமம், வனப்பகுதிகளாலும் மலைகளலும் சூழப்பட்டுள்ள இயற்கை அமைப்பை உடையது. இக்கிராமத்தில் வாழ்வோருள் பெரும்பாலோர் தெலுங்குமொழி பேசும் நாயுடு இன மக்கள். ஆனாலும் தமிழ்மொழி நன்கு அறிந்தவர்கள். பிள்ளைகள் தமிழ்வழிக் கல்வி கற்பவர்கள். தமிழ், தெலுங்கு ஆகிய இருமொழியிலும் பேசக்கூடியவர்கள். தமிழ்மொழியில் உரையாடினாலும் தெலுங்கு மொழிச் சாயல்தான் மிகுதியாக உள்ளது. தமிழ் வட்டார வழக்கும் மிகுந்து காணப்படுகிறது.இவர்கள் பல தலைமுறைகளாகவே இப்பகுதியில் வாழ்ந்து வருகின்றனர். ஒன்றிரண்டு பேருந்துகளே சென்று வரும் இந்த எல்லையோர கிராமம் ஒரு தொலைதூரக் கிராமமாக விளங்குகிறது.

தற்போதுள்ள சிறுவர்கள்தான் ஓரளவு தமிழ்வழிக் கல்வி பயின்று வருகின்றனர். தெலுங்குவழிக் கல்வியில் நாட்டமில்லாதவராக உள்ளனர். சென்னை – பெங்களூர் இரயில் இருப்புப் பாதைதான் இங்குத் தமிழக ஆந்திர எல்லையாக அமைந்துள்ளது. பாச்சூரில் மலைத்தொடரின் காரணமாக இருவழித்தடங்களாகப் பிரியும் இருப்புப்பாதை இரண்டும், பல கிலோமீட்டர் தொலைவிற்குப் பிரிந்து மீண்டும் மல்லானூரில் சேருகின்றன. இருப்புப்பாதை இரண்டிற்கும் இடையில் உள்ள கிராமங்களில் சில தமிழ்நாட்டோடும் சில ஆந்திரத்தோடும் இணைந்துள்ளன. அம்மக்கள் பேசும் தமிழில் தெலுங்கின் சாயல் மிகுந்து காணப்படுகிறது.

## சமூக அமைப்பும் மொழி வேறுபாடும்

தமிழகத்தின் வடகிழக்கு எல்லையாக அமைந்துள்ளது திருவள்ளூவர் மாவட்டத்தின் ஆரம்பாக்கம். நெல்லூர் மாவட்டமே இப்பகுதிக்கு வடஎல்லையாக அமைகிறது. தமிழகத்தை ஆந்திர மாநில நெல்லூருடன் இணைக்கும் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள இச்சிற்றூர் சுற்றியுள்ள பலகிராமங்களின் வாணிகத் தலமாக விளங்குகிறது.

உழவுத்தொழிலை நம்பியுள்ள சமூகத்தினரும், மீன் பிடித்தொழிலையே நம்பியுள்ள மீனவர்களும்தான் இவ்வூரின் மக்கள். பழவேற்காட்டின் கடலோர எல்லையாக அமைந்துள்ள இவ்வூரின் மக்கள் தாய்மொழியாகத் தமிழைக் கொண்டிருந்தாலும் இணையாகத் தெலுங்கு மொழியையும் அறிந்தவர்களாக உள்ளனர். தமிழில் உரையாடும் போது தெலுங்கு மொழிச் சொற்களைப் பெரும்பாலும் கலப்பதில்லை. எனவே, இங்குத் தமிழ்–தெலுங்கு மொழிக்கலப்பு குறைந்து மொழிமாறாட்டமே காணப்படுகிறது.

அரசாங்கப் பள்ளிகள் மட்டுமின்றிக் கிறிஸ்துவ மடப்பள்ளிகளும் காணப்படுவதால், மக்களுக்குக் கல்வியின் இன்றியமையாமை குறித்த விழிப்புணர்வு ஓரளவு பெருகி வருகிறது. மேலும் சென்னையிலிருந்து ஏறக்குறைய 100 கி.மீ. தொலைவில் மட்டுமே அமைந்துள்ளதால் பின் தங்கிய மாவட்டமான திருவள்ளூர் மாவட்டத்தில் இவ்வூர் அமைந்திருப்பினும் மொழி பற்றிய சிந்தனை ஓரளவு உள்ளது. இங்கு வட்டாரக் கிளைமொழி தலைதூக்கி நிற்பதால் இருமொழிய நிலை குறைந்து காணப்படுகிறது. தெலுங்கர்களும் தமிழர்களுடன் உரையாடும்போது தமிழ்மொழிக்கு மாறிவிடுகின்றனர். கள ஆய்வு செய்யப்பட்ட மற்ற எல்லைப்புறப் பகுதிகளில் காணப்படும் மொழிச்சாயல் இங்குக் குறைந்தே காணப்படுகிறது என்று கூறலாம்.

களவு ஆய்வு செய்யப்பட்ட தமிழக–ஆந்திர எல்லைப்புறத்தில் உழவுத்தொழிலையே நம்பியுள்ள இம்மக்கள், பெரும்பான்மை வாணிகம் பொருட்டுத் தெலுங்கரிடம் உரையாடவேண்டிய நிலை உருவாகியுள்ளது. பிறமொழியாளரிடம் அவர்தம் மொழியிலேயே உரையாடும் போது உடனடியாக தம் கருத்து அவரைச் சென்று அடைந்து தம் உழவுத்தொழில் தொடர்பான வாணிகம் உடனே நிறைவடையும் என்ற பெரிய நம்பிக்கையில் தம்மையறியா மலேயே அவர்தம் மொழியில் உரையாட வேண்டிய கட்டாய நிலைக்கு ஆளாகின்றனர்.

## தமிழக – ஆந்திர எல்லையில் இருமொழியம் ஏற்படக் காரணங்கள்

மு. வரதராசனார் தமது நூலில்[1], சொற்களைக் கடன் வாங்குவதற்கான மூன்று காரணங்களை 'யெஸ்பர்ஸன்' கூறுவதாகக் கூறியுள்ளார். முதலாவது தம்மிடம் இல்லாத புதிய பொருளைப் பயன்படுத்தும்பொழுது அவற்றிற்கு இணையான பிறமொழிச் சொற்களைக் கடன் வாங்குதல், இரண்டாவது,ஒரு மொழியாளரிடமிருந்து செல்வாக்கோ, உயர்வோ பெற்றுள்ள ஒரு துறையைக் கற்கும்பொழுது அதற்குரிய அம்மொழிச் சொற்களையும் கற்றுக் கையாளுதல். மூன்றாவது, மொழிபெயர்ப்பாளர்கள் சோம்பலின் காரணமாகத் தம்மொழிச் சொற்களைத் தேடிக் காணாமல் பிறமொழிச் சொற்களை அப்படியே கொண்டுவந்து கலந்து சேர்த்தல்.

இம்மூன்று கூற்றுகளுமே, தமிழக–ஆந்திர எல்லையில் மொழிக்கலப்பு ஏற்பட்டதற்குக் காரணமாக அமையவில்லை. எல்லைப்புறத்தில் இயல்பாக ஏற்படக்கூடிய பிறமொழிச் செல்வாக்கு அல்லது தாக்கம்தான் முக்கியமான காரணம் என்று கூறலாம்.ஆனால் தமிழக–ஆந்திர எல்லையில் ஏற்படக்கூடிய எல்லைப்புற மொழித் தாக்கத்திற்கு வேறு மூன்று கூறுகளைக் காரணங்களாகக் கூறலாம்.

**(i) தேவை நோக்கம்**

பொதுவாக இருமொழியாளர்கள் வாழும் எல்லைப்புறங்களில் மக்கள் தம் தாய்மொழி அல்லாத இன்னொரு மொழியை அறிந்து அம்மொழியில்

1. மு. வரதராசனார், மொழி வரலாறு, ப. 118.

உரையாடுவதை இயல்பாகக் கொண்டுள்ளனர். தம் கருத்தை அவர்களிடம் தெரிவிக்கும் போது பிறமொழியாளரின் மொழியில் தெரிவித்தால் அக்கருத்து விரைவாக அவர்களைச் சென்று அடைந்துவிடும் என்ற நம்பிக்கையைப் பெற்றுள்ளனர்.

## (ii) பெருமை நோக்கம்

பள்ளிப்பட்டுத் தாலுக்கா மட்டும் மேற்கூறிய கருத்துக்குச் சிறிது விதிவிலக்காய் உள்ளது. அப்பகுதியில் பெரும்பாலான கிராமங்கள் முன்பு ஆந்திர மாநிலத்துடன் இருந்து, எல்லைப் போராட்டத்திற்குப் பிறகு தமிழகத்துடன் சேர்க்கப்பட்டது. அவ்வாறு ஆந்திரத்துடன் இருந்த குறைந்த காலத்திலேயே அங்குள்ள மக்கள் தெலுங்கு மொழியின் ஆதிக்கத்திற்கு ஆளாகித் தெலுங்கில் உரையாடுவதை மிகவும் பெருமையாகக் கருதினர்.

அப்பகுதியில் வாழும் தெலுங்கு ரெட்டியார் மற்றும் நாயுடு இன மக்களுக்கு இணையாகத் தாமும் செல்வாக்குப் பெற்றவர்களாக வாழவேண்டு மெனில் தெலுங்கு மொழி பேச வேண்டும்; அப்போதுதான் சமூகத்தில் பெருமையுடன் வாழ முடியும் என்ற நோக்கத்திற்காகத் தெலுங்கு மொழிச் சொற்களை மிகுதியாகத் தமிழ்மொழியில் கலந்து உரையாடும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதே நிலைதான் குடியாத்தம் தாலுக்கா பரதராமியிலும் ஏற்பட்டது என்பதும் அறியலாகிறது.

## (iii) மக்களது கல்லாமையும் அறியாமையும்

பொதுவாகவே தமிழக–ஆந்திர எல்லையில் வாழும் மக்கள் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் இருந்ததன் விளைவாகவே உழைப்பு ஒன்றையே நம்பி, கல்வி பற்றிய சிந்தனையின்றி வாழ்கின்றனர். தமிழகத்தின் வடபகுதி வளம் குறைந்த வறட்சியான பகுதி என்பதால் உழைத்தும் பலனின்றி, அன்றாட உணவுக்கே போராடும் வறுமை சூழ்ந்த பகுதியாக இது உள்ளது. இத்தகைய சூழலில் அண்டை மொழியான தெலுங்கில் உரையாட வேண்டிய (மொழிக்கலப்பு மற்றும் மொழி மாறாட்டம்) நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

இதனால் மொழியுணர்வைப் பற்றியோ தம்மொழி பற்றிய விழிப்புணர்வு குறித்தோ எண்ணுவதற்கெல்லாம் இவர்களின் வாழ்நிலை இடம் தரவில்லை.

மேற்கூறிய இம்மூன்று நிலைகளுமே ஆந்திர மாநில எல்லையோரப் பகுதியில் தமிழிமொழியில் தெலுங்குமொழிச் செல்வாக்கு ஏற்படக் காரணமாய் அமைந்துவிட்டன எனலாம்.

இன்றைய தலைமுறையினர் ஓரளவு கல்வி கற்று வருவதால் (தமிழ்வழிக் கல்வி பயின்று வருவதால்) படிப்படியாகத் தாய்மொழியில் (தமிழ்மொழி) பிறமொழிச் சொற்களை (தெலுங்கு) முழுவதும் தவிர்க்க இயலவில்லை என்றபோதிலும் ஓரளவு குறைத்துக் கொண்டு வருகின்றனர் என்பது தவறாமல் குறிப்பிடப் பெறவேண்டிய ஒன்றாகும்.

# தமிழக ஆந்திர எல்லையில் வட்டாரக் கிளைமொழி ஆய்வு

பொதுவாக எந்த மொழியாக இருப்பினும் இடத்திற்கு இடமும், ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்குச் சமூகம், குறிப்பிட்ட மனிதருக்கு மனிதர் வேறுபடும் தன்மையுடையது. மொழியியல் அறிவு ஒன்றையே அடிப்படைக் கருவியாகக் கொண்டு இத்தகைய மொழிமாற்றங்களை அளந்தறிவது மிகவும் அரிதான செயலாகும். மொழியியலின் சார்புடைய அம்மொழி வழங்கும் பகுதியின் வரலாற்றுக் காரணங்களையும் புவியியல் அமைப்புகளையும் உணரும் போக்கும், அப்பகுதியில் வழங்கப்படும் மொழி வகையை அறிவதற்குத் துணை செய்கின்றன. அக்குறிப்பிட்ட சமூக மொழியினரின் மொழியை அறிய அச்சமூக மக்களது வாழ்கைநிலையை அறிவேண்டிய சூழல் ஏற்படுகின்றது.

தமிழகத்தில் தமிழ் மொழியை வரையறுப்பதற்கு மொழியியல் கொள்கை மட்டுமே போதுமானதன்று. தமிழ்மொழி பல கிளை மொழிகளை உடையதாக இருப்பினும், அக்கிளைமொழிகளிடையே இருக்கும் மொழியியல் ஒற்றுமை அவற்றைத் தமிழ் என்று இனம் காட்டுகின்றது.

## தமிழகத்தில் வட்டாரக் கிளைமொழி

தமிழகமானது பல கிளை மொழிகளின் இருப்பிடமாக இருந்து வருகின்றது. எனவே, கிளைமொழி ஆய்விற்கு இது ஒரு சிறந்த பகுதியாகப் பயன்படுகிறது. கிளைமொழி ஆய்வு சமூகத்தின் அடிப்படையிலும், வட்டார அடிப்படையிலும் பல்வேறு காலநிலைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கிளைமொழி என்பதற்கு விளக்கம் கூறவந்த கோ. சீனிவாசவர்மா, "ஒரு மனிதன் ஒரு குறிப்பிட்ட வயதில் குறிப்பிட்ட நேரத்தில் ஒருவனுடன் பேசும் பேச்சினைத் தனிமனிதப் பேச்சு வழக்கு எனலாம். அவரையொத்த பலர்பேசும் பேச்சுக்கள் அனைத்தும் சேர்ந்த ஒரு மொத்தமான ஒரு பேச்சுவழக்கினைக் கிளைமொழி எனலாம். பல கிளைமொழிகள் சேர்ந்தநிலையில் அவை ஒரு மொழியையும் உருவாக்குகின்றன".[1]

ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தைச் சேர்ந்த மக்களாலோ ஒரு குறிப்பிட்ட சமூக இனமக்களாலோ பேசப்படும் பேச்சுவழக்கைக் கிளைமொழி எனலாம். ஒரு தனி மனிதன் பேசும் பேச்சுவழக்கில்கூட பல வேற்றுமைகளைக் காணமுடியும். இடத்திற்கு ஏற்றவாறு அல்லது நேரத்திற்கு ஏற்றவாறு அவன் வெவ்வேறான பேச்சு வழக்குகளைக் கையாள்கிறான். இது தனிமனிதப் பேச்சு வழக்கின் தனிநடை எனலாம்.

1. கோ. சீனிவாச வர்மா, கிளைமொழியியல், பக். 3–4

ஒரு மொழி வழங்கப்படும் பகுதியில் அம்மொழியில் காணப்படும் பல்வேறு மொழிக் கூறுகளில் மாறுபாடுகள் காணப்படுவது இயல்பே ஆகும். குறிப்பாக இனம், புவியியல் அமைப்பு, நாகரிகம், பண்பாடு, பழக்கவழக்கம், கலாச்சாரம், அரசியல், வரலாற்றுச் சூழல், சமூகஅமைப்பு என்று பல்வேறு வகைகளால் வேறுபட்டிருக்கும் இந்தியாவைப் போன்ற பெரிய நாடுகளிலே வாழும் மக்கள் பல்வேறு வகைப்பட்ட மொழிகளைப் பேசுவது என்பது இயற்கையே ஆகும். இதுபோன்றே ஒரே மொழி பேசும் மக்களுள்ளும் அவர்கள் பேசுகின்ற பேச்சு வழக்கில் பல மாறுபாடுகள் இருப்பதும் தவிர்க்க முடியாததாகும். அவ் வேறுபாடுகளின் அடிப்படையில் பல கிளைமொழிகளாகப் பகுத்து ஆய்வர். தமிழ்மொழியும் இதற்கு விதி விலக்கன்று.

## வட்டாரக் கிளைமொழியும் சமூகக் கிளைமொழியும்

தமிழக மொழிச்சூழலின் அடிப்படையில் தமிழ்க் கிளைமொழிகளை வட்டாரக் கிளைமொழி, சமூகக் கிளைமொழி என்று பகுத்துக் கொள்ளலாம். சமூகக் கிளைமொழி என்று கூறப்படுவது சாதி, சமயம், பால் (ஆண்–பெண்), கல்வி (கற்றோர்– கல்லாதோர்), பொருளாதாரம் (உயர்நிலை, நடுநிலை, கீழ்நிலை), தொழில் என்ற பல நிலைகளின்அடிப்படையில் ஆராயப்படுவது. மனிதன், சமூகம், மொழி இம்மூன்றும் ஒன்றையொன்று சார்ந்து இயங்குவன. இம்மூன்றோடு, தொடர்புபடுத்தாமல் மொழியாய்வு செய்வது அரிதாகும். மொழியாய்வு செய்யும்போதும் மொழிவேறுபாடுகளை அறிய முற்படும் போதும் மனிதன் வாழுகின்ற சமூக அடிப்படை தேவையான ஒன்றாகும். மனிதன் மாறமாற சமூகமும் மாறிவிடும் தன்மையுடையது. மொழியும் அத்தாக்குதலுக்கு உள்ளாகின்றது. இச்சமுதாயக் காரணங்கள் மட்டுமன்றிப் பேசுவோர், கேட்போர் இடையிலான உறவு, பேசப்படும் தலைப்பு அல்லது பொருள், பேசுவோர்தம் மனப்பாங்கு ஆகியனவும் மொழிக்கூறுகளில் மாறுபாடுகள் ஏற்படக் காரணமாகின்றன.

கிளைமொழி தோன்றுவதற்கு அடிப்படைக் காரணமான புவியியல் அமைப்பு வட்டாரக்கிளை மொழியை உருவாக்கிவிடுகிறது. கிளைமொழி தோன்றுவதற்குச் சமுதாய அமைப்பைக் காரணமாகக் கூறினாலும், வட்டாரமே மொழி மாற்றத்திற்கு முதன்மையான காரணமாக விளங்குகிறது. இவ்வட்டாரக் கிளைமொழி ஆய்வு ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தில் வழங்கப்படும் பேச்சுமொழியை அடிப்படையாகக் கொண்டது. புவியியல் அடிப்படையில் வரலாற்றுச் சூழலின் பின்னணியைக் கொண்டு ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தில் வழங்கப்படும் பேச்சு வழக்கு வட்டாரக் கிளைமொழி யாகும்.

## கிளைமொழியின் அடிப்படையில் வட்டாரப் பாகுபாடு

தமிழகம் பழங்காலத்திலிருந்தே பல வட்டாரங்காளக மொழி அடிப்படையில் பிரிக்கப்பட்டு வந்துள்ளது. தொல்காப்பியர் காலத்திலேயே செந்தமிழ் சேர் பன்னிரு நிலமென்று அவர் குறிப்பிட்டு இருப்பதை நம்மால் உணரமுடிகிறது. நன்னூலாரும் இவ்வாட்டாரப் பாகுபாட்டைக் குறித்துச் சென்றுள்ளார். பேச்சுவழக்கின்

அடிப்படையிலே இவ்வாட்டாரங்கள் பிரிக்கப்பட்டமை நம்க்கு நன்கு புலனாகும். மொழியியல் அறிஞர் *தெ. பொ. மீ.*[1] அவர்களும், பழந்தமிழ் இலக்கண நூல்கள் கூறும் வட்டாரப் பகுதிகளைத் தற்போதுள்ள தமிழக வட்டாரப் பகுதிகளுடன் ஒப்பிட்டுக் காண்கிறார். அவர் காட்டும் வட்டாரங்கள் பற்றிய விவரம் வருமாறு:–

| **தொல்காப்பியர் காலக் கிளைமொழி வட்டாரங்கள்** | **தற்கால வட்டாரங்கள்** |
|---|---|
| 1. தென்பாண்டி நாடு | திருநெல்வேலியின் தென்பகுதி |
| 2. குட்ட நாடு | கோட்டயம், கொல்லம் மாவட்டங்கள் சேர்ந்தபகுதி |
| 3. குட நாடு | வடக்குமலபார் பகுதி, மேற்குத் தொடர்ச்சி மலைக்கு மேற்குப்பகுதி |
| 4. கற்கா நாடு | கோயம்புத்தூரின் குன்றுப் பகுதிகள், மேற்குத்தொடர்ச்சி மலையின் கிழக்குப்பகுதி. |
| 5. சீத நாடு | நீலகிரியும் கோயம்புத்தூரின் ஒரு பகுதியும் |
| 6. பூழி நாடு | வேள் நாடு – கன்னியாகுமரி மாவட்டத்தின் ஒரு பகுதி |
| 7. அருவா நாடு | வட ஆர்க்காடு தென் ஆர்க்காடு கடலோரப் பகுதி |
| 8. அருவா வடதலை நாடு | தமிழ்நாட்டின் வடகோடிப்பகுதி |
| 9. வேணாடு | தென் திருவிதாங்கூர் |
| 10. பாண்டிநாடு | பாண்டிய நாடு |
| 11. மலாடு | தென் ஆர்க்காடு மாவட்டத் திருக்கோவலுரைச் சுற்றியுள்ள பகுதிகள் |
| 12. புனல்நாடு | சோழநாடு |

*வ.ஐ. சுப்பிரமணியம்* அவர்கள் தமிழ்க் கிளைமொழிகளைப் புவியியல் அடிப்படையில் பல்வேறு வட்டாரக் கிளைமொழிகளாகக் கீழ்க்கண்டவாறு பகுத்துள்ளார்:

| **வட்டாரக் கிளைமொழி** | **வழங்கும் மாவட்டங்கள்** |
|---|---|
| நாஞ்சில் நாட்டுக் கிளைமொழி | கன்னியாகுமரி |
| தென்பகுதி கிளைமொழி | திருநெல்வேலி, இராமநாதபுரம் |

1. தெ.பொ. மீனாட்சி சுந்தரம், 'தமிழ்மொழி வரலாறு, தமிழாக்கம்' – செயப்பிரகாசம், பக். 294 –295.

| | |
|---|---|
| மத்தியப்பகுதி கிளைமொழி | கோவை |
| மேற்குப்பகுதி கிளைமொழி | தஞ்சை,<br>தென்னார்க்காடு |
| கிழக்குப்பகுதி கிளைமொழி | செங்கல்பட்டு, சென்னை |
| சென்னைப்பகுதி கிளைமொழி | வடஆற்காடு |

இப்பாகுபாட்டில் சேலம், தர்மபுரி, மாவட்டங்கள் போன்றன எந்தக் கிளைமொழியில் சேர்க்கப்படும் என்ற வரையறை குறிப்பிடப்படவில்லை.

மொழி ஆய்வின் பல கட்டுரைகளை எழுதி வெளியிட்ட ***கமில் சுவலபில்*** தமிழின் கிளைமொழிகளைப் பகுத்து ஆய்ந்து நான்கு பெரும்பிரிவின்கீழ் வகைப்படுத்துகிறார். இலங்கைத் தமிழையும், தமிழின் கிளைமொழியாகப் பாகுபாடு செய்துள்ளார்.அவர் காட்டும் கிளைமொழிகள் வழங்கும் வட்டாரங்கள் வருமாறு:-

| | |
|---|---|
| 1) வடக்குக் கிளைமொழி | – வடகிழக்குச் சென்னை நகரம்,<br>வடமேற்குச் செங்கல்பட்டு, வேலூர்,<br>சித்தூர், கிருஷ்ணகிரி,<br>தென்னார்க்காடு. |
| 2) கிழக்குக் கிளைமொழி | – காவிரி டெல்டாப் பகுதி, திருச்சி,<br>தஞ்சை, கரூர், புதுக்கோட்டை. |
| 3) மேற்குக் கிளைமொழி | – வடமேற்குச் சேலம், ஈரோடு,<br>தென்மேற்கு கோயம்புத்தூர்,<br>திண்டுக்கல். |
| 4) தெற்குக் கிளைமொழி | – மதுரை, தென்மேற்குத் திருநேல்வேலி,<br>நாகர்கோயில், தென்கிழக்கு,<br>இராமநாதபுரம், தூத்துக்குடி. |
| 5) இலங்கைத்தமிழ் | – வடக்குக் கொழும்பு, வடக்குத்<br>திரிகோணமலை, தென்கிழக்கு<br>மட்டக்கிளப்பு |

மேற்கூறிய பாகுபாட்டின் அடிப்படையில் தற்போது தமிழகத்தில் வழங்கும் கிளைமொழியை நான்கு பெரும் பகுப்பின்கீழ் வகைப்படுத்தலாம்:

1) வடக்குக் கிளைமொழி
2) மத்தியக் கிளைமொழி
3) மேற்குக் கிளைமொழி
4) தெற்குக் கிளைமொழி

நாஞ்சில் நாட்டுக் கிளைமொழியைத் தெற்குக் கிளைமொழியின் உட்கிளை மொழியாகக் கொள்ளலாம்.

**வடக்குக் கிளைமொழி**

தமிழகத்தின் புவியியல் அமைப்பு இத்தகைய வட்டாரக் கிளைமொழி ஆய்வுக்கு வித்தாக விளங்குகிறது. ஒரு பேச்சுமொழி வட்டாரக் கிளைமொழி என்ற தனி வடிவத்தைப் பெறுவதற்கான காரணத்தைக் கோ. சீனிவாச வர்மா[1] கூறுகிறார். வாழுமிடங்கள் ஆறு, மலை, காடு, கடல் போன்ற இயற்கை அமைப்பால் பிரிக்கப்பட்டு அதிகத் தொடர்பின்றி வாழும் பொழுது, செய்தித் தொடர்பில் சிக்கல் ஏற்படுகிறது. இதனால் ஒரே பேச்சுமொழியாக இருந்தது, பின்னர் பல கிளைமொழிகளாக உருவாகின்றன. ஒவ்வொரு இடத்திலும் வாழும் மக்களின் வாழ்க்கைமுறை செடி, கொடி, விலங்குகள், செய்தொழில் முதலிய வற்றிற்கேற்பப் பல புதிய சொற்கள் அக்கிளைமொழியில் தோன்றுகின்றன. இந்நிகழ்ச்சி ஒரே சீராக எல்லா இடங்களிலும் நிகழாது ஆதலால், கிளை மொழிகள் தனித்தனி வடிவங்களைப் பெறுகின்றன.

ஆய்வு மேற்கொள்ளப்படும் தமிழக–ஆந்திர எல்லையில் அமைந்துள்ள மாவட்டங்களான திருவள்ளூர், வேலூர், கிருஷ்ணகிரி மாவட்டங்கள் தமிழகத்தின் வட எல்லையில் அமைந்துள்ளதால் இப்பகுதியில் வழங்கப்படும் தமிழை வடக்குக் கிளைமொழியாகக் கொள்ளலாம். மூன்று மாவட்டங்களாயிருப்பினும் இந்நிலப்பரப்பில் வழங்கப்பெறும் பேச்சுமொழிகளில் ஒரு பொதுவான கிளைமொழி வடிவம் (ஒரு சில வேறுபாடுகள் உண்டு) காணப்படுவதால் இப்பகுதிகளில் வழங்கும் வட்டாரக் கிளைமொழிகளை எல்லாம் ஒரே பகுப்பின் கீழடக்கி அவற்றைத் தமிழ்மொழியின் வடக்குக் கிளைமொழி எனக் கொள்வதில் தவறில்லை.

பொதுவாகத் தமிழக ஆந்திர எல்லைப் பகுதியில் கிராமங்களே அதிகமாக உள்ளன. மக்கள் பயிர்த்தொழிலை முதன்மைத் தொழிலாகக் கொண்டுள்ளதால் பெரும்பான்மையோர் கல்லாதவர்களாக உள்ளனர். ஆதலினால் அவர்களுக்கு நகரங்களுடன் அதிகத் தொடர்பில்லை. தமிழகத்தின் வடபகுதி இத்தகைய நிலையிலுள்ளதால், இவர்தம் பேச்சுவழக்குப் பொதுமொழியாவதற்கு வாய்ப்பில்லை. எனவே, இப்பகுதியில் வழங்கும் பேச்சுமொழியை வடக்கு வட்டாரக் கிளைமொழியாகக் கொள்வதற்கான வாய்ப்புகள் மிகுந்துள்ளன.

## கிளைமொழியின் மூன்று நிலைகள்

ஒரு கிளைமொழியை மூன்று நிலைகளின் அடிப்படையில் கண்டறியலாம். அவை,

1) ஒலிப்பாகுபாட்டுக் கோடு
2) சொல்பாகுபாட்டுக் கோடு
3) பொருள் பாகுபாட்டுக் கோடு

என்பனவாகும். ஒரு வட்டாரக் கிளைமொழியை அறிவதற்கு மேற்கூறிய மூன்று கூறுகளுமே காரணமாக அமையும். இவற்றின் அடிப்படையில் தமிழக வடக்குக்

கிளைமொழியை ஒலிமாற்றம், இலக்கண மாற்றம், சொல் மாற்றம், சொற்பொருள் மாற்றம், ஆகியவற்றைக் கொண்டு பிற கிளைமொழிகளிலிருந்து பிரித்தறியலாம்.

## ஒலிமாற்றம்

மொழியியல் கூறுகளில் ஒரு கிளை மொழியினைக் கண்டறிவதற்கு ஒலிமாற்றமே மிகுந்த துணைபுரிகிறது. குறிப்பாகத் தமிழ் வடக்குக் கிளைமொழியில் ஏற்பட்டுள்ள ஒலிமாற்றத்திற்கு அண்டை மாநில மொழியான தெலுங்கு மொழியின் குறுக்கீடே முதன்மையான காரணமாகக் கூறலாம். பெரும்பான்மையான மாற்றங்கள் ஒலிகளில் நிகழ்ந்தாலும் உருபுகளில் ஏற்படுகின்ற மாறுதல்களையும் ஒலி மாற்றங்களாகக் கொண்டு விளக்கலாம். இவ்வொலி மாற்றங்கள் நிகழ்வதற்கு வரையறைகளைப் பகுப்பதென்பது அரிதான ஒன்றாகும். ஒரு சொல்லில் இவ்வளவுதான் ஒலி மாற்றங்கள் நிகழுமென்று முடிந்த முடிபாகக் கூற இயலாது. ஒருசொல்லினுடைய வேர்ப் பகுதியோ, வேரோடு இணையும் ஒட்டுக்களோ, இவ்வொலி மாற்றத்தால் பாதிக்கப்படலாம். ஒரு சொல்லில் எங்கும் இம்மாற்றம் நிகழலாம். எந்த இடத்தில் எந்த மாற்றம் எப்போது நிகழுமென்று நாம் முன்பே அறுதியிட்டுக் கூறிவிட முடியாது. ஆனால் தோன்றிய மாற்றங்களைக் கொண்டு இம்மாற்றங்கள் ஏற்பட்ட இடங்களை விளக்க முடியும். இவ்வாறு மாற்றங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு இட வரையறையைக் கொண்டுள்ளதால் மொழியைப் புரிந்துகொள்வதில் சில இடர்பாடுகள் ஏற்படுகின்றன. தமிழின் தெற்குக்கிளைமொழியை (நாஞ்சில் நாட்டுக் கிளைமொழி) பேசும் ஒருவர், தமிழின் வடக்குக் கிளைமொழியைப் புரிந்து கொள்வதில் இடர் ஏற்படுகின்றது. தமிழ் வடக்குக் கிளைமொழியில் உயிரொலி மெய்யொலி மாற்றங்கள் மிகுந்து காணப்படுவதால் அக்கிளைமொழிக்குரிய உயிரொலி மெய்யொலிகளைக் கீழ்வருமாறு காணலாம்.

**உயிரொலிகள்**

| | | |
|---|---|---|
| இ ஈ | – | உ ஊ |
| எ ஏ | – | ஒ ஓ |
| | அ ஆ | |

**மெய்யொலிகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ப் | த் | ட் | ச் | க் | |
| ம் | ந் | ன் | ண் | ஞ் | ங் |
| ல் | ள் | | | | |
| வ் | ர் | ய் | | | |

## உயிரொலி மாற்றங்கள்

தமிழக வடக்குக் கிளைமொழியில் ஏராளமான உயிரொலி மாற்றங்களைக் காணமுடிகிறது. இம்மாற்றங்கள் பெயர், வினை, கூட்டுச் சொற்கள், பிற இலக்கணக்கூறுகள் என அனைத்திலும் காணப்படுகின்றன.

**1) இகர மாற்றம்**

மேலுயிரான இகரம் சொற்களில் இடம்பெறும்போது எகரமாகவும் அகரமாகவும் ஒகரமாகவும் உகரமாகவும் ஒலிக்கப்படுகின்றது.

**1 : 1 . இகர எகர மாற்றம் ( இ > எ )**

சொல்முதல், சொல்லிடை, சொல்லிறுதி ஆகிய மூவிடங்களிலும் இகர ஒலியானது எகர ஒலியாக மாற்றம் பெறுகின்றது.

**சொல்முதல்**

இலை > *எலெ*
இறங்கு > *எரெங்கு*
இடம் > *எடொ(ம்)*
இரண்டு > *ரெண்டு*

**சொல்லிடை**

கிணறு > *கெனரு*
நிலவு > *நெலா*
சிலை > *செல*
விளக்கு > *வெலெக்கு*

**சொல்லிறுதி**

பூசணி > *பூசெனெ*

**1 : 2 . இகர அகர மாற்றம் ( இ > அ )**

இகரம் சொல்லிடையில் அகரமாக ஒலிக்கப்படுகின்றது. சொல்லிடை அகரம் எகரமாகும் போது சிலவிடங்களில் இகரம் அகரமாகின்றது.

கிளறு > *கலாரு*
வெற்றிலை > *வெத்தலே*

**1 : 3 . இகர ஒகர மாற்றம் ( இ > ஒ )**

அண்பல் ஒலிகளான லகர,னகர,ரகர ஒலிகளுக்கு முன்னும் நாமடி ஒலிகளான டகர எகர ஒலிகளுக்கு முன்னும் இகரம் சொற்களில் வரும்போது ஒலிப்பு எளிமைக்கு உகரமாக மாறிவிடுகிறது.

விடு > *வுடு*
பிள்ளை > *புல்லெ*
தின் > *துன்னு*
இன்னும் > *உன்னொ(ம்)*
எதிரில் > *எதுர்ரெ*

### 1 : 4 . ஈகார ஊகார மாற்றம் ( ஈ > ஊ )

இகரத்தைப் போன்றே ஈகாரமும் நாமடி ஒலிக்கு முன்னர் ஊகாரமாக ஒலிக்கப்படுகின்றது.

வீடு > *வூடு*

இலக்கணக் கூறுகளிலும் இவ்வொலி மாற்றம் நிகழ்கின்றது. நிகழ்கால இடைநிலையான 'கிறு' என்பது 'கூரு' என மாற்றம் அடைகின்றது.

சேர்க்கிறான் > *சேக்கூரா(ன்)*

பார்க்கிறான் > *பாக்கூரா(ன்)*

## 2) எகர மாற்றம்

முன்னுயிரான இகர ஒலியைப் போன்று எகர ஒலியும் பல மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளது. வடக்குக் கிளைமொழி வழக்கில் இவ்வொலி அடையும் மாற்றங்களைக் கீழ் வருமாறு அறியலாம்.

### 2 : 1 . எகர இகர மாற்றம் ( எ > இ )

இகரம் எகரமாதலைப் போன்று ஒரு சில சொற்களில் எகரம் இகரமாக ஒலிக்கப்படுகின்றது.

என்ன > *இன்னா*

### 2 : 2 . எகர ஒகர மாற்றம் ( எ > ஒ )

இதழொலியான பகர மகரத்தை அடுத்து முன்னுயிர் எகரமானது வரும்போது பின்னுயிரான ஒகரமாக இவ்வட்டாரத்தில் ஒலிக்கப்படுகின்றது.

பெட்டி > *பொட்டி*

பெட்டை > *பொட்டே*

பெண்டாட்டி > *பொண்டாட்டி*

மெல்ல > *மொள்ள*

மென்று > *மொன்னு*

### 2 : 3 . ஏகார ஓகார மாற்றம் ( ஏ > ஓ )

எகர ஒகர மாற்றத்தைப் போன்று ஏகாரம் ஓகாரமாகும் இடங்களுமுண்டு.

**இகர ஈகாரம் எகரம் ஏகாரம்**

**இவை தம்முள் இனமாம்**[1]

என்ற நூற்பாவின்படி எகர மாற்றம் ஏகார மாற்றத்திற்கு வழிவகுக்கிறது.

மேடு > *மோடு*

வேண்டும் > *வோனொ(ம்)*

மேடை > *மோடே*

---

1. **யாப்பருங்கல விருத்தி – 58**

### 3) அகர மாற்றம்

நடுவுயிரான அகர ஒலியானது சொற்களில் வரும் போது இகரமாகவும், எகரமாகவும், ஆகாரமாகவும், உகரமாகவும் ஒலிச் சூழலுக்கேற்ப பல மாற்றங்களைப் பெறுகிறது.

#### 3 : 1 . அகர இகர மாற்றம் ( அ > இ )

ஒரினமாக்கத்தின் காரணமாகச் சொல்லிடையில் அகரஒலியானது இகர ஒலியாக மாற்றமடையும் சொற்களும் உள்ளன. பின்வரும் இகர ஒலியின் செல்வாக்கால் முன்னே வரும் உயிரொலியும் திரிபடைகிறது.

நகரி > *நகிரி*
பதரி > *பதிரி*

#### 3 : 2 . அகர எகர மாற்றம் ( அ > எ )

நாமடி ஒலிகளுக்கும், பிரிவளி ஒலிகளுக்கும் முன்னே வரும் அகர ஒலியானது எகர ஒலியாக மாற்றம் பெறுகின்றது.

கணு > *கெனு*
பலா > *பெலா*
வாணல் > *வானெலு*
சண்டை > *செணடெ*
களி > *கெலி*
நல்ல > *நெல்லெ*

#### 3 : 3 . ஆகார ஏகார மாற்றம் ( ஆ > ஏ )

ஒரு சில சொற்களில் மட்டும் சொல்லிடையில் வரும் ஆகாரம் ஏகாரமாக மாறுகின்றது.

மரியாதை > *மெரியேதெ*

#### 3 : 4 . அகர ஆகார மாற்றம் ( அ > ஆ )

சொல்லிடையிலும் சில சொற்கள் புணரும் போதும் பேச்சு வழக்கில் அகரம் ஆகாரமாகின்றது.

ஆரத்தி > *ஆலாத்தி*
என்னவென்று > *இன்னான்னு*

சொல்லிடையில் மெய்யெழுத்து வந்து அது கெடுமானால் அதன் இழப்புக்கு ஈடு செய்யும் பொருட்டு இத்தகைய உயிர் நீடல் உண்டாகின்றது. என்ன+வ்+என்று = என்னவென்று என்பதில் வகரம் கெடுவதால் ஈடாக முன்னுள்ள அகரம் ஆகாரமாகின்றது.

### 3 : 5 . அகர உகர மாற்றம் ( அ > உ )

உயிரொலியியிபின் காரணமாக வடக்குக் கிளைமொழியின் பேச்சுத்தமிழில் இறுதி ஒகாரத்திற்கு ஏற்ப இடை வரும் அகரமும் ஒகரமாகின்றது. இதழ்குவி உயிரான உகரத்தின் செல்வாக்கால் அகரம் இதழ்குவிந்து ஒலியாக மாறுகின்றது.

செண்பகம் சென்பொகொ(ம்)

நகர் > *நவுரு*
சுவர் > *செவுரு*

இறுதி உகர உயிரொலி இறுதியில் சேர்க்கப்படுவதால் அவ்வொலியின் இயைபால் முன்னுள்ள அகர ஒலியும் உகர ஒலியாகின்றது.

## 4) ஒகர மாற்றம்

சேய்மை ஒரினமாக்கத்தின் காரணமாகச் சில சொற்களில் ஒகரம் உகரமாகவும் ஒகாரம் ஊகாரமாகவும் மாற்றமடைகின்றன.

### 4 : 1 . ஒகர உகர மாற்றம் ( ஒ > உ )

தற்செயலாக ஒரே ஒரு சொல்லில் மட்டும் ஒகரம் உகரமாக ஒலிக்கப்படுகின்றது.

கொடு > *குடு*
சொல்லில் மட்டுமல்லாது துணை வினைச் சொல்லான கொண்டு என்பதும் உகர ஒலியாக மாற்றம் அடைகின்றது.
வந்துகொண்டு > *வந்துகுனு*

### 4 : 2 . ஒகார ஊகார மாற்றம் ( ஓ > ஊ )

கூட்டுச் சொற்கள் சிலவற்றில் (வினை துணைவினையுடன் சேரும்போது) ஒகார ஒலியாக உச்சரிக்கப்படுகின்றது.

போய்விட்டான் > *பூட்டா(ன்)*
போய்விடு > *பூடு*

## 5) உகர மாற்றம்

உகர ஒலியும் வடக்குக் கிளைமொழியில் சிறுபான்மை இகர அகரமாகவும் பெரும்பான்மையாக ஒகரமாகவும் மாற்றம் பெறுகின்றது.

### 5 : 1 . உகர இகர மாற்றம் ( உ > இ )

அண்ண ஒலியான சகரத்தை அடுத்து வரும்போது உகரம் பெரும்பாலும் இகரமாக ஒலிமாறி ஒலிக்கப்படுகின்றது.

அச்சு > *அச்சி*
ஐந்து (அஞ்சு) > *அஞ்சி*
பஞ்சு > *பஞ்சி*

சிறுபான்மை வேறு இடங்களிலும் உகரம் இம்மாற்றம் பெறுகின்றது.

பிசாசு > *பிசாசி*
முருங்கை > *மிருங்கெ*
முன்னே > *மின்னே*
முழுங்கு > *மீங்கு*

'முழுங்கு' என்ற சொல்லில் மட்டும் உகரம் ஈகரமாக ஒலிக்கப் படுகின்றது. இடையில் நின்ற ழகர மெய் கெட்டுவிடுவதால் அவ்வொலியை ஈடுசெய்யும் பொருட்டு 'மீங்கு' என நீண்டு ஒலிக்கப்படுகின்றது.

**5 : 2 . உகர அகர மாற்றம் ( உ > அ )**

சிலவிடங்களில் ஒலிச் சூழல் காரணம் எதுவுமின்றி இவ்வட்டார மக்கள்தம் பேச்சுவழக்கில் மிகுதியான மாற்றங்கள் காணப் படுகின்றன. முயற்சிச் சுருக்கத்தையும் ஒரு காரணமாகக் கூறலாம். பேசும் வார்த்தையைச் சுருக்குவதும் பேசும் முயற்சியையும் சுருக்குவதும் இவ்வொலி மாற்றங்களுக்குக் காரணமாகக் கூறலாம்.

எனவேதான் உகரம் எக்காரணமுமின்றிச் சொல்லிடையில் சில சொற்களில் அகரமாக ஒலிமாற்றம் பெறுகின்றது.

சருகு > *சரகு*
இருந்த > *இரந்தெ*
அற்புதம் > *அர்பதொ(ம்)*

**5 : 3 . உகர ஒகர மாற்றம் ( உ > ஒ )**

ஒலிப்பு முறையின் எளிமை காரணமாக மேலுயிர் உகரம் இடையுயிர் ஒகரமாக ஒலிப்பது இயல்பாகி விடுகின்றது. இரண்டு ஒலிகளுமே பின்னுயிர்களாக இருப்பினும் ஒகரத்திற்கு முழுவதும் இதழ் குவித்தல் தவிர்க்கப்படுகின்றது.

உரல் > *ஒரெலு*
முறம் > *மொரொ(ம்)*
முளை > *மொலெ*
முதல் > *மொதெலு*
உன்னை > *ஒன்னெ*

**6) ஐகார மாற்றம்**

கூட்டொலியான ஐகாரம் சொல் முதலிலும் சொல்லிடையிலும் அகராமாகவும் சொல்லிறுதியில் எகரமாகவும் ஒலிக்கப்படுகிறது.

### 6 : 1 . ஐகார அகர மாற்றம் ( ஐ > அ )

ஐகாரக் கூட்டொலி ஒலித்தலின் அருமை காரணமாகத் தனியொலியான அகர உயிரொலியாக மாறிவிடுகின்றது.

ஐந்து > *அஞ்சி*
ஐம்பது > *அம்பது*
நிலைமை > *நெலமெ*
தொலைவு > *தொலவு*

### 6 : 2 . ஐகார எகர மாற்றம் ( ஐ > எ )

சொல்லிறுதி ஐகாரம் எகரமாக மாறுவது தமிழின் சில கிளைமொழிகளில் உண்டு. சில கிளைமொழிகளில் அகரமாக மாறுகிறது. வடக்குக் கிளைமொழியில் சொல்லிறுதி ஐகாரம் எகரமாக மாறுவதைக் காணமுடிகிறது.

**சொல்முதல்**

பானை > *பானெ*
அலை > *அலெ*
துணை > *தொனெ*

### 6 : 3 . ஐகார இகர மாற்றம்

சொல்லிடை வரும் ஐகாரம் இகரமாக மாறும் இடமும் உண்டு.

அடையாளம் > *அடியாலொ(ம்)*

## 7) விகுதிகளின் ஒலி மாற்றம்

சொல்லிறுதியில் வரக்கூடிய பால் விகுதிகளும் பெயர்ச்சொல்லாக்க விகுதிகளும் ஈரொலியாக இருப்பினும் மூக்கொலியோடு கூடிய ஒரொலியாக ஒலிக்கப்படுகின்றது.

### 7 : 1 . அம் / உம் விகுதி ஒலிமாற்றம்

அம், உம் என்னும் உருபில் முடியும் சொற்கள் இறுதியில் ஒலிக்கப்படும் போது மூக்கொலியுடன் கூடிய ஒகரமாக ஒலிக்கப்படுகிறது.

நிலம் > *நெலொ(ம்)*
வெள்ளம் > *வெல்லொ(ம்)*
பணம் > *பனொ(ம்)*
பால்ம் > பாலொ(ம்)

மட்டும் > மட்டொ(ம்)
தட்டும் > தட்டொ(ம்)
நானும் > நானொ(ம்)

**7 : 2 . அன் விகுதி ஒலி மாற்றம்**

ஆண்பால் விகுதியான அன் மூக்கொலி பெற்று எகர ஒலியாக மாற்றம் அடைகின்றது.

வந்தவன் > *வந்தவெ(ன்)*
சொன்னவன் > *சொன்னவெ(ன்)*
பெரியவன் > *பெரியவெ(ன்)*

**7 : 3 . ஆன் விகுதி ஒலி மாற்றம்**

மற்றொரு ஆண்பால் விகுதியான – ஆன் என்பதும் மூக்கொலி யுடன் கூடிய ஆகார ஒலியாக மாறியுள்ளது.

கெட்டான் > *கெட்டா(ன்)*
பார்த்தான் > *பாத்தா(ன்)*
வந்தான் > *வந்தா(ன்)*

## மெய்யொலி மாற்றங்கள்

மொழி மாறுதலின்றி ஒரே தன்மையாக இருக்க வாய்ப்பில்லை. எந்த மொழி மக்களாயிருப்பினும் அவரவரது மொழியிலுள்ள எழுத்து வழக்கையே மொழி என்று கருதியுள்ளனர். எனவே, தம் மொழியில் ஏற்படும் மாற்றங்களை மக்கள் அறிவதில்லை. ஆனால் பேச்சுமொழியை எழுத்து வழக்கோடு ஒப்பிட்டு நோக்கும்போது மொழிமாற்றங்களை அறிந்து கொள்ள வாய்ப்புண்டு. பெரும்பான்மை மொழி மாற்றங்கள் ஒலி அளவிலேயே நிகழ்கின்றன.

தமிழ் வடக்குக் கிளைமொழியில் உயிரொலிகள் மட்டுமின்றி மெய்யொலி களும் பல இடங்களில் மாற்றம் அடைகின்றன. மொழி காலங்காலமாக வளர்ந்து வரும் தன்மையுடையது என்பதை இவ்வட்டாரக் கிளைமொழியில் மெய்யொலி களின் மாற்றத்தைக் கண்டுணர்ந்து கொள்ளலாம். அண்டை மொழியான தெலுங்குமொழியின் தாக்கத்தால் ஒலிப்பிலா ஒலிகள் பல ஒலிப்புடைய ஒலிகளாக மாறுகின்றன. வடமொழிச் சொற்கள் பல தமிழ் ஒலிப்புத் தன்மைக்கு ஏற்ப மாற்றம் அடைந்துள்ளன. ஒலி மாற்றத்தால் ஒலிப் பிளவும், ஒலி இணைவும் ஏற்பட்டுள்ளன.

## ஒலிப்பிலா ஒலிகள் ஒலிப்பு ஒலிகளாக மாற்றம் அடைதல்

தமிழ்மொழி அமைப்பில் சொல் முதலில் இடம்பெறும் ஒலிப்பிலாத் தடையொலிகள் வடக்குக்கிளைமொழியில் பெரும்பாலும் ஒலிப்புடை ஒலிகளாக மாறுகின்றன. இம்மாற்றம் அண்டை மாநில மொழியான தெலுங்கு மொழியின் தாக்கத்தால் உண்டாகின்றது.

**அ) ககர மாற்றம்**

சொல்லுக்கு முதலில் தமிழில் இடம்பெறக்கூடிய ககரம் தெலுங்கு மொழியின் தாக்குதலால் க்ககரமாக ஒலிக்கப்படுகின்றது.

குள்ளம் > *க்குல்லி*
கிணறு > *க்கெனரு*
கணு > *க்கெனு*
கனவு > *க்கெனவு*

**ஆ) சகர மாற்றம்**

அண்ண ஒலியான சகரம் வடக்குக் கிளைமொழியில் சொல் முதலில் ஜகரமாகவும் ஒலிப்பு ஒலியாக மாற்றம் பெறுகின்றது.

சொள்ளு > *ஜொல்லு*
சங்கு > *ஜங்கு*
சரி > *ஜரி*

**இ) தகர மாற்றம்**

ஒலிப்பில்லாத் தகர ஒலியானது தமிழில் சொல்முதலில் ஒலிப்பு ஒலியாக ஒலிக்கப்படுதல் இல்லையெனினும், இவ்வட்டாரப் பேச்சுவழக்கில் ஒலிப்பு ஒலியாகத் தெலுங்கு மொழியின் செல்வாக்கால் மாற்றம் அடைந்துள்ளது.

தகதக > *தெகதெக*
தடிப்பு > *தெடிப்பு*
தண்டல் > *தெண்டலு*
தாண்டு > *தாண்டு*

**ஈ) பகர மாற்றம்**

இதழொலியான பகரம் சொல்முதலில் ஒலிப்பு ஒலியாக ஒலிப்பது இவ்வட்டார வழக்கில் தெலுங்கு மொழியின் சொல்வாக்கை உணர்த்துவதாக உள்ளது.

பந்தயம் > பந்தொ(ம்)
பந்து > *பந்து*
பொந்து > *பொந்து*

**உ) ழகர மாற்றம்**

தமிழ்க்கிளைமொழிகளில் வடக்குக் கிளைமொழியைப் பிரித்தறியும் முதன்மையான மாற்றம் வளைநா ஒலியான ழகர மாற்றமே யாகும். **ழகரம்** வரக்கூடிய இடங்களிலெல்லாம் அவ்வொலிக்குப் பதிலாக **யகரம்** ஒலிக்கப்படுகின்றது.

வடக்குக் கிளைமொழியில் களஆய்வு மேற்கொள்ளப்பட்ட பகுதிகளில் திருவள்ளூர் மாவட்டம் முழுவதும் மற்றும் வேலூர்

மாவட்டப் பொன்னை, காட்பாடி வட்டாரங்களில் ழகரம் யகராக ஒலிக்கப்பட, வேலூர் மாவட்ட குடியாத்தம், திருப்பத்தூர் வட்டார வட எல்லைகளிலும், கிருஷ்ணகிரி மாவட்ட ஆந்திர எல்லையிலும் ழகரம் லகரமாக ஒலிக்கப்படுகின்றது. குடியாத்தம் வட்டாரத் திலுள்ள பரதராமியில் ழகரம் யகரமாகவோ அல்லது லகரமாகவோ ஒலிக்கப்படும் இரண்டு நிலைகளும் காணப்படுகின்றன.

**அ) ழகர யகர மாற்றம் (ழ > ய)**

ழகர ஒலியானது யகரத்துடன் ஒன்றிவிடும் நிலையை வடக்குக் கிளைமொழியில் காண முடிகின்றது.

மழை > *மயெ*
ஆழம் > *ஆயொ(ம்)*
ஒழுங்கு > *ஒய்ங்கு*
கழனி > *கய்னி*
குழந்தை > *கொய்ந்தெ*

**ஆ) ழகர லகர மாற்றம் (ழ > ல)**

திருப்பத்தூர் வட்டார ஆந்திர எல்லையில் மிகுதியாக ழகர ஒலி லகர ஒலியாகவே ஒலிக்கப்படுகின்றது.

கிருஷ்ணகிரி மாவட்டத்திலும் இதே நிலை காணப்படுகின்றது. தர்மபுரி மாவட்டத்தின் ழகர லகர மாற்றத்தின் செல்வாக்கால் இந்நிலை ஏற்பட்டிருக்கலாம்.

எந்த ஒரு கிளைமொழியும் திடீரென்று ஓரிடத்திலிருந்து ஒலி மாற்றம் பெறமுடியாது. சிறிது சிறிதாக நிகழத் தொடங்கும் இத்தகைய மாற்றங்கள், எந்த இடத்தில் தொடங்குகிறதென்பதை வரையறுப்பது கடினம். இவ்வடக்கு கிளைமொழியிலும் இம் மாறுபாடு பரதராமி போன்ற பகுதியில் இடைப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

தமிழக வடக்கு எல்லையின் மேற்குப் பகுதியில் ழகரம் லகரமாக ஒலிப்பதற்கு மேற்குக் கிளைமொழியின் ஒலித்தாக்கமே காரணமாக அமைகின்றது.

வாழை > *வாலெ*
கழுத்து > *கல்த்து*
தமிழ் > *தமிலு*
வழி > *வலி*

**இ) ழகர வகர மாற்றம் (ழ > வ)**

மேற்கூறியபடி ழகரம் யகரமாகவும் லகரமாகவும் ஒலிக்கப்பட, யகரமாக ஒலிக்குமிடங்களில் ஒரே ஒரு சொல்லில் மட்டும் வகரமாக ஒலிக்கப்படுகின்றது.

கூழ் > *கூவு*

ழகரம் லகரமாக ஒலிக்கப்படுமிடங்களில் இம்மாற்றம் காணப்பட வில்லை.

திருப்பத்தூர் வட்டார எல்லையில் அம்பிலி என்ற தெலுங்குச் சொல்லே பெரும்பான்மையாகப் பயன்படுத்தப் படுகிறது. பழைய தமிழ்ச் சொல்லான அம்பலி என்பது வழக்கத்தில் இப்பகுதியில் வழங்கியிருக்கலாம் அல்லது தற்போது தமிழ் ஆந்திர எல்லையில் தெலுங்கில் வழங்கப்படும் சொல் வழக்காகவும் இருக்கலாம்.

**ஈ) ழகரம் இடம்பெறுதல்**

**(1) யகர ழகர மாற்றம் (ய > ழ)**

இவ்வட்டார மக்களின் பேச்சு மொழியில் ழகரம் முற்றிலும் மறைந்துவிட்டது எனவும் கூற இயலவில்லை. முற்றிலும் மாறுதலான நிலையையும் காண இயலுகின்றது. ழகரம் மாறுவது போல யகரம் ழகரமாக ஒலிக்கப்படும் சொற்கள் பல இக்கிளை மொழியில் காணப்படுகின்றன.

நாயகி > *நாழெகி*
பயணம் > பழெணொ(ம்)
தயவு > *தெழவு*
மயக்கம் > *மழெக்கொ(ம்)*

ஆனால் பயம், சுயம், வயம் போன்ற சொற்களில் இம்மாற்றம் நிகழ்ந்துள்ளது.

**(2) டகர ழகர மாற்றம் (ட > ழ)**

ஒரே ஒரு சொல்லில் இத்தகைய ஒலி மாற்றம் நிகழ்ந்துள்ளது.

கேட்கும் > *கெழுக்கொ*

**(3) தகர ழகர மாற்றம் (த > ழ)**

டகரம் ழகரமாக ஒலிப்பதைப் போன்று ஒரு சொல்லில் மட்டும் தகரம் ழகரமாக ஒலிக்கப்படுவதைக் காணமுடிகிறது.

தகப்பன்> *தழப்பெ(ன்)*

**உ) ழகர ககர மாற்றம் (ழ > க)**

ழகர ஒலியானது ஒரே ஒரு சொல்லில் மட்டும் ககரமாக ஒலிக்கப்படுகின்றது.

நிழல் > *நெகிலு*

இச்சொல் ஒப்புமையாக்கத்தால் (வெயில் வெகிலு) இத்தகைய ஒலிமாற்றத்தை அடைந்ததாகக் கொள்ளலாம்.

**3) ககர வகர மாற்றம் (க > வ)**

இரண்டு உயிரொலிகளின் இடையே ககர ஒலி வரும்போது, அக் ககரம் வகரமாக மாற்றம் பெற்று ஒலிக்கப்படுவதை இக்கிளை மொழியில் காணமுடிகின்றது.

வேகும் > *வேவொ(ம்)*
பகல் > *பவ்லு*
நகர் > *நவ்ரு*
ஆகும் > *ஆவொ(ம்)*
பிறகு > *பொரெவு*
மிளகு > *மொலுவு*
மதகு > *மதவு*
குத்தகை > *குத்தவெ*
ஆகும் > *ஆவொ(ம்)*

ஆகி என வருமிடத்தில் மட்டும் – *ஆயி* எனக் ககரம் யகரமாக மாறுகிறது.

**4) யகர மாற்றம்**

**அ) யகர வகர மாற்றம் (ய > வ)**

அரையுயிரான யகரம் மற்றொரு அரையுயிரான வகரமாக மாற்றம் பெறுகிறது. இம்மாற்றமும் இரு உயிரொலிகளின் இடையே யகர ஒலி ஒலிக்கப்படும்போது அச்சூழலில் வகரமாக மாற்றம் பெறுகின்றது.

வயிறு > *வவ்ரு*
கயிறு > *கவ்ரு*
வயசு > *வவ்சு*
ஆயுசு > *ஆவ்சு*
நோய் > *நோயி* > *நோவு*

யகரம் சிலவிடங்களில் சகரமாகவும் ஒலிக்கப்படுகின்றது.

மயிரு > *மசுரு*
வயம் > *வசொ(ம்)*

பயிர் என்ற சொல்லில் எத்தகைய மாற்றமும் பெறவில்லை என்பது குறிப்பபிடத்தக்கது.

**5) ளகர லகர மாற்றம் (ள > ல)**

வளைநா ஒலியான ளகர ஒலியானது அண்பல் ஒலியான லகர ஒலியுடன் இணைந்து விடுவதைப் பலவிடங்களில் காணமுடிகிறது. தெலுங்கு மொழியின் தாக்கத்தால் இவ்வொலி மாற்றம் நிகழ்ந்திருக்கக் கூடும். பழந்தமிழ் ளகரம் தெலுங்கு மொழியில்

லகரமாகத் திரியும் இயல்புடையது. அந்தத் தாக்கமானது இக்கிளைமொழியிலும் ஏற்பட்டுள்ளது.

மிளகாள் > *மொலகாயி*
மளிகை > *மலிகெ*
அடையாளம் > *அடியாலொ(ம்)*
புள்ளி > *புல்லி*
கள் > *கெல்லு*

மேற்கூறிய கூற்றிற்கு மாறாக ஓரிடத்தில் மட்டும் லகரம் ளகரமாக ஒலிக்கப்படும் நிலை காணப்படுகிறது.

மெல்ல> *மொள்ளே*

**6) றகர ரகர மாற்றம் (ற > ர)**

தமிழ் மொழியில் பெரும்பான்மையான கிளைமொழிகளில் ஆடொலியான றகர ஒலி ரகர வருடொலியோடு இணைந்து விட்டது. தமிழ் வடக்குக் கிளைமொழியும் இம்மாற்றத்திற்கு விதிவிலக்கல்ல.

உறை > *ஒரெ*
கறை > *கரெ*
முறம் > *மொரொ(ம்)*

இப்பகுதியில் வாழும் மக்கள்தம் பேச்சுவழக்கில் றகர ஒலியானது முற்றிலும் பல தலைமுறைகளாக ஒலிக்கப்படுவதில்லை என்பதை உணர முடிகிறது.

**7) சகர மாற்றம்**

**அ) சகர ஸகர மாற்றம் (ச > ஸ)**

இக்கிளைமொழியில் தடையொலியான சகரமானது உரசொலியான ஸகரமாக மாறிவிட்ட போக்கைக் காணமுடிகிறது. சொல் முதல் சகரம் மட்டுமின்றிச் சகரம் இரட்டிக்கும் போதும் இத்தகைய மாற்றம் உண்டாகின்றது.

செட்டியார் > *ஸெட்டியாரு*
சட்டி > *ஸெட்டி*
சக்கரம் > *ஸெக்கரொ(ம்)*
ஈச்சமரம் > *ஈஸெமரொ(ம்)*
கூச்சம் > *கூஸொ(ம்)*

**ஆ) சகர ஒலி மாற்றமின்மை**

ஆனால், சொல் முதலில் குறில் ஒலி இடம்பெறும்போது அடுத்து

வரும் சகர இரட்டிப்பு அதே ஒலியுடன் ஒலிக்கப்படுவதைக் காணமுடிகின்றது.

பச்சை > *பச்சே*
அச்சம் > *அச்சொ(ம்)*
தச்சன் > *தெச்செ(ன்)*

**இ) ஸகர சகர மாற்றம் (ஸ > ச)**

மேற்கூறியபடி சகரம் ஸகரமாக மாறுவதைப் போல ஸகரமாக மாறும் இடங்களும் இக்கிளைமொழியில் காணப்படுகின்றது. இறுதி சகர ஒலி ஐகார உயிருடன் சேர்ந்து ஒலிக்கும்போது இத்தகைய நிலை ஏற்படுகின்றது.

குடிசை > *குட்செ*
வரிசை > *வெர்செ*

**ஈ) சகரம் ஜகர மாற்றம் (ச > ஜ)**

வடமொழிச் சொற்கள் சில தமிழில் வந்து புகுந்தபோது அவை தமிழ் ஒலிப்பு முறைக்கு ஏற்ப ஒலிப்பு முறை மாற்றி வழங்கப்பட்டன. தமிழ் வடக்குக் கிளைமொழி பேச்சுத்தமிழ் என்பதாலும் தெலுங்குமொழியின் தாக்குதலாலும் தமிழ் ஒலிப்பு முறையைப் பெறாமல் வடமொழி ஒலிப்பையே பெற்று விளங்குகிறது.

விசாரி > *விஜாரி*
பூசாரி > *பூஜேரி*
யோசனை > *யோஜெனெ*
அர்ச்சுனன் > *அர்ஜினெ(ன்)*

**உ) ஷகர ஸகர மாற்றம் (ஷ > ஸ)**

வடக்குக் கிளைமொழிச் சொற்கள் கலந்து வரும் போது ஷகர ஒலியை உச்சரிப்பதில்லை. மாறாக ஸகர ஒலி இவர்தம் பேச்சு மொழியில் மிகுதியாகப் பயின்று வருகின்றது.

புருஷன் > *புருஸெ(ன்)*
வருஷம் > *வெருஸொ(ம்)*
வேஷம் > *வேஸொ(ம்)*
கஷ்டம் > *கெஸ்டா(ம்)ஷ*
வேஷ்டி > *வேஸ்டி*

**ஊ) தகர ஸகர மாற்றம் (த > ஸ)**

சொல்லாக்க விகுதியான அது என்பது சில சொற்களுடன் சேரும் போது இறுதி தகர ஒலியானது ஸகர ஒலியாக மாற்றம் பெறுகின்றது.

பண்புப் பெயர்களுடன் சேரும்போது பெரும்பாலும் இவ்வொலி மாற்றம் ஏற்படுகின்றது.

புதியது > *புதுசு*
பழையது > *பயசு*
பெரிது > *பெரிசு*
சிறியது > *சிருசு*

**8) இனவொலி ஒலிப்பிலாத் தன்மையைப் பெறுதல்**

வெடிப்பொலியை அடுத்து வரும் மூக்கொலி ஒலிப்புத் தன்மையைப் பெறுதல் தமிழ் மொழியின் இயல்பாகும். ஆனால், வடக்குக் கிளைமொழி அண்டை மொழியான தெலுங்குமொழியின் தாக்கத்ததால் ஒலிப்புத் தன்மையை இழந்து ஒலிப்பிலாத் தன்மையைப் பெறுகின்றது.

தெம்பு > *தெம்ப்பு*
சொந்தம் > *சொந்த்தொ(ம்)*
தண்டம் > *தண்ட்டொ(ம்)*
கஞ்சம் > *கெஞ்ச்சொ(ம்)*
வாங்கி > *வாங்க்கி*

ஓர் ஒலிக்கு முன்னரோ பின்னரோ ஒலிக்கப்படும் ஒலிகள் அந்த ஒலியின் தன்மைக்கு ஏற்ப மாறிவிடும் போக்குத் தமிழ்மொழியின் வடக்குக் கிளைமொழியுள்ளும் காணப்படுகின்றது. பின்வரும் ஒலிக்கு ஏற்ப முன்வரும் ஒலி மாறி பின்வழி ஓரினமாக்கம் இம்மொழியில் இடம்பெறுவதை வட்டாரப் பேச்சுவழக்கில் உணர முடிகிறது.

கேட்கிறது > *கேக்குது*
உட்கார் > *ஒக்காரு*
தெற்கு > *தெக்கு*
மேற்கு > *மேக்கு*

**10) ணகர னகர மாற்றம் (ண > ன)**

ஒலி மாற்றங்களில் பெரும்பான்மையாக நடைபெறும் மாற்றம் இணைவு மாற்றமாகும். இருவேறு ஒலிகள் ஒரே ஒலியாக மாறிவிடும் போக்காக ளகர லகர இணைவு, றகர ரகர இணைவு போன்றவை ஏற்படுவது போன்று ணகர னகர இணைவும் இக்கிளைமொழியில் மிகுதியாகக் காணப்படுகின்றது.

தண்ணீர் > *தென்னி*
வண்ணான் > *வெனனா(ன்)*
பண்ணினான் > *பன்னா(ன்)*

ஓரிடத்தில் மட்டும் ணகரம் ரகரமாகவும் ஒலிக்கப்படுகின்றது.

கண்ணகி > *கெர்ணெகி*

**11) நகர மகர மாற்றம்**

சில ஒலி மாற்றங்களுக்குச் சூழல் காரணமாக அமையாமல் தானாகவே காரணமின்றி அமையும் போக்கினை இக்கிளைமொழியில் காணமுடிகின்றது.

நொண்டி > *மொண்டி*

**12) அண்ணவொலியாக்கம் (ந் > ஞ்)**

சொல்லிடையில் வரும் நகர ஒலியானது முன்னே ஒலிக்கப்படும் அண்ணவொலிக்கு ஏற்ப மாறி முன்வழி ஓரினமாக்க ஒலிநிலையைப் பெற்று வருகிறது.

ஐந்து > *அஞ்சி*
தெரிந்து > *தெரிஞ்சி*
சொரிந்து > *சொரிஞ்சி*
பரிந்து > *பெரிஞ்சி*

**13) மூக்கொலி இனவொலி பெறுதல்**

இவ்வட்டாரப் பேச்சு வழக்கில் அண்ண ஒலியான ஞகரம் தனியே ஒலிக்கப்படுவதில்லை. சொல்லிடையே மூக்கொலியான அவ்வொலி வருமிடத்துத் தனக்கு இனமான வெடிப்பொலி ஜகரத்தையும் உடன் பெற்றே வந்து வழங்குகிறது.

கவிஞர்> *கவிஞ்ஜெரு*
அறிஞர்> *அரிஞ்ஜெரு*
விஞ்ஞானம்> *விஞ்ஜானொ(ம்)*

**14) ஒலி இழப்பு**

மேற்கூறிய மெய்யொலி மாற்றங்களேயன்றி, மெய்யொலி இழப்புகளும் பலவிடங்களில் காணக்கிடக்கின்றன. சொல்முதல், இடை, கடை என மூவிடங்களிலும் ஒலி இழப்பு ஏற்படுகின்றது. சொல்லிடையில் இவ்இழப்பு மிகுதியாக உண்டாகியுள்ளது.

**அ) யகர ஒலி இழப்பு**

சொல் முதலில் யகரம் ஆகாரத்துடன் சேர்ந்தே வரும் என்பது தொல்காப்பிய விதி.

**ஆவோ டல்லது யகர முதலாது**[1]

1. தொல்காப்பியம். எழுத்ததிகாரம். 65

ஆனால் இடைக்காலத்திலேயே இவ்விதி பின்பற்றப்படவில்லை. இந்த நிலை தொடர்ந்து வந்து இக்காலப் பேச்சு வழக்கிலும் வடக்குக் கிளைமொழியில் சொல்முதல் யகரம் இழக்கப்பட்டுள்ளது.

யார் > *ஆரு*
யானை > *ஆனெ*

வேறுசில கிளைமொழிகளில் யகரம் பேச்சு வழக்கில் உள்ளபோது இவ்வட்டாரத்தில் சொல் முதலில் இவ்வொலி ஒலிக்கப்படுவதில்லை.

சொல்லிடையில் இடம்பெறும் யகரமும் இவ்வட்டாரப் பேச்சு வழக்கில் இழக்கப்பட்டுள்ளது.

தாய்ப்பெயர் > *தாப்பேரு*
தாய்வீடு > *தாவூடு*

**ஆ) ழகர ஒலி இழப்பு**

ழகர ஒலி யகரமாக மாறுவது இவ்வட்டாரத்தின் சிறப்பானதொரு ஒலிக்கூறாக இருப்பினும் சில சொற்களில் சொல்லிடை ழகரம் ஒலிக்கப்படாமல் ஒலியிழப்பு ஏற்படுகின்றது.

வாழ்க்கை > *வாக்கெ*
தாழ்ப்பாள் > *தாப்பா*

**இ) ளகர இழப்பு**

சொல்லிறுதியில் ஒலிக்கப்படும் ளகரம் சிலவிடங்களில் மூக்கொலி பெற்ற எகரமாகிறது.

ககர விகுதி இரடித்து வரும்போது இறுதி ளகரம் இழக்கப்படுகின்றது. மற்றும் பெண்பால் விகுதியான ளகரமும் ஒலிக்கப்படுவதில்லை.

**ஈ) ரகர இழப்பு**

சொல்லிடை வரும் ரகரம் பலவிடங்களில் இழக்கப்பட்டாலும் பொருள் மாறாமல் இருப்பதால் ஒலி இழப்பு காணப்படுகின்றது.

தீர்ந்து > *தீந்து*
தீர்த்து > *தீத்து*
வளர்ந்து > *வலெந்து*
வளர்ப்பு > *வலெர்ப்பு*
பார்த்து > *பாத்து*

ரகர ஒற்று மட்டுமின்றி உயிர்மெய் ரகரமும் சொல்லிடையில் ஒலிக்கப்படுவதில்லை.

சாதாரணம் > *சாதானொ(ம்)*

**உ) இலக்கணக் கூறுகளில் ஒலி இழப்பு**

சொல்லளவில் மட்டுமின்றி இலக்கணக் கூறுகளிலும் இவ்வொலி இழப்புக் காணப்படுகின்றது.

**1) நிகழ்கால உருபு (–கிறு– > –று–)**

நிகழ்காலத்தை உணர்த்தும் இடைநிலையான –கிறு– என்பதிலுள்ள – கி – என்ற ஒலி இழக்கப்பட்ட நிலையிலும் பொருள் மாறாமல் வழங்கப்படுகின்றது.

செய்கிறான் > செய்ரா(ன்)
கொடுக்கிறது > குடுக்ரது
போகிறாள் > போரா(ள்)

**2) இறந்தகால உருபு (–இன்– > –ன்–)**

கால இடைநிலைகளில் இறந்தகாலத்தை உணர்த்தப் பயன்படும் விகுதியான –இன்– என்ற உருபிலுள்ள இகரமும் இழக்கப்படுகின்றது.

பாடினான் > *பாட்னா(ன்)*
வாடினான் > *வாட்னா(ன்)*
தேடினான் > *தேட்னா(ன்)*
ஓடினான் > *ஓட்னா(ன்)*

பாடு, ஆடு, தேடு, ஓடு, போன்ற தன்வினைகளில் மட்டுமின்றி ஆட்டு, ஓட்டு, என்று டகரம் இரட்டித்து வரும் பிறவினைகளிலும் அவ்வாய்ப்பாட்டுச் சொற்களிலும் இறந்தகால விகுதி இன் என்பதிலுள்ள இகரத்துடன் பின்வரும் உயிர்மெய்யும் இழக்கப்படுகின்றது.

ஆட்டினான் > *ஆட்னா(ன்)*
ஓட்டினான் > *ஓட்னா(ன்)*
கொட்டினான் > *கொட்னா(ன்)*
வாட்டினான் > *வாட்னா(ன்)*

**ஊ) பிற ஒலிகள் இழக்கப்படுதல்**

வடக்கு வட்டாரக் கிளைமொழிகளில் இடையில் உள்ள உயிர்மெய்கள் சில ஒலிக்கப்படுவதில்லை. இவ்வொலி இழப்புகள் பொருள் சிதையாத அளவிற்கு அனுமதிக்கப்படுகிறது. ஒலி இழப்பினால் சொற்கள் சில மிகவும் ஒலி சிதைந்தும் காணப்படுகின்றது.

கும்பிடு > *கும்டு*
போகும்போது > *போம்போது*

## 15) ஆங்கிலச் சொற்களில் ஒலிப்பு முறை

வடக்குக் கிளைமொழி வழங்கும் தமிழக ஆந்திர எல்லையில் அமைந்தவை பெரும்பாலும் கிராமங்களே என்றாலும் தொலைக்காட்சி போன்ற நவீன சாதனங்களால் பிறமொழியான ஆங்கிலச் சொற்களும் பயன்படுத்தப் படுகின்றன. தமிழ் ஒலியமைப்புக்கு ஏற்றவாறு அவ்வட்டார மக்கள் ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்துகின்றனர்.

### அ) ஷகரம் ஸகரமாதல் (ஷ > ஸ)

ஆங்கிலச் சொற்களில் அமைந்துள்ள ஷகர ஒலியை இவ்வட்டார மக்கள் பயன்படுத்துவதில்லை. அதற்கு ஈடாக ஸகர ஒலியே பயன்படுத்தப்படுகின்றது.

*மிஸினு*
*கண்டிஸெனு*
*ஸெட்டு*

### ஆ) தமிழ் மொழிக்கேற்ற ஒலிப்புமுறை

தமிழ்மொழியிலில்லாத ஒலிகளை ஒலிப்பது இவ்வட்டாரப் பேச்சில் கடினமாக இருப்பதால் தமிழ் ஒலிப்பு முறைக்கேற்ப ஒலிகளை மாற்றி அமைத்துப் பயன்படுத்துகின்றனர்.

*பிரெண்டு*
*பாரெஸ்டு*

சொல் முதலில் மெய்மயக்கம் இருப்பது ஆங்கில உள்ளிட்ட சில மொழிகளின் அமைப்பு. தமிழ் மொழியில் மெய்யொலிகள் அமைகின்ற சூழல் உள்ளது. அதற்கேற்ப ஆங்கில மொழிச் சொற்கள் உச்சரிக்கப்படுகின்றன.

*டைவெரு*
*டீப் லைட்டு*
*இஸ்கோலு*
*குல்கோசு*
*கிலியெரு*
*சுவீட்டு*

### இ) இறுதி உகரம் மட்டும் இணைத்தல்

சில ஆங்கிலச் சொற்களில் மிகுதியான மாற்றத்தை உண்டாக்காமல் இறுதி உகரம் மட்டுமே பயன்படுத்தித் தமிழ்ப் படுத்தியுள்ளனர்.

*லோடு*
*டாக்டரு*
*பைப்பு*
*சேரு*
*பஸ்ஸு*
*டோக்கெனு*

**ஈ) சிதைந்த நிலை**

சில ஆங்கிலச் சொற்கள் எதுவென்று கண்டறிய இயலாதபடி மிகுதியாக சிதைந்துள்ளன. அவ்வட்டார மக்கள் அச்சொற்களை எளிதில் புரிந்து கொள்கின்றனர்.

*தப்புலு*
*கான்பெண்ட்டு*
*கிரில்லு*
*தூலு*

இவ்வாறு ஆங்கிலச் சொற்கள் பல வடக்குக் கிளைமொழியில் தமிழ்ப்படுத்தப்பட்டு மக்களிடையே வழங்கப்படுகின்றன.

**16) தமிழ்ச்சொற்களின் சிதைந்த வடிவங்கள்**

தமிழ்ச் சொற்கள் பல மிகவும் சிதைவுண்டு எந்தச் சொல்லை உணர்த்துகிறது என்பதே தெரியாத அளவிற்கு ஒலிகள் திரிந்தும் கெட்டும் தோன்றியும் மிகுந்த பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

| **பழந்தமிழ் வழக்கு** | | **வடக்குக் கிளைமொழி வழக்கு** |
|---|---|---|
| உதிர்ந்தது | – | உந்திசி |
| வந்துவிட்டார் | – | வண்ட்டாரு |
| இருக்கிறது | – | கீது |
| முன்னே | – | மின்னெ |
| புதியதா? | – | புச்சா |
| ஒத்துழைத்து | – | ஒத்தொசி |
| எடுத்துவிடு | – | எத்துரு |
| பண்ணிவிட்டு | – | பண்ட்டு |
| தின்றுவிட்டு | – | துண்ட்டு |
| அனுப்பி | – | அமிசி |
| இழுத்து | – | இஸ்த்து |
| பிழைக்க | – | பொய்க்கெ |
| முழுங்கு | – | மிங்கு |
| சொல்லத்தேவையில்லை | – | சொல்லத்தல்லெ |
| உட்கார் | – | குந்து |

| | | |
|---|---|---|
| புதியது | – | புச்சி |
| நமைச்சல் | – | நம்செலு |
| கழன்று | – | சொய்ண்டி |
| பச்சைத்தண்ணீர் | – | பஸ்தன்னி |
| மூச்சு | – | மூசி |
| படித்தேன் | – | பட்ஸெ(ன்) |
| எடுத்துக்கொண்டுவந்து | – | எத்தாந்து |
| சேர்க்கிறான் | – | சேக்கூரா(ன்) |
| அதுமாதிரி | – | அதுமசி |

மேற்குறிப்பிட்ட சொற்களைப்போன்ற ஒலிகள் சிதைந்த நிலையில் உள்ள சொற்கள் ஏராளம். அவர்களுக்குள் பேச்சு நிலையில் எளிமையாகப் புரிந்து கொள்கின்றனர். எந்தச்சொல் இந்நிலையில் மாறியுள்ளது என்பதைக்கூட கண்டறிய முடியாதபடி சொற்கள் மிகவும் சிதைவடைந்துள்ளன.

தற்போதுள்ள இளைய தலைமுறையினரின் கல்வி பற்றிய விழிப்புணர்வினால் தமிழக ஆந்திர எல்லையின் கிளைமொழி மிகவும் சிதைவடையாமல் காக்கப்பெறும் வாய்ப்பு உண்டாகின்றது.

**17) ஒலிக்குறிப்புச் சொற்கள்**

தமிழிலக்கணத்தில் ஒலியைக் குறிப்பதற்குக் குறிப்பிட்ட ஒலிச்சொற்கள் இரண்டுமுறை பயின்று வரும். அவை பிரித்தால் பொருள் தராது. இவ்விரட்டைக் கிளவிச் சொற்கள் பல இப்பகுதி மக்கள் பேசும் மொழியில் வழங்கப்படுகின்றன.

ஜிவுஜிவு என்று > *ஜிவுஜிவுன்னு*
ஜிலுஜிலு என்று > *ஜிலுஜிலுன்னு*
கொர் கொர் என்று > *கொர்கொருன்னு*
கரகர என்று > *கரகரன்னு*

இரட்டிக்காது ஒரே ஒருமுறை மட்டும் இடம்பெறும் ஒலிக்குறிப்புச் சொற்களும் இவ்வட்டாரப்பேச்சு வழக்கில் இடம் பெற்றுள்ளன.

சட்டென்று ஓடு > *சட்னு ஓடு*
கம்மென்று இரு > *கம்னிரு*
ஜம்மென்று பாடு > *ஜம்னு பாடு*
பட்டென்று பேசு > *பட்னு பேசு*

## சொல் மாற்றம்

ஒரு கிளைமொழியிலிருந்து மற்றொரு கிளைமொழியின் வேறுபாடு சொற்களின் மாற்றத்திலும் அமைந்துள்ளது. சொல்லாட்சியின் மாற்றமும் ஒரு வட்டாரக் கிளைமொழியை இனம் காட்டி நிற்பதில் பெரும்பங்கு வகிக்கின்றது.

தமிழக ஆந்திர எல்லையில் வழங்கும் வடக்குக் கிளைமொழியில் வட்டார வழக்குக் கூறுகள் பல காணப்படுகின்றன. பிற கிளைமொழிகளில் எளிதாகப் புரிந்து கொள்ள இயலாதபடி அவ்வட்டார மக்களுக்கு மட்டுமே பொருள் புரியக்கூடிய சொற்கள் பல இக்கிளைமொழியில் வழங்கப்பெறுகின்றன.

முன்னோர் வழங்கிய சொற்களைப் பாதுகாக்கும் பெட்டகமாக விளங்குகிறது இக்கிளைமொழி. மொழி காலத்திற்கேற்ப மாறிவருவதால் பல பழஞ்சொற்கள் தமிழ்மொழியில் மறைந்துவிட்டாலும் தமிழ்க் கிளைமொழிகளில் இவ்வழக்குகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. தம் கருத்தை வெளியிடும் கருவியாகும் மொழியானது சொல்மாற்றமோ, சொற்பொருள் மாற்றமோ பெறுவதும் இயல்பே யாகும். இத்தகைய மாற்றங்களுக்கு வடக்கு வட்டாரக் கிளைமொழியும் உள்ளாகியுள்ளது.

தமிழக ஆந்திர எல்லையில் வழங்கும் வட்டார வழக்குகளைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

1) வட்டார வழக்குக் கூறுகள்
2) பிறமொழிச் சொற்கள்
3) பழந்தமிழ்ச் சொற்கள்
4) சொற்பொருள் மாற்றம்

**1) வட்டார வழக்குக் கூறுகள்**

ஒரு மொழி பேசப்படும் பகுதியில் அது வட்டாரச் செல்வாக்கைப் பெற்றுத் தனியொரு கிளைமொழியாக வழங்கப்படும். அத்தகைய வட்டார வழக்குக் கூறுகளை உடையதாக வடக்குக் கிளைமொழி சிறப்புப்பெற்று விளங்குகிறது.

| வட்டார வழக்கு | எழுத்து வழக்கு |
|---|---|
| அங்காடி | கடைத்தெரு |
| அத்தி | அத்தை |
| அதேமேரி /மேசி | அதைப்போல / அதை மாதிரி |
| அப்பிடியா கொண்டெது | அப்படிப்பட்டது |
| அம்மத்தொ(ம்) | அவ்வளவு |
| அமிசி | அனுப்பி |
| அயெகுதெட்டாது | அழகாக இருக்காது |
| அரியாலு | வாசக்கால் |
| அன்னாக்கொடி | அரைஞாண்கொடி |
| ஆண்டு வராது | போதுமானதாகாது |
| ஆரியொ(ம்) | கேழ்வரகு |
| இட்டுக்கினு | அழைத்துக்கொண்டு |
| இம்மத்தொ(ம்) | இவ்வளவு |
| இருக்கெபெட்டவெங்கெ | பணக்காரர்கள் / வசதி யானவர்கள் |

| | |
|---|---|
| இல்லாதெபெட்டவெங்கெ | ஏழைகள் / வசதியற்றவர்கள் |
| உல்மிலு | ஒரு வகையான மரம் |
| ஊனாங்கொடி | ஒருவகைக் கொடி (விறகாகப் பயன்படுத்துவது) |
| ஏசு | திட்டு |
| ஒசுந்துட்டா(ன்) | உயர்ந்துவிட்டான் |
| ஒட்டுசெ(டி) | பதியம் வைக்கப்பட்ட செடி |
| ஒண்டித்தா(ன்) | மட்டும்தான் |
| ஒத்தடொ(ம்) | உடல்வலியின்போது ஒற்றி எடுப்பது |
| ஒம்பதுநூறு | தொள்ளாயிரம் |
| ஒனெந்து | காய்ந்து |
| ஒரெவத்தி | கணவனின் உடன்பிறந்தாரின் மனைவி |
| கட்டுதிட்டொ(ம்) | கட்டுப்பாடு |
| கட்டெசொப்பு | மரத்தாலான விளையாட்டுப் பொருட்கள் |
| கண் மயக்கொ(ம்) | கண்ணுறக்கம் |
| கல்வரொ(ம்) | மாடுகட்டும் கொம்பு |
| கலக்கா | கடலைக்காய் (வேர்க்கடலை) |
| கலக்கா தோட்டொ(ம்) | வேர்க்கடலை நிலம் |
| கலுப்பு | களை |
| காயலு | காய்ச்சல் |
| காலு மோத்ரொ(ம்) | கால்மோதிரம் |
| கீயாண்டெ | கிழக்கில் |
| கீலெ | கிழக்கில் |
| குத்தி | குலை |
| குத்துவெ | குத்தகை |
| குரும்பரு | குறும்பர் |
| குல்லு | உடல் வேகுவது |
| குலி குலிச்சிட்சா | குழந்தை பிறந்ததா |
| குலி குலிசிட்டா | குழந்தை பிறந்துவிட்டது |
| கெல்லா செட்டி | சோறு வடிக்கும் பாத்திரம் |
| கெல்லு குண்டா(ன்) | கல்சட்டி |
| கொருடு | வானவில் |
| கொல்லி | கொல்லை / வயல் |
| கொனகித்தி | ஒருவகைமரம் |
| செப்பெ | தொடை |
| சமஞ்செ பசங்கெ | இளைஞர்கள் |
| சமிஞ்சிபோசி | வயதிற்கு வந்துவிட்டாள் |
| சவரசெனெ | வசதி |
| சன்சி | பை |

| | |
|---|---|
| சாமி | உயர் சாதியினர் |
| கானொக்கெ | பானைமூடும் தட்டு |
| சித்தப்பாரு | சிற்றப்பா (தந்தையின் தம்பி) |
| சிரிம்பானெ | சிறிய யானை (சிறும்பானை) |
| சிருசிருவா | சிறிது சிறிதாக |
| சீக்கு | நோய் |
| சீதலொ(ம்) | சீதனம் / குளிர்ச்சி |
| சீதாசெடி | சீதாமரம் |
| சீரா | ஒழுங்காக |
| சீரு | சீர் – பெருமை |
| சுக்கலு | நட்சத்திரங்கள் |
| சுடுவான் | சுடுவான் – வசும்பு |
| சுத்தி | சுத்தம் |
| சுப்புலு | காய்ந்த விறகு |
| செக்கெ முத்தி கல்லு | தீமூட்டும் கல் |
| செங்கிட்டி | களி (உணவு) |
| செச்சிப்பு | சிறியபானை |
| செமித்தியா(ம்) | நன்றாக / அதிகமாக |
| செனாரு | சத்தை |
| சொப்பு | விளையாட்டுப் பொருள் |
| சொள்ளெ | வேர்க்கடலைப்பருப்பு |
| சோமொ(ம்) | வேட்டி |
| சோரு செட்டி | சோறுசட்டி |
| டாக்சொம்பு | ஒருவகை குடிநீர் சொம்பு |
| டொப்பி | தொப்பி |
| டேக்கு | தேக்கு |
| தண்டெலகாயி | அவரைக்காய் |
| தம்தொ(ம்) | சிறிய அளவு |
| தாத்தி | வங்கி |
| தேகொ(ம்) | உடம்பு |
| தேங்கா ஓலெ | தென்னை ஓலை |
| தோண்டி | குடம் |
| தோரெகாயி | செங்காய் |
| நெல்லு பில்லு | வைக்கோல் |
| பராக்கு | வேடிக்கை |
| பிர்பாடு | பிறகு |
| பில்லெ | உடைந்த ஓட்டுத்துண்டு |
| புட்டு | இளநீர்ப் பிஞ்சி |
| பூட்டுவாங்கெ | அணிவார்கள் |

| | |
|---|---|
| பெல்லா செட்டி | சோற்றுக் கஞ்சி வடிக்கும் பாத்திரம் |
| பாதெ | உபாதை (உடல்வலி) |
| மக்காரி | கூடை (தானியங்கள் அள்ளிக்கொண்டு போகப் பயன்படுத்துவது) |
| மச்சாத்தி | மனைவின் தங்கை |
| மச்சி | அண்ணி |
| மச்சினா | மனைவியின் தங்கை |
| மச்செனெ(ன்) | கணவரின் தம்பி |
| மண்டெ | மெல்லிய விறகுகள் |
| மாங்காப்பயொ | மாம்பழம் |
| மானொா(ம்) | வானம் |
| மிச்சமா இருக்கு | அதிகமாக இருக்கிறது |
| முக்கா பாகொா(ம்) | முக்கால் பகுதி |
| முக்காவாசி | முக்கால் பகுதி |
| மொண்டி | முரட்டுக்குணம் உடையவர் |
| மேல்பட்டு | மேற்கொண்டு |
| மேனாமினிக்கி | அழகு செய்துகொள்பவள் |
| ரேக்கு | இதழ் |
| ரோதெனே | துன்பம் |
| வத்திப்பெட்டி | தீப்பெட்டி |
| வாம்மே | வாடி |
| வானெலு | வாணல் |
| வெங்காஸி கல்லு | தீமூட்டும் கல் |
| வெல்லாமெ | வேளாண்மை |
| வேக்காடு | புழுக்கம் |
| வேடரு | வேடர் |

## 2) அயல்மொழிச் சொற்கள்

தமிழக – ஆந்திர மாவட்டங்களை பிற்காலம் தொடங்கி இந்நாள் வரை பெரும்பாலும் நவாபு, தெலுங்கு மன்னர்களின் ஆட்சியிலேயே அப்பகுதி இருந்து வந்ததை அறியலாம். இதன் காரணமாகப் பல கடன்பேற்றுச் சொற்கள் தமிழக வடக்குக் கிளைமொழியில் இடம்பெற்றுப் பிற கிளைமொழிகளிலிருந்து இக்கிளைமொழியை வேறுபடுத்துவதாக அமைந்துள்ளது.

தமிழ்மொழியில் தெலுங்குமொழித் தாக்கம் மட்டுமன்றிக், கன்னடம், மராத்தி, அரபு, பெர்சி மொழி, உருது, போர்ச்சுகீசம், டச்சு, இந்தி மொழி போன்ற பலமொழிச் சொற்கள் இவ்வட்டாரத்தில் வழங்கப்படுவதாக விளங்குகின்றன. இச்சொற்கள் தெலுங்கு மொழிக்கு வந்து தெலுங்கு மொழியின் மூலமாகவும் தமிழில் நுழைந்துள்ளன. ஆட்சியில் உள்ள பிறமொழியாளர்களும் இம்மொழிக் கலப்பிற்குக் காரணமாக விளங்குகின்றனர்.

**1) கன்னடமொழி**

| | | |
|---|---|---|
| தண்டால் | தண்டாலு | 'ஒரு வகையான உடற்பயிற்சி முறை' |
| பட்டா | பட்டாக்கத்தி | 'வாள்வகை' |
| சமாலிசு | சமாலிசி | 'சமாளித்து' |
| சொத்து | சொத்து | 'சொத்து' |

**2) மராத்தி மொழி**

| | | |
|---|---|---|
| காகர | காய்தொ(ம்) | 'காகிதம்' |
| குண்டா | குண்டானு | 'ஒரு வகையான பாத்திரம்' |
| சாம்பார் | சாம்பாரு | 'பருப்புக்குழம்பு' |
| மாடி | மாடி | 'தளமுள்ள வீடு' |

**3) அராபிய மொழி**

| | | |
|---|---|---|
| சவால் | செவாலு | 'பந்தயம்' |
| மாமூல் | மாமூலு | 'வழக்கம்' |
| ஜல்ச | ஜலுசா | 'ஆடரம்பரச் செலவு' |

**4) பெர்சி மொழி**

| | | |
|---|---|---|
| சாவாரி | சவாரி | 'பயணம்' |
| தம் | தம்மு | 'மூச்சுப் பிடித்தல்' |
| நாஷிதா | நாஸ்டா | 'காலை உணவு' |
| லுங்கீ | லுங்கி | 'ஆடவர் வீட்டில் அணியும் ஆடை' |

**5) உருது மொழி**

| | | |
|---|---|---|
| இஸ்த்ரி | இஸ்திரி | 'ஆடை' |
| காலீ | காலி | 'வெற்றிடம்' |
| கோந் | கோந்து | 'பிசின் |
| பேமானி | பேமானி | 'காற்றாடியின் கயிற்றினை வலிமையாக்குவது' |
| மோடா | மோட்டா | 'பெரிய / திடம்' |
| லோடா | லோட்டா | 'சிறிய தம்ளர்' |

**6) போர்ச்சுகீசு மொழி**

| | | |
|---|---|---|
| பௌடெய்ல்லெ | புட்டி | 'கண்ணாடி கலன்' |
| மெஸ்த்ரெ | மேஸ்த்திரி | 'கண்காணிப்பாளர்' |

**7) டச்சு மொழி**

| | | |
|---|---|---|
| த்யூட் | துட்டு | 'பணம்' |

**8) இந்திமொழி**

| | | |
|---|---|---|
| தோஸ்த் | தோஸ்த்து | 'நண்பர்' |

## 3) பழந்தமிழ்ச் சொற்கள்

பொதுத்தமிழில் பயன்படுத்தப்படாத, அவ்வழக்கிலிருந்து மறைந்த பழந்தமிழ்ச்சொற்கள் தமிழ்மொழியின் வடக்குக் கிளைமொழியில் இன்றும் வழங்கப்படுகின்றன.

| பழந்தமிழ் சொற்கள் | வட்டார வழக்கு | பொருள் |
|---|---|---|
| மயக்கம் | மழக்கொ(ம்) | 'தயக்கம்' |
| சிந்தம் | சிந்தொ(ம்) | 'புளி' |
| பிண்டி | பிண்டி | 'மாவு' |
| அங்காடி | அங்காடி | 'அங்காடி' |
| கிடாரி | கெடேரி | 'பெண் கன்று' |
| சில்லி | சில்லி | 'சிறிய ஓட்டை' |
| சுப்பல் | சுப்புலு | 'காய்ந்த மெல்லிய விறகுகள்' |
| தடவு | தடுவு | 'தேடு' |
| மெய் | மெய்யி | 'தேடு(தல்)' |
| சேங்கன்று | சேங்கென்னு | 'இளங்கன்று' |
| தலைமகன் | தலெமவெ(ன்) | 'தலைமகன்' |
| அச்சம் | அச்சொ(ம்) | 'அச்சம்' |
| அறியேன் | அரியே(ன்) | 'அறியேன்' |

சில சொற்கள் பழந்தமிழிலிருந்தவை இன்று சற்று வடிவ மாற்றத்துடன் வழங்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| கொண்டி | கொட்டி | 'குழந்தையில்லாதவள்' |
| கெட்டி | கெட்டி | 'திடம்' |
| கவிச்சி | கெவ்சி | 'அசைவ நாற்றம்/துர்நாற்றம்' |
| கௌல் | கவுலு | 'துர்நாற்றம்' |

கூட்டுச் சொற்கள் இடம்பெறும் போதும் பழமையான தமிழ்ச் சொற்களின் வழக்கை இக்கிளைமொழியில் காணமுடிகிறது.

| | | |
|---|---|---|
| அந்த அண்டை | அன்னாண்டெ | 'அந்தப்பக்கம்' |
| பெரும்பகுதி | பேர்பாதி | 'பெரும்பகுதி' |
| பெருங்குளவி | பெருங்கொலி | ' பெருங்குளவி' |
| அப்பால்போ | அப்பாலெப்போ | 'அப்பால் செல்' |
| தென்படவில்லை | தெம்புட்ல | 'தென்படவில்லை' |
| அகப்படவில்லை | ஆப்புட்லெ | 'அகப்படவில்லை' |

## 4) சொற்பொருள் மாற்றம்

சொற்கள் தான் வழங்கும் அதே பொருளில்தான் வழங்கவேண்டும் என்ற நியதில்லை. மொழி மாற்றத்திற்கு சொற்பொருள் மாற்றம் ஒரு வரலாற்றுச்

சான்றாக விளங்குகிறது. இன்று தமிழில் வழங்கும் கிளைமொழிகள் இக்கூற்றை மெய்ப்படுத்துவதாக விளங்குகின்றன. ஒரு சொல்லின் பொருள் தன் பழம்பொருளிலிருந்து சற்று விலகியோ அல்லது பெரும்பாலும் விலகியோ தன் பொருளிலிருந்து மாறி வழங்கப்படலாம்.

இச்சொற்பொருள் மாற்றத்திற்கு வரலாற்றுச் சூழல், மொழிச்சூழல், சமூகச் சூழல் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்று காரணமாக அமையலாம். அவ்வாறு பொருள் மாற்றத்திற்கு உள்ளான சொற்கள் பல தமிழக ஆந்திர எல்லையில் வழங்கும் வடக்குக் கிளைமொழியில் மண்டிக் கிடக்கின்றன.

'**கொண்டி**' என்ற பழந்தமிழ்ச் சொல் 'அடங்காத பெண்' மற்றும் 'மோசமானவள்' என்ற பொருளில் வழங்கியது. அச்சொல்லானது ***கொட்டி*** என ஒலிமாற்றத்துடன் பொருள் மாற்றமும் அடைந்து 'குழந்தை இல்லாதவன்' என்ற பொருளைத் தருகிறது.

'**தூரம்**' என்ற சொல் இட அளவைக் குறிப்பது பொதுத்தமிழ் வழக்கு. இவ்வட்டாரத்தில் நேர அளவையும் குறிக்கிறது. 'கொஞ்சம் *தூரப்* பேசு' என்ற தொடரில் 'கொஞ்ச நேரம் பேசு' என நேரப்பொருளையும் தருகிறது. தூரத்தைக் குறிக்க 'தொலைவு' என்ற சொல்லே பயன்படுத்தப்படுகின்றது.

'**கலவரம்**' என்ற சொல் தற்காலப் பொதுத் தமிழில் 'சண்டை', 'பிரச்சனை' போன்ற பொருள்களில் வழங்கி வர இக்கிளைமொழியில் 'மனக்குழப்பம்', '*ஞாபகம்*' போன்ற பொருள்களில் வழங்கி வருகிறது. தமிழில் இப்பொருள் சற்று மாறிவிட, தெலுங்கு மொழியிலோ அவ்வட்டாரப் பேச்சு வழக்கில் உள்ள பொருளில் தான் வழங்கி வருகின்றது.

'**சுகம்**' என்ற சொல் 'நலம்' என்ற பொருளில் தற்கால வழக்கில் வழங்கிவர, வடக்குக்கிளை மொழியிலோ '*பயன்*' என்ற பொருளில் வழங்கி வருகிறது. 'அவளால் ஒரு சுகமும் இல்லை' எனில், 'ஒரு பயனும் இல்லை' என்ற பொருளைத் தான் தருகிறது.

'**கலந்தனர்**' என்ற சொல்லும் தற்போதுள்ள பொதுப் பேச்சுத்தமிழில் ஏதோ ஒரு அஃறிணைப் பொருளைக் கலத்தலையே குறிப்பிடுகின்றது. ஆனால், வடக்கு வட்டாரத்திலே '*சேர்ந்தனர்*' அல்லது '*பழகினர்*' என்று உயர்திணையையே குறிக்க வழங்குகின்றது. 'அவர்கள் நன்றாகக் கலந்துவிட்டார்கள்' என்பது 'பழகி விட்டார்கள்' என்ற பொருளிலேயே வழங்குகின்றது.

'**குடி**' என்ற சொல் தமிழில் நீர்ப்பொருளைக் குடித்தலையே குறித்து வழக்கில் உள்ளது. ஆனால் இவ்வட்டாரத்தில் '*குடி*' என்பது உண்ணல், தின்னல் என்ற பொருளிலும் வழங்கப்படுகின்றது.

'மருந்து குடி' என்பதில் திரவப்பொருளையும் 'மாத்திரை குடி' என்பதில் திடப்பொருளை விழுங்குவதையும் குறிப்பிடுகின்றது. தெலுங்குச் சொல் 'குடி' என்பது உண்ணல், குடித்தல் இருபொருளிலும் வழங்கப்படுவதால் அம்மொழிச் செல்வாக்கால் இப்பொருள் மாற்றம் நிகழ்ந்திருக்கிறது என்பது புலனாகிறது.

'நடை' என்பது நடத்தல் என்ற பொருளில் பொதுத்தமிழில் வழங்கப்படுகின்றது. ஆனால், இவ்வட்டாரத்தில் *'பயணம்'* என்ற பொருளிலும் வழங்கப்படுகின்றது. 'ஒரு நடை போய்விட்டு வா' என்பதில் 'ஒரு முறை பயணம் செய்துவிட்டு வா' என்று பயணப்பொருளையும் தருகிறது.

பொதுவாக 'நீட்டு' (நீளம்) என்ற சொல் நீளமாக உள்ளனவற்றைக் குறிக்கும். ஆனால் வடக்குக் கிளைமொழியிலோ *'நேராக'* என்ற பொருளிலும் வழங்குகிறது. 'நீட்டாகப் போ' என்பதை 'நேராகச் செல்' என்ற பொருளிலே வழங்குகின்றனர்.

'குலை' என்ற தமிழ்ச்சொல் *'பழக்குலை'* என்ற தொகுதிப் பொருளைக் குறித்து வருகிறது. வடக்கு வட்டாரமொழியில் 'குலை' என்பது 'அச்சத்தில் குலை நடுங்குகிறது' என்ற பயத்தின் காரணமாக உடல் உறுப்புகளைக் குறிக்கவும் பயன்படுத்தப்படுகின்றது.

'மயக்கம்' என்ற சொல் தற்காலத்தமிழில் உடல்சோர்ந்து மயக்கம் அடைதலைக் குறிக்கிறது. வடக்குக் கிளைமொழியில் பழந்தமிழ்ச் சொல் வழங்கிய *'தயக்கம்'* என்ற பொருளிலேயே வழங்குகிறது.

இவ்வாறு பல சொற்கள் வடக்கு வட்டாரக் கிளைமொழியில் தம் பழம்பொருளிலேயோ அல்லது பொருள்மாறித் தொடர்புடைய வேறுபொருளிலேயோ வழங்கித் தமிழ் மொழியின் வளர்ச்சி நிலையினை உணர்த்துவதாக விளங்குகின்றன.

## இலக்கண மாற்றம்

ஒரு கிளைமொழியிலிருந்து வேறு கிளைமொழியை வேறுபடுத்துவதில் இலக்கண மாற்றமும் முக்கியப் பங்கு வகிக்கின்றது. தமிழ் மொழியின் வடக்குக் கிளைமொழியிலும் பல இலக்கண மாற்றங்கள் காணப்படுகின்றன.

**1) வேற்றுமை உருபுகள்**

**அ) இரண்டாம் வேற்றுமை**

தொடரமைப்பில் தனக்கென ஒரு தனியிடம் பெற்றவை இரண்டாம் வேற்றுமை உருபான – ஐ உருபு வேற்றுமை உருபாகும். இவ்வுருபு இவ்வட்டாரத்தில் ஏ என ஒலிக்கப்படுகிறது. உயர்திணையில் இவ்வுருபு கட்டாயமாகத் தேவைப்படுகிறது.

அவனெ பாத்தொ(ன்)

தொல்காப்பிய – ஐ உருபிற்கு விளக்கம் கூறவந்த சேனாவரையர் 'நெறியைச் சென்றான்' என சான்று வழங்குவார். இவ்வட்டாரத்தில் இவ்வழக்கு தக்க வைக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| வலியெப் போனா(ன்) | வழியாகப் போனான் |
| ஊரெப் போனா(ன்) | ஊருக்குப் போனான் |

**ஆ) மூன்றாம் வேற்றுமை**

தற்கால வழக்கில் மூன்றாம் வேற்றுமை உருபான–உடன் இவ்வட்டார வழக்கில் – கூடெ என்ற உடனிகழ்ச்சி வேற்றுமையாக வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| அவ(ள்) + கூட > அவளாக் கூடெ | 'அவளுடன்' |
| இது + கூட > இதாக்கூடெ | 'இதனுடன்' |
| மாடு + கூட > மாடாக்கூடெ | 'மாட்டுடன்' |
| கொடி + கூட > கொடியாக்கூடெ | 'கொடியுடன்' |
| பையன் + கூட > பையனாக்கூடெ | 'பையனுடன்' |

**இ) நான்காம் வேற்றுமை**

கொடைப்பொருளில் வரும் நான்காம் வேற்றுமை உருபான – குகரம் தன் உருபில் மாறாமல் அதே வடிவத்துடன் வழங்கப்படுகிறது.

**ஈ) ஐந்தாம் வேற்றுமை**

நீங்கல் பொருளில் இடம்பெறும் ஐந்தாம் வேற்றுமை உருபான – இல் தன் சொல் உருபுடன் வேறு உருபுகளையும் பெற்று வருவது இவ்வட்டார வழக்கின் தன்மையாகும்.

| | |
|---|---|
| அந்தாண்ட இருந்து | 'அந்தப் பக்கமிருந்து' |
| அப்பாவாண்ட இருந்து | 'அப்பாவிடம் இருந்து' |
| எடையராண்ட இருந்து | 'இடையரிடமிருந்து' |
| மலையாண்ட இருந்து | 'மலையிடமிருந்து' |

இவ்வாறு – அண்டெ என்ற சொல் அவ்விடமிருந்து என்ற நீங்கல் பொருளை உணர்த்தி நிற்கிறது.

**உ) ஆறாம் வேற்றுமை**

– அது என்ற ஆறாம் வேற்றுமை உருபு வடக்குக்கிளைமொழியில் பயின்று வருவதில்லை. அதற்கு இணையாக உடையது என்ற சொல்லுருபு பயன்பட்டாலும் உடைய என்ற உருபு மறைந்து இறுதி துகரம் மட்டும் நின்று ஆறாம் வேற்றுமைப் பொருளில் வழங்குவதாக இடம்பெறுகிறது.

| | |
|---|---|
| ஊருது | 'ஊரினுடையது' |
| அவலுது | 'அவளுடையது' |
| எங்குலுது | 'எங்களுடையது' |

வாக்கியத்தில் பயனிலையாக வருமிடத்து ஆறாம் வேற்றுமை உருபான – துகரம் பெற்று உடைமைப் பொருளை விளக்குகிறது.

**ஊ) ஏழாம் வேற்றுமை**

இடத்தைக் குறிப்பிடும் ஏழாம் வேற்றுமை உருபான – இடம் என்பதற்குப் பதிலாக – ஆண்ட என்ற சொல்லுருபு பயன்படுத்தப்படுகிறது.

| | |
|---|---|
| ஊட்டாண்டெ | 'வீட்டில்' |
| தெருவாண்டெ | 'தெருவிடத்தில்' |
| ஊராண்டெ | 'ஊரில்' |
| கொயாவாண்டெ | 'குழாயிடத்தில்' |

திசையைக் குறிக்கும் போது ஏழாம் வேற்றுமைப் பொருளில் வழங்கும் வழக்கும் – ஆண்ட என்ற உருபுடனே இடம் பெறுகின்றன.

| | |
|---|---|
| கீயாண்டெ | 'கிழக்குப் பக்கத்தில்' |
| மேலாண்டெ | 'மேற்குப் பக்கத்தில்' |
| தென்னாண்டெ | 'தெற்குப் பக்கத்தில்' |
| வடவாண்டெ | 'வடக்குப் பக்கத்தில்' |

**எ) எட்டாம் வேற்றுமை**

விளித்தல் பொருளில் வரும் எட்டாம் வேற்றுமை உறவுப் பெயர்களுடன் வரும்போது அழைத்தல், குறித்தல் என்ற வேறுபாடின்றிப் பெரும்பாலும் இவ்விரண்டிற்கும் ஒரே சொல்லையே பயன்படுத்துகின்றனர்.

| | | |
|---|---|---|
| தாய் | – | தாயே |
| மாமன் | – | மாமெ(ன்) |
| தம்பி | – | தம்பீ |

**2) இடைச்சொற்கள்**

1) இடைச்சொற்களில் நான்காம் வேற்றுமையை அடுத்துப் *பிறகு, மேற்பட்டு* என்ற சொற்களைக் குறிக்க ***மேட்டு*** என்ற சொல் பயன்படுத்தப் படுகிறது.

| | |
|---|---|
| அப்பரமேட்டு | 'அதற்கு மேற்பட்டு' |

2) செய்தால் என்பதிலுள்ள ***ஆல்*** என்ற இடைச்சொல் ஆக்கா என்ற உருபாக மாற்றம் பெற்றுள்ளது.

| | |
|---|---|
| நட்டாக்கா | 'நட்டால்' |
| போனாக்கா | 'போனால்' |
| சொன்னாக்கா | 'சொன்னால்' |

3) மல் என்ற எதிர்மறை வினையெச்ச விகுதியான அல் பயன்படுத்தப் படுவதில்லை. இடையில் வரும் மகரமே வினையெச்ச விகுதியாக நிற்கிறது.

| | |
|---|---|
| செய்யாமெ | 'செய்யாமல்' |

4) நான்காம் மற்றும் ஏழாம் வேற்றுமை உருபுகளுக்கு இணையாக – **மேலே** என்ற உருபு பயன்படுத்தப்படுகிறது.

| | |
|---|---|
| வேலூர் மேலெ போனா(ன்) | 'வேலூருக்குப் போனான்' |
| தெருவு மேலே போனா(ன்) | 'தெருவில் போனான்' |

**5) பொழுதிற்குள், வேளைக்குள் என்று** நேரத்தைக் குறிக்கும் இடைச்சொற்கள் 'போதிக்கு' வேலெக்கு' என்று திரிந்து வினைச் சொல்லுடன் பயின்று வருகின்றன.

போரபோதிக்கு 'போகும் பொழுதிற்குள்'
துன்ரபோதிக்கு 'உண்ணும் பொழுதிற்குள்'
தேடரபோதிக்கு 'தேடுகிற பொழுதிற்குள்'
போரவேலெக்கு 'போகும் வேளைக்குள்'
தேடரவேலெக்கு 'தேடும் வேளைக்குள்'

**6) தேவை இல்லையா** என்பதற்கு இணையாக 'தல்லியா' என்ற சொல் வினையுடன் சேர்ந்து வரக் காணலாம்.

போத்தல்லியா 'போகத் தேவையில்லையா'
பாக்கத்தல்லியா 'பார்க்கத் தேவையில்லையா'
கேக்கத்தல்லியா 'கேட்கத் தேவையில்லையா'

**7) இந்த அளவு** என்று அளவின் தன்மையைக் குறிக்கப் பயன்படுத்தும் சொல் சிதைந்த நிலையை அடைந்துள்ளது.

இம்மாத்தொ(ம்) 'இவ்வளவு'
எம்மாத்தொ(ம்) 'எவ்வளவு'
தம்மாத்தொ(ம்) 'சிறிதளவு'

8) பன்மையைக் குறித்தும் – **கள்** விகுதி அஃறிணையில் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றது. உயர்திணையில் பெரும்பாலும் – 'மார்' என்ற பன்மை விகுதி வழக்கத்தில் உள்ளது. பழந்தமிழ் இலக்கணக் கூறுகளுள் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

"ரஃகான் ஒற்றும் பகர இறுதியும்
மாரைக் கிளவி உளப்பட மூன்றும்
நேரத் தோன்றும் பலரறி சொல்லே" (தொல். சொல்.)

தம்பிமாரு 'தம்பிமார்'
அன்னெ(ன்)மாரு 'அண்ணன்மார்'
மாமெ(ன்)மாரு 'மாமன்மார்'

9) பெண்பாலிலும் அஃறிணையிலும் வரும்போது – 'கள்' விகுதி திரிந்து ***'ங்க'*** என்ற பன்மை விகுதி பயன்படுத்தப்படுகின்றது.

மாமிங்க 'மாமிகள்'
அம்மாங்கெ 'அம்மாக்கள்'
செடிங்கெ 'செடிகள்'
படிங்கெ 'படிகள்'

10) 'உம்' என்ற இணைப்பு இடைச்சொல் சிலவிடங்களில் பயன்படுத்தப்படுவதில்லை. இல்லையெனினும், பயன்படுத்தும் போதுள்ள பொருள் மாற்றமின்றி 'உம்' உருபு வழக்கத்தில் இல்லையெனினும் வாக்கியம் அமைகின்றது.

அன்னெ(ன்) தெம்பி 'அண்ணனும் தம்பியும்'
ரோஜா மெல்லி 'ரோஜாவும் மல்லியும்'

11) இருபெயரொட்டுப் பண்புத் தொகையில் முதலில் உள்ள சிறப்புபெயர் இடம் பெற்றும் அடுத்து வரும் பொதுப்பெயர் இடம் பெறாமல் இருப்பினும் பொருள் புரிந்து கொள்ளப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அல்லிங்கெ | – | அல்லிப்பூக்கள் |
| செம்பெங்கிங்க | – | சம்பங்கிப் பூக்கள் |
| மல்லிங்கெ | – | மல்லிகைப் பூக்கள் |

12) ஆண்பாலைக் குறிக்க காரன் பயன்படுத்தப்படுவதுபோல, பெண்பாலைக் குறிக்க காரி என்ற பின்னொட்டு பயன்படுத்தப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| கொண்டெக்காரி | – | கொண்டை போட்டவள் |
| வெட்டிக்காரி | – | பணம் வட்டிக்கு விடுபவள் |
| ஆட்டெக்காரி | – | ஆட்டம் ஆடுபவள் |
| வேசக்காரி | – | நடிப்பவள் |
| சாடக்காரி | – | சாடையாகப் பேசுபவள் |

13) 'இருப்பதனால்' என்ற சொல்லில் இடம்பெறும் '–அதனால்' போன்ற இணைப்பு இடைச்சொல்லுக்குப் பதிலாக '–வாசி' என்ற பின்னுருபு வழக்கத்தில் பயன்படுத்தப்படுகின்றது.

நெல்லா இருக்க வாசி 'நன்றாக இருப்பதனால்'
ஆயமா உயுரவாசி 'ஆழமாக உழுவதனால்'
மோசமா படிக்கிறவாசி 'மோசமாகப் படிப்பதால்'

இத்தகைய பல மாற்றங்களை உடையதாகத் தமிழக ஆந்திர எல்லையின் வட்டாரக் கிளைமொழி தமிழ் மொழி ஆய்வில் தனக்கென தனியிடத்தைப் பெற்றுப் பல இலக்கணக் கூறுகளில் தமிழின் பிற கிளைமொழிகளிலிருந்து வேறுபட்டு நிற்கின்றது.

தமிழ் வடக்குக் கிளைமொழியானது பொதுவாகப் பல மாற்றங்களைப் பெற்று விளங்கினாலும் ஒலி மாற்றமே முதன்மையான இடம் வகிக்கின்றது எனலாம். வரலாறு, வட்டாரம், சமூகம் எனப் பல காரணிகளின் மூலமாக இத்தகைய மொழி மாற்றங்கள் ஏற்படுகின்றன. பிற கிளைமொழிகளிலிருந்து வேறுபட்டிருப்பினும் இக்கிளைமொழியும் பெரும்பாலும் ஒரு இலக்கண வரம்புக்குள்ளே இயங்குகின்றது எனலாம்.

சொல்லாய்வும், சொற்பொருள் ஆய்வும் இக்கிளைமொழியில் ஒரு சிறந்த

இடத்தை வகிக்கின்றன. பல பழந்தமிழ்ச் சொற்களும் அவற்றில் ஏற்பட்டுள்ள மாற்றங்களும், அம்மாற்றங்களையும் மீறி அச்சொற்களின் நிலைத்த வாழ்வும் ஆகிய அனைத்தும் ஆய்வாளர்களுக்குக் கிடைத்த சிறந்ததொரு ஆய்வுப்பொருளாகக் கொள்ளலாம். பல சொற்பிறப்புகளுக்குக் களனாக விளங்குகிறது இக்கிளைமொழி.

கால ஒட்டத்தில் சொற்களின் பொருள் மாறுபடும் தன்மையுடையதால் இன்றும் நிலைத்து வரும் பழமையான சொற்பொருள்களைக் கொண்டு விளங்குதல், மூலப் பொருளிலிருந்து சற்று மாற்றம் அடைந்துள்ளமை, முழுவதும் மாறியுள்ளமை எனப் பல கோணங்களில் ஆய்வு செய்வதற்கு உரிய களனாக இக்கிளைமொழி வழக்குச் செம்மையுற்று விளக்குகிறது. இலக்கணத்தைப் பொறுத்தவரை பெரும் மாற்றம் இல்லையெனினும் ஒலி மாற்றம் இலக்கண மாற்றத்திற்கும் வழிவகுத்து நிற்பதாக அமைந்துள்ளது இவ்வட்டார மொழி. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு மேற்கூறிய அனைத்துக் கூறுகளையும் தனித்தனியாக ஆய்வு செய்வதற்குரிய பெரும்மொழிக்களனாக இக்கிளைமொழி பயனுடையதாக விளங்குகிறது.

# தமிழ் மொழியில் தெலுங்கு மொழியின் தாக்கம்

ஒரு வட்டாரத்தில் மக்கள் தமக்குள் ஒன்றுபட்டிருக்க ஏற்பட்ட தொன்றுதொட்ட பேச்சொலிக் குறியீட்டை மொழி எனலாம். மொழியானது இடத்திற்கு இடம் மாறுபடும் தன்மையுடையது. மொழியியல் ஒன்றை மட்டும் கொண்டு மொழியில் ஏற்படும் பல்வேறு மாற்றங்களை விளக்குவது கடினம். குறிப்பிட்ட வட்டாரத்தில் பேசப்படும் பேச்சு மொழி அப்பகுதியில் வாழ்வோர் புரிந்துகொள்ளும் அளவிற்கு வேறுபாடின்றி இருத்தல் வேண்டும். இத்தகைய கிளைமொழிக் கூறுகளைப் பிற கிளைமொழியினர் ஓரளவு புரிந்து கொண்டாலும் வேறுபாடுகள் மிகுந்துள்ளதால்தான் இவற்றைத் தனிதனிக் கிளைமொழிகளாகக் கூறுகிறோம்.

## பொதுப் பேச்சுத்தமிழும் கிளைமொழியும்

தமிழக ஆந்திர எல்லையில் அமைந்துள்ள தமிழ்மொழியின் வடக்குக் கிளைமொழியைப் புரிந்து கொள்ளுதலே சற்றுக் கடினம், அதிலும் அயல்மொழியான தெலுங்கின் தாக்கமும் ஏற்படுவதால் அக்கிளைமொழியைத் தமிழகத்தின் தெற்குப் பகுதி மக்கள் புரிந்து கொள்வது மிகவும் கடினம். கற்ற மக்களிடையே ஓரளவு பொதுப் பேச்சுத்தமிழ் வழங்குவதால் அம்மக்கள் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருப்பினும் தமிழக ஆந்திர எல்லையில் வசிப்பவராக இருப்பினும் பல்வேறு இடப்பொதுப் பேச்சு வழக்குகளை உள்ளடக்கிய பொதுப்பேச்சுத் தமிழையே ***(Standard Dialect)*** பேசுவர்.

## கிளைமொழியும் இருமொழியமும்

கல்லாதவர்கள் மிகுந்துள்ள தமிழக ஆந்திர எல்லையில் பொதுப் பேச்சுத் தமிழ் உண்டாக வாய்ப்புகள் குறைவேயாகும். பொதுப் பேச்சுத்தமிழ் சிதைவதற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றுள் மிகவும் முக்கியக் காரணம் அண்டை மொழியான தெலுங்கின் குறுக்கீடே யாகும். வடக்குக் கிளைமொழி மக்கள் பேசும்போது தெலுங்கு மொழியின் சாயல் மிகுந்துள்ளது. இவ்வட்டார மொழியில் தமிழ் தெலுங்கு என இருமொழிகளும் தொடர்பு கொள்ளும்போது தெலுங்குமொழியே செல்வாக்கு மிக்கதாக விளங்குகிறது.

## தமிழர் – தெலுங்கர் மொழி உறவு

வடக்குக் கிளைமொழி வழங்கும் தமிழக ஆந்திர எல்லையில் மலைத்தொடர்களும் ஆறுகளும், இருமாநிலங்களுக்கான வரம்பாக அமைந்துள்ளன. எல்லைகளும் பெரும்பாலும் இயற்கையை ஒட்டியே

பிரிக்கப்பட்டுள்ளன. இருப்பினும் வட்டாரப் பிரிவினையில் வருந்துதற்குரிய நிகழ்ச்சிகளும் பல உள்ளன. தமிழக ஆந்திர எல்லையில் நகரிக்கு அருகிலுள்ள சத்திரவாடா என்னும் கிராமம் முழுமையும் தமிழ் மக்களைக் கொண்டிருப்பினும் ஆந்திரத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது. தமிழ் மக்கள் அவ்வெல்லைப் பிரிவினையை விரும்பாதபோதும் சில அரசியல் காரணங்களால் ஆந்திரத்துடன் இருக்க வேண்டிய நிலை உருவாகியது. தமிழக வட எல்லையிலுள்ள தமிழ் மக்கள் பல காரணங்களால் தெலுங்கர்களுடன் மொழித்தொடர்பு கொள்ள வேண்டி யுள்ளதால் தெலுங்குமொழியின் தாக்கம் தமிழ்மொழியில் பல்வேறு மொழிக் கூறுகளிலும் காணப்படுகின்றது.

## தமிழில் தெலுங்கு மொழியின் தாக்கம்

அண்டை மாநிலமொழியான தெலுங்கு மொழி தமிழக – ஆந்திர எல்லையில் பெரும்பான்மையோர் அறிந்த மொழியாக உள்ளது. தமிழகத்தின் பிற மேற்கு எல்லையில் வாழுகின்ற தமிழர் பேசும் தமிழ்மொழி மலையாள மொழியின் தாக்குதலுக்கு ஆளாகியுள்ளதை நாம் நன்கு அறிவோம். பாலக்காடு, கன்னியாகுமரி மாவட்டத் தமிழர்கள் தமிழே பேசினாலும் அம்மொழியில் அண்டை மாநில மொழியான மலையாள மொழியின் தாக்கத்தை நம்மால் உணரமுடியும். தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தி அவர்கள் உரையாடினாலும் மலையாள மொழியின் ஒலிக்குறுக்கீட்டை நம்மால் உணரமுடியும். இதே நிலைதான் தமிழக ஆந்திர எல்லையில் அமைந்துள்ள பகுதிகளிலும் ஏற்பட்டுள்ளது. வழக்கு வேறுபாடுகள் ஒலி வேறுபாடுகள் எனப் பலவித வேறுபாடுகளுடன் தனித்தொரு மொழியோ அல்லது தெலுங்கு மொழியோ என ஐயுறும் வகையில் காரணமாக அமைந்துள்ளது தமிழின் வடக்கு வட்டாரக் கிளைமொழி எனலாம்.

## வடக்குக் கிளைமொழி சிதைந்த வடிவமா?

கிளைமொழிகள் திருந்தா வடிவத்தை உடையன. சிதைந்த வடிவத்தைக் கொண்டதாக விளங்குகின்றன என்று கூறுவது பொருத்தமானதா? தமிழின் பிற கிளைமொழிகளை நோக்கும்போது இக்கூற்று சிந்தித்துப் பார்க்க வேண்டியதாகின்றது. தமிழக ஆந்திர எல்லையில் தெலுங்கு மொழியின் பின்னணியில் வழங்கப்படும் வடக்குக் கிளைமொழி தமிழல்லாத வேறொரு மொழியோ என்று கூறுமளவிற்குக் கூட வேறுபாடுகளை உடையதாக இருப்பதைக் கண்டோம். தமிழின் சிதைந்த வடிவமாக மாறவிருந்த வடக்குக் கிளைமொழியின் வடிவத்தைத் தமிழின் பொதுப்பேச்சுமொழிக்குத் திசைதிருப்பக் கூடியது மக்களுக்குள்ள கல்வி பற்றிய விழிப்புணர்வுதான் என்று கூறலாம்.

## இருமொழியாளர்கள்

வெவ்வேறு மொழி பேசும் இரு மாநில எல்லைப்பகுதியில் ஒரு மொழியின் தாக்கம் அண்டை மொழியைப் பாதிக்கும். அவ்வாறு பாதிக்கப்படும்போது ஒரு மொழி மற்றொரு மொழியின் செல்வாக்கைப் பெற்று விளங்கும். ஆய்வு

மேற்கொள்ளப்பட்ட பள்ளிப்பட்டுப் பகுதியில் (தமிழக – ஆந்திர எல்லை) பெரும்பாலான மக்கள் இருமொழியாளர்கள், ***(Bilinguals)*** தாய்மொழியான தமிழுக்கு ஈடாக அண்டை மொழியான தெலுங்கில் திறமை பெற்றுள்ளனர்.

இவ்வாறான இருமொழியாளர்களில் இரு வகையில் உள்ளனர். தாய்மொழியைப் பேசிக் கொண்டிருக்கும்போது பிறமொழியைக் கலப்பவரும் பிற மொழியைப் பேசிக் கொண்டிருக்கும்போது தாய்மொழியைக் கலப்பவருமாக இரண்டு வகையான இருமொழியாளர்கள் உளர். இருமொழியையும் அறிந்த ஒருவன் தாய்மொழியில் பேசும்போது பிறமொழியைக் கலப்பதைவிடப் பிறமொழியைப் பேசும்போது தாய்மொழியைக் கலந்து உரையாடுவான் என்பார் இ. அண்ணாமலை.[1]

## விதிவிலக்கு

பள்ளிப்பாட்டுப் பகுதியிலோ இருமொழியத்தின் நிலை அண்ணாமலை அவர்களின் கூற்றுக்குப் புறம்பாய் உள்ளது. தாய்மொழியான தமிழின் தாக்கத்தைவிட அண்டை மொழியான தெலுங்கின் தாக்கம்தான் மிகுதியாக உள்ளது. இதே நிலை கேரள – கர்நாடக எல்லையிலுள்ள காசர்கோடு பகுதியில் இருந்ததை ச. ஆரோக்கியநாதன்[2] குறிப்பிட்டுள்ளார். பள்ளிப்பட்டுப் பகுதியில் இந்நிலை ஏற்படக் காரணமாயிருந்தது அரசியல் சூழ்நிலையே ஆயினும் சமுதாயச் சூழலும் இதற்கு ஒரு காரணமாயிருந்தது. இவ்வட்டாரத்தில் தமிழர் தமிழில் பேசுவதைவிடத் தெலுங்குமொழியில் பேசுவதை உயர்வாக எண்ணினர். இவ்வாறு தாய்மொழிச் செல்வாக்குக் குறைந்து பிறமொழிச் செல்வாக்கு மிகுதியாவதற்குக் காரணங்கள் உண்டு. தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட ஒருவன் நண்பர்களுடன் உரையாடும்போது தன் ஆங்கிலப் புலமையை வெளிப்படுத்த வேண்டி ஆங்காங்கே பல ஆங்கிலச் சொற்களைக் கலந்து உரையாடுகின்றான். இது பிறமொழி மீது அவன் கொண்ட பற்று மூலமாக வருவதில்லை. பிறரை விடத் தன்னை உயர்த்திக் காட்டும் முனைப்பாலேயே அவ்வாறு பேசுகின்றான்.

## தேவையிருந்தும் இயலாமை

திருவள்ளுவர் மாவட்ட ஆரம்பாக்கத்தில் ஆண்களைக் காட்டிலும் பெண்கள் தமிழ், தெலுங்கு இரண்டிலும் பேசும் ஆற்றலைப் பெற்றுள்ளனர். இதற்கு மாறான நிலை திருப்பத்தூர் மாவட்ட கொத்தூரில் காணப்படுகிறது. மலையையே எல்லையாக உடைய இவ்வட்டாரத்தின் மக்களில் தெலுங்கினைப் புரிந்துகொண்ட

---

1. மு. சிவக்குமார், பேச்சுத் தமிழில் ஆங்கிலச் சொற்களின் ஆதிக்கம், மொழியியல், தொகுதி – 9.

2. மலையாள மொழி பேசும் கேரள மாநிலத்தில் காசர்கோடு இருந்தாலும் அங்குக் கன்னட மொழியின் ஆதிக்கமே கூடுதலாகக் காணப்படுகிறது. காசர்கோடு பகுதிகளில் மலையாள மொழியால் கன்னடம் பாதிக்கப்பட்டதை விடக் கன்னட மொழியால் மலையாளம் கூடுதலான பாதிப்பினைப் பெற்றுள்ளது.
   –ச. ஆரோக்கியநாதன், இருமொழி ஆய்வுகள்.

போதிலும் அம்மொழியில் பேசத் தெரியாத பெண்கள் உள்ளனர். இங்கு மலைக்கு மறுபுறம் (ஆந்திர மாநிலம்) இவர்தம் உறவினர் இருந்தும் பெண்கள் தெலுங்கு மொழியில் பேசும் ஆற்றலற்று விளங்குகின்றனர். ஆரம்பாக்கத்தில் பெண்கள் மீன் விற்பதற்கு வெளியில் சென்று வருகின்றனர். கொத்தூரில் வணிகப் பொருட்டாக ஆண்கள்தான் செல்கின்றனர். இத்தகைய முரண்பாடான நிலைகள் காணப்படும் இடங்களும் தமிழக ஆந்திர எல்லையில் அமைந்துள்ளன.

## மொழிக்கலப்பின் தன்மைகள்

இவ்வட்டாரத்தில் மொழிக்கலப்பு மிகுதியாதலால், தமிழ் மொழியில் ஏற்படும் தெலுங்குமொழியின் குறியீட்டைக் காணலாம். மொழிக்கலப்பு என்று குறிப்பிடும்போது, இவ்வட்டாரத்தில் சொற்கலப்புத்தான் மிகுந்துள்ளது. அதிலும், வினைச்சொல்லை விடப் பெயர்ச்சொல் கலப்பே மிகுதியாக உள்ளது. இம்மொழிக் கலப்புப் பற்றிக் குறிப்பிடும் ச. ஆரோக்கியநாதன்,[1] மற்றோரிடத்தில் "ஒரு மொழியில் பிறமொழியின் கலப்பு ஏற்படும்பொழுது பெயர்ச்சொல், வினைச் சொல், பெயரடைகள், வினையடைகள், முன்னிடைச் சொற்கள், வியப்பிடைச் சொற்கள் முதலியன இறங்குமுக எண்ணிக்கையில் (decreasing order) கலப்புறுகின்றன"[2] என்கிறார். இம்மொழிக் கலப்பின் விழுக்காடு பற்றிக் கூறும் ச. அகத்தியலிங்கம்[3] அவர்களும் இக்கருத்தைப் புலப்படுத்தி யுள்ளார்.

## மொழிக்கலப்பின் பகுப்புகள்

மொழிக்கலப்பு, மொழி மாறாட்டம் என்ற நிலையில் தமிழ், தெலுங்கு மொழிகளுள் மொழிக் குறுக்கீடு இருப்பினும், தமிழ் மொழியில்தான் தெலுங்கு மொழியின் குறுக்கீடு மிகுந்து காணப்படுகின்றது.

## மொழிக்கலப்பில் சொற்கள் பெறுமிடம்

மொழிக் கூறுகளுள் வடக்கு வட்டாரக் கிளைமொழியில் சொல்நிலை, தொடர்நிலை என்ற நிலைகளில் தெலுங்கு மொழியின் செல்வாக்கைக் காணமுடிகிறது. சொல்நிலைகளிலும் பெயர்ச்சொற்கள் மிகுதியாகக் கலந்துள்ளனவாகச் செல்வாக்குப் பெற்று விளங்குகின்றன.

பெயர்ச்சொற்களின் கலப்பிலும் வேளாண்மைத் தொடர்பான சொற்களே மிகுந்த கலப்புக்கு உள்ளாகின்றன. பள்ளிப்பட்டுப் பகுதியில் வேளாண்மை முதன்மைத் தொழில் என்பதால் அச்சொற்கள் மிகுதியாகப் பயன்படுத்தப் படுகின்றன.

பெயர்ச்சொற்களுக்கு அடுத்தநிலையில் உறவுமுறைச் சொற்கள், வீட்டில் பயன்படுத்தும் பாத்திரங்களின் பெயர்கள், உணவு வகைகள், மனித உடல்

1. ச. ஆரோக்கியநாதன், இருமொழி ஆய்வுகள்.ப.122
2. மேலது.ப.123
3. ச. அகத்தியலிங்கம், திராவிட மொழிகள் – 2, பக்.51

உறுப்புகள், இருப்பிடம் பற்றிய சொற்கள், நோயைக் குறிக்கும் சொற்கள், அளவைகளின் பெயர்கள், நேரம் பற்றிய சொற்கள், உடைகள், அணிகலன்கள், விளையாட்டுகள், பறவைகள், விலங்குகளின் பெயர்கள் ஆகியவற்றில் சொற்கலப்பு உண்டாகின்றது.

தமிழக ஆந்திர எல்லையில் வழங்கும் மொழிக்கலப்பையும் பல்வேறான மொழிக் கூறுகளின் அடிப்படையில் பிரித்தறிந்து அவற்றை இரு வகைகளாக் காட்டலாம்.அவ்வகைகள்,

1. சொல் குறுக்கீடு

2. தொடர் குறுக்கீடு

என்பனவாகும்.மொழிக்கலப்பு ஏற்படும் போது பொதுவாகவே அடிப்படையான சொற்களைக் கடன் பெறுவதில்லை. எனினும், தமிழக ஆந்திர எல்லையில் இதற்கு மாறான நிலை காணப்படுகிறது. அவ்வட்டார மக்களின் அடிப்படைத் தொழில் வேளாண்மை என்பதால் இத்தொழில் தொடர்பான சொற்களே மிகுதியாகக் கலந்துள்ளன.

## பெயர்ச்சொல் நிலை

தமிழில் உரையாடும்போது தெலுங்குச் சொற்கள் அப்படியே பயன்படுத்தப்படுகின்றன. அச்சொற்களுள் சிலவற்றைக் காணலாம்.

### வேளாண்மைத் தொடர்பான சொற்கள்

| | |
|---|---|
| ஆபோத்து | எருது |
| எர்ரெ மட்டி | சிவப்பு மண் |
| கசு | வைக்கோல் |
| காலி | காற்று |
| குண்டெ | குளம் |
| கொடவலி | அரிவாள் |
| செட்டு | செடி |
| தோட்டமு | தோட்டம் |
| துக்கி | உழவு |
| நானா | கடலை |
| நொகெ | ஏர்க்கால் |
| பாயி | கிணறு |
| பண்டெ | பாறை |
| வதலு பொட்டு | நெல் உமி |
| வாரி | கிணறு |

### பொதுவான பெயர்ச்சொற்கள்

| | |
|---|---|
| இல்லு | வீடு |
| காகி | காகம் |

| | |
|---|---|
| குட்லெ | துணி |
| குண்டா | குடம் |
| ஜனாலு | மக்கள் |
| செட்டு | மரம் |
| டப்பு | பணம் |
| தோமெ | கொசு |
| நெத்துரு | நெற்றி |
| நெலெ | மாதம் |
| பாலு | பால் |
| பிடிக்கிலு | பிணம் |
| பேதவாடு | ஏழை |
| வலெ | வலை |
| வீதி | தெரு |
| வெகமு | விஷம் |

## உறவுமுறைச் சொற்கள்

| | |
|---|---|
| அக்கா | அக்கா |
| அத்தெ | அத்தை |
| அல்லுடு | மருமகள் |
| அவ்வா | பாட்டி |
| அன்னா | அண்ணன் |
| ஆடெவாலு | பேரன் |
| ஆடுதி | பேத்தி |
| இன்டாய்னா | கணவர் |
| கூத்துரு | மகன் |
| கொடுக்கு | மகள் |
| சின்நாய்னா | சிற்றப்பா |
| செல்லி | தங்கை |
| முசலாம்மெ | கிழவி |
| முசுலொடு | கிழவன் |
| தம்புடு | தம்பி |
| தல்லி | தாய் |

## சமையலறையில் பயன்படுத்தும் பாத்திரங்கள் தொடர்பான சொற்கள்

| | |
|---|---|
| நிப்பு | நெருப்பு |
| உடி | உறி |
| பானெ | பானை |
| கெம்ப்பெ | கூடை |
| கடவெ | மண்குடம் |
| குண்டா(னு) | குடம் |

| | |
|---|---|
| கம்ப்பெ | கடை |
| கரிட்டெ | கரண்டி |
| கிண்ணெ | கிண்ணி |
| தீப்பம் | விளக்கு |
| ராகிபிண்டெ | செப்புக்குடம் |
| ரோலு | உரல் |

## வீடு தொடர்பான சொற்கள்

| | |
|---|---|
| கதி | அறை |
| கிட்டிக்கி | சன்னல் |
| குடிசெ | குடிசை |
| கோடெ | சுவர் |
| சேரு | நாற்காலி |
| ஸ்நானெகதி | குளியல்அறை |
| தூலொ(ம்) | தூண் |
| தொட்டி | தொட்டி |
| நேலெ | தரை |
| படெக்கெ | படுக்கை |
| படெக்கெ கதி | படுக்கை அறை |
| பலக்கெ | பலகை |
| பிகிஞ்சு | கட்டில் |
| பூஜெ கதி | பூசை அறை |
| பூரில்லு | கூரைவீடு |
| மேஜெ | மேசை |

## உணவுப் பொருட்களின் பெயர்கள்

| | |
|---|---|
| பீயொ | அரிசி |
| பப் | பருப்பு |
| கோதுமெ | கோதுமை |
| பிண்டி | மாவு |
| குட்டு | முட்டை |
| ரொட்டி | ரொட்டி |
| ஊரெக்கா | ஊறுகாய் |
| மிரப்பெகாயலு | மிளகாய் |
| சிந்த்தெபண்டு | புளியம்பழம் |
| ஆரியொ(ம்) | கேழ்வரகு |
| சாரு | ரசம் |
| உந்துபப்பு | உளுத்தம் பருப்பு |
| கந்திபப்பு | கடலைப் பருப்பு |

| | |
|---|---|
| அப்பலொா(ம்) | அப்பளம் |
| அம்பிலி | கூழ் |
| அன்னொா(ம்) | சோறு |
| ஆஹாரொா | உணவு |
| உத்துவடெ | உளுந்துவடை |
| சங்கிட்டி | களி |
| சாரு | ரசம் |
| நெய்யி | நெய் |
| நிப்பட்லு | அதிரசம் |
| நூனெ | எண்ணெய் |
| நூகு உண்டெ | எள்ளுருண்டை |
| பெருகன்னொாம் | தயிர் சாதம் |
| மஜ்ஜிகெ | மோர் |
| வடியாலு | வடகம் |
| வென்னெ | வெண்ணை |

## மனித் உடல் உறுப்புகள்

| | |
|---|---|
| உசுரு | உயிர் |
| ஒடுமு | இடுப்பு |
| ஒல்லு | உடல் |
| கன்னு | கண் |
| குண்டெகாயா | இருதயம் |
| காலு | கால் |
| கொான்ட்டு | தொண்டை |
| கடுப்பு | கடுப்பு |
| பொாட்டு | தொப்புள் |
| செய்யி | கை |
| புருவு | புருவம் |
| மொாகஞ்செய் | கை முட்டி |
| நாலு | நரம்பு |
| கோரு | நகம் |
| செவ்வு | காது |
| நொாரெடப்பா | நுரையீரல் |
| முகமு | முகம் |
| மூத்தரபிண்டம் | சிறுநீரகம் |
| முதுவு | முதுகு |
| மெடா | கழுத்து |
| ரொாம்மு | மார்பு |
| வாயி | வாய் |

| | |
|---|---|
| வேலு | விரல் |
| பல்லு | பல் |

**நோய்கள் பற்றிய சொற்கள்**

| | |
|---|---|
| அம்மவாரு | அம்மைநோய் |
| ஆவலிம்ப்பு | கொட்டாவி |
| கட்டெ | கட்டி |
| தக்கு | இருமல் |
| பெத்தரோகொ(ம்) | தொழுநோய் |
| பசிரிகா | மஞ்சள்காமாலை |
| பெத்தம்மெ | பெரியம்மை |
| ஜலுப்பு | சளி |

**காலம் மற்றும் பருவத் தொடர்பான சொற்கள்**

| | |
|---|---|
| சனமு | விநாடி |
| நிமிசொ(ம்) | நிமிடம் |
| கண்ட்டெ | மணி |
| தெல்லவாரு | விடியற்காலம் |
| சாயங்காலொ(ம்) | மாலை |
| ராத்திரி | இரவு |
| சீக்கெட்டி | சீக்கெட்டி |
| பகலு | பகல் |
| அர்த்தெ ராத்திரி | நள்ளிரவு |
| முந்து ரோஜுலு | முந்தாநாள் |
| மத்தியானொ(ம்) | நண்பகல் |
| நின்னெ | நேற்று |
| ஈரோஜுலு | இன்று |
| ரேப்பு | நாளை |
| வாரமு | கிழமை |
| நெலா | மாதம் |
| சமச்சரொ(ம்) | ஆண்டு |
| எண்டெகாலமு | வெயில்காலம் |
| சலி காலமு | குளிர்காலம் |
| வானெ காலமு | மழைக்காலம் |
| காலி | காற்று |
| மப்பு | மேகமூட்டம் |
| மெருப்பு | மின்னல் |
| ரோலு வானெ | கல்மழை |
| மஞ்சு | பனி |

## திசைகள் பற்றிய சொற்கள்

| | |
|---|---|
| தூர்ப்பெ | கிழக்கு |
| படைமரெ | மேற்கு |
| உத்திரெ | வடக்கு |
| தக்சினெ | தெற்கு |
| பக்கொ(ம்) | பக்கம் |
| இடமு செய் | இடக்கை |
| குடி செய் | வலக்கை |
| பையனெ | மேலே |
| கிந்தெ | கீழே |
| முந்துரு | முன் |
| எனக்கே | பின் |
| நடுமு | நடு |
| லோபலெ | உள்ளே |
| பைட்டெ | வெளியே |
| ஆ பக்கொ(ம்) | அந்தப்பக்கம் |
| ஈ பக்கொ(ம்) | இந்தப்பக்கம் |
| அக்கெடெ | அங்கே |
| இக்கெடே | இங்கே |

## பல்வேறு உணர்ச்சி தொடர்பான சொற்கள்

| | |
|---|---|
| சந்தோசொ(ம்) | மகிழ்ச்சி |
| கோப்பொ(ம்) | கோபம் |
| நவ்வு | சிரிப்பு |
| ஏடுப்பு | அழுகை |
| சோக்கொ(ம்) | சோகம் |
| அகங்காரொ(ம்) | அகம்பாவம் |
| ஏமாருட்டெ | ஏமாற்றம் |
| ப்ரேமொ(ம்) | அன்பு |
| சத்துரு | பகை |
| தயெ | தயவு |
| சுகொ(ம்) | சுகம் |
| துக்கொ(ம்) | துக்கம் |
| பயொ(ம்) | பயம் |
| தைரியொ(ம்) | தைரியம் |
| கக்குர்தி | பொறாமை |
| பாதெ | வலி |
| சேது | கசப்பு |
| அனுபவொ(ம்) | அனுபவம் |

## அளவைகளின் பெயர்கள்

| | |
|---|---|
| கொலுவு | அளவு |
| தூக்கு | எடை |
| சின்னது | சிறியது |
| நிந்தெ | நிறைய |
| மைலு | மைல் |
| பொடுவு | நீளம் |
| எத்து | உயரம் |
| தக்குவெ | குறைவு |
| கெஜொ(ம்) | கஜம் |
| அடுகு | அடி |
| காண்டி | காணி |
| பாருவெ | பாரம் |
| மூரெ | முழம் |
| ஜானு | சாண் |

## நிறங்களின் பெயர்கள்

| | |
|---|---|
| ரெங்கொ(ம்) | நிறம் |
| தெல்லெ | வெள்ளை |
| பசுப்பு | மஞ்சள் |
| நீலொ(ம்) | நீலம் |
| நலுப்பு | கருப்பு |
| பச்செ | பச்சை |
| ஆக்கு பச்செ | இலைப்பச்சை |

## எண்ணிக்கை

| | |
|---|---|
| காலு | கால் |
| அரெ / அத்தெ | அரை |
| முக்காலு | முக்கால் |
| ஒக்கெட்டி | ஒன்று |
| ஒக்கட்டிங்காலு | ஒன்றேகால் |
| ஒக்கெட்னரெ | ஒன்றரை |
| ஒக்கெட்டிமுக்காலு | ஒன்றே முக்கால் |
| ரெண்டு | இரண்டு |
| ஜோடி | இரண்டு |
| ஜதெ | ஜதை |
| ரெண்டு சாருலு | இரு மடங்கு |
| மூடு சாருலு | மூன்று மடங்கு |

## உடை அணிகலன்கள்

| | |
|---|---|
| கடியொம் | காப்பு |
| குட்ட | துணி |
| கொங்கு | முந்தானை |
| சீர | புடவை |
| துப்பட்டி | போர்வை |
| பொட்டு | திலகம் |
| பைடா | தாவணி |
| மெட்லு | மெட்டி |

## விளையாட்டுகள் பற்றிய சொற்கள்

| | |
|---|---|
| இரிகி ஆட்டொ(ம்) | நொண்டி விளையாட்டு |
| பங்கரொ(ம்) | பம்பரம் |
| மேக்கபுலி ஆட்டொ(ம்) | ஆடுபுலி ஆட்டம் |

## காய் வகைகள்

| | |
|---|---|
| கும்மிடிக்காயி | பூசணிக்காய் |
| சிக்குடுக்காயி | அவரைக்காய் |
| பீரெக்காயி | பீர்க்கங்காய் |
| தெங்க்காயி | தேங்காய் |
| எர்ரெ கெட்டெ | வெங்காயம் |
| உல்லெ கெட்டெ | உருளைக்கிழங்கு |
| டமோட்டா | தக்காளி |
| பெண்டெக்காயி | வெண்டைக்காய் |
| முனுகெ காயி | முருங்கைக்காய் |
| அரட்டிக்காயி | வாழைக்காய் |
| காக்கெரக்காயி | பாகற்காய் |
| தெல்லெ கெட்டெ | பூண்டு |
| தொண்டெக்காயி | கோவைக்காய் |
| தோசெக்காயி | தர்பூசணி |
| பச்செமெரப்பக்காயி | பச்சைமிளகாய் |
| கொத்தெமெல்லி | கொத்தமல்லி |
| கருவேப்பாக்கு | கருவேப்பிலை |
| கருனாகெட்டெ | கருணைக்கிழங்கு |
| அரெட்டிகெட்டே | வாழைத்தண்டு |
| அரெட்டிப்பூவு | வாழைப்பூ |
| சொரெக்காயி | சுரைக்காய் |
| கொப்பெரெக்காயி | கொப்பரை |

**பழங்கள்**

| | |
|---|---|
| பண்டு | பழம் |
| ஆப்பிலு | ஆப்பிள் |
| அரெட்டிப்பண்டு | வாழைப்பழம் |
| மாமிதிப்பண்டு | மாம்பழம் |
| திராட்செ | திராட்சைப்பழம் |
| நிம்மெப்பண்டு | எலுமிச்சைப்பழம் |
| கொய்யா | கொய்யாப்பழம் |
| செப்போட்டா | சப்போட்டாப்பழம் |
| சீனிப்பண்டு | சாத்துக்குடி |
| அனாசி | அன்னாசிப்பழம் |

**பூ வகைகள்**

| | |
|---|---|
| கங்கி ரேகி | அரளி |
| கலுவெ | அல்லி |

**விலங்குகள்**

| | |
|---|---|
| மிருகொ(ம்) | விலங்கு |
| ஏனுகு | யானை |
| புலி | புலி |
| நெல்லெ பண்ட்டு | கரடி |
| ஆ போத்து | காளை |
| நெக்கெ | நரி |
| சிறுத்தெ | சிறுத்தை |
| குக்கெ | நாய் |
| ஆவு | பசு |
| தோடா | கன்று |
| பில்லி | பூனை |
| பல்லி | பல்லி |
| பொத்திங்கெ | கரப்பான் |
| குர்ரெமு | குதிரை |
| குந்தேலு | முயல் |
| சேப்பெ | மீன் |
| மொசெலெ | முதலை |
| கப்பெ | தவளை |
| தாபேலு | ஆமை |
| மானு | மான் |
| எத்து | மாடு |
| ஒண்ட்டெ | ஒட்டகம் |
| காடிதெ | கழுதை |
| குர்ரமு | குதிரை |

| | |
|---|---|
| கோடெ | எருது |
| கோத்தி | குரங்கு |
| சிம்மொம் | சிங்கம் |
| பந்தி | பன்றி |
| மேக்கெ | ஆடு |
| ஜிங்க்கெ | மான் |

**பறவைகளின் பெயர்கள்**

| | |
|---|---|
| பட்சி | பறவை |
| மயூரி | மயில் |
| கோகிலொ(ம்) | குயில் |
| காகி | காகம் |
| கோடி | கோழி |
| குட்லெகூபெ[6] | ஆந்தை |
| சிலுக்கெ | கிளி |
| மைனா | மைனா |
| கெத்தெ | பருந்து / கழுகு |
| நிப்பு கோடி | நெருப்புக்கோழி |

இவ்வாறு பல தெலுங்கு பெயர்ச்சொற்கள் தமிழில் கலந்து பேசப்படுகின்றன. வினைச்சொற்கள் அடுத்த இடத்தைப் பெறுகின்றன.

**வினைச்சொல் நிலை**

| | |
|---|---|
| சூடு | பார் |
| சிம்ப்பு | கிழி |
| ராயி | எழுது |
| தின்னு | தின் |
| செப்பு | சொல் |
| கொருக்கு | கடி |
| நவ்வெ | சொறி |
| நவ்வு | சிரி |
| சதுவு | படி |
| தாகு | குடி |
| ஒதுலு | விடு |
| கொட்டு | அடி |
| இருக்குனு | முறி |
| ஏடு | அழு |
| அடுகு | கேள் |
| தொவ்வு | உழு |
| மூசி | மூடு |

**தொழிற்பெயர்கள்**

| | |
|---|---|
| அல்லுட்டெ | பின்னுதல் |
| உடுகுட்டெ | கொதித்தல் |
| உதுகுட்டெ | துவைத்தல் |
| ஏட்சுட்டெ | அழுதல் |
| குண்ட்டெ | நொண்டுதல் |
| கொருகுட்டெ | கடித்தல் |
| நம்முட்டெ | நம்புதல் |
| நலுப்பட்டெ | நசுக்குதல் |
| நவ்வுட்டெ | சிரித்தல் |
| ஜாருட்டெ | நழுவுதல் |

இவ்வாறு தெலுங்குச் சொற்கள் வந்து கலக்கும்போது தமிழ் ஒலிப்பு முறைக்கேற்ப மாறியிருந்தாலும் சில சொற்கள் எவ்வித மாற்றமுமின்றி அவ்வாறே பேச்சு வழக்கில் பயன்படுத்தப்படுகின்றன.

| | |
|---|---|
| அதுமி | அழுத்தி |
| காலி | காற்று |
| கொட்டலி | கோடாலி |
| கொடவலி | அரிவாள் |
| நூகுலு | எள் |
| பங்காரு | பொன் |
| மப்பு | மேகம் |
| வித்தனொா(ம்) | விதை |

இவ்வட்டாரத்தில் தமிழர் பயன்படுத்தும் தெலுங்குச் சொற்களில் சில சித்தூர் மாவட்டத் தெலுங்கு வட்டார வழக்கினதாக உள்ளன.

## சொற்பொருள் மாற்றம்

| நிலைமொழி | வட்டார வழக்கு | பொருள் |
|---|---|---|
| கனும | கட்டு | வரப்பு |
| மகத்த | கொலு | குத்தகை |
| பொதுரு | பொதலு | புதர்கள் |
| கசுவு | கத்தி | வைக்கோல் |
| உருமு | பிடுகு | இடி |
| வானம் | வர்சொ(ம்) | மழை |
| அரட்டிபில்லெ | அரட்டி பிலக்கா | வாழைக்கன்று |
| ஜல்லு | பொட்டு | நெல்உமி |
| கூடு | அன்னொ(ம்) | சாப்பாடு |

1. தெலுங்கு நிலைபேற்று வழக்கில் **jallu** என்பது மழைச்சாரலைக் குறிக்கிறது. ஆனால், பள்ளிப்பட்டுப் பகுதியிலோ நெல் உமியைக் குறிக்கிறது.

2. பொதுவாக தெலுங்கர் சமுரு **camuru** எனில் தலையில் தேய்க்கப்படும் எண்ணெ (தேங்காய் எண்ணெய்)யைக் குறிப்பிடுவர். நோந **no:na** எனில் சமையலில் பயன்படுத்தப்படும் எண்ணெய் வகைகளைக் குறிப்பிடுவர்.**manici no: na** நல்லெண்ணெய்

வடக்கு வட்டாரத்திலோ கடலெண்ணெய்க்கும் செனகெ சமுரு **senega samuru** என்று குறிப்பிடுகின்றனர்.

3. எலுமிச்ச ஊறுகாய்க்கு இவ்வட்டாரத்தில் நிம்மெ ஊறுகா **nimme u:ruga:** என்று கூறுகின்றனர். தெலுங்கரோ **nimma ka:ya uraga:ya** என்கின்றனர். **nimma ka:ya pacadi** என்றும் குறிப்பிடுகின்றனர்.

4. தேங்காய் என்பதற்கு **tenkka:ya** என்று இவ்வட்டாரத்தில் கூறப்படுகிறது. **kobbari** என்று தெலுங்கர் குறிப்பிடுகின்றனர்.

5. சித்தூர் மாவட்டத் தெலுங்கு வட்டார வழக்கு இவர்கள் பேச்சுமொழியில் காணப்படுகிறது. **velta:mu** என்ற ஆந்திரர் வழக்கு **po:tta:mu** என்ற சித்தூர் வழக்காகிறது. **basta:lu** என்ற ஆந்திரர் வழக்கு **mu:ttalu** என்று சித்தூர் வழக்கில் வழங்கப்படுகிறது.

## சொற்றொடரில் தெலுங்கு மொழிக் கலப்பு

சொற்றொடரில் தெலுங்குச் சொற்களும் தமிழ்ச் சொற்களும் கலந்து வருவது இயல்பாக உள்ளது.

| | |
|---|---|
| மகத்தா பயிரு | குத்தகைப்பயிர் |
| இரும்பு தாலா | இரும்புத்தட்டு |
| வெருஞ்சல்லு | வெறும்பதர் |
| வெண்டி தோவெ | வண்டிப்பாதை |
| அல்சந்தது பயிரு | காராமணிப்பயிறு |
| கொய்யாசெட்டு | கொய்யாமரம் |
| பில்லெ ஹூடு | ஓட்டு வீடு |

தமிழ்ச் சொற்றொடருக்குப் பதிலாக தெலுங்குச் சொற்றொடரைப் பயன்படுத்துகின்றனர்.

| | |
|---|---|
| மஞ்ச்சி அப்பாயி | நல்லபையன் |
| தெல்லெ குர்ரெமு | வெள்ளைக்குதிரை |
| சின்னெ பிட்டெ | சிறிய குழந்தை |
| மெல்லி மொக்கு | மல்லி மொட்டு |
| என்னி ரோஜுலு | எத்தனை நாட்கள் |
| நெல்லெ குக்கெ | கருப்பு நாய் |
| சிலுக்கெ மாட்டெலு | கிளிப்பேச்சு |

| | |
|---|---|
| மந்து தாகு | மருந்து குடி |
| நல்லெ நாயி | கருப்பு நாய் |
| பெத்தெ மனுசி | பெரிய மனிதன் |
| நீலமான தாரி | நீளமான வழி |
| பொட்டி குர்ரொ(ம்) | குள்ளக்குதிரை |
| தெல்லெனி வெஸ்த்ராலு | வெள்ளாடை |
| செட்டெ புத்தி | தீயகுணம் |
| அந்த்தமானெ சிலுக்கெ | அழகான கிளி |
| தீயெனி பாட்டு | இனிய பாட்டு |
| மஞ்ச்சி பெண்ட்டலு | நல்ல விளைச்சல் |
| பாரெமானெ தலெ | பாரமான தலை |
| மட்டி பொய்யி | மண் அடுப்பு |
| புர்ரி இல்லு | கூரை வீடு |
| பொக்கு பொய்யி | கரி அடுப்பு |

சொற்றொடர்களில் மட்டுமன்றி வாக்கியங்களிலும் வினைச்சொல், பெயர்ச்சொல் ஆகியன இடம்பெறுகின்றன. மொழிக்கலப்பிற்கு இது ஒரு உதாரணமாக விளங்குகிறது.

## எண்ணுப்பெயரில் கலப்பு

எண்ணுப்பெயர்களும் மொழிக்கலப்புக்கு உள்ளாகி உள்ளது. தமிழில் நூறிலிருந்து ஆயிரம் வரை நூறுநூறாகச் சொல்லும்பொழுது இப்பகுதி தமிழர் தெலுங்கு மொழி எண்ணுப்பெயர்களைப் போன்று பிரித்துக் கூறுகின்றனர்.

| | |
|---|---|
| ரெண்டு நூறு (ரெண்டு வந்தலு) | இருநூறு |
| மூனு நூறு (மூடு வந்தலு) | முன்னூறு |
| நாலு நூறு (நாலு வந்தலு) | நானூறு |
| அஞ்சி நூறு (ஐது வந்தலு) | ஐநூறு |
| ஆறு நூறு (ஆறு வந்தலு) | அறுநூறு |
| ஏயு நூறு (ஏடு வந்தலு) | எழு நூறு |
| எட்டு நூறு (எனிமிதி வந்தலு) | எண்ணூறு |
| ஒம்பெது நூறு (தொன்மிதி வந்தலு) | தொள்ளாயிரம் |

## ஊர்ப்பெயரில் மொழித்தாக்கம்

தமிழக ஆந்திர எல்லையில் ஊர்ப்பெயர்களும் தெலுங்கு மொழியின் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளன.

| | |
|---|---|
| அமலிநகர் | நாராயணபுரம் |
| அமிர்தபுரம் | பாண்டரவேடு |
| எல்லம்பள்ளி | பாப்பிரெட்டிபாளையம் |
| கீச்சலம் | புச்சிரெட்டிபள்ளி |
| கேசவராஜ குப்பம் | புதுக்கீச்சலம் |
| சந்திரப்பநாய்டு கண்டிகை | பொம்மராஜீ கண்டிகை |
| சின்னமுடிப்பள்ளி | மேல்நடுங்கல் |
| சூரிய நகரம் | வெங்கடாபுரம் |

கேசவராஜன், நாராயணனன், பொம்மராஜீ போன்ற பெயர்கள் தெலுங்கர்களைப் பொதுவாகக் குறித்தாலும் பள்ளி, கண்டிகை, பாளையம் போன்றன தமிழ்ப் பெயர்களாக விளங்குகின்றன.

சொரக்காயப்பேட்டை என்ற ஊர் பள்ளிப்பட்டுப் பகுதியில் உள்ளது. தமிழில் குறிப்பிட வேண்டுமெனில் சுரைக்காய்ப்பேட்டை என்று குறிப்பிட வேண்டும். ஆனால் சுரைக்காய் என்பதற்குத் தெலுங்கு மொழியில் சொரக்காயா என்பதாகும். அவ்வூரின் பெயர்ப்பலகையில் சொரக்காய்ப்பேட்டை எனத் தமிழிலும் < என ஆங்கிலத்திலும் எழுதப்பட்டுள்ளது. ஊர் மக்களும் < என்றே ஒலிக்கின்றனர்.இப்பகுதியிலுள்ள பல ஊர்களின் பெயரை ஆய்ந்தோமெனில் அங்கு நிலவும் தமிழ் தெலுங்கு கலப்பை அறியலாம். இவ்வூர்ப்பெயர் ஆய்வின் இன்றியமையாமையைக் கூறும் ந. பார்வதி,

> "ஊர்ப் பெயர்கள் இலக்கியத்தோடு மட்டும் அல்லாமல் வரலாறு, நிலவியல், மொழியியல், சமுதாயப் பண்பாட்டியல் போன்ற துறைகளோடும் நெருங்கிய தொடர்புடையன என்பதை ஆய்வுகள் மெய்ப்பித்துள்ளன"[7]

என்கிறார் ஆதலால், மொழியியலுக்கு ஊர்ப்பெயர் ஆய்வு துணைபுரியும் என்பதை அறியலாம்.

## தமிழில் உரையாடும்போது தெலுங்கு வினைச்சொல் கலந்து வரும் வாக்கியங்கள்

| | |
|---|---|
| நெல்லா சதுவு | நன்றாகப் படி |
| அப்படியே அதுமு | அப்படியே அமுக்கு |
| காய்கறி அம்முடு போச்சா? | காய்கறி விற்றுவிட்டதா? |
| காலெயிலெ செதுவு | காலையில் படி |
| கூடையெ அல்லு | கூடையைப் பின்னு |

| | |
|---|---|
| **தண்ணீ பாரிச்சா?** | **தண்ணீர் பாய்ந்ததா?** |
| மஞ்சலெ ருத்து | மஞ்சளை உரசு |
| மயக்கம் ஒச்சியிந்தி | மயக்கம் வந்தது |
| முள் குத்திதாலெ குன்றான் | முள் குத்தியதால் நொண்டுகிறான் |
| மூட்டையெ தொயிடா | மூட்டையை தள்ளுடா |
| விறகெ திம்ப்புடா | விறகை இறக்குடா |
| சீலெ வேஸ்க்கோ | புடவை கட்டிக்கொள் |
| செய்ரதெ செப்பு | செய்வதைச் சொல் |
| படிஅரிசி இவ்வு | படிஅரிசி கொடு |

## தெலுங்கு மொழிப் பெயர்ச்சொற்கள் கலந்து வரும் வாக்கியங்கள்

| வட்டார வழக்கு | பொருள் |
|---|---|
| அடுப்படிலெ **அன்னொ(ம்)** செய்ரே(ன்) | சாப்பாடு |
| என்னோடெ அப்பா **கதிலெ** இருக்காரு | அறை |
| என்னோட **செல்லலு** படிச்சிக்கிட்டிருக்கா | தங்கை |
| தோட்டெ **தலுப்பு** மூடிட்டு வா | தாழ்ப்பாள் |
| வாசெல்லெதா(ன்) **பிட்டெ** இருக்கு | குழந்தை |
| செலவுத்துமேல **சித்திரொ(ம்)** இருக்கு | படம் |

**எழுத்து வழக்கு**

| | |
|---|---|
| *அந்த குப்பை எட்டு மூட்டை இருக்கும்* | அந்த குவியல் எட்டு மூட்டை இருக்கும் |
| *மழை விட்டும் தூவான விடவில்லை* | மழை விட்டும் தூறல் விடவில்லை |
| *எத்தினி மடக்க வந்தது?* | எத்தனை ஏர் வந்தது? |
| *கெனுமெ அகலமாய் இருக்கட்டும்* | வரப்பு அகலமாயிருக்கட்டும் |
| *கொடவெலி கொடு* | அரிவாள் கொடு |
| *நான்கு நாட்களாக நித்திரெ இல்லெ* | நான்கு நாட்களாக உறக்கம் இல்லை |
| *மூன்று மனுகு புளி வாங்கினேன்* | மூன்று மனு புளி வாங்கினேன் |
| *நான் போஜனம் செய்யவில்லை* | நான் சாப்பிடவில்லை |
| *அந்த மூட்டை பருவா இருக்கு* | அந்த மூட்டை கனமாக உள்ளது. |
| *கூட்டில விளக்கு வை* | மாடத்தில் விளக்கு வை |

## மொழிக்குறுக்கீட்டில் சிறுதொடர்கள் பெறுமிடம்

தமிழும் தெலுங்கும் கலந்து சிறுசிறு வாக்கியங்கள் அமைவது இவ் வட்டாரமொழியிடையே இயல்பாகக் காணப்படுகிறது.

| | |
|---|---|
| தேவோன்னி முக்கு | கடவுளை வணங்கு |
| தொந்ரெ படுக்கோ | சீக்கிரமாகப் படு |
| தெல்லெவாரு லேஸ்கோ | அதிகாலையில் எழு |
| சாயந்த்ரொ(ம்) ஆடுக்கோ | மாலையில் விளையாடு |
| ஈத்தெ வருமா? | நீத்த வருமா? |

| | |
|---|---|
| அர்த்தொமாசா? | விளங்கி விட்டதா? |
| பால்மாறாதே | சோம்பேறியாக இராதே |
| சாந்தமா இரு | பொறுமையாக இராதே |
| தக்கி போசி | இளைத்து விட்டது |
| ஜாரி போசி | இடறி விட்டது |
| நாசி போசி | நரைத்து விட்டது |
| உடிக்கி போகி | வெந்து விட்டது |
| சீக்கிரமா பைல்தேரு | விரைவாகக் கிளம்பு |
| இம்சிக்கிறான் | கொடுமை செய்கிறான் |

## தெலுங்கில் தமிழ் இலக்கணக் கூறுகளின் குறுக்கீடு

தமிழில் தெலுங்குச் சொற்களைக் கலந்து பேசும்போது தெலுங்குச் சொற்களுக்கு விகுதிகளாகத் தமிழ் ஒட்டுக்கள் அமைகின்றன. தெலுங்குச் சொற்கலப்பு மட்டுமே உண்டு. தெலுங்கு ஒட்டுக்கள் கலப்புறுவதில்லை.

## விகுதி நிலைபேறு

### (i) காரன்

'காரன்' என்ற ஆண்பாலைக் குறிக்கும் விகுதி தெலுங்குப் பெயர்ச்சொல்லோடு கலந்து வருகிறது.

| | |
|---|---|
| செய்தியக்காரன் | நிலத்தில் வேலை செய்பவன் |
| மகத்தாகாரன் | குத்தகை எடுத்தவன் |
| இன்ட்டிக்காரன் | வீட்டுக்காரன் |

மேற்கூறப்பட்ட 'காரன்' என்ற விகுதிக்குப் பதிலாக – காருடு **ka:rudu** என்று தெலுங்கில் வரும்.

### (ii) அன், – ஆன்

பரதராமியிலும் பள்ளிப்பட்டுப் பகுதியிலும் தமிழர்களின் பெயர்களிலும் தெலுங்கு மொழிக் கலப்பு காணப்படுகிறது. ஆனால், நாகலாபுரம், ஆரம்பாக்கம் பகுதிகளில் காணப்படுவதில்லை. தமிழர்களிடையே கறுப்பன், வெள்ளையன், பச்சையம்மா என்ற நிறத்தை வைத்துப் பெயர் வைக்கும் பழக்கம் உள்ளது. தெலுங்கில் **erupu** என்ற சொல் சிவப்பு நிறத்தைக் குறிக்கும். சிவந்த நிறத்தை உடையவன் எர்ரப்பன் **errappan** என்றும், கறுமை நிறத்தை உடையவன் நலுப்பன் **naluppan** என்றும் பெயர் வைக்கப்பட்டுள்ளனர். 'அன்' என்ற ஆண்பால் விகுதி மட்டும் தமிழ்மொழி விகுதியாய் உள்ளது.

அங்கக்கீனம் உடையவர்களைத் தெலுங்குச் சொற்களைப் பயன்படுத்தி அழைக்கின்றனர், விகுதி மட்டும் தமிழ் மொழிக்குரியதாக உள்ளது.

| | |
|---|---|
| நட்டிகான் | இடுப்பு பின்பக்கம் வளைந்தான் |
| குண்டிகான் | கை, கால் ஊனமானவன் |
| கூனிகான் | உடம்பு பின்பக்கம் வளைந்தவன் |

| | |
|---|---|
| குட்டிகான் | கண் பார்வை தெரியாதவன் |
| ஊமகான் | ஊமை |
| செவடன் | காது கேளாதவன் |
| மொத்துகான் | உடல் பருத்தவன் |
| பக்கைகான் | உடல் மெலிந்தவன் |
| ஜில்லைகான் | சிறிய உடல் உடையவன் |
| மூளிகான் | உதடு பிளவு உடையவன் |
| தொப்பைகான் | பெரிய வயிறுடையவன் |
| மூட்டைகான் | விரைவாதமுடையவன் |

### (iii) ஆண்டெ

இவ்வட்டார வழக்கில் வரும் 'ஆண்ட' என்ற விகுதி தெலுங்குச் சொல்லோடும் வருகிறது. 'வீட்டாண்ட' என்று வருவது போன்று 'கிட்டிகை யாண்டெ என்பது சன்னலருகில் என்ற பொருளில் வருகிறது. **kitikidaggava** என்பது தெலுங்கர்களின் வழக்கு.

### (iv) கிட்டே

செய்துக் கொண்டே என்ற சொற்றொடர் பேச்சுத் தமிழில் பெரும்பாலும் 'செய்துக்கிட்டே' என்று வருகிறது. 'கிட்டே' என்ற உருபு தெலுங்குச் சொல்லோடும் கலந்து வருகிறது. இவ்வட்டார மக்களின் பேச்சுத் தமிழில் இதைக் காணலாம்.

காரிக்கிட்டே **ka:rikkitte:** 'ஒழுகிக் கொண்டே'

காருதுனே **ka:rutune:** என்பது தெலுங்கர்களின் வழக்கு.

### (v) து

'வருகிறது' என்ற சொல்லைப் பேச்சுத்தமிழில் 'வருது' என்று குறிப்பிடுவது வழக்கம். அதுபோல தெலுங்குச் சொல்லிலும் பயன்படுத்துகின்றனர்.

| | |
|---|---|
| காருது | ஒழுகுகிறது |
| சூடுது | பார்க்கிறது |
| தேலுது | மிதக்கிறது. |

காருதுந்தி **ka:rutundi** என்பது தெலுங்கர் வழக்கு. சூஸ்துந்தி **su:stundi** தேலுதுந்தி **te:lutundi** என்று முறையே தெலுங்கர் வழக்காக உள்ளது.

### (vi) –டா

வினைச்சொல் விகுதியாக வரும் ஆன், ஆள், ஆர் போன்ற விகுதிகள் தெலுங்குச் சொற்களுடனும் வருகின்றன.

| | |
|---|---|
| நிலுபுரான் | நிறுத்துகிறான் |

ஆண்பால் விகுதியாக வரும் 'அடா' என்ற விகுதி தெலுங்கு வினைச்சொற்களுடன் சேர்த்து பயன்படுத்தப்படுகிறது.

| | |
|---|---|
| அதுமுடா | அமுக்குடா |
| பிலுடா | கூப்பிடடா |
| முய்யுடா | முட்டா |

தெலுங்கு வழக்கில் **pulura:** என்ற 'ரா' விகுதி வருகிறது.

### (vii) –ஆன

தமிழில் அழகான, உயரமான என்ற சொற்களில் 'ஆன' என்ற விகுதியைப் பயன்படுத்துகிறோம். உயரமா, அழகா என்ற சொற்களில் 'ஆ' என்ற விகுதியும் உள்ளது. ஆய்வு மேற்கொள்ளப்பட்ட வட்டாரத்தில் தமிழர் தெலுங்குச் சொல்லுடன் 'ஆன' மற்றும் 'ஆ' என்ற விகுதிகளைப் பயன்படுத்துகின்றனர்.

| | |
|---|---|
| சாரவந்த்தமானெ (சாரவந்தமைன) | செழிப்பான |
| க்லுப்தமாகெ (க்லுப்தங்கா) | சுருக்கமாக |
| ஆக்கலிக்கா (ஆக்கலிகா) | பசியாக |

## தமிழில் தெலுங்கின் ஒலிக்குறுக்கீடு

இப்பள்ளிப்பட்டுப் பகுதியில் தெலுங்குச் சொற்களும் விகுதிகளும் கலந்து வருவது மட்டுமின்றித் தெலுங்கு மொழியின் ஒலிக்குறுக்கீடு **(Phonic interference)** தமிழ் மொழியைத் தாக்கியுள்ளது. இப்பகுதித் தமிழர் தமிழ்மொழியில் உரையாடினாலும் தெலுங்குமொழியில் பேசுவதைப் போன்று இருக்கும். மலையாள மொழியைப் பேசி வருபவர் தமிழைப் பேசும்போது அவரிடம் எங்ஙனம் மலையாள மொழியின் ஒலிக்குறுக்கீடு அமைந்துள்ளதோ அவ்வாறே இப்பகுதியில் வாழும் தமிழர் பேசும் தமிழ் மொழியில் தெலுங்கின் தாக்கம் அமைந்துள்ளது.

பொதுவாக ஒருவருடைய தாய்மொழியின் ஒலிக்குறுக்கீடு இரண்டாம் மொழியில் அமையும். ஆனால், இப்பகுதியில் இரண்டாம் மொழியின் ஒலிக்குறுக்கீடு தாய்மொழியான தமிழில் காணப்படுகிறது. இந்த வட்டாரத்தின் வரலாற்றுப் பின்னணியும், சமுதாயப் பின்னணியும் இதற்குக் காரணமாகின்றன.

### (i) பன்மை விகுதி – லு

தெலுங்கில் பன்மை விகுதியைக் குறிக்கும் 'லு' விகுதி தமிழ் மொழியில் அமைகிறது.

| | |
|---|---|
| இரைச்சல் | எரசலு |
| காய்ச்சல் | காய்சலு |
| பாய்ச்சல் | பாய்சலு |
| விளைச்சல் | வெலசலு |

## (ii). ஒலிப்பு ஒலிகள் ஒலிப்பிலாத் தன்மையைப் பெறுதல்

தமிழ் மொழியில் சொல்லிடையில் மகர ஒற்றையடுத்துப் பகர ஒலி வரும்போது பகரம் குரலோசை ஒலியாக ஒலிக்கும். 'கம்பம்' என்ற சொல் **kambam** என்றுதான் ஒலிக்கப்படும். ஆனால் இப்பகுதி தமிழரோ **kamppam** என்று ஒலிக்கின்றனர்.

அ. mb > mp

| | |
|---|---|
| கும்பல் | கும்ப்பலு |
| ரொம்ப | ரொம்ப்பெ |

ஆ. nd > nt

| | |
|---|---|
| சொந்தம் | சொந்த்தொ(ம்) |

இ. g > kk

| | |
|---|---|
| சோகம் | சோக்கொ(ம்) |
| ஞாபகம் | ஞாபக்கொ(ம்) |
| தகராறு | தக்கராறு |
| அதிகம் | அதிக்கொ(ம்) |

ஈ. b > p

| | |
|---|---|
| வியாபாரம் | வியாபாரொ(ம்) |

## (iii) ஒலிப்பிலா ஒலி ஒலிப்பு ஒலியாதல்

அ. t > d

| | |
|---|---|
| சுத்தம் | சுத்தம் |

ஆ. k > g

| | |
|---|---|
| கூடு | கூடு |
| கிண்ணம் | கின்னம் |

ஒலிக்குறுக்கீட்டைப் பொறுத்த வரை தமிழில் எங்ஙனம் தெலுங்கு மொழியின் ஒலிச் செல்வாக்குக் காணப்படுகின்றதோ, அங்ஙனமே தெலுங்கிலும் தமிழ் மொழியின் ஒலிச் செல்வாக்குக் காணப்படுகிறது.

வட்டாரத் தெலுங்குச் சொற்களில் தமிழ் ஒலிக்குறுக்கீடு

(i) P > pp

தமிழில் சொல்லிடையில் பகர ஒலி 'P' என்ற ஒலியைப் பெறும்போது இரட்டித்து வரும்.

(எ.டு). கப்பம்

ஆனால், தெலுங்கில் 'P' ஒலி இரட்டிப்பின்றி வரும்.

| | |
|---|---|
| நலுபு | கருப்பு |
| பசுபு | பச்சை |

என்று இவ்வாறு 'P' ஒலி தனித்து வரும். தமிழ் ஒலிக்குறக்கீட்டால் 'P' ஒலி இரட்டித்து வருகிறது.

| | |
|---|---|
| நலுப்பு | கருப்பு |
| பசுப்பு | பச்சை |
| கலுப்பு | களை |

**(ii) k > kk**

இவ்வாறே சொல்லிடையில் வரும் ககரமும், டகரமும் இரட்டித்து வருகிறது.

| | |
|---|---|
| ஆக்கு | |
| ஆகு | கீரை |
| ஆக்கலி | |
| ஆகலி | பசி |
| தாக்கஒத்து | |
| தாகஒத்து | தாக்காதே |

**(iii) t > tt**

| | |
|---|---|
| தட்டு | தாண்டு |
| தாடு | |
| தேலுட்ட | |
| தேலுட | மிதத்தல் |
| பகுலுட்ட | |
| பகுலுட | வீங்குதல் |

**iv) t > tt**

| | |
|---|---|
| ஏத்தொ(ம்) | ஏற்றம் |
| ஏதம் | |
| பாத்தி | |
| பாதி | பாத்தி |

**v) ச ( c) > ச ( s )**

வட்டார வழக்கில் ச (c) கரம் ச (s) கரமாவதைப் போன்று தெலுங்கு சொற்களைப் பயன்படுத்தும்போது இவ்வொலி மாறுபாடு காணப்படுகிறது.

| | |
|---|---|
| சலி | குளிர் |
| சலி | |
| கொலிசி | அளத்தல் |
| கொலிசி | |
| நாசனம் செய் | அழித்துவிடு |
| நாசனம் செய் | |
| சல்தி | அக்கி (நோய்) |
| சல்தி | |

## மொழி மாறாட்டம்

ஒலிக்குறுக்கீடும் மொழிக்கலப்பும் பரதராமி, பள்ளிப்பட்டுப் பகுதியில் மிகுந்திருக்க, ஆரம்பாக்கம், நாகலாபுரம் கொத்தூர், வேப்பனப்பள்ளிப் பகுதிகளில் மொழிமாறாட்டம் காணப்படுகிறது. இவ்விரு பகுதிகளிலும் பயிர்த்தொழில் மேற்கொள்ளப்படுவதால், தமிழர் தெலுங்கரிடையே மொழித் தொடர்பு ஏற்பட இப் பயிர்த்தொழிலும் ஒரு காரணமாகிறது.

தமிழர் ஒருவர் தெலுங்கரிடையே தமிழில் உரையாடிக் கொண்டிருக்கும் போது இடையில்,

"ஏம்மா! மிரப்பகாயலு ஈயண்டி ரெண்டு கிலோலுங்
(இரண்டு கிலோ மிளகாய் தாருங்கள்)

என்று திடீரென்று தெலுங்கு மொழியில் உரையாடுவர். இவ்வாறு பல இடங்களில் இம்மொழி மாறாட்டம் நிகழும். இதைப்போன்ற வேறு தொடர்களையும் சான்றாகக் காணலாம்.

1. வாடு தயத்தொ மாட்லானாடு
(அவன் இரக்கத்துடன் பேசினான்)
2. வாரு தான்னி பாகெ சேசாடு
(அவன் அதை நன்றாகச் செய்தான்)
3. தீன்னி நிதானெங்கா செய்யி
(இதை நிதானமாகச் செய்)
4. மனெ எப்புடொ(ம்) நிஜெமே மாட்லாடதி
(நாம் எப்பொழுதும் உண்மையே பேச வேண்டும்)
5. வாடு தைரியெங்க்கா மொதெட்லொ நடிச்சாடு
(அவன் தைரியமாக முதலில் நடந்தான்)
6. சிந்த்த பண்டு ஈயண்டி
(புளி தாருங்கள்)
7. பதி மடக்கலு காவாலு, அடுசு துன்னாலா?
(பத்து மடக்க வேண்டும்)
8. பதி மூட்டலு ஒட்லு உன்ட்டே ஈயண்டி டப்பு கட்டேஸ்த்தாமு
(பத்து மூட்டைகள் நெல் இருந்தால் கொடுங்கள் – பணம் கட்டுகிறோம்)
9. மேமு போத்தாமு ஒஸ்தாவா?
(நாங்கள் போகிறோம் வருகிறாயா?
10. சரி அட்டனே நேனு ஒஸ்தானு மனிதரம் போத்தாம் கலசி
(சரி, அப்படியே நானும் வருகிறேன். நாம் இருவரும் சேர்ந்து போகலாம்)

தமிழில் உரையாடிக் கொண்டிருக்கும்போது இடையில் இது போன்ற நீண்ட வாக்கியங்களைத் தெலுங்கு மொழியில் உரையாடுவர். இவ்வாறு ஒரு தொடர்

முழுவதும் தெலுங்கிலும் மறுதொடரைத் தமிழிலும் உரையாடுவது இப்பகுதியில் இயல்பாக நடைபெறுகிறது. தமிழர், தெலுங்கர் ஆகிய இருவரிடமும் இத்தகைய மொழிமாறாட்டம் காணப்படுகிறது. இவ்வாறு தொடர்கள் மட்டுமின்றிச் சில நிமிடங்கள் தொடர்ந்து தெலுங்கு மொழியிலும் அதைத் தொடர்ந்து சில நிமிடங்கள் தமிழ் மொழியிலும் உரையாடுவர். இருமொழியிலும் இணையான திறமை உடையவராக அங்குள்ள தமிழரும் தெலுங்கரும் விளங்குகின்றனர்.

இப்பகுதிகளில் மொழிக்கலப்பின்றி மொழிமாறாட்டம் மட்டும் காணப்பட்டாலும், ஒலிக்குறுக்கீட்டைத் தமிழரால் தவிர்க்க இயலவில்லை.

## மொழி மாறட்டத்திலும் ஒலிக்குறுக்கீடு

தொடரிலுள்ள மடக்கலு என்ற சொல் தெலுங்கரால் **அயனயமயடர** என்று ஒலிக்கப்பட, தமிழரால் ***அயனயமமயடர*** என மகரம் இரட்டித்து ஒலிக்கப்படுகின்றது.

அடுத்த தொடரிலுள்ள மூட்டலு என்ற சொல்லைத் தெலுங்கர் **mu:talu** என்று ஒலிக்கின்றனர்.

இதைப் போன்றே வேறு ஒரு தொடரிலுள்ள **போத்தாமு** என்ற சொல் தெலுங்கரால் **po:ta:mu** என்று ஒலிக்கப்படுகிறது. தமிழரால் **po:tt:mu** என்று ஒலிக்கப்படுகின்றது.

சித்தூர் மாவட்டத் தெலுங்கு வட்டார வழக்கு இவர்கள் பேச்சுமொழியில் காணப்படுகிறது. velta:mu என்ற ஆந்திரர் வழக்கு **po:ta:mu** என்ற சித்தூர் வழக்கில் வழங்கப்படுகிறது.

## இருமொழிய ஆய்வின் பயன்

பரதராமி, பள்ளிப்பட்டுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட எல்லைப்புற இருமொழிய ஆய்வின் மூலம் தெள்ளத் தெளிவாக ஒரு கருத்துப் புலனாகிறது. தமிழில் தெலுங்கு கலந்திருப்பது போன்று தெலுங்கில் தமிழ் மொழி கலப்புறவில்லை. தமிழ்மொழியின் ஒலிக்குறுக்கீடுதான் உள்ளது. தெலுங்கு மொழிச் சொற்கள் கலப்பு இருந்தாலும் அச்சொற்கள் ஏற்கும் விகுதிகள் பெரும்பாலும் தமிழ் மொழிக்குரிய விகுதிகளாகவே உள்ளன. தமிழர் பேசும் தமிழில் தெலுங்கு கலந்திருப்பது பெயர்சொற்கள் அளவில்தான் மிகுதி. வினைச்சொற்கள் அதனை அடுத்தே இடம் பெறுகின்றன.

வேப்பனப்பள்ளி, கொத்தூர், பள்ளிப்பட்டுப் பகுதியில் மொழி மாறாட்டம் இல்லை. நாகலாபுரம், ஆரம்பாக்கம் பகுதியில் மொழிக்கலப்பு இல்லை. பொன்னைப் பகுதியில் இருநிலைகளும் காணப்படுகின்றன. ஊர்ப்பெயர் ஆய்வுக்குத் தமிழக ஆந்திர எல்லைப் பகுதியில் அமைந்துள்ள ஊர்கள் சிறந்த ஆய்வுக்களனாக விளங்கும். தமிழக ஆந்திர எல்லைப்பகுதியில் இருமொழியத்தால் பயன் உண்டு எனினும் மிகுதியான மொழிக்கலப்புப் படிப்படியாகக் குறைந்து வருவதால் தமிழ்மொழிக்குக் கேடு விளையாது.

இத்தகைய தெலுங்கு மொழிக் குறுக்கீடு மொழி பற்றி மட்டுமல்லாது அதன் தொடர்புடைய சமூகம், வரலாறு, பொருளாதாரம், மொழியின் பெருமை நோக்கம் என அனைத்துச் சூழல்களையும் விளக்குவதாக அமைந்துள்ளது. இருமொழிகளுடன் குறுக்கீடும் ஒன்றையொன்று பாதித்தாலும் தெலுங்கு மொழியின் குறுக்கீடே மிகுதியாகவுள்ளது உணரப்படுகிறது.

"பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள் முன்னிருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும்
உன்னுதரத்து உதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலக வழக்கழிந் தொழிந்து சிதையாஉன்
சீரிளமைத் திறம் வியந்த செயல் மறந்து வாழ்த்துதுமே!" (மனோண்மணியம்)

இன்று தெலுங்கு தமிழிலிருந்து பிரிந்து வேறொரு மொழியாக விளங்கினும் ஆரியத்தின் பாதிப்பால் இன்று மிகுதியாக வடமொழிச் சொற்களைக் கொண்டு விளங்குகிறது. விஞ்சியுள்ள தெலுங்குச் சொற்களைக் கண்டறிய முற்பட்டால் பழமையான திராவிடச் சொற்கள் அம்மொழியில் வேரூன்றியிருப்பது நம்மை வியக்க வைக்கிறது.

ஆந்திரப்பகுதியில் இருக்கும் தெலுங்குமொழியின் கிளைமொழிச் சொற்களைக் காட்டிலும், சித்தூர் மாவட்டக் கிளைமொழியில் பழந்திராவிட மொழிச் சொற்கள் வேரூன்றியிருப்பது உணரத்தக்கது.

தமிழக ஆந்திர எல்லையில் அமைந்துள்ள வட்டாரங்களில் (தமிழகத்தைச் சேர்ந்ததாக இருப்பினும் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்ததாக இருப்பினும்) பழந் திராவிட மொழிக்கூறுகள் இன்று நிலைபெற்று இருப்பது உணரப்படுகிறது. இருப்பினும் பழந்திராவிடத்திலிருந்து பிரிந்த தெலுங்கு மொழிக் கூறுகளும் காலப்போக்கில் மாறியது. அம்மாற்றமடைந்த கூறுகளாலும் தமிழின் வடக்கு வட்டாரக் கிளைமொழியும் பாதிக்கப்பட்டிருப்பதை நன்கு உணர முடிகிறது.

பொதுப் பேச்சுத்தமிழிலிருந்து இவ்வட்டார மக்களின் பேச்சுத் தமிழ் தெலுங்கு மொழித் தாக்கத்தால் பெரும்பான்மையான மாற்றத்தை அடைந்திருந்த போதும் பழந்திராவிடமொழிச் சொற்கள் பல அவ்வட்டாரப் பேச்சுவழக்கில்தான் மிகுதியாகக் காணப்படுவதை உணரலாம். சிதைந்த சொற்களின் வடிவமும் பழந்தமிழ்ச் சொற்களின் மாறிய வடிவம்தான் என்பதை அறிய இவ்வட்டாரம் சிறந்த சான்றாக விளங்குகிறது.

நாளடைவில் இவ்வட்டாரத்தில் கல்வியின் தரம் மேம்பட்டு வருவதால் கிளைமொழி ஒலிச்சிதைவுகளோ அல்லது தெலுங்குமொழியின் தாக்கமோ குறைய வாய்ப்புண்டு. எனினும், கல்வி நிலை பழந்தமிழ்ச் சொல்லாட்சியை வேரறுத்து விடாமல், பிறமொழிச் சொற்களை மிகுதியாகக் கலந்து விடாமல் தமிழ்மொழியைப் பாதுகாக்கும் கருவியாகப் பயன்பட்டால் தமிழக ஆந்திர எல்லையில் தமிழ் என்றும் நிலைத்து வாழும் என்பதில் ஐயமில்லை.

# வடக்குக் கிளைமொழியும் கிளைமொழி அகராதியும்

பழங்காலத்திலிருந்து தற்காலம் வரை அகராதி உருவாக்கத்தில் தமிழ்மொழி சிறந்த பாரம்பரியத்தை உடையதாகத் திகழ்ந்து வந்தது. இதுவரை எழுத்துமொழி அல்லது நிலைமொழியை அடிப்படையாகக் கொண்ட சொற்தொகுதியைக் கொண்டே இத்தகைய அகராதிப் பணிகள் நடைபெற்று வந்துள்ளன. ஒரு மொழியினது கிளைமொழிகள் சொல்வளத்தைத் தொகுக்கும் பணியாக இருப்பினும், கிளைமொழி அகராதி என்பது இதுவரை முக்கியத்துவம் கொடுக்கப்படாத ஒரு துறையாகவே உள்ளது.

பெரும்பாலும் தமிழ் மொழியில் உருவாக்கப்பட்ட சொற்கோவைகள் பல்வேறு காலநிலையில் படைக்கப்பட்ட எழுத்து மூலங்களைக் கொண்டு உருவாக்கப்பட்டன. ஓர் அகராதியின் பெருமை அவ்வவ்மொழியில் எழுந்துள்ள இலக்கியங்களின் அளவையும் அவற்றில் பயன்படுத்தப்பட்ட பல்வேறு காலதிலைகளில் தோன்றிய மேற்கோள்கள் அச்சொற்களில் பயன்படுத்தப்பட்ட வேர்ச்சொற்களின் எண்ணிக்கை ஆகியவற்றையும் கொண்டு அளந்தறியப் பட்டது எனலாம். தற்காலத்தில் தோன்றிய சில அகராதிகள் மட்டும் எழுத்து வழக்குச் சொற்களோடு அம்மொழியினது கிளைமொழி வடிவங்கள் சிலவற்றைக் கொண்டு விளங்குகின்றன. ஒரு மொழியினது முழுமையான கிளைமொழி வளமானது அகராதி படைப்போரால் மிகக்குறைவான அளவினதாகவே அடையாளம் காட்டப்பட்டுள்ளது.

நாட்டுப்புறவாழ்க்கை, நாட்டுப்புறக்கலைகள், நாட்டுப்புறச் சமயச் சடங்குகள், நாட்டுப்புற விளையாட்டுகள் போன்றவை தொடர்பான சொற்களுக்கு இரண்டாந்தரமான இடமே கொடுக்கப்பட்டுள்ளன. நாட்டுப்புற இலக்கியங்களிலும் வழக்காறுகளிலும் காணப்படும் சொல்வளமானது பெரும்பாலும் அகராதியாளர்களால் ஏற்றுக் கொள்ளப்படாது அல்லது பொருட்படுத்தப்படாது மதிப்பிழந்தே காணப்பட்டு வந்துள்ளது.

## வட்டாரக் கிளைமொழியும் பண்பாட்டுக் கூறுகளும்

மொழி என்பது ஒரு குறிப்பிட்ட மக்களின் பண்பாட்டு ஆவணம் ஆகும். ஒரு மொழிபேசும் மக்கள் சமூகத்தினரின் சமூக, பண்பாட்டு, வரலாற்று, பழங்கதை இயல், நாட்டுப்புற மரபுகளைப் படம் பிடித்துக் காட்டுவதாக வட்டார வழக்கு அமைந்துள்ளது. ஒவ்வொரு சமூகத்தினரும், வட்டாரத்தினரும் பேசும் கிளைமொழியானது அவர்தம் பண்பாட்டுத் தனித்துவத்தையும், தம் சமூக மெய்ம்மைகளைத் தெளிவாகப் புலப்படுத்துவதாகவும், சமூக சமய வாழ்வு, ஆடை

அணிகலன்கள், உணவு வகைகள், சந்தைகள் – விழாக்கள், சமயச் சடங்குகள், பழக்க வழக்கங்கள், இறைவழிபாட்டு முறைகள், களிப்பாட்டங்கள் பொழுது போக்குகள் ஆகியனவற்றை யெல்லாம் வெளிப்படுத்தும் கருவியாகவும் விளங்குகின்றது.

ஒவ்வொரு மொழியும் தனக்கென மொழி அமைப்பையும் பொருளையும் கொண்டுள்ளது. எனவே, சொற்களும் பல்வேறுபட்ட மொழிகளில் பல்வேறாக வகுக்கப்பட்டுள்ளன. சொற்பொருள் கூறுகளும் அவ்வாறே அமைந்துள்ளன. ஒவ்வொரு மொழியிலும் ஒவ்வொரு சொற்பொருளும் அந்தந்த மொழிக்குரிய பண்பாட்டுச் சிறப்பைப் பெற்றுள்ளன. பொதுச்சொற்களான 'பசு', 'பால்', 'சாப்பிடு' போன்றவையும் அம்மொழிக்கேயுரிய மொழிப் பண்பாட்டுச் சிறப்பைப் பெற்றுள்ளன.

ஒரு மொழியிலுள்ள பல சொற்களின் பொருளானது மொழியியல் கூறுகளின் ஒட்டுமொத்த உருவமாக மட்டுமன்றி, அது அம்மொழியில் வேரூன்றியுள்ள வரலாறு, பண்பாடு, சமூக, அரசியல், பழங்கதை பாரம்பரியத்தின் பரிணாம வளர்ச்சியாகவும் உள்ளது. மொழியியல் வரையறையோ அல்லது விளக்கமோ ஒரு சொல்லின் அனைத்துக் கூறுகளையும் இயல்புகளையும் வெளிப்படுத்த இயலாது. அப்படிப்பட்ட சொற்களின் முறையான மற்றும் முழுமையான விளக்கம் பண்பாட்டின் அடிப்படையிலேயே அமையும்.

ஆய்வு செய்யப்படும் குறிப்பிட்டதொரு கிளைமொழிக் கூறுகளில், மொழியியல் நோக்குடன் பண்பாட்டுப் பரிமாணமும் காணப்பட வேண்டிய சூழல் உண்டாகுகின்றது.

எனவே, மொழியியல் மற்றும் பண்பாட்டு நோக்கங்களின் அடிப்படையில் உருவாக்கப்படும் கிளைமொழி அகராதி மிகவும் தேவையானதும் பயனுடையதாகவும் விளங்கும். மொழியியல் நோக்கத்தின் அடிப்படையில் உருவாக்கப்படும் கிளைமொழி அகராதியானது சரியான கிளைமொழி வடிவத்தையும் அதன் நுட்பமான பொருளையும் விளக்கக்கூடியதாக விளங்க வேண்டும். பண்பாட்டின் அடிப்படையில் பொதுவான மற்றும் குறிப்பிட்ட பண்பாட்டுத் தடத்தைப் பின்பற்றும் குறிப்பிட்ட வட்டாரத்தில் வாழும் மக்களின் பல சமூக நிலைகளை எடுத்துக் காட்டுவதாகவும் பயனளிக்க வேண்டும்.

மொழி வல்லுநர்களின் அறிவையும், மாபெரும் மனித சக்தியையும் பயன்படுத்தி இத்தகைய கிளைமொழி அகராதிகள் உருவாக்கப்பட வேண்டும். அவையே தமிழ் மொழியின் வேறுபட்ட கிளைமொழிகளை விளக்குவனவாகவும், தமிழர்களின் பண்பாட்டு ஆவணங்களாகவும் விளங்கும் என்பதில் யாதொரு ஐயமுமில்லை.

தமிழக – ஆந்திர எல்லையில் வாழும் மக்கள்தம் வட்டாரக் கிளைமொழி யினை முழுமையாகக் கண்டறியவே இத்தகையதொரு பரந்த ஆய்வு தேவைப் படுகின்றது. இது போன்ற வடக்குக் கிளைமொழி ஆய்வுடன் தமிழின் தெற்குக்

கிளைமொழி, மேற்குக் கிளைமொழி, கிழக்குக் கிளைமொழி, மத்தியக் கிளைமொழி எனப் பிற வட்டாரக் கிளைமொழிகளிலும் பரந்ததொரு முழுமையான ஆய்வு உடனடியாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

ஆங்காங்கே, சிதறிக்கிடக்கும் பல கிளைமொழி ஆய்வுகளையும் ஒருங்கிணைத்தல் வேண்டும்.

## வடக்குக் கிளைமொழியின் வழக்காறுகள்

தமிழ்மொழியின் வடக்கு வட்டாரக் கிளைமொழியானது சந்தைகள், விழாக்கள், சமயத்தொடர்பான சமூகம் முதலியவற்றுடன் நெருங்கிய தொடர்புடைய பல சொற்களைக் கொண்டுள்ளன. ஏட்டில் எழுதப்படாத வாய்மொழி வழக்காறுகள் பல காணப்படுகின்றன. மேன்மேலும் மொழியியல் நோக்கில் பல ஆய்வுகள் தேவைப்படுகின்றன.

தமிழ்ச் சமூகப் பண்பாட்டினை வெளியுலக மக்களும் அறிவதற்கு அடிப்படையாக வடக்குக் கிளைமொழிச் சொற்கள் பெரும்பயன் நல்கும். பரந்தநோக்கில் திட்டம் மேற்கொண்டு செய்யப்படும் ஆய்வுக்கு அடிப்படையாக அமைந்துள்ள இக்கிளைமொழிச் சொற்கள் மாந்தரியல் ஆய்வுக்கும் இந்த ஆய்வானது பெரும்பயனை அளிப்பதோடு பல சமூகத்தொடர்பான ஆய்வுகளுக்கு மிகவும் சரியான வழிக்காட்டியாகவும் விளங்குகிறது.

தமிழில் பொது அகராதிகள் மற்றும் சிறப்பு அகராதிகள் பல காணப்பட்டாலும், வட்டாரக் கிளைமொழி மற்றும் சமூகக் கிளைமொழிகளுக்கான அகராதிகள் முழு அளவில் உருவாக்கப்படவில்லை என்றே கூற வேண்டும். இவ்வகராதிகளின் உருவாக்கம் கிளைமொழிகளுக்கான களப்பணியைப் பொறுத்தே அமைந்துள்ளது. இவ்வகையான அகராதிப் பதிவுகள் களப்பணியில் திரட்டப்பட தரவுகளின் அடிப்படையிலேயே தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

தமிழ்க் கிளைமொழிகள் அகராதியானது ஒரு சொற்கோவையாக மட்டுமன்றிப், பண்பாட்டுக் கலைக்களஞ்சியமாகச் சமூக வட்டார மக்களின் வாழ்க்கை மற்றும் பண்பாட்டினால் பிரதிபலிக்கக் கூடியதாக அமையும். பலவிதமான பண்பாட்டுக் கோணங்களையும், விளக்கங்களையும் கொண்டதாக அமையும். அவ்வாறு விளக்குவதன் மூலமாகத் தமிழ்ச் சமுதாயத்தின் சிறப்புக் கூறுகளைப் புரிந்து கொள்ளத்தக்க வகையில் பல செய்திகளைத் தருவதாக விளங்குகிறது. இந்த ஆய்வானது பொதுவாக, இளம் ஆய்வாளர்களுக்குத் தமிழ்ச் சமுதாயத்தைப் பல கோணங்களில் ஆயும் மனப்பாங்கினை உருவாக்கும். தமிழ்ச் சமுதாயத்தின் மேன்மையை அறியும் விழிப்புணர்வை ஊட்டித் தமிழ்ச் சமுதாயத்தை முன்னேற்றமடையுமாறு செய்யும்.

1. கட்டெ புலி < கட்டைப்புளி– கொட்டை நீக்குவதற்கு முன் உள்ள புளி
2. கும்பி < கும்பி – கருகி / தீய்ந்து
3. கொப்பு < கொப்பு – காதில் அணியும் சிறிய அணி

4. கொரகய்த்து < குறைக்கழுத்து – தாலி அறுத்தவள் / விதவை
5. கொர்ர < கொறி – கருப்பு செம்மறி ஆடு
6. சப்பாரு – புல்லடர்ந்த கேணி
7. சாணெக்கி – சட்டியின் மேல் மூடும் மூடி
8. சோமம் / சோமன் – வேட்டி
9. பூ புலி < பூப்புளி – கொட்டை நீக்குவதற்கு முன் உள்ள புளி
10. மரதட்டெ < மரத்தட்டை – களி உருட்டப் பயன்படுத்தும் மர அகப்பை

மேற்கூறிய சொற்கள் போன்று ஏட்டில் எழுதப்படாத வாய்மொழி வழக்குகள் பல வடக்குக் கிளைமொழியில் காணப்படுகின்றன.

## கிளைமொழி ஆய்வும் அகராதி உருவாக்கமும்

தமிழகத்தில் இன்று வட்டார வாரியான பரந்துபட்டதொரு மொழிக் களஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். கிளைமொழிக் கூறுகளைத் திரட்டாமல், கிளைமொழி அகராதி உருவாக்குவது என்பது பகல் கனவாகவே விளங்கும். சூழலுக்குத் தகுந்த பொருளையறிதல், ஆவணங்களில் சொற்கள் குறிப்பிடும் உண்மையான பொருளை உணர்தல், புதிய இனச்சொற்களை உருவாக்குதல், தமிழ்மொழியை வளப்படுத்துதல் ஆகிய பல்வேறு நிலைகளில் தமிழ்க் கிளைமொழி அகராதியானது சமுதாயத்திற்குப் பெரும்பயனை நல்கும்.

பல்வேறுபட்ட வட்டாரங்களிலிருந்து, பல்வேறுபட்ட சமூக நிலைகளிலிருந்து திரட்டப்பட்ட மொழித் தரவுகளின் அடிப்படையில் முழுமையானதொரு கிளைமொழி அகராதியை உருவாக்க விரிவான பரந்ததொரு மொழிக் களப்பணித் திட்டம் ஒன்று உருவாக்கப்படுதல் வேண்டும்.

வடக்குக் கிளைமொழி ஆய்வானது அவ்வட்டாரத்தில் வழங்கும் சொற்களைத் திரட்டி பல்வேறு சூழல்களில் அவற்றின் பயன்பாட்டை விளக்குவதாக இருப்பின் கிளைமொழி அகராதிக்குச் சிறந்த நன்மையை அளிப்பதாக விளங்கும். அரிய சொற்களின் தொகுப்பும் பிற கிளைமொழி வடிவங்களைக் கண்டறிய ஏதுவாகின்றது.

1. அடுக்கலு < – பானைகளின் அடுக்கு
2. கெனா < – கனவு
3. கொல்ல < – நெருக்கமாக
4. சட்டக்கோலு < – சட்டியைப் பிடித்துக் கொள்ளப் பயன்படுத்தும் கருவி
5. சூரி மனெ < – காய் அரியும் அரிவாள் மனை
6. தண்டலக்காயி< – அவரைக்காய்
7. தேவ்லியா பூ < – கடவுளுக்கு மட்டும் பயன்படுத்தப்படும் மலர்.
8. பொட்டு < – நெற்பதர்
9. வாக்கு < – வழி
10. மெட்டு < – ஐந்து அடிகள் சேர்ந்த ஓர் அளவு

இதுபோன்று இதே பொருளைத் தரும் சொற்கள் பலவற்றைத் தமிழின் பல்வேறு கிளைமொழிகளினின்றும் கண்டறிந்து கிளைமொழி அகராதியை உருவாக்கினால் தமிழின் வளமான சொற்தொகுப்பை முழுமையாகப் பெற இயலும்.

தமிழக ஆந்திர எல்லையில் வன்னியர், நாயுடு, ரெட்டி, செங்குந்த முதலியார், தாழ்த்தப்பட்டவர் எனப் பல சமூகத்தைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்தாலும் அவர்கள் தம் பேச்சுமொழியில் பயன்படுத்தும் சொல் வழக்குகள் அவர்களுக்குள் மாறுபாடின்றி வழங்கப்படுகின்றன. அவ்வெல்லையில் வட்டாரக் கிளைமொழி தான் சமூகக்கிளை மொழியை விட செல்வாக்கு மிகுந்ததாக விளங்குகிறது.

| | |
|---|---|
| அம்புலி | – 'கூழ்' |
| அன்னக்குத்தி | – சோறு எடுக்கப் பயன்படும் கருவி |
| உடி | – உரி |
| கசுவு | – வைக்கோல் |
| குட்டெ | – சிறிய துணி |
| மகதா | – குத்தகை |
| மொக்கு | – மொட்டு |
| கொல்லெ | – நெருக்கமாக |
| முசுலு | – முயல் |
| லோடிதி | – பயனற்றது |

## கிளைமொழி அகராதியின் தேவை

தமிழில் உள்ள சில கிளைமொழி அகராதிகளும் வல்லறிவு மிக்கதாக இல்லை என்றே கூற வேண்டும். ஒரு குறிப்பிட்ட வட்டார அல்லது சமூகக் கிளைமொழியில் காணப்படும் அனைத்துச் சொற்கூறுகளையும் கொண்டதாக ஆய்வுகள் சில தற்போது நடைபெற்று வருகின்றன. எந்தவொரு கிளைமொழி அகராதியும் முழுமையானதாகத் தொகுக்கப்படவில்லை. முடிந்தவரை சொற்களைத் தொகுத்து வரிசைப்படுத்தப்பட்ட கிளைமொழி அகராதிகளாகவே அவை விளங்குகின்றன. எனவே, முழுமையான பரந்த தமிழின் பல்வேறு கிளைமொழிகளின் ஆய்வும் அதனைத் தொடர்ந்து கிளைமொழி அகராதியாக்கமும் நமக்குத் தற்போது மிக விரைவான, அவசியமான தேவை என்றே கூற வேண்டும்.

## கிளைமொழி அகராதியின் பயன்கள்

மேற்கூறிய பயன்களேயன்றிக், கிளைமொழி அகராதிகள்

1. குறிப்பிட்டதொரு வட்டாரத்தின் கிளைமொழி வடிவத்தைப் பாதுகாக்கவும்,

2. பல்வேறு வட்டார வழக்குகளிடையே இருக்கும் வடிவங்களையும் வேறுபாட்டையும் அறியவும்,

3. ஒரு மொழியில் பல்வேறு காலநிலைகளில் ஏற்பட்ட வரலாற்று மாற்றங்களை ஆய்வதற்கும் மிகுந்த பயனுடையதாகவும் விளங்குகின்றன.

தமிழ்மொழியில் கிளைமொழி அகராதிகள் குறைந்த அளவிலேயே காணப்படுகின்றன. பரந்ததொரு தமிழ்க் கிளைமொழி ஆய்வு இன்மையே கிளைமொழி அகராதிப் பற்றாக்குறைக்கு ஒரு அடிப்படைக் காரணமாகின்றது.

பரந்ததொரு கிளைமொழி ஆய்வு ஏற்படும்போது தமிழ்மொழியில் உள்ள பல்வேறு கிளைமொழிக் கூறுகளைக் கண்டறிய இயலும்.

## கிளைமொழி அகராதியாக்கத்தில் காணப்படும் சிக்கல்கள்

சொற்களில் காணப்படும் ஒலிப்பு முறை, சொற்கோவை, இலக்கண அமைப்பு போன்றவை ஒரு கிளைமொழி வட்டாரத்தை உருவாக்க ஆதாரங்களாகின்றன. ஒரு குறிப்பிட்ட பண்பாட்டு நிலையும் இம்மொழிக் கூறுகளுடன் பின்னிப் பிணைந்து கிடக்கின்றன. ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தில் மக்களின் வாழ்க்கை முறையானது அவர்களின் சுற்றுச்சூழல், தட்ப வெட்ப நிலை, மண்ணின் தன்மை, மண்ணின் மகிமை, தாவர வகைகள் இவற்றை யெல்லாம் பொறுத்து அமைகின்றது. மரபு வழிப் பண்பாட்டுக் கூறுகள், மூடநம்பிக்கைகள், சமூகப் பண்பாட்டு நோக்கங்கள் ஆகியவை தமிழக மக்களைப் பொறுத்தவரை பெரும்பாலும் பொதுவாக இருப்பினும், குறிப்பிட்ட பண்பாட்டுத் தடங்கள் குறிப்பிட்ட பகுதியில் மட்டுமே காணப்படுவனவாக விளங்குகின்றன. ஒரு குறிப்பிட்ட பகுதியில் வாழும் பல்வேறு சமூக மக்களிடையே மேற்கூறிய இப்பண்புகள் பொதுவாகக் காணப்படுகின்றன. கிளைமொழி அகராதியானது அவற்றையெல்லாம் பிரதிபலிக்கக் கூடியதாக விளங்கினால்தான் அதனால் ஏற்படும் முழுப்பயன் மக்களைச் சென்றடையும்.

ஒரு வட்டாரத்தில் வாழும் மக்கள் பல்வேறுபட்ட சமூகத்தைச் சேர்ந்தவராக இருப்பினும் குறிப்பிட்ட தொழில் செய்பவராகவும் உள்ளனர்.கள ஆய்வு மேற்கொள்ளப்பட்ட தமிழக – ஆந்திர எல்லையில் வாழும் மக்களின் பெரும்பான்மையான தொழிலாக உழவுத்தொழிலே விளங்குகின்றது. இத்தகைய சூழலில் இங்கு வாழும் மக்களிடையே பொதுவானதொரு பண்பாட்டுக்கூறு காணப்படுவது இயல்பே ஆகும். இந்தப் பகுதியில் காணப்படும் பொதுவான தன்மையானது பிற வட்டாரங்களில் இருந்து வேறுபடுவதால், இந்த வேறுபாட்டுத் தன்மையும் கிளைமொழி அகராதியில் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

1. தமிழ் மொழியானது காலத்திற்கு ஏற்ப மாறிவரினும் தமிழ்க் கிளைமொழிகளில் ஒன்றான வடக்குக் கிளைமொழியிலும் பண்டைத்தமிழ் வழக்குகள் சில இன்றும் வேரூன்றியுள்ளன.

| | |
|---|---|
| இளந்தயிர் | – புளிக்காத தயிர் |
| சாரல் | – மலைச்சாரல் |
| சீர் | – பெருமை |
| பதர் | – பயனற்றவர் / பயனற்றது |

2. வடக்குக் கிளைமொழியில் வழங்கப்படும் சில சொற்கள் ஒரு குறிப்பிட்ட சூழலில்

மட்டுமே பயன்படுத்தப்படுவதாக உள்ளன.

| | |
|---|---|
| பத்த (தேங்காய் பத்த) | – தேங்காய்த் துண்டு |
| பில்ல (ஓடு) | – ஓட்டுத்துண்டு |
| பக்கு (புண்) | – ஆறுகின்ற புண்ணின் மீதுள்ள காய்ந்த தோல் |

3. தமிழ் நிலைமொழியில் காணப்படும் சில கூறுகள் தமிழின் வடக்குக் கிளைமொழியில் வேறு ஒரு பொருளை உணர்த்துவதாக அமைந்துள்ளன. நிலைமொழிப் பொருளிலிருந்து மாறி குறிப்பிட்ட வட்டாரத்தில் வழங்கப்படும் மற்றொரு பொருளை உணர்த்துவனவாக விளங்கும் அத்தகு சொற்களில் சில வருமாறு.:

| | நிலைமொழிப் பொருள் | வட்டாரவழக்குப் பொருள் |
|---|---|---|
| கலவரம் | 'கலகம்' கிளர்ச்சி | ஞாபகம் 'அப்பா மேலே ஒரே கலவரமாக இருக்கு' |
| சம்சாரி | குடும்பத்தலைவர் | நிலஉரிமையாளர் |
| மயங்கு | தன்வசம் இழத்தல் | தயக்கம் 'பணம்கேட்க மயங்குகிறான் |
| வாங்கு | பெற்றுக்கொள்ளுதல் | பிடுங்கு 'நெற்பயிரில் உள்ள களையை வாங்கினோம்' |

4. இவ்வடக்குக் கிளைமொழி ஆய்வின் மூலம் கண்டறியப்பட்ட சொற்கள் சில தமிழ்மொழியின் பரிணாம வளர்ச்சியை அறிவதற்கு ஏதுவாக அமைந்துள்ளன.

| | |
|---|---|
| ஒட்டு | – இருக்கையின் விளிம்பு |
| குண்டு | – சிறிய மலை |
| தொத்தா | – சிறிய தாய் |
| மோட | – மேக மூட்டம் |

வடக்குக் கிளைமொழியில் பல்வேறுபட்ட பண்பாட்டுச் சமூகவியல் தொழில் கூறுகளின் களஞ்சியமாக விளங்கும் கூட்டுச் சொற்கள் ஆக்கச் சொற்கள், பழமொழிகள் போன்ற கிளைமொழிக் கூறுகள் கிளைமொழி அகராதி தயாரிப்பிற்குச் சிறந்ததொரு களஞ்சியமாகத் திகழ்கின்றன.

ஆடும் பொன்கரகம்
கடுங்காத்து
கொரக்கழுத்து
மலரும் வண்டித்தேர்
ரத்தினக்கோவலர்

## வட்டாரக் கிளைமொழியின் இன்றியமையாமை

மொழியில் சிறந்த பங்கு வகிக்கும் இலக்கிய வழக்கு அல்லது எழுத்து வழக்கு மூலம் கிடைக்கும் சொற்கோவை மட்டுமே கிளைமொழி அகராதி தொகுப்பதற்கு நிறைவு தருவதாக அமையாது. அது மூன்றில் ஒரு பங்கு பயன்தான் தரும். எனவே, கிளைமொழி அகராதிக்கு மற்ற இரண்டு பங்கு பயன்களை அளிப்பது மக்கள் பேச்சு வழக்காகக் கருதப்படும் பல்வேறு கிளைமொழிகளின் சொற்கோவையே ஆகும்.

## எழுத்து வழக்கிற்குத் தேவையான வட்டார வழக்கு

நாடகம், சிறுகதைகள், புதினங்கள், கவிதைகள் மற்றும் திரைப்படங்களில் வட்டார வழக்குகள் பல கையாளப்படுகின்றன. பிற வட்டாரங்கள் குறிப்பிட்டதொரு வட்டார வழக்கைப் புரிந்து கொள்ள வேண்டுமெனில் கிளைமொழி அகராதிகள் கட்டாயத் தேவை என்பது புலனாகிறது. எழுத்து வழக்குகளுக்கும் பேச்சு வழக்கின் வட்டாரக் கூறுகள் தற்காலத்தில் மிகுதியாகத் தேவைப்படுகின்றன. வட்டார வழக்குக் கூறுகளைப் பயன்படுத்திக் கொண்டு எழுத்து மொழியும் மிகுந்த வளம் பெறுகிறது என்று கூறலாம்.

## சமூகவியல் ஆய்வாளருக்கு ஏற்படும் தேவை

சமூகவியல் தொடர்பான பல ஆய்வுகளுக்கு வட்டார வழக்கின் தேவை ஏற்படுகிறது. ஒரு குறிப்பிட்ட கிளைமொழி வழக்கை அறிய வேண்டுமெனில் கிராமத்து மக்களின் வாழ்க்கை முறை, சடங்குகள், கலைகள், பழக்க வழக்கங்கள், நம்பிக்கை போன்றவை தொடர்பான சொற்களை அறிந்திருத்தல் வேண்டும். அந்தந்தக் குறிப்பிட்ட வட்டாரத்திற்கான சொற்களையும் அவை உணர்த்தும் சொற்பொருட்களையும் அறிய வேண்டும்.

## வெளிநாட்டினருக்கு ஏற்படும் தேவை

மேலைநாட்டிலிருந்து தமிழகத்திற்கு வந்து சமூக ஆய்வு செய்வோருக்குக் கிளைமொழி அகராதியில்லாமல் இருப்பது மிகுந்த இடர்ப்பாடுகளை அளிப்பதாக இருந்து வருகிறது.அவர்கள் சில பொதுவான தமிழ் அகராதிகளைப் பயன்படுத்தி அவற்றின் மூலமாக முழுப்பயனை அடைய இயலுவதில்லை.

வீரமாமுனிவர் போன்ற மேலைநாட்டினர் கிறித்துவத்தைப் பரப்புவதற்கு (தமிழகத்திற்கு) வந்தபோது, தமிழ் மொழிக்கு ஏற்பட்ட அகராதித் தேவையை உணர்ந்தார். எனவேதான், சதுரகராதி, தமிழ்–லத்தீன் அகராதி முதலிய அகராதிகளைத் தொகுக்கும் நிலைக்கு ஆளானார்.

பல்வேறு கோணங்களில் வேகமாக வளர்ச்சியடைந்து வரும் தமிழ்மொழியின் பல்வேறுபட்ட கிளைமொழி வழக்குகளைப் புரிந்துகொள்ள கிளைமொழிகளின் சொற்கோவை தேவைப்படுகிறது. பல்வேறு கிளைமொழிகளைக் கொண்டுள்ள வேகமான வளர்ச்சி நிலையில் உள்ள தமிழ் மொழிக்கு பல்வேறுபட்ட தகவல்களைத் தந்துதவும் கிளைமொழி அகராதியானது உடனடித் தேவையாகின்றது.

## சமூக மொழியியலாளருக்கு ஏற்படும் தேவை

ஆய்வாளர் ஒருவர் வட்டாரக் கிளைமொழி வழங்குமிடங்களில் சமுதாயத் தொடர்பான ஆய்வையோ மொழித் தொடர்பான ஆய்வையோ சமுதாயப் பண்பாட்டுக் கூறுகளையோ ஆராய முற்படும்போது பல சிக்கல்கள் எழுகின்றன. அவ்வட்டாரத்தில் வழங்கும் சொற்கள், மரபுத் தொடர்கள், பழமொழிகள், நாட்டுப்புறப் பாடல்கள் இவற்றை எல்லாம் உணர்வதற்குக் கிளைமொழி அகராதி பெரும்பயனை நல்கும் என்பதில் யாதொரு ஐயமும் இல்லை.

## பல்வேறு துறையினருக்கு ஏற்படும் தேவை

ஆய்வாளர்கள் மட்டுமின்றி மருத்துவர்கள், நலப்பணியாளர்கள், அரசாங்க அதிகாரிகள், வணிகர்கள், சமுதாய ஊழியர்கள் மற்றும் அக்குறிப்பிட்ட வட்டாரத்தில் மக்களுடன் உரையாட வேண்டிய சூழல்களில் உள்ள பல்வேறு துறையைச் சார்ந்தவர்களுக்கும் கிளைமொழி அகராதி மிக்க பயன் அளிப்பதாக விளங்கும்.

## பொருள் மயக்கத்தைத் தவிர்த்தல்

ஒரு நிலை மொழியில் உள்ள கூறு ஒன்று ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தில் வேறு பொருளைத் தருவதாக இருக்கலாம். எழுத்து வழக்கில் மற்றொரு பொருளில் வழங்கப்படலாம். அதே சொல் வேறோரு வட்டாரத்தில் அதே பொருளில் வழங்கப்படாமல் அதன் தொடர்பான வேறோரு பொருளைக் குறிக்கலாம். பொதுவான அகராதிகளில் தொடர்புடைய பல்வேறு பொருள்களே பெரும்பாலும் கொடுக்கப்பட்டிருக்கும்.

## கிளைமொழி அகராதிக்கு வளம் தரும் சொற்கள்

பொதுவாகத் தமிழில் வழங்கும் பல சொற்கள் ஒரே பொருளைக் குறிக்கும் வகையிலும் அமைந்துள்ளன. அச்சொற்கள் பல்வேறு வட்டாரங்களைச் சார்ந்த சொற்களாகவும் இருக்கலாம். மேலும் அதே சொல் குறிப்பிட்ட வட்டாரத்தில் வேறு பொருளையும் குறிக்கலாம். இவ்வகையான பல சொற்கள் ஒரு கிளைமொழியில் தொகுக்கப்படும்போது அந்தச் சொற்கள் வழங்கும் சூழல்களையும் குறிப்பிடுவது உண்மையான பயனை நல்குவதாக விளங்கும். சொற்கள் மட்டுமின்றிக், கூட்டுச் சொற்கள், ஆக்கச் சொற்கள், மரபுத் தொடர்கள் போன்ற பல்வேறு பண்பாட்டுச் சமுதாயத் தொழில் சார்ந்த கூறுகளையும் திரட்டுவது கிளைமொழி அகராதிக்கு வளம்சேர்க்கும் வழிகளாகும்.

## பழமைக் கூறுகளைப் பாதுகாத்தல்

கிளைமொழிச் சொற்களில் பல, ஒரு மொழியின் பரிணாம வளர்ச்சி மற்றும் வரலாற்று வளர்ச்சியை அறிந்து கொள்வதற்குச் சிறந்த கருவிகளாக அமைவதோடு, வளமுள்ள அச்சொற்கள் கிளைமொழி அகராதிக்கும் பெரும்பயனை நல்கும். எத்தனையோ பழமையான கூறுகள் வட்டார வழக்குச் சொற்களாக இன்று மாறியிருப்பதைக் காணலாம். இவ்வகையிலான பல சொற்களைப் பாதுகாத்துப் பதிவு செய்து தமிழ்மொழி வளத்தைப் பெருக்க வேண்டும்.

## கிளைமொழி அகராதியின் பயன்கள்

கிளைமொழிகளை அறிதலும் கிளைமொழி வடிவங்களைப் பாதுகாத்தலும் இன்றைய சூழலில் இன்றியமையாததாகும். உலகமயமாக்கல் என்ற இச்சூழலில் கிளைமொழி வடிவங்களைத் தொகுத்தல் என்பது நம் பண்பாட்டுப் பாரம்பரியத்தைக் காப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றது. கிளைமொழி அகராதியைத் தொகுப்பதன் மூலமாகத்தான் மேற்கூறிய வடிவங்களைக் காக்க முடியும். மொழியாய்வு மேற்கொள்வதற்கும் இத்தகைய அகராதிகள் பெரும் பயனை நல்கும். பிற பொதுவான அகராதிகளைப் போன்றே ஒரு சொல்லின் பொருளை அறிய இத்தகைய அகராதிகள் பயன்பட்டாலும் மொழியின் அடிப்படையான இன்றியமையாத ஆதாரமாகவும் இவை விளங்கும்.

தொன்றுதொட்டு வழங்கிவரும் பேச்சுத்தமிழ் வளர்ச்சியின் பல்வேறு நிலைகளைக் கண்டறிய கிளைமொழி அகராதி ஒரு முதன்மை ஆதாரமாக விளங்கும் என்பதில் யதொரு ஐயமுமில்லை. அதுவே தமிழ்ச் சமுதாயத்தின் உண்மையான ஆதாரம் எனலாம். தமிழ் மொழியின் அடிப்படையான ஆய்விற்குச் சிறந்தொரு ஆதாரமாகவும் விளங்கும்.

தமிழினது மொழி மற்றும் தமிழர்களின் இலக்கிய, சமூக, பண்பாட்டு, நாகரிக வரலாற்றை அறிய ஆய்வாளர்களை ஆழமான ஆதாரத்திற்கு அழைத்துச் செல்லும் தகுதியுடையது எனக் கிளைமொழி அகராதியைக் கூற முடியும். இவ் ஆய்வினை மேலோட்டமான மொழி ஆய்வு என்று மட்டும் கூற இயலாது.

பேச்சுவழக்குக் கூறு என்பது மிகவும் தாழ்வானதாகக் கருதப்படுவதால் அவை அகராதிகளில் இடம்பெறுவது என்பது மிகவும் அரிது. பேச்சு வழக்கிலும் தமிழ்மொழியின் களஞ்சியமாக விளங்கக்கூடிய பல சொற்கள் காணப்படு கின்றன. கிளைமொழிப் பேச்சு வழக்கிற்குரிய சொற்கூறுகள் உயர்ந்த மதிப்பிற் குரியனவாக கருதப்பட வேண்டிய நிலையில் இன்றைய மொழியியல் பார்வை மாறியுள்ளது. தற்கால இலக்கியங்கள் பல இத்தகைய பேச்சுவழக்கையே பெரும் ஆதாரமாகக் கொண்டு படைக்கப்படுகின்றன. பேச்சு வழக்கையோ கிளைமொழி வடிவத்தையோ கொண்டு படைக்கப்படும் புதினங்களோ சிறுகதைகளோ இன்றைய காலத்தில் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன எனலாம்.

ஒரு வட்டாரத்தில் வழங்கப்படும் மொழிக் கூறுகளின் உண்மையான பயன்பாட்டைப், பொருளை அறிந்து கொள்வதற்குக் கிளைமொழி அகராதிகள் மிகவும் பயனுள்ளதாக விளங்கும். அறிவியல் தொழில் நுட்பங்களில் புதிய தமிழ்ச் சொற்களை உருவாக்குவதில் கிளைமொழிக் கூறுகள் பெரும்பங்கு வகிக்கின்றன. தமிழகத்தின் ஏதோ ஒரு மூலையில் வாழும் மக்கள் பயன்படுத்தப்படும் சொற்கள் கூட புதிய சொற்களின் உருவாக்கத்தில் பங்கு வகிக்கும்.

## வடக்குக் கிளைமொழி ஆய்வும் பயனும்

தமிழின் வடக்குக் கிளைமொழிக் கூறுகளோடு தமிழின் வேறு கிளைமொழிக் கூறுகளை ஒப்பீட்டு முறையில் ஆய்வதற்கும் இந்த ஆய்வானது

சிறந்த பலனை அளித்து உதவும். இதன் மூலமாகப் பல்வேறு கிளைமொழிச் சொற்களிடையே உள்ள தொடர்பும், பண்பாட்டுக் கூறுகளில் உள்ள வேறுபாட்டினை அறியும் அறிவும் உண்டாகும். ஆய்வு செய்யப்பட்ட தமிழக ஆந்திர எல்லை மொழியானது, பிற கிளைமொழிகளில் வழங்கும் வழக்காறுகள் சிலவற்றை உடையதாக உள்ளது எனினும், அந்நிலையில் பண்பாட்டு மாறுபாட்டினை உடையதாக இருப்பதையும் நன்கு உணர முடியும். பிற கிளைமொழியுடன் ஒப்பிடும் போது பல பண்பாட்டுக் கூறுகள் ஒரே நிலையில் இருப்பினும் சொற்கூறுகள் மாறுபட்டிருப்பதை உணரலாம். அதற்கேற்ற சரிநிகரான சொற்களைக் கண்டறியலாம். இந்த ஆய்வின் மூலம் அச்சொற்களின் சிறப்பு இயல்புகளையும் சொற்கள் குறித்த பொருளையும் அவை உணர்த்தும் கூடுதல் பொருளையும், சொற்களின் சேகரிப்பினையும் நன்கு உணர்ந்து கண்டறிய இயலும்.

இன்றுவரை ஆய்வாளர்கள் பலர் பல வட்டாரங்களில் ஆங்காங்கே பல சொற்களைத் திரட்டியுள்ளனர். செந்தமிழ்ச் சொற்கள், அறிவியல் தொடர்பான சொற்கள், தொழில் தொடர்பான சொற்கள் பல்வேறு சிறப்புத் துறைகள் பற்றிய சொற்கள் எனப் பலவற்றைத் தம் ஆய்வுகளின் மூலம் திரட்டி வைத்துள்ளனர்.

இவற்றையெல்லாம் தொகுப்பின், தமிழகராதி உலகிற்கு மாபெரும் நன்மை உண்டாகும்.

வட்டார வழக்குச் சொற்களைத் திரட்டாமல், தொகுக்காமல் கிளைமொழி அமைப்பு என்பது ஒரு பகற்கனவே யாகும். இம்மாபெரும் பணி நடைபெற்று தமிழில் கிளைமொழி அகராதி என்பது உருவாக்கப்பட்டால் பல்வேறு விதமான சொற்களுக்கும் பல சூழல்களில் பயன்படுத்தப்படும் சொற்களுக்கும் ஆவணங்களில் உள்ள சொற்களுக்கும் பொருள் அறிந்து கொள்வதோடு மட்டுமல்லாமல் புதிய தொழில்நுட்பச் சொற்களையும் தமிழ்மொழியிலேயே உருவாக்கிக் கொள்ள ஏதுவாகும்.

# முடிவுரை

இவ்வாய்வின்வழிக் கிடைத்த முடிவுகளைப் பின்வருமாறு தொகுத்துரைக்கலாம். தமிழக ஆந்திர எல்லையில் மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்வானது இப்பகுதியில் வழங்கும் கிளைமொழி தனியொரு வட்டார வழக்காக வேறுபட்டு இருப்பதை உணர்த்துகின்றது. சொல்நிலையில் மட்டுமின்றி வேறு மொழியியல் கூறுகளான ஒலி, இலக்கணம் ஆகிய நிலைகளிலும் மற்றக் கிளை மொழிகளிலிருந்து மாறுபட்டு நிற்பதாக விளங்குகின்றது. மற்றைய கிளை மொழிகளிலிருந்து மாறுபட்டு விளங்கும் இவ் வட்டாரக் கிளைமொழி தனக்கென மொழிப் பாகுப்பாட்டுக் கருத்தின் அடிப்படையில் கிளைமொழி எல்லையினை உடையதாகத் திகழ்கிறது. பெரியதொரு மொழித் திட்டத்தை மேற்கொண்டு இவ்வடக்குக் கிளைமொழியை ஆய்ந்தோமெனில் வட்டார வழக்குக் கூறுகள் பெருமளவில் புதையலைப் போன்று கிடைக்க வாய்ப்புள்ளது.

## வட்டார வழக்கு ஆய்வின் முடிவு

இவ்ஆய்வானது வட்டாரக் கிளைமொழி ஆய்வாக இருப்பினும் இருமொழியப் பின்னணியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வாகும். நிலைமொழி யிலிருந்து நெடுந்தொலைவில் இருக்கும் இவ்வட்டாரக் கிளைமொழி தமிழ்மொழியினுள் பல்வேறு வேறுபாடுகளைக் கொண்டதாக விளங்கின்றது. கற்றவர் கல்லாதவர் என்று இரு நிலையிலும் வட்டார வழக்கின் ஆதிக்கம் மிகுதியாகவே காணப்படுகின்றது. கற்றவர்களிடம் சற்றுக் குறைந்திருக்க, கல்லாதவரிடம் வட்டார வழக்குக்கூறுகள் குவிந்திருக்கக் காணமுடிகின்றது. எல்லையில் அமைந்துள்ள பல பகுதிகள் நெடுந்தூரக் கிராமங்களாக விளங்குவதால் தமிழின் நிலைமொழியைப் புரிந்து கொள்ளக்கூடிய அறிவைப் பெறாதவர்களும் நிறைந்திருக்கும் வட்டாரமாக இது விளங்குகிறது.

## வட்டார வழக்கிலிருந்து நிலைமொழி வழக்கு

மொழிக் கலப்பே இல்லாது மொழி மாறாட்டம் மிகுந்த பகுதிகளிலும் வட்டார வழக்கையே பயன்படுத்தி தமிழில் உரையாடினாலும் தெலுங்கு மொழியின் சாயல் மிகுந்தே காணப்படுகின்றது. இவ்வெல்லைப்பகுதியில் பெரும்பாலும் 90% விழுக்காட்டிற்குமேல் கிராமங்களே இருப்பதால் நிலை மொழிப் பேச்சுத்தமிழ் அல்லது பொதுவான பேச்சுத் தமிழ் உருவாவதற்கு வாய்ப்பில்லை. மலைகளே தமிழக–ஆந்திர எல்லையாக விளங்கும் கொத்தூர் (திருப்பத்தூர் வட்டாரம்) செம்மண்குழியூர், தாசிரியப்பனூர் போன்ற இடங்களில் வழங்கப்படும் பேச்சுவழக்கு வடக்குக்கிளைமொழியின் உட்கிளைமொழியாகவே கொள்ளக் கூடிய வகையில் மிகுந்த வேறுபாடு மிக்கதாக விளங்குகிறது.

அரசியல் சூழலால் பாதிக்கப்பட்ட பள்ளிப்பட்டுப் பகுதியில் வழங்கும் தமிழ் மொழியில் ஏற்பட்ட தெலுங்கு மொழியின் தாக்கம் (மொழிக்கலப்பு) அரை நூற்றாண்டிற்குள் படிப்படியாகக் குறைந்து விடும். இப்போது இருந்துவரும் தெலுங்கு மொழியின் கலப்பு இன்னும் நீடித்தால் நாகர்கோவிலின் எல்லையில் தோன்றிய கணிக்காரக் கிளைமொழியைப் போன்று இப்பள்ளிப்பட்டுப் பகுதியிலும் தமிழும் தெலுங்கும் சேர்ந்து தனியானதொரு மொழியாய் உருவாகியிருக்கும். ஆனால், தற்போதைய இளைய தலைமுறையினரிடம் காணப்படும் தமிழ் மொழிப்பற்றாலும் தமிழ்மொழிவழிக் கல்வியாலும் மொழிக் கலப்புப் படிப்படியே குறைந்து சிறிது சிறிதாகத் தமிழ் நிலைமொழி வழக்கை நோக்கிவர வாய்ப்புள்ளது.

## மொழிக்கலப்பு தவிர்க்கப்படுதல்

தமிழக ஆந்திர எல்லைப் பிரிவினையின்போது இயற்கையால் பிரிந்த எல்லையும் உண்டு. செயற்கையாய்ப் பிரிக்கப்பட்ட எல்லையும் உண்டு. இயற்கையாகப் பிரிந்த எல்லையில் மொழி மாறாட்டமும் எல்லைப் பிரிவினையின் போது பிரிக்கப்பட்ட எல்லையில் மொழிக்கலப்பும் காணப்படுகிறது. இதற்கு விதிவிலக்காகத் திருவள்ளூர் மாவட்டத்தின் ஆரம்பாக்கம் காணப்படுகிறது. இது செயற்கையாகப் பிரிக்கப்பட்ட போதும் இங்கு மொழிக்கலப்பு இல்லை; மொழி மாறாட்டம் உண்டு. இப்பகுதி தொலைதூரக் கிராமமும் இல்லை. சென்னை – நெல்லூர் நெடுஞ்சாலையில் அமைந்துள்ளதாலும் சென்னையிலிருந்து சுமார் 100 கி.மீ. தொலைவிற்குள் இருப்பதாலும் தமிழ்மொழி தெலுங்கு மொழியின் செல்வாக்கிற்கு ஆட்படாததாலும் அங்கு மொழி மாறாட்டம் மட்டுமே காணப்படுகிறது.

மொழி மாறாட்டம் காணப்படும் நாகலாபுரம், ஆரம்பாக்கம், வேப்பனப்பள்ளி ஆகிய பகுதிகளிலும் இளைய தலைமுறையினரும் தமிழுக்கு இணையாகத் தெலுங்குமொழி அறிவையும் பெற்றுள்ளனர். ஆயினும், தவிர்க்க இயலாத சூழல்கள் தவிர பெரும்பாலும் மொழிக்கலப்பு உண்டாவதில்லை.

## வட்டாரக் கிளைமொழியா? – எல்லைப்புற இருமொழியா?

தமிழக – ஆந்திர எல்லையில் வழங்கும் வட்டாரக் கிளைமொழி மற்றும் எல்லைப்புற இருமொழியம் ஆகியவற்றில் தற்போது செல்வாக்குப் பெற்று விளங்குவது எது என்று நோக்கும்போது சில முடிவுகளைக் கூறலாம்.

தமிழக – ஆந்திர எல்லையில் சில பகுதிகளில் எல்லைப்புற இருமொழியமும் சில பகுதிகளில் வட்டாரக் கிளைமொழியும் செல்வாக்குப் பெற்று வருகிறது. வட்டாரக் கிளைமொழி இருமொழியப் பின்னணியில் வழங்கப்பட்டாலும் மொழி மாறாட்டம் உள்ள பகுதிகளில் தெலுங்கின் செல்வாக்குக் குறைந்தே காணப்படுகிறது. மொழிக்கலப்பு உள்ள பகுதிகளில் அயல்மொழியான தெலுங்குச் சொற்களின் கலப்பு இருப்பினும், இன்றைய கல்வி மேம்பாடும், இன்றைய தலைமுறையினரின் விழிப்புணர்வும் மொழிக்கலப்பையும் குறைத்துக் கொண்டே வருகிறது என்று கூற இயலும். ஆனால், இக் கூற்றிற்கு விதிவிலக்காக வேலூர்

மாவட்டத்தின் சேர்க்காடு விளங்குகிறது. தமிழ்நாட்டில் வேலூருடனும் ஆந்திராவில் சித்தூருடன் தொடர்பு கொண்டுள்ள போதும் அங்குத் தெலுங்கரே மக்கள் தொகையில் மிகுதி என்பதாலும் மக்கள் தொகையில் குறைந்துள்ள தமிழர் தெலுங்குச் சொற்களை மிகுதியாகவே கலந்து உரையாடுகின்றனர். அங்கிருந்து காட்பாடியில் உள்ள பள்ளியில் வந்து தமிழ்க்கல்வி கற்பினும் சிறுவர்களுக்கு மொழி விழிப்புணர்வு குறைவாகவே உள்ளது. மொழிக்கலப்பு மிகுந்து காணப்படுவதால் இங்கு வட்டார வழக்கைக் காட்டிலும் எல்லைப்புற இருமொழிகளுள் ஒன்றான தெலுங்கு மொழியின் தாக்கமே மிகுந்து காணப்படுகிறது.

களப்பணி செய்யப்பட்ட பிற பகுதிகளில் மொழிக்கலப்புக் காணப்படினும் தெலுங்கின் தாக்கத்தைவிட வட்டார வழக்கின் செல்வாக்கே மிகுந்து வருகிறது எனலாம். மொழி மாறாட்டம் உள்ள பகுதிகளில் தமிழ் மொழிக்கு இணையாகத் தெலுங்கு மொழியில் பேசும் ஆற்றல் உடையவராகத் தமிழர் காணப்படினும் தெலுங்கரிடம் உரையாடும்போது மட்டும் தெலுங்கு மொழியைப் பயன்படுத்து கின்றனர். மொழி மாறாட்டப் பகுதிகளில் எப்போதுமே வட்டார வழக்குதான் செல்வாக்கு மிகுந்ததாகக் காணப்படுகிறது.

## பல்துறை ஒருங்கிணைவு ஆய்வு

இந்த ஆய்வானது மொழி ஆய்வாக இருப்பினும், இதுபோன்ற மொழியாய்வுகள் பல்வேறுபட்ட துறைகளுக்குப் பயன்படும் வகையில் அடித்தளமாக அமைகின்றது.

தமிழக – ஆந்திர எல்லையில் வாழ்கின்ற மக்களது மொழிநிலையோடு வறுமைக் கோட்டிற்குக் கீழ்வாழும் மக்களுடைய பொருளாதார நிலையையும், தமிழ் – தெலுங்கு என்ற இருமொழியத்தால் அவர்கள் பாதிக்கப்பட்ட சமுதாய நிலையினையும் அறியாமையில் வாழும் எல்லைப்புற மக்களின் மொழி ஒற்றுமை உணர்வையும் அறிய இந்த ஆய்வானது சிறந்த களமாக விளங்குகிறது.

தமிழ்நாட்டு ஆந்திர எல்லையின் புவியியல் அமைப்பு முழுமையாக உணரவும் பல அரசியல் மாற்றங்களாலும் பல்வேறு காலநிலைகளில் ஏற்பட்ட வரலாற்று ரீதியான மாற்றங்களாலும் தமிழக ஆந்திரத்தின் வரலாற்று நிகழ்ச்சிகளை அறிந்துகொள்ள வரலாற்றாய்வாளர்களுக்குத் தூண்டுகோலாக அமைந்து மேலும் செய்திகளை அறிந்து கொள்ளவும் ஏதுவாகின்றது.

இவை அனைத்திற்கும் மேலாகத் தமிழக வடக்குக் கிளைமொழியின் வட்டார வழக்குக் கூறுகளையும் எல்லைப்புற இருமொழியத்தின் நிலையையும் தெளிவாக உணர்ந்து கொள்ளும்படி மொழியியல் ஆய்வாளர்களுக்கு ஒரு முன்னோடி ஆய்வாகவும் விளங்குகின்றது.

## மொழியும் ஒருமைப்பாட்டுணர்வும்

எல்லைப் போராட்டத்தின்போது பலவித சிக்கல்களையும் துன்பங்களையும் சந்தித்துப் போராடி மீட்கப்பட்ட பகுதி தமிழ்நாட்டின் வடவெல்லைப் பகுதி.

தமிழ்நாட்டிலுள்ள சில தலைவர்களும், மொழி உணர்வு மிக்க தொண்டர்களுமே போராடி வடஎல்லையில் பல பகுதிகளைத் தமிழகத்திற்கு உரித்தாக்கினர்.

எல்லைப் போராட்டக் காலத்தில் வாழ்ந்த மக்கள் பலர் வரலாற்றுப் பூர்வமாக இந்த நிகழ்ச்சிகள் எதையும் அறியாதவர்களாகக்கூட இருந்து வந்தனர். தமிழராக இருப்பினும், தெலுங்கராக இருப்பினும், தாம் இருக்கும் பகுதி தமிழகத்தில் இருப்பினும், ஆந்திரத்தில் இருப்பினும், தம்மால் பேசப்படும் மொழி தமிழாக இருந்தாலும் தெலுங்காக இருந்தாலும் எதைப்பற்றியும் உணராது அன்றாட வாழ்க்கைக்குப் போராடி வரும் வறுமைக்கோட்டிற்குக்கீழ் இருந்த மக்கள் மேற்கூறிய எவற்றையும் அறியாத அறியாமை உடையவர்களாகவே விளங்கி வந்தனர்.

இத்தகைய நிலையிலுள்ள மக்கள் இன்னும் தமிழர் தெலுங்கர் என்ற வேறுபாடு இன்றி ஒரு குடும்பத்தினர் போலவே வாழ்ந்துவரும் ஒற்றுமை உணர்வையும் நம்மால் காணமுடிகிறது.

## மேற்கொள்ள வேண்டிய பணிகள்

மொழி மனித சமுதாயத்தின் வாழ்வோடும் வளர்ச்சியோடும் இரண்டறக் கலந்தது. மொழி இல்லையேல் மனித சமுதாயம் இல்லை, நாகரிகமும் இல்லை. மொழி ஒரு சமுதாயத்தின் அன்றாட இயக்கத்திற்கான செய்திப் பரிமாற்ற இயந்திரம். இதுபோன்றே சமுதாயத் தொடர்புகள் மக்கள்தம் பழக்க வழக்கங்கள் போன்றவை மொழியின் வாயிலாகவே நன்கு வெளிப்படுகின்றன. ஒரு வட்டாரத்தில் வாழும் சமுதாய மக்களின் இயல்பான நிலையில் அவர்தம் சூழலின் பின்னணியைப் படம் பிடித்துக் காட்டும் கண்ணாடி மொழி என்றும் கூறலாம்.

மொழி என்பது சமுதாயத்தைப் போலவே ஒரு தனி மனிதனாலும் அவன் சார்ந்துள்ள சமுதாயத்தாலும் பல்வேறு சமுதாயச் சூழல்களில் பல வகையான சமுதாயப் பணிகளைச் செய்வதில் பயன்படுத்தப்படும் திறன்மிக்க கருவியாகும். அம்மொழிதான் பேசப்படும் குறிப்பிட்ட வட்டாரத்தில் வாழும் சமுதாய மக்களின் வாழ்வோடும் ஒருங்கிணைந்து செல்லக்கூடியது. எல்லா மொழிகளுமே தான் வழங்கப்படும் வட்டாரத்தையோ சமுதாயத்தையோ பின்னணியாகக் கொண்டுதான் இயங்குகின்றன. எழுத்து வழக்குப் பெற்றுள்ள மொழிகளாக இருப்பினும் எழுத்து வழக்கற்ற மொழிகளாக இருப்பினும் அக்குறிப்பிட்ட வட்டார மக்களின் கருத்துப் பரிமாற்றத்திற்கு மிகவும் துணைபுரிந்து வருகின்றன.

ஒவ்வொரு காலநிலையிலும் சமுதாயம் மாறிக்கொண்டு வருவது அச்சமுதாயத்தால் பயன்படுத்தப்படும் மொழியையும் பாதிக்கிறது. ஒரு சமுதாயத்தில் பேசப்படும் மொழியில் இரு வகைகளில் மாற்றங்கள் நிகழ்வதாக அஜ்மல்கான் குறிப்பிடுகிறார்.

> "பிறமொழிச் சொற்கள் கலத்தலால் ஒரு மொழியில் மாற்றங்கள் நிகழலாம். மற்றொன்று சமுதாயப் பழக்கங்களிலும், நம்பிக்கை களிலும், அமைப்பு முறையிலும், அன்றாட வாழ்க்கை முறையில் ஏற்படுகின்ற மாற்றங்களுக்கு ஏற்ப அவரவர் பேசுகின்ற மொழியில் பல புத்தாக்கங்கள் இயல்பாக நடைபெறலாம்."

அஜ்மல்கானின் கூற்றுப்படி, ஆய்வு மேற்கொள்ளப்படும் தமிழகத்தின் வடவெல்லைப் பகுதியில் மொழி இருவகையில் பாதிப்படைந்துள்ளது. அண்டை மொழியான தெலுங்கு கலத்தலால் ஒருவகை மாற்றம் பெற்றுள்ளது. வட்டார வழக்குகளைக் கொண்டுள்ளதால் வட்டாரக் கிளைமொழியாக இன்னொரு வகையான மாற்றத்தை அடைந்துள்ளது.

வட்டாரக் கிளைமொழி ஆய்வுகள் அவ்வட்டாரத்தில் வழங்கும் மொழியின் சிறப்பியல்புகளை எடுத்துக்காட்டுவனவாய் உள்ளன. ஒவ்வொரு வட்டாரத்திலும் சிறப்புக் கூறுகள் அமைந்திருக்கலாம்.ஒரு வட்டாரத்தின் சிறப்புக்கூறு வேறு வட்டாரத்திலும் அமைந்திருக்கலாம். அவ்வட்டார வழக்குக் கூறுகள், ஒரு வட்டாரத்தில் ஒரு பொருளையும் வேறு வட்டாரத்தில் அதே பொருள் அல்லது வேறு பொருளையும் தரலாம்.

இதுபோன்று வட்டாரக் கிளைமொழி ஆய்வு நடைபெறாத வட்டாரங்கள் இருக்கலாம். எந்த வட்டாரத்தில் நடைபெறவில்லை என்பதை அறிந்து அவ் வட்டாரத்திலும் கிளைமொழி ஆய்வு மேற்கொள்ளச் செய்து அதன் மூலம் அவ்வட்டாரங்களில் பேசப்படும் அரிய சொற்களைத் திரட்டுதல் வேண்டும்.

தமிழகத்தில் வட்டார வழக்கு ஆய்வுகள் ஒரு நிறைவுக்கு வந்ததெனில் அவ்வட்டார வழக்குக் கூறுகளையெல்லாம் தொகுத்து நெறிமுறைப்படுத்தினால் கிளைமொழி அகராதி உண்டாக்குவதற்குப் பெரும்பயன் நல்கும்.

கிளைமொழி ஆய்வின் தேவையைக் கூறுமிடத்து மொழியியலறிஞர் அகத்தியலிங்கம், "ஒவ்வொரு மொழியும் சமுதாயத்தின் வரலாற்றை அறிந்து கொள்ளவும், ஒவ்வொரு கிளைமொழியும் மொழியின் வரலாற்றை அறியவும் மிகவும் இன்றியமையாததாக உள்ளது" என்கிறார்.

இன்று வழங்கும் மொழியின் நிலையை ஒரு நூற்றாண்டு கழித்து அறிய வேண்டுமெனில் இத்தகைய கிளைமொழி ஆய்வுகள் பெரும்பயன் நல்கும். அவ்வாறு கிளைமொழி ஆய்வுகள் செய்து சொற்களைத் தொகுத்தல் கிளைமொழி அகராதியின் சொல்வளத்தைப் பெருக்கும்.

எனவே, முன்னோடியாக அமைந்த இவ் ஆய்வினைத் தொடர்ந்து பரந்துபட்ட திட்டத்தின் அடிப்படையில் தமிழக–ஆந்திர எல்லையில் மேற்கொள்ளப்படும் மொழி ஆய்வானது வட்டார வழக்குக் கூறுகளைத் திரட்டுவதற்கு ஏதுவாக அமையும்.

தமிழகத்தில் கிளைமொழி ஆய்வுகள் நிறைவேற்றப்பட்டு வட்டாரக் கிளைமொழி அகராதி மற்றும் தொழிற் கிளைமொழி அகராதியும் உருவாக்கப்படுவது மிக்க பயனுடையதாக விளங்கும். வட்டார வழக்குச் சொற்களுடன் மறைந்த பழந்தமிழ் வழக்குகளும் இவர்தம் பேச்சு வழக்கில் பயின்று வருகின்றன. இவ்ஆய்வின் மூலம் தமிழ்மொழியின் வளமையையும், சிறப்பினையும், உயர்தனிச் செம்மொழி என்று சிறப்பிக்கப்படும் கூற்றின் உண்மையையும் தெளிவாக உணர்ந்து கொள்ளலாம்.

# துணை நூற்பட்டியல்


**அகத்தியலிங்கம், ச.** (1995), உலகமொழிகள் ஐந்தாம் பகுதி, திராவிட மொழிகள் – 2, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 108.

**அகத்தியலிங்கம், ச.** (1995), உலகமொழிகள் ஐந்தாம் பகுதி, மணிவாசகர்பதிப்பகம், சென்னை, 108.

**அகத்தியலிங்கம், ச. மற்றும் குழுவினர்,** மொழியியல் – இதழ், தொகுப்பு, 1983, அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலைநகர்,

**அகத்தியலிங்கம், ச. மற்றும் பாலசுப்பிரமணியன், க.,** இலக்கண ஆய்வுக் கட்டுரைகள் – 1, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர், (1974),

**அடைக்கலசாமி,** தமிழ் இலக்கிய வரலாறு, கழக வெளியீடு, சென்னை.

**அறவாணன், க.ப. (பதிப்பாசிரியர்)** (1988), மொழிப்பாடம், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை – 5.

**அஜ்மல்கான, பீ.மு.,** பிரமலைக் கள்ளர் சமுதாய மொழியியல், பாவலர் பதிப்பகம், கம்பம், ஜூலை.

**ஆரோக்கியநாதன், ச.,** மொழியியல் – இருமொழிய ஆய்வுகள், முத்துப் பதிப்பகம், விழுப்புரம், டிசம்பர்.

**ஆரோக்கியநாதன், ச.,** மொழியியல் – கிளைமொழிகள், முத்துப் பதிப்பகம், விழுப்புரம், 1987.

**கால்டுவெல்,** கால்டுவெல் ஒப்பிலக்கணம் (கிரியர்ஸன் மொழியாராய்ச்சிக் குறிப்புக்களுடன்) மொழிபெயர்ப்பு, (1949),

**கோதண்டராமன், சிவ.** (2002), இக்காலத் தமிழ் இலக்கணம், பூம்பொழில் வெளியீடு, சென்னை – 20.

**கோதண்டராமன், பொன்.** (1989), மொழி வளர்ச்சியும் மொழி உணர்வும், மணிவாசகர் பதிப்பகம், ென்னை – 1.

**சண்முகம், செ. வை.** (1980), எழுத்திலக்கணக் கோட்பாடு, அண்ணாமலை நகர்,

சண்முகம், செ. வை. (1984), எழுத்திலக்கணக் கோட்பாடு – 1, அண்ணாமலை நகர்,

சண்முகம், செ. வை. (1986),எழுத்திலக்கணக் கோட்பாடு – 2, அண்ணாமலை நகர்,

சீனிவாச வர்மா. கோ., (1940), கிளைமொழியியல், அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலை நகர்.

சேனாவரையர் (உரையாசிரியர்), தொல்காப்பியம் – சொல்லதிகாரம், கழக வெளியீடு.

சிவஞானம். ம.பொ., புதிய தமிழகம் படைத் வரலாறு, பூங்கொடி பதிப்பகம், சென்னை – 4, 1986.

சிவஞானம், ம.பொ. (1974),எனது போராட்டம், இன்ப நிலையம், சென்னை.

சீனிவாச வர்மா, கோ., (1986), கிளை மொழியியல், அனைத்திந்திய தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலை நகர்.

சுந்தராசன், த., (1974),தமிழ்நாடு – பெயர்மாற்ற வரலாறு, வளனரசு பதிப்பகம், சென்னை.

சுப்புரெட்டியார், ந., (1975), திருவேங்கடமும் தமிழிலக்கியமும், பாரி நிலையம், சென்னை.

சுசீலா. மு., (2003), பழந்தமிழ்த் தொடரியல், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சாவூர்.

தங்கவேலு, கோ. (2002), தமிழகச் சமூகப் பண்பாட்டு வரலாறு, பாகம் – 1, 2, அமிழ்தம் பதிப்பகம், டி.டி.கே. சாலை, சென்னை – 600 014.

தங்கவேலு, கோ. (2002), தாய்நில *வரலாறு*, பாகம்–1, அமிழ்தம் பதிப்பகம், டி.டி.கே. சாலை, சென்னை –14.

தண்டியாசிரியர் (1988),தண்டியலங்காரம்,கழகவெளியீடு,

தமிழ்க்குடிமகன், மு., (1985), பாவாணரும் தனித்தமிழும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

பவணந்தியார், நன்னூல் (*சிவஞான முனிவர் விருத்தியுரை*), கழக வெளியீடு, சென்னை – 1, 1958.

பிள்ளை. கே. கே. (1981), தமிழக வரலாறு – மக்களும் பண்பாடும், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை.

பாலகிருஷ்ணன், இரா. (1994), நீலகிரி மொழிகள், அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழக வெளியீடு, அண்ணாமலைநகர்.

**மீனாட்சி சுந்தரம், தெ. பொ.** (1982), (தமிழாக்கம் செயப்பிரகாசம். ச.), சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை – 1.

**மீனாட்சி சுந்தரம், தெ. பொ.** (1998), தமிழும் பிற பண்பாடும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை

**மீனாட்சி சுந்தரம், தெ. பொ.** (1982), (தமிழாக்கம் ச. செயபிரகாசம்), தமிழ்மொழி வரலாறு, சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை – 1.

**வரதராசனார், மு.** (1958), மொழிநூல், கழக வெளியீடு, சென்னை

**வரதராசனார், மு.,** மொழி வரலாறு, கழக வெளியீடு, சென்னை.

வீரசோழியம்,பெருந்தேவனார் உரை.

**ஜெயதேவன், வ.** (1999), தமிழ் அகராதியியல் அன்றும் இன்றும், அஸ்வினி புக் கம்பெனி, சென்னை – 4.

**ஜெயதேவன், வ.,** தமிழ் அகராதியில் வளர்ச்சி வரலாறு, ஐந்திணைப் பதிப்பகம், சென்னை – 5, 1985.

## பின்னிணைப்பு

### திரட்டப்பட்ட சொற்கோவை

# வடக்கு வட்டாரக் கிளைமொழிச் சொற்களும் பழந்தமிழ்ச் சொற்களும்

### (அகரநிரல்)

| | |
|---|---|
| அக்கர | அக்கறை |
| அக்கா | அக்கா |
| அக்குத்தொக்க | விவரங்கள் |
| அக்னி | நெருப்பு |
| அகப்படலா(ம்) | அகப்படலாம் |
| அச்சாப்பிஸ் | அச்சகம் |
| அஞ்சாவது | ஐந்தாவது |
| அஞ்சி | ஐந்து |
| அஞ்சிடு | அச்சம்கொள் |
| அஞ்சிபுள்ள | ஐந்து பிள்ளைகள் |
| அட்டக்கரி | கன்னங்கரியது |
| அழுசி | அடித்து |
| அடிபடு | அடிவாங்கு |
| அடியாலு | அடியாள் |
| அடிவாவ்ரு | அடிவயறு |
| அண்ணமாரு | அண்ணன்கள் |
| அத்தி | அத்தை |
| அதவச்சே | அதைவைத்தே |
| அதிகமா | மிகுதியாக |
| அப்பால | பிறகு |
| அப்பு | திணி |
| அம்த்தே | அளவு |
| அம்பட்ல | கிடைக்கவில்லை |
| அமுக்கு | அழுத்து |
| அமுர்தொம் | அமிர்தம் |
| அய்வ | அழுவ |
| அய்வல் | அழுவார் |
| அயாங்காட்டியொ | அழுவதற்குள் |
| அர்தொம் | பொருள் |
| அர்ஜினன் | அர்ச்சுனன் |
| அரக்கிர | அரைக்கீரை |
| அரட்டெ | அரட்டை |
| அரிஞ்சி | அறிந்து |
| அருஞ்சோதி | அருஞ்சோதி |
| அரும | அருமை |
| அல்லேரியொம் | எல்லோரையும் |
| அலங்காரொம் | அழகு செய்தல் |
| அவரசெடி | அவரைச்செடி |

| | |
|---|---|
| அலெச்செலு | பயணம் |
| அவுத்திக்கீர | அகத்திக்கீரை |
| அவுரு | கட்டை விலக்கு |
| அவுஸ்யம | அவசியம் |
| அவுலு | தட்டை அரிசி |
| அற | அறு |
| அறப்பு | அறுப்பு |
| அறிஞ்சரு | அறிஞர் |
| அறியே(ன்) | அறியேன் |
| அறுவு | அறிவு |
| அன்னிம்மா | அன்னம்மா |
| அனாதி | அனாதை |
| ஆக்கு | சமை(த்தல்) |
| ஆசிபததிரி | மருத்துவமனை |
| ஆண்டுபேசிக்கினாங்கோ | இணைத்து பேசிக்கொண்டார்கள் |
| ஆத்து | சூடு ஆற்று |
| ஆப்சிடு | கிடைத்தது |
| ஆப்பொம் | தோசை போன்ற உணவு |
| ஆயமுல்ல | அழமில்லை |
| ஆயிபோசி | ஆகிவிட்டது |
| ஆராட்டு | தாலாட்டு |
| ஆராத்தி | ஆரத்தி |
| ஆல விருச்சொ(ம்) | ஆலமரம் |
| ஆவொ(ம்) | ஆகும் |
| ஆனாக்கா | ஆனால் |
| ஆஸ | ஆசை |
| இட்டிலி | இட்லி |
| இடி | இடி |
| இடு | இடு |
| இந்தராணி | இந்திராணி |
| இத்த | இந்த |
| இத்தினி | இந்த அளவு |
| இப்போ | இப்பொழுது |
| இர்க்கரது | இருக்கிறது |
| இரக்கர | இருக்கிற |
| இரண்ட | இருண்ட |
| இரள்சி | இருளசாதியைச் சேர்ந்த பெண் |
| இஸ்த்திரி | ஆடை சுருக்கம் நீக்குவது |
| இருந்துக்குன்தான் | இருந்துக்கொண்டுதான் |
| இரும்பு | இரும்பு |
| இல்லே | இல்லை |
| இவ்ளோ | இவ்வளவு |
| இன்னிக்கே | இன்றைக்கு |
| ஈடு | ஈடு |
| உச்சரிவா(ம்) | உற்சவம் |
| உடு | விடு |
| உண்டெ | உருண்டை |

| | |
|---|---|
| உத்தியோகொ(ம்) | வேலை |
| உப்புமாவு | உப்புமா – சிற்றுண்டி |
| உய்ந்து | விழுந்து |
| உருமயா | உரிமையாக |
| உவசரண | உபசரணை |
| உறுமினர் | உறவினர் |
| உன்னொ(ம்)உண்டு | இன்னுமுண்டு |
| ஊத்தெ | சுத்தமற்றபல் |
| ஊத்திக்கொடு | ஊற்றிக்கொடு |
| ஊது | வாயால் ஊதுவது |
| எக்குலு | விக்கல் |
| எங்கல்லெ | எங்களில் |
| எங்கலாக்கூட | எங்களுடைய |
| எச்செக்கெல | கீழ்த்தரம் |
| எட்சி | இடைச்சி |
| எட்டவேநில் | தள்ளியே நில் |
| எட்டுக்கட்டு | எட்டுமாடி |
| எட்யழுடு | இடையர்வீடு |
| எட(ம்) | இடம் |
| எடயன் | இடையன் |
| எடுக்றதோ | எடுக்கிறதோ |
| எடையர் | இடையர் |
| எதர | எதிரி |
| எந்தஊரு | எந்த ஊர் |
| எய்ப்பி | எழுப்பி |
| எயிப்பிர்ாங்கோ | எழுப்பி விடுகிறார்கள் |
| எர்சிடு | எரித்துவிடு |
| எருமாடு | எருமை மாடு |
| எல | இலை |
| எலுமுகநெறொ(ம்) | எலுமிச்சை நிறம் |
| எறங்கி | இறங்கி |
| என்னான்னு என்னவென்று | |
| எனிக்குஎனக்கு | |
| வந்துக்கோ | எழுந்துக்கொள் |
| ஏர்உய்றதுக்கு | ஏர் உழுவதற்கு |
| என்னிக்கி | என்றைக்கு |
| என்னாண்டெ | என்னிடம் |
| ஏனொம் | உண்கலன் |
| ஒக்காந்து | உட்கார்ந்து |
| ஒட்ரெ | சிலந்தி வலை |
| ஒண்டி—ஒருவ(ன்) | தனியாக |
| ஒண்டிக்குடுத்தனொம் | வாடகையிருக்கும் சிறிய குடியிருப்பு |
| ஒத்தனொ(ம்) | ஒத்தனம் |
| ஒத்திக்குவோ | ஒத்திக்கொள்வோம் |
| ஒடி | உடை |
| ஒத | உதை |
| ஒதடு | உதடு |

| | |
|---|---|
| ஒதுக்கிட்டு | தள்ளிவிட்டு |
| ஒப்பி | ஏற்றுக்கொண்டு |
| ஒம்பெறவு | உனக்குபிறகு |
| ஒயுங்கா | ஒழுங்காக |
| ஒரெலு | ஒரெலு |
| ஒல | உலை |
| ஒலக்க | உலக்கை |
| ஒன்னாக | ஒன்றாக |
| ஒசத்தியா | உயரமாக |
| ஒல்லி | மெலிவு |
| ஒல | ஓலை |
| கஞ்சி | கஞ்சி |
| கட்சோறு | கட்டுச்சோறு |
| கட்லு | கட்டிலி |
| கண்ணு | கண் |
| கல்லியாண(ம்) | திருமணம் |
| கல்லூடு | கல்வீடு |
| கலியாணொ(ம்) | திருமணம் (ஆண்பால் பெயர்) |
| கவிஞ்சரு | கவிஞர் |
| கவுசி | அசைவம் (மாமிசம்) |
| காசு (காய்ச்சு) | காய்ச்சு |
| காதவயி | காதவழி |
| காய்தம் | காகிதம் |
| கிருஷ்னாலு | மண்ணென்ணெய் |
| கீய (கீழே) | கீழே |
| கீரா | இருக்கிறாள் |
| குட்ட | குட்டை, சிறுகுளம் |
| குட்டிசெவுரு | குட்டிச்சுவர் |
| குடு | கொடு |
| குடுத்தமி | கொடுத்தனுப்பு |
| குடுத்து | கொடுத்து |
| குடுத்தனெ(ம்) | குடித்தனம் |
| குடும்பபொ(ம்) | குடும்பம் |
| குதர்ர | சரிப்பட்டு வருவல் (குதிரை) |
| குந்திட்டாங்க | உட்காந்துவிட்டார்கள் |
| கும்புட்லாம் | கும்பிடலாம் |
| குல்நரி | குள்ளநரி |
| குள்சிட்டு | குளித்துவிட்டு |
| கூடமொறா(ம்) | குடை முறம் |
| கூடிப்பொயப்போ | கூடிப்பிழைப்போம் |
| கூப்டுக்கிர (ன்) | கூப்பிட்டு கொள்கிறேன் |
| கூவு | கூழ் / ஒலி எழுப்பு |
| கூவொ(ம்) (கூவும்) | கூவும் |
| கெங்கை | கங்கை |
| கெட்டு (கட்டு) | கட்டு |
| கெட்தலு | கெடுதல், தவறு |
| கெட்யாது | கிடையாது |

| | |
|---|---|
| கெனத்துல | கிணற்றில் |
| கெணறு | கிணறு |
| கெயக்க | கிழக்கே |
| கெய்க்கு | கிழக்கு |
| கெயவ(ன்) | கிழவன் |
| கெயிறு | கயிறு |
| கெருப்பொ(ம்) | கர்ப்பர |
| கெல்லு (கல்) | கல் |
| கைத | கழுதை |
| கைய்யி | கை |
| கொஞ்ச்சொ | கொஞ்சம் |
| கொடக்கணுமா | கொடுக்க வேண்டுமா? |
| கொடக்கூலி | வாடகை |
| கொடாய்து | குடைகிறது |
| கொய்ந்த | குழந்தை |
| கொய்ந்தீங்க | குழந்தைகள் |
| கொயா | குழாய் |
| கொல்ல | கழனி, நிலம் |
| கொள்ளுப்பருப்பு | கொள்ளு |
| கொற | குறை |
| கொறவு | குறைவு |
| கோட்டிஸ்வர(ன்) | பெரும்பணக்காரன் |
| கோலம் பண்ணா | கொடுமை செய்தாள் |
| கேர்வொ(ம்) | கோவம் |
| கௌசி | (மாமிசம்) அசைவம் |
| கௌர்ரவோ | கௌரவம் |
| சக்லி | சக்கிலி |
| சகலசம்பத்தொ(ம்) | அனைத்து செல்வங்களும் |
| சட்னி | சட்டினி |
| சப்பெ | தட்டையானது |
| சப | சபை |
| சம்ப்ரதாய(ம்) | சம்பிரதாயம் |
| சம்புத்தால் | திறமையா |
| சமஞ்சிபோசி | சமைந்து போனாள் |
| சமிக்க வேண்டாம் | சமையல் செய்ய வேண்டாம் |
| சர்பொ(ம்) | பாம்பு |
| சரியாயிபூடும் | சரியாகிவிடும் |
| சலுக | சலுகை |
| சாதாரணமாக | சாதாரணமாய் |
| சாப்டு | சாப்பிடு |
| சாப்புட்ற அம்தொ | சாப்பிடுகிற அளவு |
| சாம்புலு | சாம்பல் |
| சித்ர | சித்திரை |
| சிறுக்கீர | சிறுக்கீரை |
| கிருப்பதான் | சிரிப்பாகத்தான் |
| சின்னசம்பா | நெல்வகை |
| சினேகிதக்காரன் | நண்பன் |

| | |
|---|---|
| சீக்கு | நோய் |
| சீதனொ(ம்) | சீதனம் |
| சீதானங்கோ | சீதனங்கள் |
| சீம | சீமை |
| சீமஎங்கும் | சீமையெங்கும் |
| சீமயார் | வெளியூரார் |
| சீருகள் | சீர்கள் |
| சுத்தி | சுற்றி |
| சுத்திக்கினு | அலைந்து கொண்டு |
| சுத்தோ(ம்) | சுத்தம் |
| செட்டி | செட்டி |
| செடி | செடி |
| செம்சி | சமைத்து |
| செமியல | சமையல் |
| செய்றபோதிக்கு | செய்யும் பொழுதுக்குள் |
| செய்றது | செய்வது |
| செல | சிலை |
| செறகு | சிறகு |
| செனி | சனி |
| சேசா | செய்தால் |
| சேரது | சேருவது |
| சேரி | கீழ்த்தர மக்கள் வசிக்குமிடம் |
| சேரு | சேறு |
| சேத்துப்புன்னு | சேற்றுப்புண் |
| சேதி | செய்தி |
| சேதினிருக்கிற | செய்து கொண்டிருக்கிற |
| சேல | சேலை |
| சொல்சா(ம்) | சொல்லியதாம் |
| சொல்ரே(ன்) | சொல்லுகிறேன் |
| சொல்லாங்காட்டியோ | சொல்வதற்கள் |
| சொல்லிக்கினுகீராங்க | சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள் |
| சொல்லுர | சொல்லுகிறார் |
| ட்ப்சு | மேல் ஊதியம் |
| டப்பா | தகரப்பெட்டி |
| டப்பாசு | பட்டாசு |
| டுப்பாக்கி | துப்பாக்கி |
| டோஸ் | திட்டுதல் |
| தகராறு | சண்டை |
| தகிதி | தகுதி |
| தங்கிசி | தங்கை |
| தட்டா(ன்) விதி | பொற்கொல்லன் தெரு |
| தட்டு | தட்டு |
| தட்றாபோதிக்கு | தட்டும் பொழுதுக்குள் |
| தட்ற வேலக்கி | தட்டுகிற வேலைக்குள் |
| தடமாடிகினு | தடமாடிக் கொண்டு |
| தடமாறுது | தடுமாறுகிறது |
| தடவு | தடவுதல் |

| | |
|---|---|
| தண்ணி | தண்ணீர் |
| தம்பிமாரு | தம்பிகள் |
| தம்பெடக்கூடாது | தெரியக்கூடாது |
| தலச்சன் | முதல் குழந்தை |
| தலபிள்ளை | மூத்தவன் |
| தவ்டு | தவிடு |
| தவ்சி | தவித்து |
| தவலெ | தவலை |
| தழப்பன் | தகப்பன் |
| தழப்ப(ன்) பேரு | தகப்பன் பேரு |
| தழவத்து | தயவற்று |
| தனிவய்யா | தனிவழியா |
| தித்திப்பு | இனிப்பு |
| துலுக்கன் | முஸ்லீம் |
| தாகம் | தாகமாயிருத்தல் |
| தாகவிடா | தாகம் |
| தாட்ச | கரணை |
| தாதி | வேலைக்காரி |
| தாப்பேரு | தாய்ப்பெயர் |
| தாம்புக்கவுரு | தாம்புக்கயிறு |
| தாமரஉல | தாமரை இலை |
| தாரம் | மனைவி |
| தாவானி | தாவணி |
| தாவாரம் | தாழ்வாரம் |
| தூரு | தூறல் |
| தாயத்த | தாயற்ற |
| தாவூடு | தாய்வீடு |
| தாவொ(ம்) | தாவும் |
| தீந்து | தீர்த்து |
| துட்டு | பணம் |
| துர்க்கெனா | கெட்டகனவு |
| தெக்க | தெற்கே |
| தென்னாண்டை | தெற்குப்பக்கம் |
| தெம்பியோ | தம்பியும் |
| தெரிஞ்சவங்க | தெரிந்தவர்கள் |
| தெரிஞ்சிக்கிறதால | தெரிந்துகொள்வதால் |
| தெலவலி | தலைவலி |
| தொயிலாளி | தொழிலாளி |
| தொலவு | தொலைவு |
| தோசெ | தோசை |
| நகரி | நகரி |
| நம்பூரு | நம்ம ஊர் |
| நமச்சல் | அரித்தல் |
| நல்லெண்ணெ | எள்ளு எண்ணெய் |
| நவுரு | நகர்தல் |
| நாதசொரொ(ம்) | நாதசுவரம் |
| நாக்குப்பூச்சி | மண்புழு |
| நாத்தம் | நாற்றம் |

| | |
|---|---|
| நாத்தனார் | கணவனின் உடன் பிறந்தவர்கள் |
| நாதங்கி | தாழ்ப்பாள் |
| நாரு | நார் |
| நாலாவது | நான்காவது நாள் |
| நாலிபேரு | நான்குபேர் |
| நாழகி | நாயகி |
| நானொ(ம்) | நானும் |
| நின்னுட்சி | நின்றுவிட்டது |
| நீசி | அசைவம் (மாமிசம்) |
| நோவாலி | நோயாளி |
| நோவு | வலி |
| நெக்கா | உயரமாக |
| நெக்காதே | தள்ளாதே |
| நெகலு | நிழல் |
| நெடிக்னொ(ம்) | நடிக்கணும் |
| நெலம | நிலைமை |
| நெல்லநாளு | நல்லநாள் |
| நெல்லாதே | நிற்காதே |
| நெல்லு | நெல் |
| நெலம் | நிலம் |
| நெல்வரம் | நிலவரம் |
| நோவு | நோய் |
| பச்சப் பயரு | பாசி பருப்பு |
| பட்டணம் | நகரம் |
| பட்ரெ | பட்டறை |
| படிசிருக்கே(ன்) | படித்திருக்கின்றேன் |
| பட்னி | பட்டினி |
| பந்திமாறினாள் | பரிமாறினாள் |
| பய்த்த | பழுத்த |
| பய்து | பழையது |
| பயணப்பட்டுக்கினு | பயணம் செய்து கொண்டு |
| பயி | பழி |
| பயிக்கார(ன்) | பழிக்காரன் |
| பயிக்காரி | பழிக்காரி |
| பயிர்க்கயினி | பயிர்க்கழனி |
| பயொ(ம்) | பயம் |
| பல்லிக்கி | பல்லக்கு |
| பள்ளொ(ம்) | பள்ளம் |
| பலான்னன்னெக்கு | குறிப்பிட்ட நாளன்று |
| பஞ்ஜி | பஞ்சு |
| பத்ரம் | கவனமாக |
| பம்பரம் | பம்பரம் |
| பயம் | பயம் |
| பல்லி | பல்லி |
| பலு | எடை |
| பறயரு | பறையர் |
| பள்ளக்கயினி | பள்ளக்கழனி |
| பாக்கி | நிலுவை |

| | |
|---|---|
| பாகம் | பங்கு |
| பாசானம் | வெஷம் |
| பாசொ(ம்) | பாசம் |
| பாப்பாரவர்ணொ(ம்) | வெண்மை நிறம் |
| பாய் | முஸ்லீம் |
| பாய்ங்கிணறு | பாழுங்கிணறு |
| பாயி | பாய் |
| பாரா | சேனை |
| பாவொ(ம்) | பாவம் |
| பிரஸ்ன | பிரச்சினை |
| பின்னாடி | பிறகு |
| பின்னல்காரி | பின்னல போட்ட பெண் |
| பிராஞ்சி | ஆராய்ந்து |
| புச்சி | புத்து |
| புட்சிகிணு | பிடித்துக் கொண்டு |
| புட்சிகிதா | பிடித்திருக்கிறதா |
| புட்டி | கண்ணாடி சீசா |
| புடுங்கியாந்து | பிடுங்கிவந்து |
| புண்ணியொ(ம்) | புண்ணியம் |
| புத்தி | புத்திசாலி |
| புரிஞ்சி | புரிந்து |
| புரிஞ்சிடும் | புரிந்துவிடு |
| புருசங்காரன் | கணவன் |
| புள்ள | பிள்ளை |
| புள்ளாக் கோயிலு | பிள்ளையார் கோயில் |
| புள்ளிக்கி | பிள்ளைக்கு |
| புள்ளிங்க | பிள்ளைகள் |
| புளியார | புளிசோறு |
| பூச்சி | பூச்சி |
| பூந்தொடப்பம் | வீடு பெருக்கும் துடைப்பம் |
| புருசன் | கணவன் |
| புஸ்தகொ(ம்) | புத்தகம் |
| புஸ்பொ(ம்) | மலர் |
| பூட்டுக்கிறாங்க | போய்விட்டிருக்கிறார்கள் |
| பெரவால்ல | பரவாயில்லை |
| பெருங்கொரலு | பெருங்குரல் |
| பெறாந்து | பருந்து |
| பேசி | பேச்சு |
| பொட்டுனு | திடீரென்று |
| பொச்சிடு | புதைத்துவிட்டு |
| பொஞ்சாதி | மனைவி |
| பொடவை | புடவை |
| பொண்ணு | பெண் |
| பொம்பளைங்க | பெண்கள் |
| பொய்து | பொழுது |
| பொயசீடலாம் | பிழைத்துவிடலாம் |
| பொர்சி | பொரித்து |
| பொரத்தொ(ம்) | பொருத்தம் |

| | |
|---|---|
| பொறப்பு | பிறப்பு |
| போய்ட்சி | போய்விட்டது |
| போம்போது | போகும்போது |
| போறப்போதிக்கு | போகும் பொழுதுக்கள் |
| போன்து கெடியாது | சென்றது கிடையாது |
| மக்க | மக்கள் |
| மங்கிலியொ(ம்) | மாங்கலியம் |
| மஸ்ன(ன்) | மச்சினன் |
| மட்டொ(ம்) | மட்டும் |
| மந்த்தரி | மந்திரி |
| மதிசி | மதித்து |
| மதனியார் | அண்ணி |
| மம்ட்டி | மண்வெட்டி |
| மரிமெவ | மருமகள் |
| மரியேத | மரியதை |
| மிருனன்னு | மறுநாளன்று |
| மல்லிங்க | மல்லிபூக்கள் |
| மனுசாலு | மனிதன் |
| மாசிப்பொற | மாசிப்பிறை |
| மாஞ்செடி | மாங்கன் |
| மாண்டு | இறந்து |
| மாம்பயொ(ம்) | மாம்பழம் |
| மாமியேரு | மாமியார் |
| மாலெ | மாலை |
| மாளல | இயலவில்லை |
| மிசினு | இயந்திரம் |
| மழங்கி | மயங்கி |
| மின்ன | முன்னா |
| மின்னேத்தொ(ம்) | முன்னேற்றம் |
| முட்டீங்ள் | முட்டிகளில் |
| மூலியா | மூலையாக |
| முலில் | மூலையில் |
| முன்ஜிபோது | முடிந்து போகின்றது |
| முன்ஜியீசனா | முடிந்துவிட்டால் |
| மூத்தேரு | மூத்தார் |
| மூனாவது | மூன்றாவது |
| மெத்தூடு | மாடிவீடு |
| மௌக்கயினி | மௌக்கழனி |
| மெனிலி | மனைவி |
| மேக்க | மேற்கு |
| மேக்கா | மேற்காக |
| மைனரு | மைனர் |
| மொலிஞ்சி | மலிவாக |
| மொளஞ்சி | விளைந்து |
| மொற | முறை |
| மோடு | மேடு |
| மொட்டுக்கயினி | மேட்டு நிலம |
| யுக்தி | புத்தி |

| | |
|---|---|
| ரத்தொ(ம்) | இரத்தம் |
| ராமச்சந்திரா | இராமச்சந்திரன் |
| ராஜ(ன்) | அரசன் |
| ராஜ(ன) பெண்டாட்டி | அரசனின் மனைவி |
| ரூபா | ரூபாய் |
| ரெண்டு | இரண்டு |
| ரெண்டாது | இரண்டாவது |
| லச்சனமா | அழகாக |
| வச்சிகினு | வைத்துக்கொண்டு |
| வடவாண்டை | வடக்குப்பக்கம் |
| வந்தினா | வந்தல் |
| வய்யொ | வழியும் |
| வயசு | வயது |
| வயி | வழி |
| வயிபட்றது | வழபடுதல் |
| வரப்போதிக்கு | வரவதற்கு |
| வராங்காடியோ | வராவிட்டால் |
| வரிவைகள் | வரிசைகள் |
| வருசொ(ம்) | வருடம் |
| வருத்தமெனன | வருத்தமென்ன |
| வருச | வரிசை |
| லவுத்தவல | வயிற்றில் |
| வளப்பு | வளர்ப்பு |
| வன்னிமரம் | வன்னிமரம் |
| வாசலாண்டை | வாசலருகில் |
| வாணாம் | வேண்டாம் |
| வாந்து | வாழ்ந்து |
| வாய்வு | வாயு |
| வாயசெடி | வாழைமரம் |
| விசேசொ(ம்) | விசேஷம் |
| வியாங்காட்டியொ(ம்) | விழுவதற்குள் |
| விஜாரிதது | விசாரித்து |
| விட்டுட்டு | விட்டுவிட்டு |
| வுட்ருவாங்க | விடுவாங்க |
| வுட்றோ(ம்) | விடுகின்றோம் |
| வூட்டவாசல் | வீட்டையும் வாசலையும் |
| வூடு | வீடு |
| வெத்தல சுருளு | வெற்றிலை சுருள் |
| வெருசொ(ம்) | வருடம் |
| வெல | விலை |
| வெளக்கு | விளக்கு |
| வெளுசொ(ம்) | வெளிச்சம் |
| வெஸ்ரெது | வைக்கிறது |
| வேலிக்கி | வேலைக்கு |
| வேசொ(ம்) | வேட்டி |
| வோணொ(ம்) | வேண்டும் |

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

## அண்மை வெளியீடுகள்

| | ரூ.பை. |
|---|---|
| இந்தியச் சூழலில் மொழிஇழப்பு ஒரு சமுதாய மொழியியல் பார்வை | 60.00 |
| நீறணி பவளக் குன்றம் | 35.00 |
| உலகப் பகுத்தறிவு நீரோட்டத்தில் பெரியார் | 35.00 |
| கலீலியோ முதல் கலாம் வரை | 35.00 |
| குலோத்துங்கன் கவிதைகள் ஒரு கோபுர தீபம் | 60.00 |
| தமிழறிஞர் அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியப் பாடல்கள் | 30.00 |
| நாமக்கல் கவிஞரின் தமிழ்ப்பணி | 30.00 |
| ஈழத்தில் கண்ணகி கலாச்சாரம் | 30.00 |
| சிறுபஞ்சமூலம்- ஒரு சமூகவியல் பார்வை | 30.00 |
| சங்கத் தமிழ் பகுதி 1 | 100.00 |
| சங்கத் தமிழ் பகுதி 2 | 100.00 |
| சங்கத் தமிழ் பகுதி 3 | 115.00 |
| சங்கத் தமிழ் பகுதி 4 | 130.00 |
| சங்கத் தமிழ் பகுதி 5 | 110.00 |
| ம.பொ.சி.யின் வாழ்க்கை வரலாற்று இலக்கியங்கள் | 60.00 |
| தொல்காப்பியம், சங்க இலக்கியம் பதிப்பும் பதிப்பாளரும் | 160.00 |
| இந்தி நாடகப்பனுவல் (ஆடிமாதத்தில் ஒரு நாள்) | 50.00 |
| திராவிட இயக்கத்தில் அன்னை மணியம்மையின் பங்கு | 40.00 |
| பண்பாட்டுப் பார்வையில் திருமந்திரம் | 70.00 |
| காரைக்கால் அம்மையார் பாடல்கள் ஓர் ஆய்வு | 40.00 |
| Freudism in the Novels of James Joyce and T.Jankiraman: A comparative study | 125.00 |
| இலக்கணத்தொகை யாப்பு பாட்டியல் | 290.00 |
| தென்கிழக்கு ஆசியா நாடுகளில் தமிழ்ப்பண்பாடு | 310.00 |
| பதிற்றுப்பத்து மூலமும் ஆராய்ச்சிப்புத்துரையும் | 170.00 |
| தமிழ் மொழிபெயர்ப்பு முன்னோடிகள் | 185.00 |
| மனிதப் புனிதர் கக்கன் | 110.00 |
| மொழிபெயர்ப்பு:ஒரு கவின்கலை | 75.00 |
| மூவர்தமிழ் மூன்று பார்வைகள் | 50.00 |
| காமன்வெல்த் நாடுகளின் கவிதைகள் | 100.00 |
| அறிஞர்கள் பார்வையில் பேரறிஞர் அண்ணா | 145.00 |
| அறிஞர் அண்ணா-மொபசான் சிறுகதைகள்-ஒப்பாய்வு | 160.00 |
| இராசேந்திர சோழன் வெளியிட்ட எசாலம் செப்பேடுகள் | 55.00 |
| கடலடியில் தமிழர் நாகரிகம் | 55.00 |
| கடற்பொறியியற் கலைச்சொற்கள் (குறுங்கலைக்களஞ்சியம்) | 150.00 |
| சங்க இலக்கியத்தில் சமூக ஆய்வுகள் | 55.00 |
| சங்க அகப்பாடல்கள் தோழி கூற்று | 170.00 |
| தமிழ் நாடக மொழியும் வரலாறும் | 110.00 |
| வா.செ.கு, என்ற ஆளுமையாளர் | 50.00 |
| உ.வே.சா.வின் குறுந்தொகை உரைத்திறன் | 45.00 |
| மருதத்தில் மக்கள் வாழ்வியல் | 40.00 |

---

**716 பழந்தமிழும் கிளைமொழிகளும் 65.00**